37

# ஆன்மீக ஞானிகள்
# அன்னை – அரவிந்தர்!

புலவர் என்.வி.கலைமணி எம்.ஏ.



அன்னை பதிப்பகம்

# ஆன்மீக ஞானிகள்
# அன்னை - அரவிந்தர்!

புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ.,

**அன்னை பதிப்பகம்**
நெ.12, சவுத் செக்டார், 4வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

## நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆன்மீக ஞானிகள்<br>அன்னை - அரவிந்தர்! |
| ஆசிரியர் | : | புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | அறிஞர் அண்ணா, எம்.ஏ., |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கே |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2003 |
| நூலின் அளவு | : | 1/8 கிரவுன் |
| நூல் வெளியீடு | : | **அன்னை பதிப்பகம்**<br>நெ.12, சவுத் செக்டார்,<br>4வது தெரு, ஆதம்பாக்கம்,<br>சென்னை-600 088.<br>செல் : 98401 35860 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 192 |
| தாள் | : | 10.5 கி.கி. சேஷாயி |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| விலை | : | ரூ.**40.00** |
| ஒளி அச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்<br>சென்னை-600 030.<br>தொலைபேசி : 2646 0021 |

# பதிப்புரை

ஆன்மீக ஞானிகள் ''அன்னை - அரவிந்தர்'' என்ற இந்த நூலை, அன்னை பதிப்பகத்தின் வெளியீடாக வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

உலகம் போற்றும் ''ஆன்மீக ஞானிகள், அன்னை - அரவிந்தர்'' எனும் அருளாளர்கள் வரலாறும். அவர்கள் நிறுவிய அரவிந்த ஆசிரமும் ஆன்மீகத் தொண்டுகளின் மாண்பும், ஆன்மீகப் புரட்சியைச் செய்து வருவதைத் தமிழக மக்கள் அறிவார்கள். அத்தகைய ஞானிகளின் தெய்வீக அற்புதங்கள் பல இந்த நூலிலே இடம்பெற்று நூலின் பெருமையை மேலும் உயர்த்துகின்றன.

தமிழ் ஆன்மீக உலகம் இந்த நூலைப் படித்து, மேலும் பயன் பெறுவார்கள் என்றே நம்புகின்றோம். இந்த நூல் ஆன்மீக உலகுக்கு ஓர் அருட்தொண்டு என்ற குறிப்பு நூலாகப் பயன்படும் என்ற எண்ணத்தில் இதனை வெளியிடுகின்றோம்.

அன்னை மீதும் - அரவிந்தர் பெருமான் மீதும் பற்றுள்ள தமிழ் நெஞ்சங்கள் இதற்கு ஆதரவு காட்ட வேண்டு கின்றோம்.

அன்புடன்

**வா. அறிஞர் அண்ணா**

# உள்ளே உள்ளவை

பக்க எண்

## அன்னை


1. அருளாளர் ஆட்சி அமைப்பதே அன்னை - அரவிந்தர் இலட்சியம்! ......... 5
2. அற்புதங்கள் ஆற்றிய பல்கலை வித்தகர் அன்னையார் பிறந்தார்! .......... 13
3. சித்து ஞானத்தில் அன்னையின் தெய்வ ஒளி! ........................ 29
4. நோயால் மக்கள் உழல்வது கண்டு தானே அதை ஏற்று அன்னையானார்! ........................ 47
5. ஆசிரமம் அமைத்த பின் அன்னை அமரர் ஆனார்! ........................ 52
6. தெய்வ குணம் பூவுக்கு இருப்பதால், அன்னை மலர் மூலம் வாழ்த்தினார்! ........................ 65
7. இந்திய மீராபாயும் : ஃபிரான்ஸ் மீராவும்! ........................ 80


## அரவிந்தர்


8. அரவிந்தர் சிறை சென்றார்! ஆன்மீக அருளாளராக மீண்டார்! ................. 89
9. வங்கம் தந்த அரவிந்தரின் இளமையும் - கல்வியும் ........................ 98
10. பரோடா மன்னருடன் தாய்நாடு திரும்பினார்! ........................ 105
11. மனிதப் பிறவியோ! தெய்வப் பிறவியோ! ........................ 109
12. யோகமும் - ஆன்மீகமும் இல்லாமல் பாரத நாடு உயர்வு பெற முடியாது ........................ 119
13. துப்பாக்கிச் சுடும் குறிப் பயிற்சி அரவிந்தர் பெற்ற யோக சித்தி! ......... 126
14. மாணவர் விழிப்புணர்வு பெற அரசு கல்வி முறை பயன் தரா! ............ 133
15. "வந்தே மாதரம்" பத்திரிக்கை நடத்தி முதன் முதல் சுதந்திரம் கேட்டவர் ........................ 140
16. வெடித்தது புரட்சி! அரவிந்தர் கைது! ........................ 146
17. அரவிந்தர் மீது ஓராண்டு நடந்த அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு! ...... 150
18. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு; அரவிந்தர் விடுதலையானார்! ........... 155
19. பெண்ணின் பெருமையைப் போற்றி அரவிந்தர் எழுதிய கடிதங்கள் ... 164
20. அரவிந்த ஆசிரமம் உலகம் காணா; அற்புதமான ஆன்ம சோதனைச் சாலை! ........................ 176

# 1

# அருளாளர் ஆட்சி அமைப்பதே அன்னை - அரவிந்தர் இலட்சியம்!



வடலூர் வள்ளல் பெருமான் வாழ்ந்த காலத்தில், ஆங்கிலேயர் ஆட்சி நடந்து வந்தது. அவர்கள் இந்திய மக்களுக்குரிய சுதந்திர ஆட்சியைக் கொடுக்காமல், கொடுமையான, கொடூர மான அடக்கு முறைகளை இந்திய நாட்டிற்கு விடுதலை கேட்ட பாரத மக்கள் மீது; சட்டங்கள் மூலமாகச் சித்திரவதைகளையும், சிறை வாழ்க்கை களையும் தண்டனைகளாகத் திணித்து வந்தார்கள்.

அன்னியர்களின் இத்தகைய பேயாட்சிக் கோரங்களைக் கண்டிக்கும் எண்ணத்தில் - வள்ளல் பெருமான், ''கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக'' என்று கண்டனம் செய்தார்.

ஆண்டு கொண்டிருக்கும் ஆட்சி ஒழிக்கப்பட்டால், பிறகு, நாட்டை ஆள்வது யார்? என்ற கேள்வி எழுமல்லவா? அதற்குப் பதில் கூறும் வகையில் இராமலிங்க அடிகளார் தனது ''திரு அருட்பா''வில் பாடும்போது, 'அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க' என்று அறிவித்தார்.

'அருள் நயந்த நன்மார்க்கர்' என்றால் - யார்? ஒரு கட்சி ஆட்சி ஒழிந்து, வேறோர் கட்சி ஆட்சியில் அமர்ந்து அரசு நடத்தும் பொறுப்பு மட்டும் தானா? அவ்வாறானால், மக்களாட்சித் தத்துவம் நடை பெறும் இந்தக் காலத்தில் - அருள் நயந்த நன்மார்க்கர்கள் - யார்?

பறம்பு நாட்டை செங்கோல் ஓச்சிய பாரியின் ஆட்சியை அருள்நயந்த நன்மார்க்கன் ஆட்சி எனலாம். பசுங்கன்று ஒன்று மன்னன் மகனது தேர்க் காலில் சிக்கிக் கொண்ட நேரத்தில் - தனது ஒரே மகன் அரசு வாரீசுடையவன் என்றும் பாராமல், ஆராய்ச்சி மணியை அடித்த ஒரு தாய்ப் பசுவின் அபயக் குரலுக்குக் கருணை காட்டி; தனது மகனைத் தேர்க் காலிலிட்டுக் கொன்றானே மனு நீதி சோழன்; அவனது ஆட்சியை அருள் நயந்த நன்மார்க்கர் ஆட்சி எனலாம் அல்லவா?

தனது ஆட்சியிலே உள்ள ஓர் ஏழை மகன் வெளியூர் சென்றபோது, தனியே தனித்து பெண் ஒருத்தி எப்படி வீட்டில் இருப்பேன் என்று அஞ்சிக் கணவனிடம் முறையிட்டு நள்ளிரவில் கூறிக் கொண்டிருந்ததை, மன்னன் கரிகாலன் தனது நகரத்தை, பற்றி ஒற்றாடி வந்தபோது அந்தத் தம்பதியர் விவரத்தைக் கேட்டான்!

சில நாட்களுக்குப் பிறகு, வழக்கம்போல் அந்த மன்னன் ஒற்றாடி வந்தபோது, அந்த ஏழை வீட்டில் யாரோ இருவர் உரையாடிக் கொண்டிருப்பதை ஒற்றாடி கேட்டு, எவனாவது கள்வனாக இருக்குமோ என்றுக் கருதி, ஐயப்பட்டு, ஒலியாடல் கேட்ட அந்த வீட்டுக் கதவை தட்டினான்; யாரது என்று கேட்ட எதிர் குரல் அவள் கணவனுடையதோ என எண்ணிய, பிறகு, அந்த வீதியிலே இருந்த எல்லா வீட்டுக் கதவுகளை எல்லாம் வரிசையாகத் தட்டிக் கொண்டே மன்னன் அரண்மனையை சென்று அடைந்தான்!

மறுநாள் அந்த வீதி வாழ் வீட்டார் எல்லாரும் மன்னனிடம்; "மன்னா, கரிகாலன் ஆட்சியில் கள்வனா என்று முறையிட்டு, யாரோ ஒரு திருடன் எங்கள் வீதியிலுள்ள வீடுகளின் கதவுகளை

எல்லாம் தட்டினான் என்று மன்னன் அவையில் அனைவரும் சென்று நீதி கேட்டு முறையிட்டபோது, 'மன்னன் நடந்த உண்மைகளை உரைத்துத் தனது கரத்தை அப்போதே வெட்டி எறிந்தான் பொற்கை பாண்டியன்' என்ற மாமன்னன். அந்த ஆட்சி அருளாளர் ஆட்சியல்லவா? நன்மார்க்கர் நாடுதானே அது?

பருந்து ஒன்றினால் துரத்தப்பட்டு, தன்னை வந்தடைந்த புறாவினைக் காத்து, அதற்காகத் தனது உடம்பிலே உள்ள தசையினை அறுத்துப் பருந்தின் எடைக்கு எடையாகக் கொடுத்த சிபிச் சக்ரவர்த்தி நடத்திய ஆட்சியை அருள் நயந்த நன்மார்க்கர் ஆட்சி எனலாம் அல்லவா? அந்த ஆட்சி பாரத மண்ணிலே நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தித்தான் வள்ளல் பெருமான் 'அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க' என்றார்.

தமிழ் மன்னர்கள் ஆட்சியிலே கருணை மனம் கொண்ட மன்னர்கள் அருள் நயந்த ஆட்சியை நடத்தினார்கள் என்பதற்குரிய சான்றுகள் மேலும் பல உள்ளன. இத்தகையர் நடத்தும் ஆட்சிகளே 'அருள் நயந்த நன்மார்க்கர்கள் ஆளும் ஆட்சிகளாகும்'!

செங்கோல் ஓச்சுபவர்கள் மேற்கண்ட மன்னர்களைப்போல குடிமக்களிடம் கருணை காட்டும் அருளாளர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் மனிதநேய ஆட்சி முறைகளாகும்.

கருணையிலா ஆட்சிகள் ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு, அருள் நயக்கும் நன்மார்க்கர்கள், நாட்டை ஆட்சி செய்தால்தான், அந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள், எந்தவிதத் தீமையும் - அச்சமும் இல்லாமல்; மன்னனது நீதி முறைகளை நம்பி உயிர் வாழ முடியும் என்ற எண்ணத்திலே வள்ளல் பெருமான் அவர்கள், 'அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க' என்று நமக்கு அறிவுறுத்தினார்! நமக்கு மட்டுமே அன்று! மக்களாட்சியின் வாக்காளர்களுக்கும் சேர்த்துத்தான் கூறினார்!

வள்ளல் பெருமான் அருட் பெருஞ்சோதியாக, 1874-ஆம் ஆண்டில் ஒளியுருவாக, வடலூர் சித்தி வளாகத்தில் மறைந்த பிறகு, அதே வடலூர் அருகே உள்ள புதுவை மாநிலத் தமிழ்

மண்ணில் நாற்பதாண்டுகள் கழித்து, அருளாளர் அரவிந்தர் தனது அரசியல் போராட்ட வாழ்க்கையை முடித்துக் கொண்டு 4.4.1910-ஆம் ஆண்டன்று புதுச்சேரி நகர் வந்தடைந்தார்; வள்ளல் பெருமானுடைய அருள் நயந்த நன்மார்க்கராக, சன்மார்க்கராக, ஆன்மீகக் குணத்தைப் பரப்பும் மகானாக அவர் மாறினார்.

அருளாளர் அரவிந்தர் புதுச்சேரி நகர் வந்தடைந்தபோது, புதுச்சேரி மாநிலம் பிரெஞ்சு அரசு ஆட்சி அதிகாரத்திலே செல்வாக்குப் பெற்றிருந்தது. தனது ஆன்மீக ஞான ஒளியை மக்களிடம் பரப்புவதற்கு ஏற்ற இடம் புதுச்சேரி நகர் தான் என்பதை, மகான் அங்கே அரவிந்த மகரிஷி நன்கு உணர்ந்தார்.

அதே நேரத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் தொல்லைகள் தம்மைத் துன்புறுத்தாத சுதந்திர பூமி எது என்பதை உணர்ந்து அங்கே அரவிந்த ஆசிரமத்தை மகான் துவக்கினார்!

அரவிந்தர் ஆசிரமம் நல்ல செல்வாக்கோடு வளர்ந்து வந்த காலத்தில், அன்னை அவர்கள், 24.04.1920-ஆம் ஆண்டன்று, ஜப்பான் நாட்டிலே இருந்து கப்பல் மூலமாகப் புதுச்சேரி நகரை வந்தடைந்து, அருளாளர் அரவிந்தரைச் சந்தித்தார்!

1920-ஆம் ஆண்டில் மகான் அரவிந்தரைச் சந்தித்த அன்னை அவர்கள், 17.11.1973-ஆம் ஆண்டு, அன்னை அமரர் ஆகும் வரை, புதுவை நகரை விட்டு அகலாமல், இறைவனது ஆணைப்படி, மகரிஷி அரவிந்தர் தெய்வீகப் பணியிலே ஈடுபட்டார். அவருடைய எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும் ஆக்கப் பணிகளிலே அன்னை தனது வாழ்க்கையை ஆன்மீகத் துறைக்குத் தியாகம் செய்தார்.

என்ன காரணம், அன்னை அவர்கள் இந்த ஆன்மீக ஊழியத்தை மக்களுக்குத் தொடர்ந்து செய்து வந்தது தேவ ஊழியத்திற்கு என்றால், சிறிய வயது முதலே ஆண்டவன் தன்னை இந்த இறை தொண்டுக்கு எல்லா வகைகளிலும் தயார் செய்து வந்திருக்கிறார் என்ற எண்ணத்தை; அவர் சந்தேகத்திற்கு இடமின்றி உணர்ந்ததின் ஆர்வமே ஆகும்.

மகரிஷி அரவிந்தரும், தெய்வீக அன்னை அவர்களும் இணைந்து இந்த ஆன்மீக ஞான மார்க்கத்திலே ஈடுபட்டது ஏன்? என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டிய சம்பவமாகும்.

- மனிதனை தேவனாக மாற்றுவது.
- மனித இனத்தை விட, உயர்ந்த ஓர் இனத்தை இந்த உலகத்திலே உருவாக்குது : அதற்காக அயராமல் அல்லும் - பகலும் உழைப்பது.
- கடவுள் சாம்ராச்சியத்தை, ஆண்டவனது ஆட்சியை, மண்ணுக்குக் கொண்டு வந்து நிறுவுவது.
- மக்களை அருளாளர்களாக, சன்மார்க்கர்களாக, தெய்வீக வாழ்க்கை நெறியாளர்களாக மாற்றி, அந்த வாழ்க்கையை, வள்ளுவர் பெருமான் கூறும் தமிழ் வேதம் போல, வையத்தின் வாழ்வாங்கு வாழ்பவர்; வானுறையும் - தெய்வத்துள் வைக்கப்படும் என்பதற்கேற்றவாறு, அந்த தெய்வீக அருள் வாழ்க்கையை மண்ணுலகத்திலே நிறுவி, ஒரு புதிய ஒளி வாய்ந்த உலகத்தை உருவாக்குவது.
- மனிதன் ஏற்கனவே இதயத்தின் ஆழத்தில், அவனது அந்தராத்மாவில், தெய்வீகமாக இருக்கிறான். இந்த அரிய உண்மையை மக்களுக்கு உணர்த்துபவன், இதை உணரும் போது, வாழ்க்கையிலும் இதை வெளிப்படுத்துவது சுலபமாகின்றது என்பதை அவன் உணர்ந்திட உழைப்பது.

மேற்கண்ட தத்துவங்களை மகான் அரவிந்தரும், தெய்வீக அன்னையும் ஆகிய இருவரின் செயற்கரிய செயல்கள் செய்யும் அரிய இலட்சியமாக; அவர்களுடைய மனத்திலே அருகுபோல் வேரூன்றி, ஆல்போல் தழைத்தது.

இந்த அரிய ஞான சேவைகளுக்காகவே அவர்கள் இருவரும் தங்களது வாழ்நாட்கள் முழுவதையும் தியாகம் செய்தார்கள். இருவர்களும் தங்களது நுண்ணுடல்களில் இன்றும் இருந்து கொண்டு; அவர்களது இலட்சியங்களை நிறை வேற்றுவதற்காகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த உலகத்தில் அவர்களது புதிய உருவாக்கம் வெளிப் படும் வரை, அதிமானசம் என்ற மேன்மை மிக்க மனித தெய்வ வாழ்க்கை தோன்றும் வரை, தேவர் குலம் இந்த உலகத்தில் தழைத்தோங்கும் வரை, அவர்கள் அயர மாட்டார்கள் என்பது உறுதி. ஆனால், இந்த இலட்சியங்கள் உலகத்தில் தோன்றுமா என்று சிலர் நினைக்கலாம் என்று ஏற்படும் இந்த தெய்வீக சக்தி, இனம் என்றும் சிலர் எண்ணலாம்.

ஞானி அரவிந்தர் அவர்களின் மா தவத்தாலும், அன்னை அவர்களின் தெய்வீக மன சக்தியாலும், தளராத உழைப்பாலும், அந்த தெய்வப் பிறவிகளின் இடைவிடாத முயற்சிகளது உழைப்பாலும், இந்த இலட்சியங்களின் நிறைவேற்றம் நுண்ணுலகில் 1958-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ஆம் நாள் திடீரென வெளிப்பட்டது. அப்போது தெய்வீகத் தாயான திரு. அன்னை அவர்கள் கூடியிருந்த மக்கள் திருத் திரள் முன்பு,'புதியதோர் உலகம் பிறந்து விட்டது' என்று, பகிரங்கமாகப் பிரகடனப் படுத்தினார்.

அவர் அவ்வாறு பிரகடனப் படுத்திய சம்பவம் நமது கண்களுக்குத் தெரியவில்லை; செவிகளில் தென்படவில்லை. என்றாலும், மகா பாரதப் போர் குருசேத்திரம் என்ற இடத்தில் நடைபெற்றபோது, கண்ணபெருமான், வில் வித்தகனான அருச்சுனனுக்கு கீதையை உபதேசம் செய்து கூறியதாவது :

'அருச்சுனா! நான் இந்த போர் வீரர்களை எல்லாம் உனக்கு முன்பேயே கொன்று விட்டேன் : நீ இந்த போர்ப் பணிக்குரிய வேலைக்கு வெறும் வெளித் தோற்றக் கருவியாக மட்டுமே இருப்பாயாக, இயங்குவாயாக!' என்றார். கிருஷ்ணன் சூச்சம உலகில், அதாவது - அணு இயக்கத்தின் கடவுட் தன்மையில், அருச்சுனனுக்கு முன்பேயே முடிந்துவிட்ட வேலையைக் கண்களுக்குத் தெரியும் இந்த வெளியுலகத் தோற்றத்தில்; அதை நிறைவேற்றி வைத்திட அருச்சுனன் ஒரு கருவியாகவே இருந்தான் - அவ்வளவுதான்.

எனவே, சூக்கும உலகில் நிறைவேற்றப் பட்டவைகளே, காலச் சுழற்சியால் வெளியுலகத் தோற்றத்தில் வெளிப் படுகின்றன.

மகான் அரவிந்தர், தெய்வீக அன்னை அவர்களது இலட்சியம், சூக்கும உலகில் நிறைவேற்றப்பட்டதைத் தான் திருமதி அன்னை அவர்கள், 'புதிய உலகம் பிறந்தது' என்ற நற்செய்தியைப் பிறரறிய அன்று பிரகடனப் படுத்தினார்.

தூய உலகான நாம் வாழும் காலத்தில் நிறைவேற வேண்டிய பணிகள் சில இருக்கின்றன. அவை அனைத்தும் நிறைவேறுவது உறுதியாகி விட்டது. ஆனால், அந்த மீதமுள்ள பணிகள் நிறைவேறிட எவ்வளவு காலம் ஆகும் என்பதுதான் நம்மிடையே உள்ள கேள்வி.

அந்தக் கேள்விக்குரிய பணிகள் நிறைவேறும் பொறுப்பு, உழைப்பால், உயர்த்திட மனிதர்களாகிய நம்மிடையேதான் இருக்கின்றது.

இந்த உயர் சக்தி கோரும்' செயல்களை நிறைவேற்று பவர்கள்,இந்தத் தெய்வீக மாற்றத்தை அடைய முடியும்' என்று அன்னை நமக்கு அறிவித்தார். அதற்கான அடித்தளமாகத்தான், அன்னை ஆசிரமத்தை அமைத்து, வளர்த்து, அதில் அனைத்து வசதிகளையும் ஆற்றி வழங்கியுள்ளார் என்பதே அதன் அடையாளமாகும்.

அந்தத் தெய்வீக வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுக்க அமைப்பாக, கட்டுப்பாட்டின் கால்கோள் நிலையமாக, ஆசிரம வாழ்க்கையை நமக்கு நடைமுறையில் செயல் படுத்திக் காண்பித்த ஆசானாக, அருளாளராக வாழ்ந்து காட்டினார் தெய்வீகச் சித்தம் படைத்த நமது அன்னையார்.

அருட் செல்வியான அன்னையின் வருகை, அதனால் உண்டான, உடனடிப் பயன் என்ன என்பதை, மகரிஷி அரவிந்தரின் தலைமை மாணவத் துறவியாரான நளினி காந்த குப்தா கூறுவதையும் கேட்போம் :

ஒழுங்கமைப்பு சிறிதும் இல்லாமல் தாறு மாறாக நாம் வாழ்க்கையை நடத்துகிறோம் என்பதை நாம் உணர்வதும் இல்லை, சிந்தித்துப் பார்ப்பதும் இல்லை.

நமது பொருட்களும், துணிமணிகளும் தாறுமாறாகக் கிடக்கின்றன. எந்தப் பொருளும் அதற்குரிய இடத்தில் ஒழுங்

காக வைக்கப்படுவதில்லை. புற வாழ்க்கை, அக வாழ்க்கை எல்லாமே ஒழுங்கற்ற முறையில் எப்படியோ இயங்கி வருகின்றன.'

நமது எண்ணங்கள், செயல்கள், உணர்ச்சிகள் எல்லாமே இன்றும் இப்படியேதான் இருக்கின்றன.'

நமது தலையானது ஒரு சந்தைக் கடை என்றால், நமது மனமோ அசல் பைத்தியக்காரர்கள் மருத்துவமனையாகத்தான் காட்சி தருகின்றது, வாழ்க்கையில் எதிலுமே நமக்கு ஒழுங்கு முறை கிடையாது.'

இப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த போது, இலட்சுமியின் மறு அவதாரமாகவும், சரஸ்வதியின் மறு அவதாரமாகவும், நமது தெய்வீக அன்னை வந்தார்.'

'இறைவனுக்கு நிவேதனமாக, கடவுளுக்குச் செய்யப்படும் நைவேத்தியமாக வாழவேண்டிய நமது வாழ்க்கையும், ஒழுங்கும். எளிமையும், அழகுமுடையதாய் அமைக்க வேண்டியதின் அவசியத்தையும் விளக்கி, நடை முறையிலும் அவர் செய்து காட்டினார். அவ்வாறு அவரால் உருவாக்கப் பட்டதே புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமம் ஆகும்.'

'ஆசிரமம் அன்னையின் படைப்பு என்றார் மகான் அரவிந்தர். ஒளியும் எழிலும், எளிமையும், ஒழுங்கும் எப்போதும் குடி கொண்டிருக்கும்.

1973-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி அன்று அன்னை தமது உடலை நீத்தார் : என்றாலும், அவர் இன்றும் ஆசிரமத்தில் வாழ்ந்து கொண்டும் செயல்பட்டும் வருகிறார்; ஆசிரமத்தை இயக்கியும் வருகிறார், என்றே ஆசிரம சாதகர்கள் இன்றும் நம்புகிறார்கள், பலர் உணர்கிறார்கள், சிலர் ஆன்ம அனுபவம் வாயிலாக அறிகிறார்கள்.

இத்தகைய ஆசிரம ஞான வாழ்க்கையை மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்த தெய்வத் தாயான நமது அன்னை அவர்களின் அற்புத உபதேச மொழிகளையும், அவரது ஞான வரலாறுகளையும் அடுத்து வரும் அத்தியாங்களில் அறிந்து பயன் பெறுவோமாக!

# 2

# அற்புதங்கள் ஆற்றிய பல்கலை வித்தகர் அன்னையார் பிறந்தார்

உலக வரலாற்றில் பதினெட்டாம் நூற்றாண்டும், 19-ஆம் நுற்றாண்டும் மறக்க முடியாத நூற்றாண்டுகள் ஆகும்.

அந்த நூற்றாண்டுகளில், பல்வேறு நாடுகளில், பல்வேறு துறைகளில், பெருமை மிக்கப் பேரறிஞர்கள். ஆன்மீகப் பெரியார்கள், புகழ் பெற்ற போர் வீரர்கள், மனித வாழ்க்கையை மேம்படுத்தும் தத்துவங்கள் பலவாறு தோன்றி, உலகைப் புதுப் பாதைகளிலே, மறுமலர்ச்சிச் சிந்தனைகளிலே நடை போட வைத்த பெருமை மிக்க நுற்றாண்டுகள் ஆகும்!

உலக மக்கள் உயிர் வாழ்வு வாழ்வதற்கு அறிவு அவசியமா? என்ற கேள்வி உலகை உருட்டிக் கொண்டிருந்த போது, உள்ளது உள்ளபடி அவனியை அறியும் அறிவு ஒரு கருவி: அதற்கேற்றவாறு அது அரசனையும், மக்களையும் ஒழுக வைப்பது; அறிவு இல்லாவிட்டால் நல்லரசு அமையாது: மக்களாலும் மாண்புமிகு வாழ்வைப் பெற முடியாது: வாழ முடியாது என்று உலகப் பேரறிஞர்களும், அவர்களுக்கெல்லாம்

பேராசானாக விளங்கும் திருவள்ளுவர் பெருமானும், அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று கூறியுள்ளார்கள்.

மக்களை நல்லரசு நடத்த மன்னன் ஒருவன் தேவை, அவனுக்கென ஓர் ஆட்சி தேவை. இவை இரண்டும் இல்லாவிட்டால், உலகத்தில் அந்தந்த நாடுகளில் கலவரம், குழப்பம், கொலை, கொள்ளை, ஒழுங்கற்ற நடத்தைகள், அதிகமாகிவிடும். மக்களால் நல்வாழ்வு பெற முடியாது.

மக்கள் அமைதியாக உண்ண முடியாது: உறங்க முடியாது: சுற்றங்களைப் பேண முடியாது: எனவே, அரசு என்ற ஒன்று தேவை. அதற்கு உயிர் போன்ற மன்னன் ஒருவனும் தேவை என்று நமது தமிழ் நாட்டுச் சங்க காலப் பாடல் ஒன்று கூறுகிறது. அது இது :

*"நெல்லும் உயிர் அன்றே:*
*நீரும் உயிர் அன்றே;*
*மன்னன் உயிர்த்தே*
*மலர்தலை உலகம்."*

என்று கூறுகின்றது. எனவே, அரசு தேவை; அதற்கு அரணாக அரசன் ஒருவனும் அமைய வேண்டும். அந்த அரசன் மலர்தலை உலகுக்கு உயிர் போல சிறந்திருக்க வேண்டும் என்ற கருத்து நடமாடியது.

அந்தக் காலத்தைத் தகர்க்க, ஐரோப்பா கண்டத்திலே பல நாடுகளில் அரசன் இல்லாமலே-ஆட்சியை நடத்த முடியும் என்ற தத்துவம், பதினெட்டாம் நூற்றாண்டில் தலை தூக்கும் புரட்சிகளாக உருவாகும் நிலைகள் நடமாடின.

பிரான்சு நாட்டின் தலை நகரமான பாரீஸ் நகர், நவ நாகரிகத்தின் தலைமை இடமாக விளங்கியது. அங்கேதான் நாகரீகம் முதிர முதிர, புரட்சிக் கருத்துக்கள் மக்கள் மனங்களிலே மலர்களாகப் பூத்து மணம் கமழ்ந்தன.

மக்கள் மனங்களிலே மணந்த அந்தப் புதுமைச் சிந்தனைகளிலே ஒன்றுதான் பிரெஞ்சுப் புரட்சி. இந்தப் புரட்சி 11.8.1789-ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டில் தோன்றியது.

இந்தப் பிரெஞ்சுப் புரட்சிக்கு மக்களைத் தயார் படுத்தி மூன்று அறிவு மேதைகளான மாண்டெஸ்கியூ, ரூசோ, வால்டேர் ஆகியோர் தோன்றியதும் இந்த பதினெட்டாம் நூற்றாண்டில்தான்.

கி.பி. 1689. ஆம் ஆண்டில் பிறந்து 1755-ஆம் ஆண்டில் மறைந்த மாண்டெஸ்கியூ என்ற வழக்கறிஞர்' சட்டங்களின் நோக்கம் என்ற நூலையும், கி.பி. 1712-ஆம் ஆண்டில் தோன்றி 1778-ஆம் ஆண்டில் உயிர் நீத்த ரூசோ என்ற அரசியல் ஞானி 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலையும் கி.பி. 1694 ல் அவதரித்து 1778-ஆம் ஆண்டில் காலமான வால்டேர் சிறந்த ஒரு பேனா வீரராகவும் விளங்கி, மத குருமார்களின் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்து, மூடப் பழக்க வழக்கங்களை முடமாக்கி அங்கே எழுத்துரிமை, பேச்சுரிமைகளை நிலை நாட்டியதால்தான், அக்கால ஃபிரான்ஸ் மக்கள் தங்கள் உரிமைகளைத் தட்டிக் கேட்கும் வீரத்தைப் பெற்ற மனிதர்களாக நடமாடி, ஃபிரெஞ்சுப் புரட்சி தோன்றிட அவர்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள்.

பிரெஞ்சுப் புரட்சி 11.8.1789-ஆம் ஆண்டில் தோன்றியது. ஆறு ஆண்டுகளாக அது, ஐரோப்பா கண்டத்தையே உலுக்கிக் குலுக்கிப் பேரதிர்ச்சிக்கு உட்படுத்தியது. அந்த வீர வரலாறு பெற்ற ஃபிரான்ஸ் நாட்டில்தான் நமது தெய்வத் தாயான அன்னை 1878-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 21-ஆம் நாளன்று, தெய்வீகக் குழந்தை போல, அந்த வீரம் விளைந்த மண்ணிலே அவதரித்தார்.

ஃபிரெஞ்சுப் புரட்சி உலகத்திற்கு முப்பெரும் மனித உரிமைக் கருத்துக்களை அறிவு தானமாக வழங்கியது. அவைதான் - மனித சுதந்திரம், மனித சமத்துவம், மனித சகோதரத்துவம் என்பவை ஆகும். அவை மனித உயிரினும் மேலான தத்துவங்கள் ஆகும்.

அந்த உரிமைகள் உதிர்த்த மண்ணான ஃபிரான்சு பூமியிலே பிறந்த குழந்தைதான் நம்மால் இன்றும் போற்றப்படும் ஞானக் குழந்தையான நமது அன்னை!

மனிதரெல்லாம் உடன் பிறப்புக்களான சகோதரர்கள்; மனிதரெல்லாம் சரிநிகர் சமத்துவம் உடையவர்கள்; மனித ரெல்லாம் யாருக்கும் அடிமைகள் அல்லாத சுதந்திரப் பிறவிகள் - என்ற மனித உரிமைகள் பிறந்த அந்த வீர பூமியிலே தவழ்ந்து விளையாடிய வித்தகக் குழந்தைதான் நாம் அன்னையாகக் கொண்டாடி வரும் தொய்வீக உணர்வுடைய விந்தைக் குழந்தை!

அந்த நேரத்தில் அரசன் என்பவன் தன்னைத் தானே கடவுள் என்று எண்ணி இறுமாந்திருந்தான்! காலச் சக்கரம் அவனது ஆட்சிமீது, ஆணவம் மீது, சர்வாதிகாரம் மீது மோதிப் பொடியாக்கி, புரட்சிப் புழுதியைப் பூகம்பமாக வெடிக்க வைத்தது.

இதனால் ஃபிரெஞ்சுக் குடிமக்கள் அறிவு பெற்று விழித் தார்கள். ஃபிரான்ஸ் நாடு உலகுக்கு எல்லாம் இந்தத் தத்துவப் பிச்சையை - அடிமையர்களாக, மூட நம்பிக்கையர்களாக; மறுமலர்ச்சி அறியா அறிவீணர்களாக வாழ்ந்த நாடுகளின் கரங்களிலே தவழந்த திருவோடுகளிலே தானமாகப் போட்டது.

மனித உரிமைகள் என்ற அறிவுப் பசியைத் தீர்த்து வைத்த அந்த நாட்டிலே பிறந்த அறிவுக் குழந்தைதான் - நாம் புகழோடு போற்றி வணங்கும் தெய்வ அன்னையான திருக் குழந்தை!

ஃபிரான்ஸ் நாட்டின் வழி வழிவந்த ஆயிரம் ஆண்டு களின் அடிமைச் சங்கிலி முடிச்சுக்களை, உரிமை என்ற சம்மட்டி கொண்டு உடைத்தெறிந்து, மக்கள் கொடுங்கோன்மையை ஒழித்தார்கள்.

மன்னன் இல்லாமலேயே நாடு நன்றாக நடக்கும் என்ற வியப்பை, இந்த விந்தை உலகுக்கு உணர்த்திக் காட்டிய விந்தை மிகு மண்ணிலேதாம் நாம் அன்னை எனப் போற்றும் அற்புதக் குழந்தையும் பிறந்தது!

அதாவது, ஃபிரான்ஸ் நாட்டின் தலை நகரமான, நவ நாகரிகத்தின் பிறப்பிடமான பாரீஸ் எனும் அழகு தவழும் நகரிலே பிறந்தார் - அன்னை அவர்கள்; தெய்வமணம் கமழும் சிசுவாக!

அன்னையை ஈன்ற அன்னையின் திருக்கோயில், அவருக்கு முன்பே ஓர் ஆண் குழந்தையினையும் பெற்றளித்தது - பிரான்ஸ் நாட்டின் பூமிக்கு!

நமது அன்னைக்குப் பெற்றோர் சூட்டிய திருப்பெயர் என்ன தெரியுமா? மீரா என்ற திருநாமம் ஆகும்!

இந்த மீரா என்ற திருப் பெயரில் இந்திய நாட்டு மண்ணிலும் - பக்தி மணம், ஆன்மீக ஞானம் பரப்பி மணந்து முக்தி பெற்ற ஒரு பெண் குழந்தை புகழோடு விளங்கி இருந்தது.

அந்த மீரா என்ற பெண் குழந்தையும் இந்திய மண்ணில் கிருஷ்ண பக்தையாக நடமாடி, இறை ஞானத்தை மக்களுக்குள் பரப்பி, மடாலயங்கள் நிறுவி, அறிவு போதனைகளை மக்களுக்கு ஆற்றி, பேரின்பப் பாடல்களைப் பாடி, பார்ப்பவர்களையும் கேட்பவர்களையும் பேராச்சர்யத்தில் வீழ்த்தி, கிருஷ்ண கடாட்சத்தில் பேரின்ப வீடு பெற்று, முக்தி அடைந்தவள் ஆவள்! அவரது வரலாற்றை ஓரளவாவது நாம் தெரிந்து கொண்டால்தான், நமது அன்னை பாரீஸ் நகரிலே அவதாரம் எடுத்த இந்தியத் தெய்வக் குழந்தையின் மறு பிறப்போ என்று எண்ணிப் பார்த்திடும் சிந்தனைப் பேறை நமக்கு வழங்குவதைக் காணலாம்! இந்தப் புத்தகத்தின் இறுதி அத்தியாயமாக அந்த வரலாற்றைக் கொடுத்துள்ளோம். படித்து ஒப்பு நோக்கி உணர்க.

ஃபிரான்ஸ் நாட்டு மீராவின் தாய் - தந்தையர் அளவற்ற அன்போடும், ஆர்வத்தோடும், ஆசையோடும், பண்போடும் அக் குழந்தையை வளர்த்தார்கள். ஆனால், அன்னை பெரு மாட்டியின், அன்னையார் தான் பெற்ற அந்த மீரா குழந்தையைக் கண்டிப் போடும், கட்டுப்பாட்டோடும் வளர்த்தார்!

காரணம், தாயைப் போல பெண், நூலைப் போல சேலை என்பது கிராமியப் பழமொழி, அதற்கேற்ப, அன்னை அவர்களின் அன்புத் தாயார், எந்த ஒரு விஷயத்திலும் கண்டிப்பானவராகவே இருப்பவர்: கட்டுப்பாட்டோடு குடும்பம் நடத்துபவர். அதனால்

அவரது சொந்த சுபாவங் களையே தனது மக்கள் மீதும் ஆட்சி செலுத்துபவராக அவர் விளங்கினார்.

தாயார் அவ்வாறு நடந்ததால்தான், மீராவும், அவருடைய தமையனாரும் தாய் கிழித்தக் கோட்டைத் தாண்டி மீறாதது மட்டு மன்று; அவர்களுக்குள்ளேயே ஒழுக்கமெனும் ஓர் ஒளி மனத்துக்குள் படர்ந்தவர்களாகப் பல இடங்களிலே, பல பிரச்னைகளிலே காணப்பட்டார்கள். அந்தச் சம்பவங்களை நீங்கள் போகப் போகக் காண்பீர்கள்.

ஒரு நாள் மீராவின் தாயார் தனது குழந்தைகள் உடலுக்கு எது நல்லது, எது சத்துள்ளது என்று எண்ணி, ஒருவித சத்துணவைச் சமையல் செய்தார்.

பிள்ளைகளை அழைத்து, தான் சமைத்த உணவு வகை களைத் தாயார் பரிமாறினார். குழந்தைகள் இருவருக்கும் அந்த உணவு சுவையாக இல்லாததால், அதை உண்ண மறுத்து விட்டார்கள்.

அந்தத் தாய் அறிவின், கூர்மையும், மதி நுட்பமும், திறமையும் உடையவர் ஆதலாலும், கண்டிப்பும், கட்டுப் பாடும் பெற்றவராக இருந்தவர் என்பதாலும், பிள்ளைகளுக்குப் பல முறை தனது சமையல் உணவுகளின் சத்துள்ள விவரங்களை விளக்கினார்.

அந்த உணவிலிருக்கும் சத்துக்கள் வகைகளையும் அதனால் ஏற்படும் உடல் நலக் குறிப்புக்களையும் அன்போடு எடுத்து உரைத்தார். கேட்கவில்லை தான் பெற்ற பிள்ளைகள்.

இந்த உணவு எங்களுக்கு வேண்டாம்' என்று கட்டுப் பாடாக, கண்டிப்பாக தனது தாயாரிடமே குழந்தைகள் சொல்லி விட்டார்கள்.

வந்தது கோபம் அந்தத் தாய்க்கு! இன்றைக்கு உங்களுக்கு இதுதான் உணவு, வேறு எதுவும் கிடையாது சாப்பிட, என்று கண்டிப்பாகக் கூறினார்!

இரண்டு மணி நேரமாக வாதாடியும் அந்தப் பிள்ளைகள் கட்டுப்பாடாக வேண்டவே வேண்டாம்' அந்த உணவு என்று கூறிவிட்டு, உணவுண்ணும் மேசையைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும்தானே! அதனால், குழந்தைகள் வைராக்கியம் தளர்ந்து வீழ்ந்தது. கவளம் கவளமாக அதே உணவை உருட்டி உருட்டி அவசரம் அவசரமாக உண்டார்கள் - பாவம்!

இவ்வாறான சிறு சிறு நிகழ்ச்சிகள் மூலமாக மீரா, தனது தாயாரிடமிருந்து கட்டுப் பாட்டினைக் கற்றுக் கொண்டார். அப்போது என்ன வயது தெரியுமா மீரா என்ற சிறுமிக்கு? ஏறக்குறைய ஏழு வயது!

அன்னையின் சிறு வயது குழந்தை நிலையைப் பற்றி மகரிஷி அரவிந்தர் அறிவித்தபோது; 'குழந்தை பருவத்தில் கூட அன்னை மற்ற குழந்தைகளைப்போல் சாதாரண நிலையில் இருக்க வில்லை: உயர்ந்த ஒரு நிலையிலேதான் திகழ்ந்தார்' என்கிறார்.

சிறு குழந்தையாக இருக்கும் போது அன்னை எழுதப் படிக்க, சிந்திக்கக் கருத்து எழுதவதற்கு முன்பேயே, அதாவது நான்கு வயதாக அவர் இருந்த நேரத்தில்; தனது தந்தையும் தாயும் விலை கொடுத்து வாங்கிக் கொடுத்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே தியானத்தில் ஆழ்ந்து விடுவார் என்றால், எந்த அளவுக்கு அவரை ஆன்மீக உணர்வு ஆழமாகப் பற்றியுள்ளது பார்த்தீர்களா?

சிறு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அந்த அன்னை என்ற குழந்தை தியானிக்கும் போதெல்லாம், ஆன்ம ஒளி தனது இதயத் தில் ஊடுருவிப் பாய்வதைக் கண்டுணர்வாள்! இந்த அனுபவம், பழுத்த ஞான யோகிகளுக்குள் மட்டுமே நடைபெறும் அரிய செயலாகும்!

ஆன்ம ஒளி இவ்வாறு தனது மனத்துள் வெள்ளம் போல் பாயும் போதெல்லாம், இந்த உலகத்தில் ஏதோ ஒரு செயற்கரிய

செயலைச் செய்திட இறைவன் நம்மைப் பிறப்பித்துள்ளார் என்பதை, அடிக்கடி அந்தக் குழந்தை - தானே புரிந்துக் கொள்வாள்!

தனது குழந்தையை 'சர்க்கசுக்குப் போகலாம் வா' என்று தந்தை ஒரு நாள் அழைத்த நேரத்தில், வேண்டாம், நான் இப்போது அதைவிட ஒரு முக்கியமான வேலையில் கவனம் செலுத்துகிறேன்' என்று அன்னை கூறிவிட்டார்.

தன் வயதை ஒத்தக் குழந்தைகள் வீடேறி வந்து. மீரா, வா விளையாடலாம்' என்று அழைத்தால், இல்லை, நான் இங்கேயே மகிழ்ச்சியோடு இருக்கிறேன்; நீங்கள் சென்று விளையாடுங்கள், என்று சொல்லி அந்தக் குழந்தைகளை அனுப்பி விடுவார்.

மீரா, தனது ஐந்தாவது வயதிலேயே ஆன்ம சோதனையில், ஆன்ம ஞான வாழ்க்கையில் செயல்படத் துவங்கி விட்டார்!

தான் பெற்ற அந்தச் சின்னஞ் சிறு குழந்தையின் ஆர்வத்தையும், மன ஆழத்தில் பதிந்து விட்ட ஆன்மீகக் கருத்துக்களின் வளத்தையும் கண்ட தாயார், "என்னடி அம்மா, என்னமோ நீ தான் இந்த உலகத்தைத் தாங்க வந்த பூமாதா போல உன் முகத் தோற்றத்தைப் பார்த்தால் தெரிகிறதே, என்று கேட்டார் அம்மா.

கேட்ட கேள்வியின் உட்பொருளை எண்ணிப் பாராமல், தனக்கே உரிய இயல்பான இயற்கை சுபாவத்தோடு, ஆமாம்! என்று உடனே கூறிவிடுவாள் அந்தக் குழந்தை! இது போன்ற இக்கட்டாக வரும் சில நேரத்துப் பதில்களைக் கண்ட பெற்றோர்கள், இது என்ன வயதுக்கு மீறிய பதிலாக இருக்கிறதே என்று தமக்குள் திணறித் திக்கு முக்காடிப் போவார்கள்!

பள்ளிக்கு அனுப்பினார்கள் பெற்றோர்கள் மீராவை, சில நாட்களில் அந்தப் பெண் தனது நடத்தையாலும், புத்திக் கூர்மை யான செயல்களாலும், கேள்விகளைக் கேட்கும் ஆசான்களுக்கே அறிவுக் குறிப்புக்களை வழங்கும் நுட்பத்தாலும், தன்னுடன் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள், இடையே பழகும் பழக்க

வழக்கப் பண்பாலும், அந்தப் பெண் அனைவருடைய நன் மதிப்பையும் பெற்று வளர்ந்தாள்.

மீராவின் நேர் கொண்ட பார்வையினையும், நிமிர்ந்த தன்மான நடத்தையினையும், எதற்கும், எவருக்கும் அஞ்சாத நக்கீரன் பண்பதனையும் கண்ட அவளுடன் படிக்கும் சக மாணவர்கள், அவளை ஒரு ராஜகுமாரி என்றே அழைத்து வந்தார்கள்!

அவரது தோற்றமும், தோல் பளபளப்பு நிறமும், அகண்ட நெற்றியும் அறிவார்ந்த சிந்தனைப் போக்குகளும், சக மாணவ, மாணவியர் மட்டுமல்லர், எவர் பார்த்தாலும் ராஜகுமாரி என்றே அழைப்பார்களே தவிர, மீரா என்பதையே மறந்து விடுவார்கள். ஏனென்றால் ஓர் அரச குமாரிக்கு அல்லது இளவரசிக்குரிய தோற்றம் என்னவோ, அதற்கான காரணங்கள் என்னென்னவோ, அவை அத்தனையும் மீராவிடம் புல் நுனியின் பனித் துளியில் தோன்றும் காட்சி போல காண்பார்கள்.

ஆனால், அரச குமாரிகளில் யாரும் தனது பணிகளைத் தானே செய்து கொள்ள மாட்டார்கள் இல்லையா? இதுதானே இளவரசிகள் இயல்பு! கேளிக்கை, பகட்டு, படாடோபம், ஆடல் - பாடல்கள் ஆகியவைதானே அவர்களது பொழுது போக்கு? அதனாலே, பெரும் பொழுதை மேற் சொன்னவற்றிலேயே அவர்கள் காலம் கழிப்பார்கள்!

ஆனால், இந்த அரச குமாரியோ ஒரு விநாடியைக் கூட வீணாக்கமாட்டார்!எப்போதும் - ஏதோ ஒரு சிந்தனை;சுறு சுறுப்பு; பரபரப்புச் செயல்களிலேயே மிதந்து கொண்டிருப்பார்!

பத்து அல்லது பன்னிரண்டு வயது இருக்கும் மீராவுக்கு! மீரா படித்து வந்த பள்ளியில் மாணவர்களுக்கும் - மாணவிகளுக்கும் இடையே ஓர் ஒழுங்கீனத் தகராறு உருவாகி, வாய் வாதங்களால் முற்றிப் பெரியதாகி, பெண்கள் ஓர் அறைக்குள் ஓடிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு பயந்த சுபாவங்களோடு ஒளிந்து கொண்டிருந்தார்கள்.

மாணவர்கள், பெண்கள் அறையை முற்றுகை யிட்டுக் கொண்டு, எந்த ஒரு பெண்ணையும் வீட்டுக்குப் போக விட மாட்டோம்' என்று கூக்குரல் கொடுத்தார்கள்.

இதையெல்லாம் அரச குமாரி மீரா கம்பீரத்தோடவே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்! பயம் என்றால் என்ன என்பதையே அறியாத மீராவைப் பார்த்து மற்றப் பெண் களும், வாடி மீரா, ஏதாவது கலவரம் செய்யப் போகின்றார்கள் அந்தப், பொறுக்கிப் பையன்கள், வா வா என்று கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டே இருந்தார்கள் மீராவை.

ஆனால் மீரா, மற்ற பெண்கள் மன்றாடிக் கேட்டதையும் மதியாமல், கைக் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு, விர்ரென்று வெளியே நடந்து வந்தாள்! அப்போது கலவரம் செய்து கொண்டிருந்த பையன்களைப் பார்த்து, 'வழி விடுங்கள், நான் போக வேண்டும்' என்று சற்றுக் கோபத்துடன் நின்று சாவதானமாகக் கூறினார்.

என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள் அப்போது? எந்த விதக் கலாட்டாவும் இல்லாமல், ஓர் அரச குமாரிக்கு வழி விடும் காலாட் படைகளைப் போல, அல்லது புதிய ஓர் ஆளுநருக்கு மரியாதை செலுத்தும் ராணுவ அணி வரிசையைப் போல, ஒவ்வொரு குழு மாணவரணியினரும் ஒதுங்கி வழியை விட்டு ஓரம் கட்டிக் கொண்டு நின்று விட்டார்கள்.

எவனும் வாயைத் திறக்கவில்லை. இவர்களா கலாட்டா செய்தார்கள் என்ற அடையாளமே இல்லாமல், எல்லாரும் இரு அணியினர்களாக அணி வகுத்து பட்டாள வீரர்களைப் போல நின்று, வழி விட்டார்கள் - மீராவுக்கு!

மீரா ஓர் அரசகுமாரி அணி வகுப்புப் படைகளைப் பார்வையிட்டுச் செல்வதைப் போல, கம்பீரமாக, நேர் கொண்ட நோக்குடன், அமைதியாக அவர்களை இரண்டாகக் கிழித்துக் கொண்டு வரிசை நடுவே புகுந்து போவதைப் போல நடந்தார்!

தன்னுள் ஏதோ ஓர் அபூர்வ சக்தி இருப்பதைப் போல மீரா உணர்ந்து கொண்டார் என்று முன்பே குறிப்பிட்டிருந்தோம். அதற்கேற்ப, இதோ ஓர் எடுத்துக் காட்டு.

மீராவை விட ஆறு வயது அதிகமுள்ள ஒரு பையன், பள்ளி மாணவிகளை எந்த வித ஒரு காரணமும் இல்லாமல் அவர்களைத் தொந்திரவு செய்து கொண்டே இருப்பான்! அதாவது கேலி, கிண்டல், வேடிக்கை விளையாட்டுகள் மூலமாக!

அந்தப் பதின்மூன்று வயது சிறுவன் மீராவிடம் குறும்புத் தனம் செய்தான். அதைப் பொருட்படுத்தாத அவள், "கொஞ்சம் சும்மா இருடா" என்று பலமுறைக் கூறினாள். கேட்டானில்லை அவன், தொடர்ந்து குறும்பாடிக் கொண்டே இருந்தான்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? மீரா உருவத்தில் கரும்பு போன்றவள்; மென்மை வயதில் நாணல் போல பளபளப்பானவள்; மென்மை வாய்ந்த மீரா அந்தப் பெரிய பையனை அப்படியே அலாக்காகத் தூக்கி, ஒரு சுழற்றுச் சுழற்றித் தரையில் வீசினாள் - மகாபாரத விராட பர்வதத்தில் பீமன் போர்க் களத்தில் வீசி எறிந்ததைப் போல! அதற்குப் பிறகு அந்தக் குறும்பன் மீராவிடம் குறும்பாடுவதை விட்டொழிந்தான்!

மீரா தந்தை, வங்கி ஒன்றில் பணியாற்றுபவர்; வாடிக்கை தாரர்களுக்குப் பதில் சொல்லிச் சொல்லி ஏற்பட்ட சலிப்பால், அவர் மூல நோய்க்காரனைவிட அதிக எரிச்சலும், கோபமும் உடையவராக இருந்தார்.

மீராவின் தமையன் மாலையில் நேரம் கழித்து வருவான். அதனால், அவருடைய மகன் மீது பிரம்பு அடிகள் ஏராளமாக விழும். அடிக்கடி. இவ்வாறு தனது தந்தை தமையன் மீது பிரம் படித் தாக்குதல் நடத்துவது மீராவுக்கு அருவருப்பாக மட்டு மன்று; தந்தை போக்கு மீது வெறுப்பும் கொண்டவராக இருந்தார்.

மீரா தந்தையின் சினம், ஒரு நாள் வரம்பு மீறி விட்டது. அண்ணனைப் பிரம்பால் அளவுக்கு மீறி விளாசினார்! தீவிரமான கோபம் தந்தைக்கு! தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தார். தனது தமையனால் வலி பொறுக்க முடியாமல் திணறித் தவிப்பதைக் கண்ட மீராவுக்கு, தான் ஆடா விடினும் தனது சதை ஆடும் என்பார்களே, அதற்கேற்ப, மீராவும் துடித்துப் போய் விர்ரென்று ஓடி அண்ணனுக்கு முன்பாக குறுக்கே நின்று

தடுத்தார் அடிகளை! தொடர்ந்து அடிகள் அண்ணன் மீது சுழன்று சுழன்று விழுந்து கொண்டே இருப்பதைக் கண்ட மீரா, "அப்பா" என்று உரத்தக் குரலில் கத்தினார்!' "அப்பா, நீங்கள் அடிப்பதை நிறுத்தா விட்டால் நான் ஒரு நிமிடம் கூட இப்படிப்பட்ட வீட்டில் தங்க மாட்டேன்" என்று கத்தினார்.

மகளின் கம்பீரமான, வலுவான, உறுதியான, தடித்தக் குரலைக் கண்ட மீராவின் தந்தை, ஒரு கணம் ஆடிப் போய் அசந்து, அதிர்ந்து நின்று விட்டார்.

அன்று தரையில் போட்டு விட்ட பிரம்பை, அவரது தந்தை சாகும் வரை தொடவே இல்லை! அப்போது மீராவுக்கு வயது ஆறோ, ஏழோதான் இருக்கும்.

சாதாரணப் பிறவி அல்லர் மீரா! அவளது பதினொன்றாம் வயதில் துவக்கிய ஆன்மீக ஞானத்தால், பதின்மூன்றாம், பதினைந்தாம் வயது வரம்புக்குள் அவர் ஆழ்ந்த அனுபவங் களைப் பெற்றார்.

அதற்குக் காரணம், பல நாட்டின் ஆன்மீக அறிவு நூல்களைப் படித்ததால் என்றால் மிகையன்று. ஆழ்ந்த அந்த ஆன்மீக ஞானத்தின் முதிர்ச்சியால், மனக் கட்டுப்பாட்டுத் தவத்தால், வேள்வியின் அனுபவத்தால், எந்தெந்த பெரியார்கள் எப்படி எப்படியெல்லாம் முயன்று ஆன்மீகத் துறையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பாரீஸ் நூல் நிலைய ஞானச் சுவடிகளைக் கற்றுத் தெளிந்த அறிவுச் சுடர்களைத் தனது சிந்தையில் தேக்கிக் கொண்டதுதான்.

கடவுள் தரிசனம் எவ்வாறு கிடைக்கும் என்பதற்கான புலன் கட்டுப்பாட்டுச் சித்தர்கள் செயலையும் ஒருவாறு உணர்ந்தார். அதுமட்டுமன்று; இறை உணர்வை, அதன் சித்தாந்தத்தை, உண்மைகளை நம் முன்னும், நமது எல்லாச் செயல்களிலும், இந்த உலக வாழ்க்கையின் சம்பந்தப்பட்ட அனைத்துக் களங்களிலும் கொண்டு வந்து விளங்கச் செய்ய முடியும் என்பதும், அப்போதே மீராவின் அறிவுக்குப் புலனான ஞானமாயிற்று எனலாம்!

ஆன்ம ஞானமே மீராவின் சிந்தனைச் சக்தியாக விளங்கி ஒளியுதரும் சுடர்களாக இருந்ததால், மீரா தனது கனவுகளில் பல மகான்களையும், ஆன்ம சிந்தனையாளர்களையும் சந்தித்தார்.

நாடு, மொழி, இனம், மதம், சாதி என்ற பேதங்கள் இல்லாமல், வள்ளல் பெருமான் குறிப்பிட்ட அனைத்துலக மனித நேய ஒருமைப்பாட்டு உணர்வுகளுக்குச் சம்பந்த முடைய மகான்களை, மகரிஷிகளை, அருளார்களை, மதச் சீர்திருத்த மறுமலர்ச்சி மேதைகளை, ஆன்மீகத் தத்துவத்தில் கரை கண்டவர்களை, தீர்க்க தரிசிகளை, தினந்தோறும் கனவுகளில் சந்தித்தாள் மீரா! அந்த ஞானிகளது போதனை களையும் மீரா கனவு நிலையில் பெற்று ஞானத்தைக் கனிகளாக்கிக் கொண்டாள் மீரா.

சிக்மண்ட் பிராய்டு போலவும், ஜங் எனும் மேதை போலவும், தனது உறக்கத்தில் உதிக்கும் கனவுகளை முழுவதுமாக மறு தினம் சிந்தித்து நினைவில் நிறுத்துவார் மீரா! அதைக் குறித்துத் தொடர்பாகச் சிந்திப்பார்.

அதற்குச் சம்பந்தப் பட்ட சில ஆன்ம வினாக்களைத் தன்னையே கேட்டுக் கொண்டு, உரிய, தக்க, விடைகளை கனவில் அவள் கண்ட மகாத்மாக்களுடன் தொடர்பு கொண்டே பதில் பெறுவாள்.

தினந்தோறும் அவள் கனவில் கண்ட ஆன்ம ஞானிகளுள் ஒருவரிடம் மீராவுக்கு அனுக்கமான ஞானத் தொடர்பு உருவானது.

அன்றுவரை மீரா மகா பாரதத்தில் வரும் கிருஷ்ண பரமாத்மாவைப் பற்றியோ, பகவத் கீதாவுபதேசத்தைப் பற்றியோ முன் - பின்னாக எதுவும் கேள்விப்பட்டதில்லை. ஆனால் அவள் அந்தக் கனவு மகாத்மாவைக் 'கிருஷ்ணன்' என்றே பெயரிட்டு அழைத்து வந்தது வியப்பாகவே இருந்தது மீராவுக்கு!

மீரா, 1914-ஆம் ஆண்டில், முதன் முதலாக பிரெஞ்சு ஆட்சியிலே இருந்த புதுச்சேரி நகருக்கு வருகை தந்தார்.

அங்கேதான் முதன் முறையாக மகான் அரவிந்தரை, அன்னை மீரா பார்த்தார்; வியந்து போனார்! காரணம், தாம் கனவில் கண்ட ஆன்மீக மகான்களுள் ' இவரும் ஒருவரே' என்பதை மீரா, அன்று பார்த்த முதல் பார்வையிலேயே புரிந்து கொண்டதால் அவரை ஆச்சரியத்தோடு நோக்கினார்!

தனக்குத் தானே மனத்தோடு அவர் பேசிக் கொண்ட போது, தனக்குக் கனவில் வந்தவரும், தான் கிருஷ்ணன் என்று பெயரிட்டு அழைத்தவரும் இவர்தான்! என்பதை அன்னை மீரா - மகரிஷி அரவிந்தரை, நினைவு கூர்ந்தார்.

மீரா கண்ட கனவுகளுக்கும், நாம் காணும் கனவுகளுக்கும் ஏராளமான வேறுபாடுகள் உண்டு. தனது பதின் மூன்றாம் வயதில் மீரா கண்ட கனவொன்றை, அவர் அன்னை வடிவமாகி புதுச்சேரியில் தொண்டு செய்து கொண்டிருந்த காலத்தில் அதை எவ்வாறு குறிப்பிடுகிறார் பாருங்கள்:

'எனக்கு ஏறக்குறைய பதின்மூன்று வயதாக இருக்கும் போது, ஏறக்குறைய ஓராண்டு காலத்திற்கு, ஒவ்வொரு நாளும் இரவு நேரங்களில் நடந்த நிகழச்சி இது.

இரவு வந்ததும் படுக்கையில் படுத்த பிறகு, நான் உடலை விட்டு விட்டு வெளியே வருவேன். நகரத்தின் மையத்தில் நான் மேலே மேலே போய்க் கொண்டே இருக்கும். தங்க மயமான உடை ஒன்றை அணிந்திருப்பேன். மேலே நான் செல்லச் செல்ல அந்த உடையும் பெரியதாகிக் கொண்டே போய், கடைசியில் அது நகரம் முழுவதற்குமே ஒரு குடை போல ஆகிவிடும்.

அதற்குப் பிறகு நாலா திசைகளில் இருந்தும், ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும், வியாதியாளர்களும், துன்புறுவோரும் என்னருகே வருவார்கள். அவர்களது துன்பங்களைச் சொல்லி என்னிடம் ஏதாவது உதவி கேட்பார்கள்.

எனது உடையை அவர்கள் தொட்டதும் ஆறுதல் பெறுவார்கள், பிறகு அதிக மகிழ்ச்சியுடனும், அதிக பலத்துடனும் தங்களது

உடல்களுக்குள் அந்த ஆடை சக்தி ஊடுருவித் திரும்பி விடுவார்கள்.

எனது உடையை அவர்கள் தொட்டதும் ஆறுதல் பெறுவார்கள், பிறகு அதிக மகிழ்ச்சியுடனும், அதிக பலத்துடனும் தங்களது உடல்களுக்குள் ஆடை சக்தி ஊடுருவித் திரும்பி விடுவார்கள்.

இந்த கனவு வேலை இரவில் தானே நடக்கும். அதை நான் நினைத்து மிகவும் ரசிப்பேன். இதனுடன் எனது கனவுகளை ஒப்பிட்டால் எனது மற்ற பகல் பணிகள் எல்லாம் சர்வ சாதாரணமாக மாறி அவை சுவையற்று விடுவனவாகத் தோன்றின.

மீராவுக்கு மனித இனத்தின் மீது மட்டும்தான் அளவற்ற அன்பும், கருணையும் உண்டு என்பதல்ல; விலங்குகளும், மரங்களும். தாவர இன வகைகளும் கூட, மீராவின் உள்ளுணர்விற்கும், ஆழ்ந்த அன்புக்கும், பற்றுக்கும், கருணைக்கும் உரிய உயிரினங்களாக இருந்தன.

பன்னிரண்டு வயதாக இருந்த மீரா, பாரீஸ் நகர் அருகே உள்ள ஒரு காட்டிற்கு அடிக்கடி செல்வார். அங்கே தனி ஒருத்தியாகவே தியானத்தில் அமர்ந்து விடுவார். 'அப்போது மரங்களுடன் நெருங்கியத் தொடர்பும், பறவைகளுடனும், அணில்களுடனும் தொடர்பு கொள்வார். அவை மீராவிடம் வந்து கொஞ்சி விளையாடி மகிழும்.

புதுச்சேரி ஆசிரமத்தில் இருக்கும் ஏதாவது ஒரு மரத்தை வெட்ட வேண்டும் என்ற எண்ணம் யாருக்காவது வந்தால், அந்த மரம் அப்போது தெய்வ அன்னையாக விளங்கிய மீராவிடம் சென்று முறையிடுவது வழக்கமாம்!

இதோ மீராவிக்கு விலங்குகளுடன் எத்தகையத் தொடர்பு என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

எழில் கொஞ்சும் பாரீஸ் நகரில் ஒரு பூங்கா. அங்கு விலங்குகளும் வளர்க்க வைத்திருந்தார்கள். சிங்கம் ஒன்று அங்கு அப்போது வந்திருந்தது. கூண்டில் அடைபட்ட அரிமா அல்லவா? அதனால் அது அளவுக்கு அதிகமான கோபம் கொண்டிருந்தது.

அந்தச் சிங்கம் தன்னை யாராவது காண வந்தால், அவர்கள் அதைப் பார்க்க முடியாதபடி கூண்டுக் கதவுக்குப் பின்னால் ஓடி ஒளிந்து கொள்ளும் பழக்க முடையது, மீரா இதைக் கவனித்தார்.

ஒரு நாள் மீரா கூண்டருகே சென்று சிங்கத்துடன் பேசினார்! சிங்கமாவது பேசுவதாவது என்று கேலி செய்கிறீர்களா? நாம், மிருகங்களுடன் பேசினால், அவை உற்றுக் கேட்கும் பண்புடையது; மனிதர்களுடைய பேச்சில் அப்படி ஒரு கவர்ச்சி மிருகங்களுக்கு உண்டு. இப்போதும் அதே காரணத்தோடுதான் மீரா சிங்கத்துடன் பேசியதைக் கூறிகிறார். கேட்போமா?

'நான் அந்தச் சிங்கத்துடன் இனிமையாகப் பேசினேன்.' ஓ, சிங்கமே! வனராசவே, மிருகங்களுக்குள் வீர நாயகராகத் திகழும் நீ எவ்வளவு பேரழகோடு இருக்கிறாய்? அப்படிப் பட்ட வீரத்திலகமே, ஏன் நீ, மனிதர்களைக் கண்டால் ஓடிப் போய் ஒளிந்துக் கொள்கிறாய்? நாங்கள் எல்லாம் உன்னைப் பார்க்க எவ்வளவு ஆசையோடு இருக்கிறோம்?' என்றேன்.

எனது பேச்சைக் கேட்ட அந்த வன வேந்தனான சிங்கம், மெதுவாக எனது பக்கம் திரும்பி, என்னைப் பார்த்தது! பிறகு தனது கழுத்தைச் சிறிது என் பக்கம் நீட்டியது. சிறிது நேரம் பொறுத்து அந்தச் சிங்கம் தனது காலை எனது பக்கம் கொண்டு வந்தது.

இறுதியாக அது என் பக்கம் வந்து, தனது முகக்தைக் கம்பிகளின் மீதுவைத்துக் கொண்டு என்னுடன் பழகியது. கடைசியில் என்னைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர் வந்து விட்டாரே என்று சிங்கம் என்னிடம் கூறுவதுபோல இருந்தது.

இவ்வாறாக மீரா, விலங்குகளிடமும், மரங்களுடனும், பறவைகளுடனும் பேசும் பயிற்சிக்குரிய பழக்கம் கொண்டது - அந்தப் பாரீஸ் நகர் அடவியில்தான் என்பதை உலக மக்களுக்கு உணர்த்தினார் மீரா!

இந்தச் சம்பவங்களை எல்லாம் மீரா, தெய்வீக அன்னையாகப் பக்குவம் பெற்ற பிறகு நமக்கும் கூறுகிறார்.

# 3

# சித்து ஞானத்தில் அன்னையின் தெய்வ ஒளி!

சிறுமி மீரா, கல்வியில் மட்டுமன்று, இசைத் துறையிலும் வல்லவரானார்! வாய்ப்பாட்டு இசைக் கருவிகள் இரண்டிலும் தேர்ச்சி பெற்றார்.

மேலை நாட்டுக் கருவிகளுள் ஒன்றான 'ஆர்கன்' முன்பு சிறுமி மீரா அமர்ந்துக் கொண்டு மணிக் கணக்காக சாதகம் செய்வார். நேரம் போவதே தெரியாமல் மெய்மறந்து வாசிப்பாள்.

அவர் வாசிக்கும் ஆர்கன் ஒலியைக் கேட்டு வீதியில் போவோர் ஒவ்வொருவராக அவர் முன்பு வந்து அமர்வர். ஆர்கன் வித்தையைக் கேட்டு, ரசித்து அவர்கள் மகிழ்வார்கள்.

பள்ளிப் படிப்பை முடித்த பின்பு மீரா ஓவியம் வரையக் கற்றார். ஒரு நாளைக்கு பல மணி நேரங்கள் உழைப்பதில் அவர் சளைக்கமாட்டார்; களைக்கமாட்டார்.

மீராவால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் பல, பாரீஸ் நகரில் நடைபெறும் கண்காட்சிகளில் இடம்பெற்று, காண் போரின் கவனத்தையும், பாராட்டுக்களையும் பெறுமளவுக்கு

ஓவியக் கலை யில் மீரா தேர்ச்சி பெற்றார். கல்வி, இசை, ஓவியம் அனைத்திலும் அந்தச் சிறுவயதிலேயே அனைவரின் புகழாரங் களையும் சூடியவரானார்.

திருமண வயது வந்தது. பெற்றோர் அவருக்குத் திருமணத்தை நடத்தினார்கள். திருமணம் நடந்த பின்பும், தனது இலட்சியத்தின் மீதிருந்த நாட்டத்தை, தீவிர அக்கறையை அவர் குறைத்துக் கொள்ளவில்லை. மீராவின் ஆன்ம ஞான ஆவல் மேலும் அதிகமானது.

உலக மக்கள் அனைவரும் - தன் மக்கள், தன்னுடைய வர்கள் என்ற உரிமை உணர்ச்சியில், மீரா ஆழ்ந்த பற்றும், அன்பும், பரிவும் கொண்டு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்த் தத்துவத்திற் கேற்ப எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திடமும் மீரா, இரக்கம், கருணை, அன்பு கொண்டவ ராகவும், அதற்காக உழைப்பவராகவும் விளங்கினார்!

மக்கள் துயரங்கள் அகல வேண்டும், பாதி மிருகமாக - பாதி மனிதனாக வாழும் மக்கள் அனைவரும் தேவர்களாக வேண்டும்.

உண்மைகள் உலகை ஆட்சி செய்ய வேண்டும். பொய்மை கள் புறங்காட்டி அழிய வேண்டும். மக்கள் அனைவரும் ஒற்றுமை யாக, அன்பாக, ஆனந்தமாக அமர வாழ்வு வாழ வேண்டும்.



மீராவின் மனத்தில் இந்த சிந் தனைகளே எப்போதும் நடமாடிக் கொண் டிருந்தன. தனது சொந்த நலனைப் பற்றிய சிந் தனைகளோ, கவலை களோ சிறிதும் அவர் மனத்தில் இடம் பெற் றிருக்கவில்லை.

எப்போதும் உலக மக்கள் சிந்தனைகளே அவரது உள்ளத்திலே உயிரோட்டமாக உலா வந்து கொண்டிருந்தன.

அடிக்கடி மீரா தியானத்தில் ஆழ்ந்து விடுவார். அந்த நேரங்களில் எல்லாம் அவருக்கு இறை தொடர்பு சிந்தனைகளே நெருக்கமாக உருவானது. அதன் பயன் என்ன தெரியுமா?

இறைவனுக்குத் தன்னை, தனது வாழ்க்கையை, முழுவதுமே தந்துவிடுவது என்ற உறுதி கொண்டு, தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு செயலையும், அவற்றின் சிறுசிறு பிரச்சினைகளையும் விடாது, இறைவனுக்கு நைவேத்தியமாக, அன்புக் காணிக்கையாக்கி வந்தார்!

இறைவனது வழிபாடுகளில் கடவுளிடம் பேசும் உரையாடல் கள் அனைத்தும், மீராவிடம் பக்தி ததும்பும் அழகான பிரார்த்தனை களாக உருவெடுத்தன.

'தியானமும் பிரார்த்தனைகளும்' என்ற நூலை மீரா அப்போது எழுதி முடித்தார். அந்தப் புத்தகம் 1914ஆம் ஆண்டிலிருந்து 1919ஆம் ஆண்டு வரை எழுதப்பட்ட தியான வரலாற்றுச் சம்பவங்களாகும்.

இந்த தியான நூலைப் படிப்போரின் இதயங்களில், தூய, பரிசுத்த, தெய்வீக அன்பை வெள்ளமாகப் பாய்ச்சி, அவர்கள் ஆன்மீகத்தின் சிகரங்களுக்கும், ஆழங்களுக்கும், விசாலங் களுக்கும் அழைத்துச் செல்லும் ஞானம் பெற்றவை ஆகும்.

கல்வியிலும் கலையிலும், ஆன்மீக ஞானத்திலும் வல்ல வராக, நல்லவராக விளங்கிய மீரா, Occultism எனப்படும் சித்து ஞானத்திலும் நன்கு தேர்ச்சி பெற்ற தெய்வ மங்கையாகத் திகழ்ந்தார்.

சித்து ஞானம் என்றால் என்னவென்று கேட்கிறீர்களா? நாம் பார்க்கும் இந்தத் தூய உலகைத் தவிர, நமது பார்வைக்குப் புலப்படாத உலகுகள் பல இருக்கின்றன. அந்த உலகங்களில் பலவித உயிர்கள் வாழ்கின்றன.

இவ்வாறு வாழும் இந்த ஜீவர்கள் அல்லது உயிர்கள், அடிக்கடி நாம் வாழும் இந்த உலகத்தின் வாழ்விலும் அவர்கள் தலையீடு செய்கிறார்கள். இவர்களில் சிலரால் நமக்கு நன்மைகளும்; நடக்கின்றன; தீமைகளும் விளைகின்றன.

சித்து ஞானத்தில் தேர்ச்சி பெற்றவர்களே, இந்த உலகுகளைக் காண்பார்கள். அவர்களால்தான் அவைகளில் உள்ள உயிர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். அந்த உயிர்கள் மீது ஆதிக்கமும் செலுத்த முடியும். அதன் வாயிலாக நாம் வாழும் உலகத்துக்கும் உதவிகளைச் செய்ய முடியும்.

எல்லோராலும் இப்படிப்பட்ட சித்து ஞானத்தைப் பெற முடியுமா? என்றால் - முடியாது. அதற்கும் சில தகுதிகள், பயிற்சிகள் தேவைப்படுகின்றன. அந்தத் தேவைகளில் முதன்மையானது அஞ்சாமை, சுயநலம் இல்லாமை. இவைதான் அடிப்படைத் தேவைகள். இவை இல்லாவிட்டால், சித்துஞானம் பயிற்சி பெற முடியாது. ஒரு கால் பயிற்சி பெற நிலை ஏற்பட்டால் - அது ஆபத்தாகவே முடியும்.

இந்த அடிப்படைத் தேவைகள் மீராவுக்கு இயற்கை யாகவே அமைந்திருந்தன. சூக்கும கண்ணோட்டம் மீராவுக்கு இயல்பாகவே இருந்தது. இருந்தாலும், எந்தக் கலையைப் பயின்றாலும் ஓர் ஆசான் தேவை அல்லவா? அப்போதுதானே - அந்தக் கலையை நுண்மாண் நுழைபுலமாக நுகர முடியும்?

ஆனால், மீராவைச் சுற்றி இருப்பவர்களுக்கு இதுபற்றி எல்லாம் ஒன்றும் தெரியாது. எனவே, சித்து ஞானம் முழுமையாக உணர்ந்த தம்பதியர் இருவர்; ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள அல்ஜீரியா என்ற நாட்டிலே இருப்பதாக மீரா கேள்விப்பட்டு - அல்ஜீரியா சென்றார்.

அந்த சித்து ஞானம் பெற்ற சித்தரின் பெயர் தியோன். அவருடைய மனைவி திருமதி. தியோன். கணவனைவிட மனைவி சித்து ஞானத்தில் நன்கு தேர்ச்சிப் பெற்றவராக இருந்ததை மீரா உணர்ந்தார்.

அல்ஜீரியா என்பது இப்போது ஒரு நாடாகவே இருக்கின்றது. மீரா அங்கே சென்றபோது, அல்ஜீரியா ஆப்பிரிக்கா கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. பூமத்திய ரேகைக்கு அருகில், சகாரா என்ற உலகப் பெரும் பாலைவனத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு வெப்பம் அதிகமாக உள்ள நாடு ஆகும்.

சூரியன் உதிர்க்கும் சுடர்களின் கடும் வெப்பத்தை அப்படியே திருப்பிக் கக்கும் அந்த அல்ஜீரியா பகுதியில், ஒரு மலையோரத்தில் திரு. தியோன் தம்பதியருக்கு ஒரு தோட்டம் இருந்தது. தோட்டமா அது அப்போது? தோட்டம் சார்ந்த பெரிய ஒரு காட்டுப் பகுதி நிலம் அது.

தியோன் போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு யூதர் ஆவார். அவரது துணைவியான திருமதி தியோஸ் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வேல்ஸ் மாநிலத்தின் பகுதியைச் சேர்ந்தவர். இருவரும் சித்து ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அத் துறையில் மிகச் சிறந்த மேதைகளாக அங்கே விளங்கி இருந்தார்கள்.

திருமதி. தியோன் சித்து ஞானத்தில்; குறிப்பாக ஆன்மீகத் துறையில், அனைத்தையும் உணர்ந்து கணவன் - மனைவி இருவரும் ஒன்று சேர்ந்து - அந்தத் தோட்டக் காட்டு மக்கள் வாழும் பகுதியில் நல்ல பெயரோடும், புகழோடும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அங்கே ஆன்மீகத்தை ஆராய்ச்சி செய்வதுதான் தலையாய வேலை...

அத்தகைய திறமை மிக்க தம்பதிகளோடு அவர்கள் குடும்பத்தினர்போல இணைந்து கற்கக் கூடிய சித்து ஞானங்களை, மீரா கற்றுத் தேர்ந்தார்.

இந்த இரு சித்துக் கலைஞர்கள் வாழ்ந்த அந்த எஸ்டேட்டில், மக்கள் அவர்களது சித்து வித்தைகளைக் கண்டு வியப்பு அடைவதற்கான, அற்புதங்களைச் செய்து வந்தார் மீரா.

திருமதி தியோன் ஒரு நாள் மிகவும் களைப்படைந்திருந்தபோது, தியோனைப் பார்த்து, உங்களுடைய களைப்பைப் போக்கிடக் கூடிய, வழி ஏதாவது சித்து வித்தையில் இருக்கிறதா? என்ன அது? என்று மீரா கேட்டார்.

உடனே தியோன் அங்கே மரத்தில் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்த பப்பாளிப் பழத்தை அறுத்து, அதை முழுசாக அப்படியே தனது மார்பின் மேல் வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்துக் கொண்டார். உடலைத் தளர்த்திக் கொண்டார். ஆடாமல் அசையாமல் சிறிது நேரம் தரையில் படுத்தே இருந்தார். கொஞ்ச நேரம் பொறுத்து மீரா அந்தப் பழத்தை எடுத்துப் பார்க்கும்போது, உருண்டையாக இருந்த அப் பழம் தட்டையாகி விட்டதைக் கண்டு ஆச்சர்யப் பட்டார்.

பழம் தட்டையானதற்கு என்ன காரணம் என்று மீரா, தியோனைக் கேட்டபோது, அதற்கு அவர், ''பப்பாளிப் பழத்திலிருந்த சத்துக்களை எல்லாம் சித்து ஞானத்தால் உறிஞ்சி, எனது உடலுக்குள் செலுத்திக் கொண்டேன். இப்போது எனக்கிருந்த களைப்பெல்லாம் போய்விட்டது மட்டுமன்று, உடல் தெம்பாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது பார்' என்று தனது உடலையும் வயிற்றையும் தடவிக் காட்டினார் திருமதி. தியோன்.

யாரொருவருக்குக் களைப்பு ஏற்பட்டாலும், பக்கத்தில் உள்ள பழங்களை எடுத்துத் தனது மார்பு மேல்; அதே களைப்பு எண்ணத் தோடு வைத்துக் கொண்டு, எனது உடலுக்குத் தெம்பு வேண்டும் என்ற எண்ணத்தில் கொஞ்ச நேரம் தியானத்தில் திளைத்தால் - அந்தப் பழங்களின் சாறுகள் எல்லாம் உடலுக்குள் ஊடுருவிச் சென்றுக் களைப்பைப் போக்கிவிடும். இதுதான் தக்க முறை'' என்றார்.

அந்தப் பழங்களை வாய் வாயிலாக உண்டு அவற்றின் சாற்றை உறிஞ்சி உடலுக்குள் போக வைப்பது சாதாரணமாக எல்லாரும் செய்யும் வேலைதான். அது இயற்கையான முறை, ஆனால், சிக்கலான முறை; நிச்சயமற்ற வழி!

ஆனால், தியானமுறையில் களைப்பைப் போக்கிக் கொள்வது செயற்கையான சித்த ஞானமுறை. புரிந்து கொண்டாயா மீரா? என்று திருமதி தியோன் கேட்டார்.

திருமதி தியோன் இதுபோன்ற எவ்வளவோ சித்து ஞான வழிகளை திருமதி மீராவுக்குக் கற்றுக் கொடுத்தார். இதுதான்

சித்துஞான முறை என்பதாகும். இந்தக் கலையிலே மீரா சிறந்த வல்லவராகவே திகழ்ந்தார்.

மற்றொரு சித்துஞான முறையைத் திருமதி தியோன் கற்றுத் தந்த அற்புதத்தையும் பாருங்கள்.

சுமார் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு காட்டுப் பகுதியிலே இருந்த ஒரு மலைப் பகுதியை நிர்வகிக்கும் மேலாளர் ஒருவர், சகாரா பாலைவனம் மணற் பகுதி காட்டுக்குள்ளும், மலைப் பகுதிக் குள்ளும் பரவிவிடுமோ என்ற பயத்தில், அதைத் தடுத்திட அந்த மலைமேல் மரஞ்செடிகள் பலவற்றை நடுவது நல்லது என்ற திட்டமிட்டிருந்தார்.

காட்டுத் தோட்டங்களில் நன்கு வளரும் மரம் 'பைன்' என்ற மரம். அந்த மரங்களை மலைமேல் நட எல்லா ஏற்பாடு களையும் அந்த மலை மேலாளர் செய்திருந்தார்.

ஆனால், ஏதோ ஒரு தவறுதலால், பைன் மரக் கன்றுகளுக்கு பதிலாக, 'பீர்' மரக் கன்றுகளை அனுப்பி இருந்தார்கள் தோட்டக் காட்டுக்காரர்கள். பீர் கன்றுகள் என்றும் பாராமல் மலைமேல் நடப்பட்டுவிட்டன.

பீர் மரங்கள் மிகவும் குளிர்பிரதேசமான ஸ்கேண்டி நேவியா நாட்டின் பகுதிகளிலே விளையும் தன்மை பெற்ற மரங்கள். அல்ஜீரியா குளிர் பிரதேசமல்ல; வெப்பம் அதிகமான சகாரா பாலைவனப் பகுதிநாடு அது.

திருமதி தியோன், மேற்கண்ட மர வளர்ப்புகளில் தட்ப வெட்ப நிலைகளை எல்லாம் அறிந்தவர் தான். என்றாலும் இப்படி யும் இடம் மாறி, தட்ப வெட்ப நிலைகளை மாற்றி நட்டுத்தான் பார்ப்போமே என்று சித்து ஞானத் திறமையால் அவற்றை நட்டுப் பயிரிட்டார்.

திருமதி தியோனுடைய சித்து ஞானம் வெற்றி பெற்று விட்டது. பீர் மரங்கள் வெப்ப நாட்டில் நன்றாகப் தழைத்துப் பயிராயின. எதிர்பார்த்த அளவுக்கு பலனையும் தந்தன! அதனால், பாலை வன மணல் அங்கே வந்து பரந்து குவியாத நிலையேற் பட்டதுடன், காட்டுப் பகுதியே தொடர்ந்து பரவலாகியது. எப்படி?

பீர் கன்றுகளை நட்டு மூன்றாண்டுகளான பிறகு, டிசம்பர் மாதத்தின் ஓர் இரவு நேரத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த திருமதி தியோன் திடீரென விழித்துக் கொண்டார்.

அன்றிரவு நிலா வெளிச்சமும் இல்லை. ஆனால், திருமதி தியோன் தூங்கிக் கொண்டிருந்த அறையின் ஒரு பக்கம் மூலை ஓரமாக சந்திர ஒளி திடீரென்று பளிச்சென்று தெரிந்தது.

வியப்பு மேலீட்டால் திருமதி தியோன் அந்த அறை மூலையை உற்று நோக்கினார்! அங்கே ஒரு விந்தையான வியப்பான, சித்திரக் குள்ளன் உருவத்தைக் கண்டார்.

அவனுக்குத் தலைபெரியது; நாடகக் கொட்டகையிலே சிரிக்க வைப்பதற்காகவே நடமாடும் நகைச் சுவைக் குள்ளன் அணிந்து கொண்டிருக்கும் தலைக் குல்லாயை அந்தக் குள்ளன் தலையிலே அணிந்து கொண்டிருந்தான்,

பார்வையோ அவனுக்குக் கூர்மையாக இருந்தது. பச்சை நிறம் செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டிருந்தான். தாடியில் நீண்ட முடி தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அவன் உடலெல்லாம் பனிப் போர்வைபோல மூடிக் கொண்டிருந்தது.

குள்ளனைக் கண்ட திருமதி தியோன்; ''ஏய் குள்ளா! என்ன செய்து கொண்டிருக்கிறாய் அங்கே?'' என்றார்.

இந்த வினாவை அவர் ஏன் தொடுத்தார்? சித்திரக் குள்ளன் உடல் மேல் - போர்வை போல போர்த்திக் கொண்டிருந்த 'பனி' உருகி உருகி, தரையில் தேங்கி, தனது விரிப்பை வீண்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகு தான், தியோன் எழுப்பினார் அந்தக் கேள்வியை.

குள்ளன் பதிலேதும் கூறாமல், ஓர் இனிமையான புன் சிரிப்புடன், 'பீர் மரங்கள் எங்களைப் கூப்பிட்டன' அதனால் நாங்கள் வந்திருக்கிறோம்! நான் பனித் தேவன்! பீர் மரங்கள் பனி நாட்டிலே பரவலாகத் தோன்றும் பசுமையான மரங்கள்.

ஆகவே, அந்த பீர் மரங்களது அழைப்பை ஏற்று, நாங்கள் எனது பரிவாரங்களுடன் வந்திருக்கிறேன். இதையும் உங்களுக்கு

அறிவிக்க வேண்டியது எனது தொழிலறம்! அதனால் நானும் வந்துள்ளேன். என்றான்!.

கடும் வெப்பப் பூமியான சகாரா பாலைவனத்தில் எப்படி வரும் பனிப் படலங்கள்? என்று மீண்டும் கேள்விக் கணையை எய்தார். திருமதி தியோன்.

சரி, எப்படி நீங்கள் பீர் கன்றுகளை மிகத் திறமையாக பயிரிட்டீர்கள்! என்றான் சித்திரக் குள்ளன்.

அதற்குத் தியோன், "குள்ளனே நீ உரைப்பது உண்மையோ - அல்லவோ எனக்குத் தெரியாது. ஆனால் நீ, இப்போது எனது தரையைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறாய். உடனே போ! வெளியேறு!" என்றார்.

குள்ளன் போனான்! அங்கே காய்ந்துக் கொண்டிருந்த நிலா ஒளியும் மறைந்தது. ஒரு விளக்கை ஏற்றிக் கொண்ட தியோன். அங்கே கூர்ந்து பார்த்தார். அவன் உடலிலே இருந்து உருகிய பனிநீர். அங்கே தேங்கி இருப்பதைப் பார்த்தார்! எனவே, தியோன் கண்டது கனவு அன்று!

பொழுது புலர்ந்தது! மலைப்பகுதிகள் எல்லாமே பனிப் போர்வைகளால் போர்த்தப்பட்டிருந்த காட்சிகள்! இதற்கு முன்பு அன்றுவரை நடந்தே இராத அற்புதக் காட்சியாக அது அமைந்திருந்தது. அன்றிலிருந்து ஆண்டாண்டுகள் தோறும் அந்த மலைப் பகுதிகள் இன்றும் குளிர்காலப் பனிக் கோலங் களாகவே இருந்து வருகின்றன.

கீழே உள்ள நிகழ்ச்சி அன்னை அவர்கள் தனது தெய்வீக வாயாலேயே மொழிந்த சம்பவம் இந்த அற்புத நிகழ்ச்சி. இதையும் படித்துப் பாருங்கள்.

நான் அல்ஜீரியா பகுதியிலே இருந்து இரண்டாவது முறை யாகத் திரும்பி வந்தேன். திரு தியோனும் என்னுடன் கப்பலில் வருகை தந்தார்.

நடுக் கடலில் கப்பல் மிதந்துக் கொண்டிருக்கும்போது, திடீரென ஒரு கடும் புயல் எழுந்தது. வான் முட்ட எழுந்த

கடலலை கள் கப்பலை ஆட்டி அசைத்து அலை கழித்துக் கொண்டிருந்தன.

கப்பல் பயணிகள் இடையே பயம் கவ்விக் கொண்டது! ஆட்டமாடும் கப்பலுக்குள்ளே இங்குமங்கும் ஓடுகிற பயணிகள்; என்ன நிகழுமோ என்ற மனக்கலக்கம் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில், கப்பல் ஓட்டுநர்களின் தலைவன்; 'கப்பல் அபாயத்தில் அலைமோதுகின்றது' என்று அறிவித்து விட்டதால், எந்த நேரத்தில் கப்பல் கடலுக்கடியில் போய்விடுமோ என்று பயணிகள் தங்களது குழந்தைக் குட்டிகளோடு கடவுளை வேண்டிக் கிடக்கின்றார்கள்.

என்னைத் திரும்பிப் பார்த்த திரு தியோன் அவர்கள்; மீரா, நீ போய் இதை நிறுத்திவிட்டு வா' என்றார்.

கேப்டன் தியோன் சொன்னதைக் கேட்டு இவர்கள் என்ன இறை தூதர்களா? கப்பலைக் காப்பாற்றிட!' என்று திகைத்தார்.

'நேராக நான் எனது அறைக்குள் சென்றேன். கட்டிலில் படுத்துக்கொண்டேன். எனது உடலைக் கட்டிலிலேயே விட்டு விட்டுக் கடல்மேல் சென்றுபார்த்தேன். அங்கு சிறு ஜீவன்கள் பலர் ஒன்று சேர்ந்துக் கொண்டாட்டம் அடித்துக் கொண்டிருந்தார்கள். பயணிகளுக்குப் பயமாக இருந்த அந்த ஆபத்துச் சம்பவம், கொண்டாட்டக்காரர்களுக்குக் கேலியாக இருந்தது.

அவர்களிடம் சென்று நான் பேசினேன்; 'இப்படி எல்லாம் அமளி செய்யாதீர்கள்; எவ்வளவு பயணிகளின் உயிருக்கு உங்களுடன் போராடும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது பார்த்தீர்களா? தயவு செய்து உங்களுடைய கூத்தாட்டங்களை நிறுத்துங்கள் ' என்றேன்.

கொஞ்சம் நேரமானவுடன் அவர்கள் தங்களது கோலாகல கடடங்களை நிறுத்திக் கொண்டார்கள். உடனே கடலும் அமைதி கண்டது. மறுபடியும் நான் எனது உடலுக்குள் ஊடுருவி விட்டேன்.

எனது அறையை விடுத்து, பிறகு கப்பல் மேல் தளத்திற்குச் சென்றேன். கப்பல் தலைவர் உட்பட்ட பயணிகள் அனைவரும் பயம் நீங்கி, மகிழ்ச்சிப் பொங்கப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மீரா செய்த இந்த அரிய செயலைதான் கூடுவிட்டுக் கூடுபாயும் சித்துஞான வித்தையாகும். தனது உடலைக் கட்டிலிலே விட்டுவிட்டல்லவா; மீரா கப்பல் மேல் தளம் சென்று கடல் ஜீவன்களிடம் உரையாடி அடக்கிவிட்டு வந்தார்?

எனவே, தமிழ்நாட்டுச் சித்துஞானம் அப்போது சகாரா பாலைவனம் வரை பரவி இருந்ததாகத் தெரிகிறது அல்லவா? அதற்குரிய சான்றுதானே மீராவின் செயல்?

அல்ஜீரியா நாட்டிலே இருந்து மீரா மீண்டும் பாரீஸ் நகர் வந்து சேர்ந்தார். கல்வி, இசை, ஓவியம், சித்துஞானம் ஆகிய கலைகளிலே எல்லாம் மீரா திறமையாளராகத் திகழ்ந்தார். நுண்ணிய சித்துகளில் எல்லாம் அவர் ஓரிரு ஆண்டுகளில் குறிப்பிடத் தக்க வல்லமை பெற்றார்.

இந்தக் கலைகளை மீரா தனது சுயநல நோக்கத்திற் காகவோ, எதிர்கால வருவாய்க்காகவோ, வாழ்வுக்காகவோ கற்றவரல்லர். உலக மக்களுக்கு உதவும் எண்ணத்தில், ஆன்மீகத்திற்குத் துணை செய்யும் நோக்கத்தில், விதிக்கப்பட்ட இறை பணியை, கடவுட் தொண்டை சரிவர நிறைவேற்றி, மக்கட் குலத்தை மேன்மைப் படுத்திட தனது எண்ணங்களை, செயல்களை - அனைத்தையும் தியாகம் செய்தார்.

பாரீஸ் நகரில் திருமதி மீரா மேற்பார்வையில் ஓர் ஆன்மீக ஆய்வு மன்றம், சித்துஞான ஆன்மீகம், ஆய்வு நடந்து வந்தது. இந்தக் கழகத்தில் மீரா சென்று அடிக்கடி ஆன்மீகச் சொற்பொழிவு செய்து வந்தார். நாளடைவில் அந்தப் பொழிவுகளை எல்லாம் திரட்டி நூலாக வெளியிட்டது அந்தப் பாரீஸ் ஆன்மீக மன்றம்.

அதனால் அவர், அங்குள்ள ஆன்மீக ஞானத்தில் எத்தகைய உயர்ந்த தகுதியில் ஆன்மீகர்களால் எண்ணப் பட்டிருந்தால், இறைஞானச் செல்வர்கள் இடையே பேசும் ஞானச் செல்வியாக,

அவர் திகழ்ந்திருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருமதி மீரா அவர்களின் இறை வழிபாடு ஞான உரையைக் கேட்ட, பாஹாய் மன்ற உறுப்பினர்களும், அதன் மன்றத் தலைவருமான திரு. பாஹா என்பவரும், திபேத் நாட்டிற்குள் முதன்முதலாக நுழைந்து பௌத்தச் சொற்பொழிவு களைத் தொடர்பாக ஆற்றிவந்த அம்மையார் அலெக்சாண்டர் டேவிட் நீல் என்பவரும், ஐரோப்பிய கண்டத்தின் மற்ற நாட்டு ஞானியர்களும், சான்றோர்களும், பெரியார்களும் எவ்வளவு பெருமதிப்பு வைத்துப் பாராட்டிப் போற்றினார்கள் பார்த்தீர்களா நமது ஞானி மீராவை?

மகான் அரவிந்தர் தனது விடுதலைப் போரின் தேச பக்தப் போராட்டங்களை 1910-ஆம் ஆண்டில் முடித்துக் கொண்டு சிறையிலே இருந்து வெளிவந்த சூட்டோடு சூடாக, பிரெஞ்சு ஆட்சியிலே அடிமைப்பட்டிருக்கும். புதுச்சேரி மாநிலத்திற்குள் 1910-ஆம் ஆண்டு, ஏப்ரல் 4ஆம் நாள் நுழைந்து வீடுகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, ஆன்மீக உலக வாழ்க்கையிலே ஈடுபட்டுக் கடவுள் கட்டளையை ஏற்றுக் கொண்டிருந்த நேரம்!

மகாத்மா காந்தியடிகள் தனது திருக் குமாரனான தேவதாஸ் காந்தி அவர்களைத் தூது அனுப்பி மீண்டும் சுதந்திரப் போர் அரசியலுக்குத் தலைமை வகிக்க திரு. அரவிந்தரை அழைத்தும்கூட, அவர் வாக்கை மறுத்து ஆன்மீகத்திலேயே அவர் உழன்று கொண்டிருந்த நேரம்!

வங்க நாவலராகவும், வழக்கறிஞராகவும், தியாக வீரராகவும் திகழ்ந்த சித்த ரஞ்சன்தாஸ் அவர்கள், அரவிந்தருடைய அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் வாதாடி போராடியிரா விட்டால், அரவிந்தர் சிறை வாழ்விலேயே செத்திருப்பார்! அந்த அளவுக்கு திறமையான இளம் வழக்கறிஞராக அப்போது திகழ்ந்த சி.ஆர்.தாஸ் எனப்படும் வங்க விடுதலை வீரர் சித்த ரஞ்சனன் தாஸ், ஒரு கடிதம் எழுதி அரசியலுக்கு அழைப்பு விடுத்திருந்தும், அந்த அழைப்பையும்

தயவு தாட்சண்யத் தோடு மறுத்து, புதுச்சேரி ஆசிரம வாழ்க்கையே தனது ஆன்மீக வாழ்க்கை என்ற நம்பிக்கையோடு அரவிந்தர் வாழ்ந்த நேரம்!

அந்த நேரமான 1914-ஆம் ஆண்டில் தான், மீராவுக்குப் புதுச்சேரியில் மகான் அரவிந்தர் என்னும் மகா புருஷர் ஒருவர் இருப்பது தெரிந்தது. அப்படிப்பட்ட ஓர் இந்திய மகரிஷியை, மகானை, மகா புருஷரை நேரில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததால், அந்த ஞானப் பெருமகனாரைத் தரிசனம் செய்வதற்காக மீரா பாரீஸ் நகரை விடுத்துக் கப்பலில் புதுச்சேரி நகருக்குப் புறப்பட்டு வந்தார்!

புதுச்சேரிக்கு வந்து தங்கியிருந்த அரவிந்தரின் ஆன்ம சாதனை, பக்தித் துறையில் தீவிரமானது; இறைவனுடன் மிக நெருங்கிய தொடர்பு அவருக்கு ஏற்பட்டதாம்.

அடைதற்கரிய ஆன்ம அனுபவங்கள் ஆயிரம் ஆயிரமாய் அவரை வந்தடைந்தன; வட்டமிட்டன. வேத மகான்களால் கண்டு கூறப்படா அற்புத அனுபவங்களும், உபநிடத முனிவர்களின் அறிதற்கரிய, ஆற்றற்கரிய அகண்ட ஞான சிந்தனைகளும் அரவிந்தர் சுலபமாகக் கைவரப் பெற்றார்!

முதலில் அவர் இறங்கியது சுதந்திரப் போர்க் களமான, நாட்டுப் பற்றுடைய போராட்டக் களமாகும். அதற்குப் பிறகு இரண்டாவதாக அவர் இறங்கியது ஆன்மீக உலக இறைபணி களமாகும். இதற்காகவே மனித குலத்தை உய்விக்க அரும்பணிகள் பல அவர் ஆற்றி வந்தார்.

அந்த செயற்கரிய செய்யும் ஞானத்துறை பணிகளை நிறைவேற்றிட, மீரா எனப்படும் அன்னை அவர்களின் உதவி மிகமிக அவசியமானதாக அவருக்கு ஏற்பட்டது. அதனால், அன்னையின் வருகைக்காக மகான் அரவிந்தர் பெருமான் காத்துக் கொண்டிருந்தார்.

உலக ஆன்மீக வரலாற்றில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுப் போற்றப்பட வேண்டிய பொன்னான நாள் 1914-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ஆம் நாள்!

அமெரிக்கா சென்று வேத முழக்கங்கள் செய்த பின்பு சுவாமி விவேகானந்தர் பெருமான் மண்டபம், இராமேஸ்வரம் நகர்களுக்கு கப்பலில் வந்திறங்கித் தமிழ் மண்ணிலே காலடி வைத்ததுபோல, பாரீஸ் நகரை விட்டுக் கப்பலில் புறப்பட்ட பல்கலை வித்தகி மீரா, மண்டபம் வரைக் கப்பலில் வந்து, அங்கிருந்து தனுஷ்கோடி ரயில் வண்டியில் ஏறி, பிரெஞ்சு நாட்டு ஆட்சியின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த புதுச்சேரி நகரிலே காலடி வைத்தார்.

1914-ஆம் ஆண்டில், மார்ச் மாதம் 29-ஆம் நாள் பிற்பகல் 3.30 மணிக்கு, திருமதி. மீரா மகான் அரவிந்தரை, அவர் தங்கியிருந்த வீட்டில் சந்தித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததும், ஆழ்ந்த பக்தி மவுனம் சற்று நேரம் நிலவியது.

திருமதி. மீரா என்ற அன்னை - அரவிந்தர் என்ற மகானை முதன்முதலில் சந்தித்ததும், அந்தப் பெருமானுடைய திருவடி களில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். அந்த மௌனத்திலே ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

மகான் அரவிந்தர் பெருமான் தனக்கு ஒன்றும் புதியவரல்லர். பாரீஸ் நகரில் நாள்தோறும் மீரா கண்ட தனது கனவுகளிலே தோன்றிய பல மகான்களுள்; அரவிந்தர் மகரிஷியும் ஒருவராக இருந்தார். எனவே, கனவிலே கண்ட ஞான ரிஷியை அவர் நனவிலே கண்டு கொண்டார்.

''எந்த அரவிந்தரை நாம் கிருஷ்ணன் என்று எண்ணி கனவிலே கண்டோமோ, அதே கிருஷ்ணனைக் 'கிருஷ்ணா' என்று குறிப்பிட்டு அழைத்து வந்தோமோ, அவரே - இந்த அரவிந்தர் என்பதை மீண்டும் மீண்டும் கவனப்படுத்திக் கொண்டே களிப்படைந்தார்'' அன்னை என்ற திருமதி. மீரா.

தம்மையும், தாம் கற்றவை அனைத்தையும், ஆன்மீகத் துறையில் தாம் பெற்றிட்ட ஞானம் எல்லாவற்றையும், தனது உடைமைகள் முழுவதையும், ஒரு சிறிதையும் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாமல் மகரிஷி அரவிந்தரின்

திருவடிகளுக்கே முழு மனத்தோடு காணிக்கையாக்கி விட்டார் திருமதி. மீரா.

அரவிந்த மகரிஷிக்கு அனைத்தையும், தன்னையும் காணிக்கையாக்கிவிட்ட திருமதி. மீராவுக்கு, விண்வெளி விரிந்து பரந்த வானளாவிய அகண்ட ஆன்மீக தெய்வீக மோன ஒளி, அரவிந்த பெருமானிடமிருந்து அன்னை பெருமாட்டிக்குரிய புறமும் அகமும் பரவி நின்று ஊடுருவியது. மிக பிரமாண்ட மான சாசுவதமான பேரமைதியில் அன்னையின் ஆன்மா ஆழ்ந்து நின்றது.

பல்கலை வித்தகங்களில் எவ்வளவோ அரிய ஆன்மானு பவங்களும், ஞான சித்துக்களும் பெற்றிருந்த அன்னை பெரு மாட்டியான மீரா, மகரிஷி அரவிந்தரிடம் பெற்றிட்ட ஞான மோன நிலையை இதுவரை அவர் எவரிடமும் பெற்றதில்லை.

அதுபோலவே, அரவிந்தரிடம் அவர் பெற்றிட்ட எல்லாமும் இறுதி வரை அன்னையை விட்டு அகன்றதும் இல்லை. அன்னையின் அகத்திலேயே அந்த பேரானந்த அமைதியும் - ஆன்ம ஞான மோனமும் ஐக்கியமாகி - ஓர் ஆன்ம சக்தியாக நாளுக்கு நாள் பொலிவுபெற்று அருளாட்சி யாக மலர்ந்துவிட்டது.

இந்த உணர்வுகளைப் பற்றி அன்னை மீரா, மறுநாள் தனது நாட்குறிப்பில் பதிவு செய்ததாவது :

''காரிருளில் நூற்றுக் கணக்கானவர்கள் அழுந்தி இருப்பினும் கவலையில்லை. நேற்று நாம் பார்த்த அந்த மகான் இந்த உலகத்தில் இருக்கிறார். அவர் இங்கே இருப்பது ஒன்றே, நம் இருள் - ஒளியாக மாறி, கடவுள் ஆட்சி இந்த உலகத்தில் மீது உருவாக்கப்படும் நாள் ஒன்று வரும் என்பதற்குரிய போதுமான சான்று ஆகும்.

அன்னை பெருமாட்டியும், மகான் அரவிந்தரும் சந்தித்தக் காட்சியைப் பற்றி ஓர் ஆன்மீக துறவி மகரிஷி அரவிந்தரிடம் கேட்டபோது, ''இறைவனுக்குத் தம்மை முழுமையாகக் காணிக்கை ஆக்கிக் கொண்ட ஒருவரை, எனது வாழ்நாளில் முதன்முதலாக அன்றுதான் கண்டேன்'' என்றாராம்.



29.3.1914-ஆம் ஆண்டன்று, ஆன்மீக சக்திகள் இரண்டும் மேற்கண்டவாறு சந்தித்துக் கொண்டன. அந்த நேர்முக சந்திப்பு உலக வரலாற்றின் ஆன்மீக வாழ்விலோர் திருநாள்; புனித நாள்; பொன்னாள்; புகழ் நாள்! அவற்றால்தான் உலகில் ஒரு மிகப் பெரிய திருப்புமுனைகள் ஏற்பட வழி பிறந்தது.

அறியாமை மேகம் உலகைக் கவ்வி இருந்தது. அது இந்த அருளாளர்கள் சந்திப்பால் சிறிது விலகியது. மகான் அரவிந்தர் எனும் ஞான சூரியன் அருளொளி, உலகம் எங்கும் பரவியது. அதன் எதிரொலிதான் 'ஆர்யா' எனும் பத்திரிக்கை!

'ஆர்யா' எனும் பத்திரிக்கை ஆன்மீக அவனி கண்டிராத ஓர் அற்புதமாகும். அந்த ஏடு, ஏறக்குறைய ஆறரை ஆண்டுகளாக உலகுக்கு ஞான ஒளி பாய்ச்சி, அறியாமை இருளை அகற்றியது. மாதம் தவறாமல் அந்த இதழ் வெளிவந்தது.

அறுபத்து நான்கு பக்கங்களைக் கொண்ட அந்த 'ஆர்யா' இதழ், அந்த நேரத்தில் நாட்டிலே அது ஒரு ஞானக் களஞ்சி யமாக வலம்வந்தது பரபரப்புடனும் = சுறுசுறுப்புடனும்!

அந்தப் பத்திரிக்கை, திவ்ய ஜீவனம், வேத இரகசியம், யோக விளக்கம், மனித சமூக வளர்ச்சி, இந்திய பண்பாட்டின் அடித்தளங் கள், உலக ஒற்றுமை போன்றவைகட்கு விளக்க மாக விளங்கின.

இந்தக் கருத்துக்கள் அனைத்தும் பலருடைய எழுத்து அல்ல; ஞான சூரியனான அரவிந்த மகரிஷியின் எழுத்துக்களே! அவர் ஒருவரால எழுதப்பட்ட எண்ணங்களே!

மகான் அரவிந்தர் எழுத அமர்ந்துவிட்டால் போதும், ஞானம் அவருடைய மன அலையை உடைத்துக் கொண்டு

வெளிவரும் வெள்ளம்போல பரவும். அவர் அமைதியாக அமர்ந்து உரையாடும்போது, இந்த மோன உருவம் அறுவடை செய்த ஞான விவசாயமா இவை? என்று எல்லோரும் வியந்து போற்றுவர் 'ஆர்யா'வைப் படித்து முடித்ததும்.

அரவிந்தர் எழுதமாட்டார். டைப் ரைட்டரின் முன்பு உட்கார்ந்துக் கொண்டு அவரே தட்டுத் தடங்கலின்றி வேகமாகத் தட்டச்சைத் தட்டித் தட்டி ஒலி எழுப்புவார் என்று அன்னை மீரா அடிக்கடி அச்சுக் கோர்ப்பவர்கள் இடையே பேசும்போது கூறுவார்.

''அதை அறிந்தவன் எல்லாம் அறிந்தவன் ஆகிறான்'' என்பது உபநிடத வாக்கு. மகரிஷி அரவிந்தர் அந்த உபநிடத ஞானத்தை 1914ஆம் ஆண்டிலேயே அறிந்த மகானாக் காட்சி தந்தார்.

கிழக்கு இந்திய பாரத புண்ணிய மண்ணில் 'ஆர்யா' உதய சூரியன் ஆகும்! அந்த வான் ஒளியின் கதிர்கள் மேற்கே உள்ள பிரிட்டீஷ் ஆட்சியை எதிர்க்கும் சுடர்கள் போல மேகங்களின் கார் மூட்டம் அப்போது காணப்படும்.

முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டில் துவங்கியபோது ஜெர்மன் நாசிப் படைகள் தனது ஆணவத் தாக்குதல்களால் ஐரோப்பா கண்டத்தையே அதிரடித்துக் கொண்டிருந்தன.

அசுர சக்திகளான அந்த நாஜி படைகள் உலகெங்கும் பரவி கோரத் தாண்டவமாடின. திக்குகள் எல்லாமே திக் திக்கென்று திணறிக் கொண்டிருந்தன என்பதால், அதன் வேதனைகளைத் தாங்க முடியாமல் நாடுகள் கதிகலங்கின.

இந்த தீய அசுர சக்திகளை, இராட்சச பலங்களை நமது புறக் கண்களால் பார்க்க முடிவதில்லை. அகக் கண்களைத் திறக்கும் சக்தி கொண்ட யோகியர், அந்த அசுர ஆற்றல்களை தெளிவாகக் காண் கிறார்கள். அந்தச் சக்தி, மனித குலத்தின் சக்தியைத் தங்களுக்குரிய கருவிகளாக்கிக் கொள்வதையும் ஞானியர் நினைவு கொள்கிறார்கள்.

மகான் அரவிந்தரும், அன்னை பெருமாட்டி மீராவும் சந்தித்ததால், அந்தச் சக்திகள் ஓர் அறப் பொருளாகிய தெய்வப் பணி ஆற்றலாவதால், உலகம் அந்தச் சக்தியால் பலவித நன்மைகளைப் பெறுகின்றன.

அசுர சக்திகளான உலகப் போர் மூண்டு, மக்கள் இடையே தீய சக்திகளின் செல்வாக்கு, ஆயுத பலம், போர் வன்முறைகள் பெரிதும் அதிகரித்ததால், அந்தச் சக்தியை முறியடிக்கும் தெய்வப் பணி தற்காலிகமாக தடைபட்டு நின்றது.

உலக ஆன்மீக முன்னேற்றத்தைத் தடை செய்வதே அந்த அசுர சக்திகளின் தீய நோக்கமாகும்.

1914-ஆம் மார்ச் 29-ஆம் நாள் புதுச்சேரி நகர் வந்த அன்னை மீரா, 1915-ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாளன்று, உலகப் போர் பணி காரணமாக மீண்டும் ஃபிரான்ஸ் நாட்டுக்குத் திரும்பிப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஃபிரான்ஸ் நாட்டுக்குப் புறப்படுவதற்கு முன்நாள், அதாவது பிப்ரவரி 21-ஆம் நாளன்று, முதன்முதலாக அன்னை மீரா அவர்களது பிறந்த நாள் விழா புதுச்சேரி நகரில் மிக எளிமையாகக் கொண்டாடப்பட்டது.

ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் நகரில், அன்னை ஓராண்டுக் காலம் தங்க வேண்டிய அவசியம் இருந்தது.

தீய சக்திகளின் அசுர பலத்தால் வேதனை பெற்ற உலகத்தின் துயரங்களை அன்னை பெருமாட்டி தனது உடலில் தாங்கிக் கொள்ள வேண்டியது இருந்தது.

உலக அன்னை அல்லவா அவர்? இந்த உலக இன்ப துன்பங்களை தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டவர்தானே அன்னை! அதனால், உலகம் அனுபவிக்கும் எல்லாத் துன்பங்களும் அவருடைய சொந்த துன்பங்களாயின.

இந்த அசுர பலத்தின் தாக்குதலால் அன்னை உடல் நலிந்து மெலிந்து, பெரிதும் பாதிப்புக்கு ஆளானது.

# 4

# நோயால் மக்கள் உழல்வது கண்டு தானே அதை ஏற்று அன்னையானார்

பிரான்சு நாடு சென்ற திருமதி மீரா, லூனெல் என்ற நகரில் தங்கியிருந்தார். கடுமையான நோய் கண்ட மீரா அவர்கள் எப்படியோ இறைவன் அருளால் மரணப் பிடியிலே இருந்து மீண்டார்.

இக்கட்டான நிலைக்குப் பிறகும்கூட, மீரா அவர்கள் முன்பு போலவே தனது ஆன்மீகத் தொண்டுகளைத் தளராமல் செய்து வந்தார். அப்போதும்கூட அவர்,நோயால் படுக்கையில் படுத்துக் கொண்டே பிரான்சு நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும், மற்றும் சில இடங்களிலும் பணிகள் செய்து வந்தது குறிப்பிடத்தக்க மக்கள் தொண்டாகும்.

திருமதி மீரா கருவிகளாகப் பயன்படுத்திய மனிதர்களது முகங் களை; அவரால் படுக்கையில் இருந்து கொண்டே பார்க்க முடிந்தது.

அந்த மக்கள் தங்களது வேலைகளைச் சொந்த பலத்தால் செய்ய முடியாதபோது, அவர்கள் மூலமாக அந்தப் பணிகளை மீரா நிறைவேற்றி வந்தார்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்து ஒரே நேரத்தில் மக்கள் மீராவிடம் உதவிகளை எதிர்பார்த்தார்கள். அவர்களுக்குரிய உதவிகளுக்காக, பல மனுக்களும் வேண்டுகோள்களும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன.

அவற்றையெல்லாம் ஆன்மீக முறையில், ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் மீரா அவர்களால் கவனிக்க முடிந்தது. அவர்கள் கேட்ட உதவிகளையும் அவர் அனுப்பி வந்தார்.

முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டிலிருந்து 1918-ஆம் ஆண்டு வரை நடந்ததை உலகம் உணரும். அந்த ஆபத்தான நேரத்தில் நடந்த எல்லா கொடுமைகளையும் மீரா அவர்கள் உணர்ந்துதான் இருந்தார்.

திருமதி மீரா அவர்கள் 1914-ஆம் ஆண்டு ஆகஸ்டு 8-ஆம் நாளன்று தனது நாட்குறிப்பில் என்ன எழுதி வைத்துள்ளார் என்பதையும் படித்து பாருங்கள். இதோ அது :

''மாபெரும் அசுர சக்திகள் புயற்காற்றுபோல உலகத்தின் மீது வந்து கோர தாண்டவம் ஆடுகின்றன. அவை மூர்க்கமும், முரட்டுத் தனமும், அஞ்ஞான இரு தன்மை நிரம்பியவைகளாகவும் இருந்தன''.

''என் கடவுளே! தெய்வீக நாயகனே! அவற்றை ஒளியுறுத்துவதற்கு வேண்டிய சக்தியை எங்களுக்குக் கொடு. உனது தெய்வீகப் பேரொளி அவைகளுள் உட்புகுந்து, அவற்றின் செயலை உருமாற்றம் செய்க'' என்று கடவுளை வணங்கி வழிபாடு செய்கிறார்.

''தெய்வீக சக்திகளின் வெற்றி ஆகஸ்ட் 17-ஆம் நாள் உறுதி'' என்று, இறைவன் உறுதியளித்துள்ளாதாக தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

திருமதி அன்னை எழுதியுள்ள ''பிரார்த்தனைகளும் - தியானங்களும்'' என்ற புத்தகத்தைப் படித்தால், முதலாவது உலகப் போர் நடைபெற்ற சமயத்தில் பகைச் சக்திகளின் கொடூரச் செய்கைகளால் உலகம் எத்தகைய பெரும் ஒரு காரிருளில் சிக்கிக் கிடந்தது. எவ்வளவு பெரிய வேதனைகளையும் இன்னல்

களையும் அனுபவிக்க வேண்டி இருந்தது என்பது நன்கு புரிகின்றது.

கருணைக் கடலான திரு. அன்னை இந்தப் புவி முழுவதும் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு, உலகத்தின் சுமைகளை எல்லாம் தன்மீது சுமத்திக் கொண்டு, இந்த உலகத்தின் பொருட்டு, உலக மக்களை வாழ்விப்பதற்காகக் கடவுளை எவ்வளவு துதித்து வணங்கி வழிப்பட்டிருக்கிறார் என்பதும் புரியும்.

அன்னையின் வேண்டுகோளை ஏற்ற ஆண்டவன், எவ்வாறு அருள் பாலித்து பதில் தந்துள்ளார் என்பது எல்லார்க்கும் புரியும்படி, அந்த நூலைப் படிக்கும்போது நாம் காண முடிகின்றது.

உலகப் போரைப் பார்த்தவர்களுக்கும், கேட்டவர் களுக்கும் அந்தப் போர் உலக மக்கள் மேல் எத்தகைய ஒரு பெரிய பயங்கரமான, படுநாசமான அழிவுகளை உண்டாக்கி யிருக்கின்றது என்பதையும் அறியலாம்.

ஆனால், உண்மையில் அது திரைக்குப் பின்னால், நுண்ணுலகில் தெய்வ சக்திகளுக்கும் அசுர கொடும் பலங்களுக்கும் இடையே நடைபெற்ற ஒரு கடுமையான யுத்தம் ஆகும். அந்தச் சக்திகள் மக்களை ஒரு பெரும் கருவிகளாகப் பயன்படுத்தி இருக்கின்றன.

அன்னை மீராவுக்குக் கடவுளுடன் மிக நெருங்கிய தொடர்பு எப்போதும் இருந்து வந்ததது. அவரது, ''பிராத்தனை களும் - தியானங்களும்'' என்ற நூலில், அன்னை ஆண்டவனு டன் நடத்திய நேரிடையான உரையாடல்களைக் காணலாம்.

அன்னை, தான் நினைத்த நேரங்களில் உலகத் துன்பங்களில் இருந்தெல்லாம் தம்மை விடுவிடுத்துக் கொண்டு, நிலையாக, இறைவனுடன் ஒன்றிய நிலையில் பேரமைதியுடன் ஆனந்தமாக இருந்திருக்கிறார்.

ஆனால், கடவுள் அவருக்கு இட்ட ஆணை வேறு. இருளும், பொய்மையும், மரணமும், துயரமும், நிறைந்த இந்த உலக உண்மையும், ஒளியும், அமைதியும் மகிழ்ச்சியுமாய் உள்ள ஒரு தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்வதே அன்னையின் பெரும் பணி என்பதை இறைவன் அவருக்குச் சிறு பருவத்தில் இருந்தே நன்கு உணர்த்தி இருக்கிறார். அதுவல்லாமல் அடிக்கடி அவருக்கு அதை நினைவூட்டியும் வந்தார்.

இதே கட்டளையைத்தான் மகான் அரவிந்தருக்கும் கடவுள் அறிவுறுத்தினார். இதை ஓரளவு அறிந்திருந்த அசுர சக்திகளும், பகை பலங்களும், இருட் சக்திகளும் தங்களது பிடிப்பிலிருந்து மனித சக்திகள் தப்பிப் போவதை விரும்பாமல், ஒன்று திரண்டு உலகத்தின் மீது படையெடுத்து ஆக்ரமிக்க, பல வகை முயற்சிகள் செய்து வருகின்றன. கால பலத்தால் அவையாவும் வீழ்த்தப்பட்டன. ஆனாலும், உலகத்திலிருந்து அவற்றை முழுவதுமாக விரட்டி யடிக்கப்படுவது உறுதி.

மனித குலம், கடவுள் பால் திரும்பி, அகந்தையை, ஆணவத்தை அகற்றி, ஆன்மீகத்தை ஏற்க விரும்பினால், கடவுளுடையை வெற்றி, ஆண்டவனது ஆட்சிப் புதுயுகம், என்றோ அல்லது இன்றோ நிறைவேறும்.

இந்த இறை வெற்றியை வேகப்படுத்தவே, மனித குலத்தை அமர வாழ்க்கைக்கு, மகிழ்ச்சி வாழ்க்கைக்கு, தெய்வீக வாழ்க்கைக்குத் தயாரிக்கவே மகரிஷி அரவிந்த பெருமானும், அன்னை பெருமாட்டி மீராவும் இந்த உலகில் தோன்றினார்கள்.

உலகில் இந்த இலட்சியத்தை முழுமையாக நிறைவேற்றி வைப்பதற்கும், அந்த இலட்சியத்தை எதிர்த்து நிற்கும் இராட்சச சக்திகளை அழித்து விரட்டுவதற்கும், மிக உயர்ந்த ஆன்மீக அதி உன்னத சக்தியை, பொன்னொளியைக் கொண்டு வரவேண்டி இருந்தது.

இந்த உலகத்திலே தெய்வீக வாழ்வை நிலை நிறுத்துவது என்பது மனித சக்தியால் ஆகக் கூடிய காரியம் அன்று.

அதி உன்னதமான ஓர் இயற்கையான இறை சக்தியின் முழுமையான ஆற்றல் இதைச் செய்ய இயலும்.

இந்த அதிமானசத்தை, உன்னத இயற்கை ஆற்றலை, மேலே இருந்து கீழே இறக்கி வருவதே மகான் அரவிந்தரின் முயற்சி, அவரது தவம்.

மனிதர்களின் இந்த அதிமானசத்தை ஏற்றிடத் தயார் படுத்துவதே; அன்னை என்ற தகுதியிலே தாயாக நின்று பணி புரிவதே; அன்னை மீரா அவர்களின் தெய்வீகப் பணிகள் ஆகும்.

ஆனால், அன்னைக்குத் தனது சொந்த முக்தியிலோ, சித்தியிலோ சிறிதும் அக்கறை இல்லை. இந்த இலட்சிய நிறைவேற்றத்தின் பொருட்டு, திருமதி அன்னை, மனித குலத்தின் துன்பங்கள், துயரங்கள், எல்லாவற்றையும் தனக்குள் ஏற்று, அவற்றுக்குரிய முடிவைக் காண வேண்டியது முக்கியமாயிற்று; அவசியமும் ஆயிற்று.

உலக நிலை காரணமாகவும், மனிதர்கள் தங்கள் ஆசை, ஆணவம், விருப்பம் வெறுப்புகளை விடுத்து, இறைவன் உதவியை நாட மனம் இல்லாதிருந்தாலும், இலட்சிய நிறைவேற்றத்தில் கால தாமதம் ஏற்பட்டது.

அந்த தாமத நிலை இருந்தாலும், மகான் அரவிந்தர், அன்னை பெருமாட்டி ஆகிய இருவருடைய மகாயோக சக்திகளின் விளைவாகவும், 1950-ஆம் ஆண்டில் மகரிஷி அரவிந்தர் செய்த அரும்பெரும் தியாக சக்தியின் பயனாகவும்; 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ஆம் நாளன்று; இந்த உலகத்திலே கடவுளின் உயர்ந்த அற்புத சக்தி இறங்கி வெளிப்பட்டது.

முதல் உலகப் போர் மூண்டு விட்ட காரணமாகப் பாரீசுக்குத் திரும்பிய அன்னை மீரா, அங்கே ஓராண்டு காலமே தங்கி இருந்தார். அதற்குப் பிறகு 1916ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அவர் ஜப்பான் நாட்டுக்குச் சென்றார். அங்கே சுமார் நான்கு ஆண்டுகள் தங்கினார்.

# 5

# ஆசிரமம் அமைத்த பின் அன்னை அமரர் ஆனார்!

1916-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஜப்பான் நாட்டுக்குச் சென்ற அன்னை, அங்கே சுமார் நான்கு ஆண்டுகள் தங்கியதற்கு என்ன காரணம் தெரியுமா?

## ஜப்பானியர் கலைஞர்கள்

ஜப்பான் நாட்டு மக்கள் பௌத்த மதத்தையும், சாக்கிய மகானுடைய அறநெறிகளையும் பின்பற்றிய அவர்கள் அருள் உள்ளத்தையும், கலை மனத்தையும், வாழ்க்கை நெறிகளின் அழகுணர்ச்சிகளையும் அன்னை கண்டார்.

ஜப்பானியர்களின் அன்றாட வாழ்க்கையே ஒரு கலைத் துறைச் சம்பவங்களைப் போல அமைந்துள்ளதாக அவர் உணர்ந்தார். அதல்லாமல், உலக மக்கள் வாழ்க்கை முறை களிலேயே ஜப்பான் மக்கள்தான் மிகச் சிறந்த கட்டுப் பாடுடையவர்களாக இருக்கிறார்கள் என்பது அவருடைய முடிவும் கருத்தும் ஆகும்.

''அழகுணர்ச்சியான அந்த வாழ்க்கை முறை தெய்வ வாழ்க்கை ஆகாது. தூல உலகில் இறைவன் எழில் மூலமே வெளிப்படுகிறான்'' என்று அன்னை அங்கே அறிவித்தார்.

இந்த உலகத்தில் தெய்வீக வாழ்க்கையை நிலை நாட்டிட ஓயாது உழைத்து வரும் தெய்வ அன்னையின் நான்கு முக்கிய சக்திகளுள்; திருமகள் ஒருத்தி ஆவார். அந்த தெய்வத் தாய் அன்பும், அழகும் இல்லாத இடத்தில் வருகை தரமாட்டார்.

அப்படியானால் வாழ்க்கையை அழகாக அமைப்பது எப்படி? வாழ்வையே ஒரு கலையாக அமைப்பதுதான்! அந்த அழகான அமைப்பை அன்னை ஜப்பான் நாட்டில் கண்டதாகக் கூறி பெருமிதம் கொள்கிறார்.

## ஜப்பானின் இயற்கை அழகு

அந்த எழில் வாழ்க்கைக்கு ஏற்ப, ஜப்பான் நாடு முழுவதும் எங்கு பார்த்தாலும், எழில் மயமாகவே இயற்கைக் காட்சிகள் இருந்தன.

வண்ண வண்ண மலர் சோலைகள்; பச்சை பசேலென்ற காவனங்கள்; சலசலப்பாக ஓடிக்கொண்டிருக்கும் நீரருவி ஓடைகள்; கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் வயல் காட்சிகள் பார்ப்பதற்கு அவை பரவசமாக அமைந்துள்ளன.

ஜப்பானியர்களது ஒவ்வொரு வீடும் இயற்கையோடு சுற்றியுள்ள அழகு காட்சிகளாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீடும் பூக்களின் அழகுக் காட்சிகளோடு பூத்து மணந்து கிடந்தன!

வீட்டின் வெளிப்புறங்கள் மட்டுமல்ல; வீடுகளுள் சென்று பார்த்தால் அதனுள் வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பொருட்களும் எழிலான தோற்றத்தோடு, பொருத்தமாக, அங்கு இருக்க வேண்டிய இட வசதிகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு இருக்கின்றன. பூக்கோப்பைகளை வரிசை வரிசையாக அமைக்காத வீடுகளே காண்பது அரிது.

## ஜப்பான் பூக்களைப் போற்றுவது ஏன்?

ஜப்பானிய மக்கள், தங்களது இல்லங்களை அலங்காரம் செய்வதையே ஒரு நுண்கலையாகப் பயின்றுள்ளார்கள்.

அவர்களது அன்றாட வாழ்க்கையில் பூக்கள் அழகுக்கும் தனியொரு முக்கியவத்துவம் அளிக்கின்றார்கள். இதுவே ஓர் அழகுக் கலை தானே!

அன்னை ஜப்பானில் தங்கி இருந்தபோது, சுவையான சில அனுபவங்கள் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்று, ஜப்பானில் உள்ள வீடுகள் எதிர்பாராமல் திடீரென தீப்பற்றி எரிந்து சாம்பலாகி விடும் நிலைகள். அதனால்தான் ஜப்பான் வீடுகள் எல்லாம் மரத்தால் உருவானவையாக உள்ளன.

## ஜப்பான் நாட்டில் பூகம்பம்! எரிமலை

ஜப்பான் நாட்டில் அடிக்கடி பூகம்ப நிலைகள் உருவாகும்! நிலப் பிளவுகள் அந்த மக்களுக்குப் பெரும் நாசத்தை உண்டாக்கி விடும். மரத்தால் வீடுகள் அங்கே கட்டப்பட இதுவும் ஒரு தலையாய காரணமாகும்.

ஜப்பான் நாட்டின் தீ விபத்துக்களை உண்டாக்கும் அக்னி தேவனை ஒருநாள் தெய்வத் தாயான அன்னை சந்தித்தார். அன்று அன்னை படுக்கையிலே படுத்திருந்தார். ஒருமுனைப்பட்டு அன்று தமது நுண்ணுலக வேளையில் ஈடுபட்டிருந்தார்.

திடீரென நெருப்புப் புகை மூட்டம் அவர் வீட்டை நெருங்கி வருவதைப் போல உணர்ந்தார். அதை அன்னை கூர்ந்து கவனித் தார். அது ஓர் உணர்வுள்ள ஜீவனாக அவர் கண்களுக்குப் புலப்பட்டது.

'ஏய், நீ ஏன் இங்கே வந்திருக்கிறாய்?' என்று அன்னை அந்த தீ விபத்து நெருப்புத் தேவனைப் பார்த்துக் கேட்டார்.

## அன்னையின் அற்புதம்

'இன்று இந்த வீட்டை எரிப்பதற்கு எனக்கு உரிமை இருப்ப தால் இங்கே வந்திருக்கிறேன்' என்று கூறினான் அந்த தேவன்.

'இருக்கலாம் உனக்கு உரிமை. ஆனால் இங்கே அதைச் செய்யக் கூடாது' என்று கூறி விட்டார் அன்னை பெருமாட்டி.

அவ்வளவுதான் அந்த நெருப்பு தேவன் வந்த வழியே சென்று விட்டான்.

தெய்வ அன்னையின் சக்தியை எதிர்த்து, நெருப்புத் தேவனால் நெருங்க முடியவில்லை. இது ஒரு பலப் பரீட்சை. யாருக்குப் பலம் அதிகம் இருக்கிறதோ அவருக்குத் தானே வெற்றி?

ஆனால், ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, இரண்டு மூன்று வீடுகளுக்கு அப்பாலுள்ள ஒரு வீடு எரிக்கப்பட்டது.

ஒரு வீட்டை அவனுக்கு எரிக்க அனுமதி இருந்தது. அன்னை இருந்த வீட்டை எரிக்கத் தடை ஏற்பட்டதால், அவன் மற்றொரு வீட்டை எரித்து விட்டான்.

இரண்டவதாக, அன்னை பெருமாட்டி மரணத்தின் தேவனான இயமனைச் சந்தித்தக் காட்சி இது.

## இரண்டாவது அற்புதம்

சாவுகள் ஏற்படுவதைக் கவனிக்க நுண்ணுலகில் ஒரு பெரிய இறப்புக் கணக்கெடுப்புத் துறையே இருக்கிறதல்லவா? இது நாம் எல்லாரும் கேள்விப்பட்ட செய்திதானே! அந்த மரணக் கணக்கெடுப்பு நிறுவனம் பெருந் திறமையோடு பணியாற்றி வருவதுதானே அதன் வாடிக்கையான பணி?

'மரண தேவதைகள் ஒன்றிரண்டுகள் அல்ல; நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களின் இருவரை ஆவது நான் பார்த் திருக்கிறேன்' என்று அன்னை அவர்கள் அறிவித்து உள்ளார்கள்.

அன்னை எங்கே சந்தித்தார் அவர்களை? என்று கேட்க விரும்புகிறீர்களா? இதோ அன்னையே கூறுகிறார் கேட்போம்!

பிரான்சு நாட்டில் ஒருவனையும், ஜப்பானில் மற்றொரு வனையும் அன்னை சந்தித்துள்ளாராம்! அவை வெவ்வேறு தேவதைகள்! நாடுகளுக்குத் தகுந்தாற்போல, நாட்டின் பண்பாடு, கல்வி, மதம், இவற்றுக்கு ஏற்றவாறு அதற்குரிய மரண தேவன் இருக்கிறான்.

அன்னை அவர்கள் மேலும் கூறும்போது, ஒவ்வொரு மரண தேவதைக்கும் ஒரு நாளைக்கு இவ்வளவு பேர்களை மரணப் படுத்த வேண்டும் என்று கணக்கு இருக்கின்றது. அந்த கணக்கிற்கேற்ப சரியாக திட்டமிட்டு, வேலை நடத்தும் நிறுவனம் அது. தனக்கு என்று குறிக்கப்பட்ட மனிதன் சாகப் போகின்ற போது, அவன் அருகே போய் அந்த மரண தேவதை அமர்ந்து கொள்ளும்.

''உனக்கு அதைப் பார்க்கக் கூடிய திறமை இருந்து, போதிய சக்தியும் இருந்தால், நீ, அதனிடம், நீ அவனை எடுத்துக் கொண்டு போவதை நான் தடை செய்கிறேன்' என்று, கூறலாம். அது போய் விடும். இவ்வாறு நடந்திருக்கிறது ஒரு தடவை அன்று; பல முறைகள்! ஜப்பான் நாட்டிலும்! பிரான்சிலும்!

சாக இருந்தவன் பிழைத்துக் கொள்வான். ஆனால், அவனுக்குப் பதில் வேறோர் ஆள் இங்கிருந்து போவான். அது அவனுக்குப் பக்கத்து வீட்டுக்காரனாகவோ, அல்லது அவனுடைய விரோதியாகவோ கூட இருக்கும்.

## மூன்றாவது அற்புதம்

அன்னையின் இன்னொரு அனுபவம் இது. உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் நாட்டில் பல இடங்களில் பரவி வந்த பயங்கர ப்ளூ' காய்ச்சல் சம்பந்தமான பிரச்சனை இது.

1919-ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் ஒரு பயங்கர மான விஷ ஜுரம், ஜப்பான் நாடு முழுவதும் பரவியது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கே அந்தக் காய்ச்சலுக்குப் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

ஜப்பான் நாட்டில் இதற்கு முன்பு இவ்வளவு பேர்களைக் கொன்ற ப்ளூ காய்ச்சல் என்ற நோய் வந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம் ஆகும்.

ப்ளூ' காய்ச்சல் நோய் வந்துவிட்ட மூன்றாம் நாள், நோய் கண்டவன் மாண்டு போவான். இறந்தோர் எண்ணிக்கை

கட்டுக்கடங்காமல் போய் விடும். செத்த சடலங்களை எரிக்க முடியாத நிலை ஏற்படும்.

காய்ச்சல் வந்த மூன்றாவது நாள் நோயாளி இறக்கா விட்டால், ஏழாவது நாள் அவன் குணமடைந்து விடுவான்.

ஏனென்றால், ஜப்பான் நாட்டு மக்கள் மிக சுத்தமாகவும், கட்டுப்பாடாகவும், எச்சரிக்கையாகவும் வாழ்பவர்கள். அதனால் நோய் கண்டவர்கள் உயிர்த் தப்பிவிடவும் கூடும்.

அந்த நாட்டில் காய்ச்சல், கொள்ளை போன்ற நோய்கள் வருவது வாடிக்கை அல்ல; அபூர்வமே! எனவே, இந்த ப்ளு காய்ச்சல் பேரிடி போல ஜப்பான் மக்களுக்கு வந்தது.

இந்த ப்ளு காய்ச்சல் ஜப்பான் நாட்டு மக்களிடம் ஒரு பீதியை, பயத்தை உண்டாக்கி விட்டது. நோய் மற்றவர்களுக்குத் தொற்றிக் கொள்ளாமல் இருக்க, எல்லாருமே முகமூடி அணிந்துக் கொண்டார்கள் ஜப்பானில் - அன்னை ஒருவரைத் தவிர!

திருமதி அன்னை அவர்கள் மட்டும், தம்முடைய பாதுகாப்புச் சக்தியால் தம் உடலையும் முகத்தையும் போர்த்திக் கொண்டு. நெஞ்சில் பீதியோ, மனத்தில் கவலையோ கொள்ளாமல் ப்ளு நோய் பரவாமல் தடுக்க அக்கறையாக ஈடுபட்டிருந்தார்.

ஆனால், அன்னையுடன் வசித்து வந்தவள் அவரை விடாமல் நச்சரித்துக் கொண்டே இருந்தார். 'இது என்ன காய்ச்சல்? இந்த நோய் எங்கிருந்து வந்தது? இங்கே ஏன் வந்த்தது? என்ன வியாதி இது? இதற்குப் பின்னால் என்ன சக்தி இருக்கிறது? என்பதை நீங்கள் பார்த்து எனக்குச் சொல்ல மாட்டீர்களா? என்று உடன் இருந்தவர் அன்னையைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஊரின் ஒரு கோடியில் இருந்த ஓர் இடத்திற்கு அன்னை டிராம் வண்டியில் போய்க் கொண்டிருந்தார். டிராமில் இருந்தவர்கள் எல்லாரும் முகமூடி அணிந்து கொண்டு பயத்தால் பீடிக்கப்பட்டிருப்பதை அன்னை அவர்கள் கண்டார்கள்.

அப்போதுதான் அன்னையின் மனத்தில், 'இது என்ன நோய்? இதற்குப் பின்னால் என்ன சக்திகள் இருக்கின்றன? என்ற கேள்விகளின் எண்ணம் வலுவாக எழுந்தன?

போக வேண்டிய இடத்திற்குப் போய்விட்டுத் திரும்பிய அன்னை மீரா அவர்களுக்கும் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது. திடீர் என்று அன்னையைத் தாக்கியது காய்ச்சல். என்றாலும், இந்த நோய் இப்படித்தான் வரும்.

டாக்டர் வந்து விட்டார் - அன்னை அவர்களின் உடலைச் சோதித்துப் பார்க்க! 'இதுதான் இந்த காய்ச்சலுக்கு என்னிடம் இருக்கும் சிறந்த மருந்து; என்னிடம் அது கொஞ்சம்தான் இருக்கிறது.

காய்ச்சல் வந்த அனைவரும் இதே மருந்தை வாங்கிச் சாப்பிடுவதால் மருந்து தீர்ந்து விட்டது. அவசியம் இந்த மருந்தை, நீங்கள் சாப்பிடுங்கள்' என்று டாக்டர் தன்னிடமுள்ள மருந்தை அன்னைக்குக் கொடுத்து வற்புறுத்தினார்.

அன்னை அவர்கள் அந்த மருந்தைச் சாப்பிட மறுத்து விட்டார். படுக்கையில் படுத்தப்படியே இருந்தார். காய்ச்சல் கடும் உச்ச நிலைக்குப் போய்விட்டது. அன்னைக்கு எப்போதும் இதே கேள்வி'என்ன காய்ச்சல் இது? இதன் பின்னால் என்ன இருக்கிறது?' என்ற கேள்விகள் அதிக பலத்தோடு அவர் மனத்தைக் குடைந்து கொண்டே இருந்தன.

இரண்டாம் நாள்! அன்னை படுத்தப் படுக்கையிலேயே இருந்தார்! அப்போது அன்னை மிகத் தெளிவாக பார்த்தக் காட்சி இது!

ஒரு ஜீவன் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தது. அது இராணுவ உடையை அணிந்திருந்தது. அதன் தலையின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டு இருந்தது.

அன்னை அவர்கள் அருகே அது வந்தவுடன், திடீரென்று அன்னையின் மார்பு மீது பாய்ந்து உட்கார்ந்து கொண்டு, தனது

அரைப் பகுதித் தலையோடு அன்னையின் சக்தியை எல்லாம் உறிஞ்சிடத் தயாரானது.

அன்னை பெருமாட்டி அப்போது என்ன சொல்கிறார் தெரியுமா? '...நான் சாகப் போகிறேன்' என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. என்னால் சிறிதும் அசைய முடியவில்லை. அசைவற்று அப்படியே மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கிறேன். அது என் உயிரை எல்லாம் உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. முடிவும் நெருங்கி விட்டது என்று எனக்குத் தோன்றியது.

அப்போது திருமதி அன்னை மீரா, தமது சூட்சம சக்தியை எல்லாம் திரட்டி அவனை எதிர்த்துப் போராடினார். சிறிது நேரத்தில் அன்னை அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. அவன் தன் மார்பை விட்டு இறங்கி ஓடி போய் விட்டான். அன்னை சிறிது நேரம் கழித்து எழுந்தார்.

இப்போதுதான் அந்த ப்ளு காய்ச்சல் அவரை பற்றிய விவரமெல்லாம் பளிச்சென்று நன்றாகப் புரிந்து விட்டது.

முதல் உலகப் போரில், முக்கியமாக அதன் இறுதிக் கட்டத்தில், போர்க் குழிகளில் நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். அவ்வளவு பேரும் வாலிபர்கள். நல்ல திட காத்ர உடலுடன் நலமாக இருந்தவர்கள்.

திடீரென அவர்கள் உயிர் இவ்வாறு உடலை விட்டு வெளியேற்றப்பட்டவுடன், நாங்கள் இறந்து விட்டோம் என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. அங்குமிங்கும் அலைந்து கொண்டு, தாங்கள் பறிகொடுத்த உயிரைக் காப்பாற்ற உயிரோடு இருப்பவர்களின் உடற் சக்தியை உறிஞ்சத் தலைப்பட்டார்கள்.

அதாவது, அவர்கள் கணக்கற்ற பேர்களாக, உயிரை உறிஞ்சும் பேய்களாக ஆகிவிட்டார்கள். போரின் விளைவு அவ்வளவு கொடூரமானது.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அன்னை அவர்கள் இரண்டு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

அவரது நண்பர் அதற்குப் பிறகு அவரைக் காண வந்தபோது, 'ஆ! உங்களுக்கு அந்தக் காய்ச்சல் வந்ததா? நான் அப்போதே நினைத்தேன். அப்படித்தான் நடந்திருக்கும்' என்றார்.

## அன்னையான அற்புதம்

இந்த இரண்டு மூன்று நாட்களாக ஊரில் யாருக்குமே அந்தக் காய்ச்சல் வரவில்லை. ஏற்கெனவே, நோயில் விழுந்தவர்களும் பிழைத்து விட்டார்கள். நோய் போய் விட்டது; பீதியும் நீங்கி விட்டது. நான் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது! என்றார் வந்த அந்த நண்பர் அன்னை அவர்களிடம்.

நடந்தது இதுதான். பேரருளும், பெருங்கருணையும் உள்ள உலக அன்னை - தம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள், தம் குழந்தைகள், அநியாயமாக மடிந்து போவதைக் கண்டு, இரக்கம் கொண்டு, அந்த நோயை தம்மீது ஏற்றுக் கொண்டு, நோயின் கொடுமைகளை முழுவதுமாக, தாமே அனுபவித்து, பேய்ச் சக்தியோடு போராடி அந்த மக்களைக் காப்பாற்றி இருக்கிறார்.

பல உயிர்களைக் காப்பாற்றிய தாயாக, அன்னை அவர்கள் ஜப்பானில் காட்சி தந்தார். அதனால் அவர் அன்னை என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

## புதுச்சேரி வந்தார் அன்னை!

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, ஜப்பான் நாட்டிலிருந்த தெய்வீக அன்னை மீரா, 24.04.1920-ஆம் ஆண்டன்று கப்பல் ஏறி புதுச்சேரி நகர் நோக்கி வந்தார்.

புதுவை நகர் கடற்கரைக்கு இரண்டு மைல் தூரத்தில் அன்னை வந்த கப்பல் கடலில் இருக்கும்போதே, மகான் அரவிந்தருக்குத் செய்தி தெரிந்ததும், அவரது சாந்நித்யமும், ஒளியும் அவ்வளவு தூரம் பரவி நிற்பதை மிகவும் கண்கூடாகக் கண்டார்.

'இப்போது நாம், மகான் அரவிந்தரின் சாந்நிய்மும் அதாவது சமூக ஆன்மீகத்திற்குள் நுழைகிறோம், என்பதை மிகத்

தெளிவாக, சந்தேகத்திற்கே இடமில்லாம் அன்னை அவர்கள் உணர்ந்தார்.

அன்றைக்கு அரவிந்தர் மகானின் ஆன்ம ஞான வட்டத்து சமூகத்துக்குள் நுழைந்த பிரான்சு நாட்டு மீரா என்ற அன்னை, தான் இறக்கும் வரை புதுச்சேரி நகரை விட்டு அகலாமலே அவருடன் இருந்து ஞானத் தொண்டு புரிந்தார்!

மகான் அரவிந்தருக்கு இறைவன் இட்ட ஆணைப்படி அவரது தெய்வீகப் பணிகளைச் செயலில் நிறைவேற்றி வைக்கும் வேலையில் முழு மனதுடன் அன்னை ஈடுபட்டார். சிறு வயது முதல் ஆண்டவன் தன்னை இறை தொண்டுகளுக்காகவே பணித்தார் என்ற எண்ணத்தில் அன்னை தளராமல் ஆசிரம நிர்வாகத்தை உருவாக்கினார்.

மகரிஷி அரவிந்தர், திருமதி அன்னை அவர்களின் இலட்சியம் என்ன என்பதை, இந்த புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலே குறிப் பிட்டிருக்கிறோம். மீண்டும் ஒருமுறை படித்தல் நலம் அல்லவா!

## ஆசிரமம் அமைந்தது

தெய்வீக ஞானத் தொண்டு புரியும் அன்னை அவர்கள், புதுச்சேரி வருகை தருவதற்கு முன்பு, ஞானத் தொண்டுகளுக் காக, தெய்வீக வாழ்க்கையை மக்களிடம் தோற்றுவிக்கும் ஒரு புனித புதிய பணிக்காக, புதியதோர் தெய்வீக ஒளி வாய்ந்த ஓர் ஆசிர உலகை, அரவிந்தர் மகரிஷி தோற்றுவிக்கவில்லை.

மகான் அரவிந்தர் சிறை மீண்டு, நான்கு ஐந்து பேர் களுடன், வட நாட்டை விட்டு, ஆங்கிலேயர்களுடைய ஆட்சிப் பிடிப்பை விட்டகன்று, பிரெஞ்சு ஆட்சியின் அதிகாரத்திற்குட் பட்ட புதுச்சேரி நகர் வந்தபோது ஆசிரமம் இருந்ததில்லை.

மகான் அரவிந்தருடன் புதுச்சேரி வந்த அந்த நான்கைந்து பேரும், ஒரே வீட்டில் வாடகைக்கு எடுத்து வசித்தார்கள். அவர்கள் இடையே ஒழுங்கோ, கட்டுப்பாடோ கிடையாது.

தெய்வீக வாழ்க்கைக்கு அடிப்படையானது ஒழுங்கும், கட்டுப்பாடும்தான் அவசியம் என்பதை அன்னை ஓர் ஆசிர மத்தை நிறுவி, அதன் மூலம், புதுச்சேரியில் நிலை நாட்டினார்.

ஜப்பானில் இருந்து அன்னை புதுச்சேரிக்கு வருகை தந்ததும், அதனால் உருவான உடனடிப் பயன் குறித்து மகான் அரவிந்தர் தனது தலையாய மாணவர் நளினிகாந்த குப்தா அவர்களுக்குக் கூறும்போது,

'ஆசிரமம் அன்னை பெருமாட்டியின் தெய்வீகப் பணிக்குரிய படைப்பு'. ஒளியும், எழிலும், எளிமையும், பொலிவும், உயரியதோர் வாழ்க்கைக்கும், உலகத்திற்கோர் எடுத்துக் காட்டாகவும், இன்று ஆசிரமம் விளங்குகிறது.

அன்னையால் உருவாக்கப்பட்டு இருக்கும் இந்த தெய்வீக ஆசிரமத்திலே, எழிலும், எளிமையும், ஒழுங்கும், கல்வியும், இறை ஞான வாழ்வும் எப்போதும் குடி கொண்டிருக்கும்'.

அன்னை அவர்கள் 1920-ஆம் ஆண்டில் புதுச்சேரி நகருக்குள் வந்து நிரந்தரமாகத் தங்கியதற்குப் பிறகே அரவிந்த ஆசிரமம் அமைக்கப்பட்டது.

ஆனால், இத்தகையதோர் இறை ஞான வாழ்வுக்குரிய ஞானக்கோட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம், அன்னை மீரா சிறு பருவப் பெண்ணாக இருந்தபோதே ஏற்பட்டு விட்ட தெய்வீக ஞான ஆசையாகும்.

அந்த அவா, அன்னை புதுச்சேரிக்கு வந்த பிறகுதான் ஞானப் பூவாகப் பூத்து மலர்ந்து இன்று உலகெலாம் மணர்ந்து நுகர்ந்து வரப்படுகிறது.

ஆன்மீக ஞான வாழ்வு வாழ விரும்புவோர், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, கண்டம், நாடு, மதம், சாதிகள் பேதா பேதங்கள் இல்லாமல் வாழ விரும்புவோருக்கு, முழு நேரங் களையும் அந்த இலட்சியத்திற் காகவே செலவிட விரும்பு வோர், அவர்களுடைய அத்தியா வசியத் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்கான திட்டம்தான் அன்னை நிறுவிய மகான் ‘அரவிந்தர் ஆசிரமத் திட்டம்’ ஆகும்.

அன்னை சிறு வயதினராக இருந்தபோதும் சரி, ஆப்பிரிக்கா கண்டத்தில் சித்து ஞான வித்தைகளிலே சித்தத்தைச் செலவிட்ட போதும் சரி, பாரீஸ் போன்ற நவநாகரிக நாடுகளிலே வாழ்கின்ற ஆன்மீக நாட்டமுடையோர்களும் சரி, ஓர் உயரிய லட்சிய வாழ்க்கையைக் கடைசி காலக் கட்டத்திலே வாழ நினைத்த, ஆன்மீக ஞான அடிமைகள் பலர் இந்தப் பிரச்னையை அன்னை முன்பு வைத்தார்கள்.

எங்களுடைய முழு நேரமும், வயிற்றுப் பிழைப்பு களுக்கும், வாழ்க்கைத் தேவைகளுக்குமே உழைக்க செலவழிக்கப்படுகிறது. என்ன பயன் அதனால் எங்களுக்கு?

எங்களது ஞான ஆர்வத்திற்கு நீங்களாவது ஒரு வழிகாட்டக் கூடாதா? என்ற வேண்டுகோளை மகான் அரவிந்தரிடமும், அன்னை யிடமும் உலக ஆன்மீகீகள் வேண்டிக் கேட்டுக் கொண்டதின் விளைவே இந்த அரவிந்த ஆசிரமம் தோற்றத்திற்குரிய மூல காரணமாகும்.

‘‘தனக்கு எப்போதவது ஞான வாழ்வை எதிரொலிக்கும் ஆசிரம வாழ்க்கை வாழ நேர்ந்தால், உறுதியாக உங்களைப் போன்றவர்களுடைய மனோதிட அவாவை நிறைவேற்றிய தீருவேன்’’ என்று அன்னை தனது சிறு வயதில் ஏற்ற சபதம், 1920-ஆம் ஆண்டில் புதுச்சேரியில்தான் அரவிந்த ஆசிரமமாக உருப்பெற்று உயர்ந்து உலகப் புகழ் பெற்றுள்ளது.

## அரவிந்தர் உள்ளத்தில் ஊடுருவிய கிருஷ்ண சக்தி

1926-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாளன்று, அரவிந்தருடைய யோகத்தில் ஓர் அரிய சித்தி உண்டானது. அதுதான் கிருஷ்ணனுடைய தெய்வ பக்தி; ஆன்மீக அருள் உணர்வு. அரவிந்தரின் யோக சித்தியில்; அவரது உடலில் இறங்கிய நாளாகும்.

அந்த மகரிஷி அரவிந்தரது யோக சித்தியின் வெற்றியையே, கிருஷ்ண சக்தி உணர்வாக அன்னை ஏற்றுக் கொண்டு, அந்த கிருஷ்ண பரமாத்மா ஆணைக்கே சேவை செய்யும் உள்ளுணர்வின் எதிரொலியே புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தின் தோற்றம் ஆகும்.

அரவிந்தரது உடலில் கிருஷ்ண உணர்வு ஊடுருவிய பிறகே, அவர் மகான் அரவிந்தர் என்று ஆன்மீக உணர்வாளர் களால் போற்றப்பட்டார்.

இதன் பிறகே, மகான் அரவிந்தரும் - அன்னையும் சேர்ந்து செய்ய வேண்டிய ஆன்மீக வேலை, தெய்வப் பணி ஆகியவற்றிலே ஈடுபட்டு பெரும் பகுதி ஆசிரமப் பணிகளை முடித்தார்கள். அந்த ஆசிரமம், இப்போது அருகுபோல் வேரூன்றி ஆலமரமாக நின்று ஆன்மீக உலகுக்கு இன்றும் பணி புரிவதைப் பார்க்கின்றோம்.

திருமதி அன்னை அவர்கள், தாமே நிறுவிய ஞானா சிரமத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு, உலகப் புகழ்பெற்ற தெய்வத் தாயாக, மக்களால் போற்றி வணங்கப்படும் அன்னை யாக நம்மிடையே வாழ்ந்து வந்தவர், 17.11.1973-ஆம் ஆண்டன்று தமது உடலை நீத்து அமரர் ஆனார்!

அன்னை அவர்கள் அமைத்த ஆசிரம நிர்வாகத்தையும் அந்த ஞானாசிரமம் மக்களுக்கு எவ்வாறு பயன்பட்டு வருகின்றது என்ற வரலாற்றையும் அடுத்தப் பகுதியில் பார்ப்போம்!

# 6

# தெய்வ குணம் பூவுக்கு இருப்பதால் : அன்னை மலர் மூலம் வாழ்த்தினார்!

ஆன்மீக ஞான உணர்வு என்பது இரு வகைப்படும். ஒன்று மேல் மனவுணர்வு Over Mind Consciousness என்பதாகும். இரண்டாவது உணர்வு அதிமானசம் Super Mind எனப்படும். அதாவது மேல் மனவுணர்வை விட உயர்ந்தது ஆன்மீக உணர்வு.

## கிருஷ்ணன் சக்தியை உணர்வாகப் பெற்றார்!

மகரிஷி அரவிந்தர் மனத்தில் 24.11.1926-ஆம் ஆண்டு இறங்கிய உணர்வு - பரமாத்மா கிருஷ்ணனுடைய உணர்வாகும். அதை மன உணர்வு என்றும் கூறுவார்கள்.

ஆண்டாண்டுகளாக இந்த உலகத்தில் பரிதாபமாகத் தவித்துக் கொண்டிருக்கும் இடர்கள், துன்பங்கள், வேதனைகள், துயர்கள், அசுரத் தாக்குதல்கள் ஆகிய இவற்றுக்குரிய இறுதித் தீர்வு. அதிமானசம் என்ற ஆன்மீகத் தத்துவத்திடமே இருக்கிறது.

அந்த தத்துவ உணர்வை மேலே இருந்து கீழே இறக்கி, அதை உலகத்தில் நிலை நாட்டுவதே மகான் அரவிந்தருடைய இலட்சிய நோக்கமாகும். அந்தக் கட்டளை, அரவிந்த மகரிஷிக்கு ஆண்டவனிட்ட அருட்பணிக் கட்டளையாகும்.

அந்த வேலை நடைபெற வேண்டுமானால், ஓர் ஆசிரமம் தேவை. அதற்கான பொறுப்பான அருட்தொண்டர்கள் தேவை! அந்த ஞானத் தொண்டின் அரிய பணியை ஆற்றுவதற்குரியவர் அன்னை அவர்கள்தான் என்பதை உணர்ந்த அரவிந்த மகரிஷி, அந்த முழுவேலையை அன்னையிடமே வழங்கிவிட்டு, அவர் தனிமையை நாடிச் சென்று யோக சித்தியிலே மூழ்கியதால்தான் அவரால் கிருஷ்ண பரமாத்மாவின் அருள் உணர்வைப் பெற முடிந்தது.

ஞானி அரவிந்தருடைய சொந்த சாதனைகளைப் பொறுத்த வரை, அனைத்து ஆன்ம சித்திகளையும் அவர் அடைந்திருந்தார். ஆனந்த மயமான அகண்ட உணர்வு அவருடைய உடல் அணுக்கள் தோறும் ஊடுருவின.

**இறை கட்டளையே**
**அன்னையின் பணிகள் :**

சொந்த சித்தியல்ல இது. கடவுள் கட்டளை! நிறைவேற்ற வேண்டிய பணி ஒன்றுதான் அரவிந்தர் பெருமானுடைய இலட்சியம். எனவே, பணி மேலும் தொடர்ந்தது.

அரவிந்தரும் பாடுபட்டார்; அன்னையும் உழைத்தார். ஆனால், உழைப்பு அன்னைக்குத் தான். அரவிந்தருக்கோ யோக சாதனையே வேலை. அதாவது நுண்ணுலக பணி!

இந்த யோகத்தின் வேலையும், யோக சாதனையும் ஒன்று. ஆணவமோ, கர்வமோ, தானென்ற தன்முனைப்போ ஒரு சிறிதும் இல்லாமல் - இறைவனுக்காக, ஆண்டவனுக்காக, அவருக்கு நைவேத்தியப் பொருளாக, கடவுள் உணர்வில் ஆழ்ந்து செயல்படும் வேலைகள் எல்லாமே யோகம் ஆகும். அதனால் தான் அரவிந்தர் ''வாழ்வனைத்துமே யோகம்'' என்றார்.

அன்னை பெருமாட்டிக்குப் பல ஆண்டுகளாகத் தூக்கம் என்பதே கிடையாத அளவுக்கு ஓயாத பணி! பல ஆண்டுகளாக அவருக்கென ஒரு படுக்கைக் கூட கிடையாது.

## அரவிந்தர் பிறந்த நாளில் சுதந்திரம்

ஆகஸ்டு 15-ஆம் நாள் அரவிந்தர் பிறந்த நாள். அதே நாளில் அதாவது ஆகஸ்டு 15-ஆம் நாளில், 1947-ஆம் ஆண்டன்று இந்தியா சுதந்திரம் பெற்றது. அரவிந்தர் சிறு வயதிலே இருந்து அரும்பாடுபட்ட இலட்சியம் அவர் பிறந்த நாளன்றே நிறைவேறியது. அதுதான் அவரது தியாகத்திற்குக் கடவுள் அருளிய சித்தமாகும்.

மகான் அரவிந்தரும், அன்னை மீராவும் ஈடுபட்டிருந்த உலக ஆன்மீக முன்னேற்றத்திற்கு முக்கியமான இரண்டு அரும் பணிகள் வெற்றிகரமாக நிறைவேறின.

ஒன்று, உலகப்போர்; மற்றொன்று இந்தியா சுதந்திரம் பெற்ற விடுதலைப் போர்! ஆனாலும், வேலை முழுமையாக இன்னும் முடிய வில்லை. அவர் வாழ்ந்த காலமான 1947-ஆம் ஆண்டு வரையுள்ளக் கணக்கீட்டில் கூறுகிறார் - அரவிந்தர் இன்னும் முடியவில்லை என்று!

இப்போது ஆண்டு 2004 - அல்லவா? எவ்வளவோ முன்னேற்றங்களை நாடு பெற்றும் - அனுபவித்தும் வருவதை நாம் பார்க்கவில்லையா?

அரவிந்தர் ஏன் இன்னும் வேலை முடியவில்லை என்றாரென்றால், அதிமானசம் எனப்படும் Super Mind உணர்வை மேலே இருந்து கீழே இறக்கிக் கொண்டு வந்து; உலக உணர்வில் நிலைநாட்டி வெளிப்படச் செய்ய வேண்டிய வேலை இருந்ததால்; அரவிந்தர் பெருமான் அப்போதுள்ள நிலவரப்படி ''வேலை முடியவில்லை'' என்று குறிப்பிட்டார்.

அந்த நேரத்தில் மகரிஷி அரவிந்தரது உடலில் அதிமானசம் என்ற தெய்வீகப் பொன்னொளி இறங்கிக் கொண்டிருந்தது. அது தொடர்ந்திருந்தால் அவரது உடல் அமர உடலாக ஆகி இருக்கக் கூடும்.

## அரவிந்தர் அமரரானார்

ஆனால், அது தனி ஒருவரின் சித்தியாக இருந்திருக்கும். அத்தகைய தனிப்பட்ட சித்தியில் மகான் அரவிந்தருக்குச் சற்றும் அக்கரை இல்லை.

மக்களின் அறியாமை, மந்த புத்தி காரணமாகவும், மற்றும் வேறு சில காரணமாகவும் மகரிஷி அரவிந்தரின் அலுவல் சித்தியில் தாமதம் ஏற்பட்டது. இதைத் தவிர்க்கும் பொருட்டு ஒரு பெரும் தியாகம் செய்திட, பொன் நிறமாக மாறிக் கொண்டிருந்த தம் உடலையே தியாகம் செய்ய நினைத்தார்.

1950-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5-ஆம் நாள், மகான் அரவிந்தர் புதுச்சேரி ஆசிரமத்திலேயே தம் உடலை நீத்தார்!

மிகப் பெரிய இந்த மகத்தான தியாகத்தின் உணர்வால், 'ஒளி மனம்' இந்த உலகத்தில் நிலை நாட்டப்பட்டது என்று அரவிந்தர் இறப்பை தத்துவ ரீதியாக அன்னை வருணை செய்தார்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் அதாவது 1956-ஆம் ஆண்டு வரை, அன்னை பெருமாட்டியின் அற்புத உழைப்பை மேற்கொண்டு ஆசிரமப் பணிகள் மிக வேகமாக நடந்தன. இந்த விரைவான வேகத்தால் 29.02.1956ஆம் ஆண்டன்று அரவிந்தருடைய இலட்சியம் அன்னையின் அயராத உழைப்பால் மாபெரும் வெற்றி பெற்று முன்னேறியது.

## SUPER MIND
## என்றால் என்ன?

அதிமானசம் என்றால் என்ன? Super Mindக்குரிய தத்துவ உணர்வுகள் என்ன? இதை நாம் உணர வேண்டும்.

அதிமானசம் என்பது தெய்வீக அமர உணர்வு. அது ஆனந்த ஆற்றல்; மங்காத பொன்னொளி; பேருண்மை; பேரமைதி; பேரானந்தம் ஆகிய தெய்வீக இயல்புகளைத் தன்னகம் கொண்ட தத்துவ உணர்வுகள் ஆகும்.

புற உலகின் புறக் கண்களுக்கு இந்த வெளிப்பாடுகள் இன்னும் புலனாக விட்டாலும், நுண்ணுலகில் இவை வெளிப்பட்டு விட்டன. பொன்னுலகு தோன்றியுள்ளது.

'பிரபோ, நீ விரும்பினால் நான் நிறைவேற்றுகிறேன். புதிய தோர் ஒளி புவி மீது இறங்கியுள்ளது; புதியதோர் உலகம் பிறந்துள்ளது. வாக்களிக்கப்பட்டவை நிறைவேறுகின்றன - என்று, அன்னை மீரா, அப்போது அனைவரும் அறியுமாறு பகிரங்கமாகக் கூறினார்.

## பொன்னுலகு அன்னை விளக்கம்

புதிய பொன்னுலகு என்றாரே அன்னை அது எங்கே உள்ளது? என்று அறிய விரும்புவோர்க்கு அன்னை விளக்க அளிக்கையில், அந்த பொன்னுலகு நமது உலகுக்கு அருகாமையிலேயே இருக்கிறது.

நாம் அனைவரும் ஒற்றுமையோடு, ஒருமுனைப்பட்ட சிந்தனையோடு உழைத்தால், அழைத்தால், அது இறங்கி இங்கு வெளிப்படத் தயராகக் காத்திருக்கிறது' என்று குறிப்பிட்டார் அன்னை மீரா.

கிருஷ்ண பரமாத்மா நுண்ணலகில் குருசேத்திர யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு, அருச்சுனனுக்குத் தேரோட்டி யாக இருந்து புற உலகிலும் நிறைவேற்றி வைத்தார்.

அதுபோலவே, அன்னை மீரா அவர்களும், நுண்ணுலகில் தமது இலட்சியத்தை நிறைவேற்றி விட்டு, தமது ஆன்ம சக்தி மூலமும், அன்பு இதயம் மூலமும் ஆசிரமத்திலே உள்ளவர் களையும் உலக மக்களையும் வழி நடத்தி வந்தார்.

## அன்னை அறிவித்த பிரகடனம்

1956-ஆம் ஆண்டு பிப்ரவரி 2ம் தேதி நடந்தது என்ன? அப்போது என்ன அறிவித்தார் அன்னை? அதையும் கேட்போமே!

''இன்று மாலை கூட்டுத் தியானத்தின்போது உங்களிடையே இறைவனது சாந்நித்யம் மிகத் திண்மையாயும்,

தூலமாயும் நிலவி இருந்தது. நான் உயிருள்ள ஒரு தங்க மயமான வடிவில் இந்த உலகத்தைவிட பெரிய ஓர் உருவில் இருந்தேன். உலகையும், கடவுளையும் பிரித்து வைக்கும் ஒரு பெரிய கடினமான தங்கக் கதவுக்கு எதிரிலே இருந்தேன்.

கதவை நான் பார்த்துக் கொண்டே ''வேலை வந்து விட்டது'' என்று உள்ளத்தில் உறுதி கொண்டேன். அதே நேரத்தில் அந்த வேளை வந்து விட்டதையும் உணர்ந்தேன். உடனே என் இரு கைகளாலும், ஒரு பெரிய தங்கச் சம்மட்டியை உயரத் தூக்கிக் கதவின் மீது பலமான ஓரடி கொடுத்தேன்.

பொடி பொடியாயிற்று கதவு. உடனே அதிமானசப் பேரொளியும், சக்தியும், உணர்வும் மேலே இருந்து உலகத்தின் மேலே தடைபடாத வெள்ளமாகப் பாய்ந்தன''.

அன்று முதல் அந்த பிப்ரவரி 29-ஆம் தேதியை ''இறைவனது திருநாள்'' என்று பெயரிட்டார் அன்னை அவர்கள்.

நுண் உடல் பணியை முடித்த அன்னை அவர்களது பரு உடலிலும், அதன் அணுக்களிலும் இந்த அதிமானச சக்தியை இறக்கி, அவற்றை உருமாறச் செய்யும் கடினமான வேலையில் இறங்கினார். இது அடுத்தப் படி.

இந்த புனிதப் பணி இதுவரை எந்த யோகியாலும், செய்யப்படாத ஒரு வேலை. இது இங்கு ஒரு புதுயோக சித்துக்கு வழி காட்டுவதாக அமைந்தது.

## அரவிந்தர் ஆசிரமம்
## அன்னை நிர்வாகம்!

புதுச்சேரியில் அமைக்கப்பட்ட அரவிந்த ஆசிரமத்தில், பள்ளிக் குழந்தைகள், சிறுவர், சிறுமியர், மாணாக்கர், சாதகர் என்ற பிரிவினர்கள் உண்டு. எல்லாரும் சேர்ந்து இன்று சுமார் 2000 பேர்கள் ஆசிரமத்தில் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் அன்னையின் குழந்தைகளாக, அவரவர்களின் வழியில் மனித உரிமைகளோடு சுதந்திரமாக வளர்ந்து வருகிறார்கள்.

இந்த ஆசிரமத்தில் மதபேதம் இல்லை; சாதிச் சழக்கர்கள் இங்கே இல்லை; ஏழை என்றும் பணக்காரன் என்றும் எவனுமில்லை. தேசம், மொழி, இனம் என்ற வெறிச் சச்சரவுகளோ முணுமுணுப்பு களோ, மக்கட் சமுதாயத்தில் திடீர் திடீரென்று உருவாகும் மனக் குழப்பத் தகராறுகளோ ஒன்றுமில்லை இந்த ஆசிரமத்தில்.

## காந்தியடிகள் பாராட்டினார்

வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைத்த காந்தியடிகள், ஆசிரமத்தில் எவ்வாறு சாதி, மத வேறுபாடுகள் சிறிதும் இல்லாத ஒரு சமத்துவ சமுதாயத்தை இவ்வளவு சுலபமாக அவரால் அமைக்க முடிந்தது என்று ஆச்சர்யப்பட்டார்; அன்னையை பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

மக்கள் ஒவ்வொருவரும் தனது அந்தராத்மாவில் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது மகான் அரவிந்தரின் யோக நெறி! அப்படியானால், அந்தராத்மா என்றால் என்ன?

## அந்தராத்மா என்பது என்ன?

இறைவனது பொறிகளிலே ஒன்று அந்தராத்மா என்ற நெறி. ஆன்மாவில், ஆண், பெண், பிராமணன், சூத்ரன், ஏழை, பணக் காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் அந்தராத்மா வின் ஆன்மாவில் கிடையாது. பாரதியார் பாடினாரே நாம் எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஒரு குலம் என்று. அதுதான் ஆன்ம வாழ்க்கை.

ஆன்மாவின் அடிப்படையில் நிறுவப்படும் சமுதாய அமைப் பில் தான்; ரூசோவின் உண்மையான மனித சுதந்திரம், உண்மையான மனித சகோதரத்துவம், உண்மை யான சமத்துவம் எல்லாமே அதனதன் தன்னியல்பாகவே வெளியாகும். ஏன் தெரியுமா?

சகோதரத்துவம், சுதந்திரம், சமத்துவம் என்பவை எல்லாமே ஆன்மாவின் இயல்பு - புறச் சீர்த்திருத்தங்கள் வாயிலாகத்தான் இந்தத் தத்துவ உணர்வுகளைச் சமுதாயத்தில் நிறுவ முடியும்.

இவை எல்லாவற்றையும் தெளிவாக உணர்ந்திருந்த அன்னை; பிரெஞ்சுப் புரட்சி உலகுக்கு வழங்கிய முப்பெரும் தத்துவங்களான சகோதரத்துவம், சுதந்திரம், சமத்துவம் என்ற தத்துவங்கள் தோன்றி உலகுக்கு அளித்த மண்ணில் பிறந்த வரல்லவா அன்னை?

அதனால், அந்தத் தத்துவங்களுக்கு எடுத்துக்காட்டாக, சான்றாக ஆன்மாவின் அடிப்படையில் ஆசிரமத்தை அமைத்து உலகத்துக்கோர் உதாரணமாக, அடையாளமாக நிறுவினார் - அன்னை!

அன்னை உருவாக்கிய அந்த ஆசிரமம், உலகத்திற்கே ஓர் ஒப்பில்லாத சமுதாய நகர்போல திகழ்ந்திருக்கின்றதை நாம் இன்றும் காண்கின்றோம்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் கடுமையாக ஈடுபட்டதால், இந்தியாவின் கிழக்கு வாயிலான அரக்கான் யோமா, பெகுயோமா என்ற மலைப் பகுதிக் கதவுகளை ஜப்பான் பர்மா கூட்டுப் பேரணி நாடுகளால் தட்டப்பட்டதை நாம் அறிவோம்.

போர் பாதிப்பு உண்டானதால் 1942-ஆம் ஆண்டுக்குப் பிறகு, வங்க தேச பக்தர்கள் தங்களது குடும்பத்தோடு அரவிந்த ஆசிரமத்தில் சேர விரும்பினார்கள். அதனால், அன்னை அந்த மக்களுக்காக ஓர் ஏற்பாடு செய்ய வேண்டி இருந்தது. ஏன் ஆசிரம அனுமதி மறுக்கப்பட்டது வங்க மக்களுக்கு? அரவிந்தரும் வங்க நாட்டைச் சார்ந்தவர்தானே? அவர்களுக்கு மறுக்கப்பட்டதற்கு என்ன காரணம்?

## ஆசிரமத்தின் விதி முறைகள்

அரவிந்தர் ஆசிரமத்தில் இல்வாழ்க்கைக்கு இடமில்லை; அதற்கான அனுமதி எப்போதும் கிடையாது. ஆனால், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனிப்பட்ட ஒரு சாதகராக இருக்கலாம்! குடும்ப வாழ்க்கைக்காரர்கள் என்ற முறையிலே எவரையும் ஆசிரமத்தில் சேர்க்கப்படுவதில்லை.

ஆசிரமத்தில் குழந்தைகளும் வருகிறார்கள். அவர்களுக் காக அன்னை ஒரு கிண்டர் கார்டன் பள்ளியைத் துவக்கினார். அது இப்போது மேற்படிப்புகள் அனைத்துக்கும் பயன்படும் கல்விக் கோட்டமாக வளர்ந்துள்ளது. மருத்துவம், பொறியியல், பொருளியல், தத்துவம், வரலாறு, வானியல், அறிவியல் போன்ற பாடங்களையும், வகுப்புகளையும் நடத்திக் கொண்டிருக்கின்றது.

அவை மட்டுமல்ல; தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற அயல்நாட்டு மொழிகளும், இந்திய மொழிகள் எல்லாமே பெரும்பகுதி ஆசிரமப் பள்ளியில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அங்கே உள்ள மாணவர்கள் அவரவர் பாடங்களை எந்த மொழியில் வேண்டுமானாலும், விருப்பம் போலவே தத்தமக்குரிய கல்விகளைக் கற்கலாம்.

ஆசிரமத்தில் எல்லா வகைப் பாடங்களுக்குமுரிய ஆசிரியர் கள், தக்க தகுதிகளோடு பணி புரிகிறார்கள். இந்தியாவிலும், மேல் நாட்டிலும் பட்டம் பெற்ற பேராசிரியர்களும் இருக்கிறார்கள் அவர்கள் அனைவரும் ஆசிர சாதகர்கள்! இறைவனுக்கு ஆற்றும் ஆன்ம சேவைகளாகவே கருதி அவர்கள் பணியாற்றுகிறார்கள்.

இந்தக் கல்விக் கோட்டம் 1952-ஆம் ஆண்டில், ''ஸ்ரீ அரவிந்தர் அனைத்து நாட்டுக் கல்வி நிலையம்'' என்ற பெயர் மாற்றம் பெற்றது.

## அற்புதமான கல்விக் கோட்டம்

மகான் அரவிந்தரின் இலட்சிய நிறைவேற்றத்திற்கு, ஒரு புது மனித இனம், தெய்வீக இனம், உலகத்தில் பிறப்பதற்கு உதவும் வகையிலேயே; இந்தப் பல்கலைக் கழகம் அன்னை பெருமாட்டி அறிவுரைக்கு ஏற்றபடி அந்தக் கல்வி நிலையம் அறிவுத் தொண்டு ஆற்றி வருகின்றது.

இந்தக் கல்வி நிலையத்தில் பாடம் கற்பிக்கும் முறை முழுக்க, முழுக்க புதுமையான முறையில் நடந்து வருகின்றது. இந்தக் கல்விக் கூடத்தில் தேர்வுகள் இல்லை; மாணவர்களுக்குச் சான்றிதழ்கள், பட்டங்கள் வழங்கும் பழக்கம் இல்லை.

சரி போகட்டும். அப்படியானால் அந்தக் கல்வி மையத்தின் நோக்கம் தான் என்ன? எழுமல்லவா கேள்வி?

## அன்னையின் கல்விப் புரட்சி

பல்லாயிரம் ஆண்டுகளாக வழிவழி வந்துள்ள அஞ்ஞான மனித இயல்புக்கு ஏற்றவாறே - சிந்தித்தல், உணர்தல், செயல் படுதல் இவற்றிலிருந்து மாணவர்கள் முதலில் விடுபட வேண்டும். பழைமையான இந்தப் பாதையிலே போகும் பழக்கத்தையும், வழக்கத்தையும் கைவிடல் வேண்டும்.

இதற்கடுத்து, மகான் அரவிந்தர் ஆன்மீக உபதேசத்திற்கு உகந்தவாறு, ஓர் உன்னதமான, புனித வாழ்க்கையை, தெய்வீக வாழ்க்கையை, மனிதனால் வாழ முடியும் என்பதை மாணவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

இங்கு கற்பிக்கப்படும் கல்வியின் இலட்சியம், குழந்தைகளை யும், மாணவர்களையும் அத்தகைய தெய்வீக வாழ்க்கைக்குத் தயார் செய்வதுதான் ஆசிரமக் கல்வியின் அடிப்படை நோக்கம்! ஆகும்.

மாணவர்களின் எண்ணிக்கை அன்று பெரியது; அவர்களின் தரமே முதலில் கவனிக்கப்படும். நன்றாகக் கல்வி கற்கிறார்களா? அறிவாளிகளா? என்பதல்ல; விழிப்புடைய ஆன்மாக்களா மாணவர்கள்? என்ற நோக்கமே முக்கியம்.

பள்ளியை விட்டு வெளியேறும் மாணவர்களால், ஏதாவது வேறு பணிமனைகளுக்குச் சென்று பணம் வருவாய் பெற முடியுமா என்பதற்கு இடமில்லை. காரணம், தெய்வீக வாழ்க்கைக்கு அடிப்படை அமைப்பதுதான் ஆசிரமக் கல்வியின் நோக்கம்.

இந்தியாவின் தலைசிறந்த வேத விற்பன்னர், பண்டித சத்வ வேதர் என்பவர், அவர் ஒருமுறை புதுவை ஆசிரமக் கல்வி நிலையம் வந்தார். அதாவது 1920-ஆம் ஆண்டில், தன்னுடைய 95-ஆம் வயதில்!

என்ன கூறினார் தெரியுமா அந்த மூதறிஞர்? அன்னை மீரா அமைத்துள்ள சமுதாயத்தைக் கண்டு, அன்னையை நேரிடையாகவே பாராட்டி மகிழ்ந்தது மட்டுமன்று. இதுதான் வேத ரிஷிகள் கண்ட கனவு என்று பாராட்டி மகிழ்ந்தார் அவர்.

எல்லாரும், சரிநிகர்; சாதி மத பேதம் எதுவுமில்லா சமத்துவம்; ஆண், பெண் வித்தியாசம் இல்லாத, அந்தராத்மா வில் உறவில் இயங்கும் இலட்சிய சமுதாயமே இந்தக் கல்விக் கோட்டத்தில் உருவாக்கப்படுகின்றது'' என்று அந்த வயோதிகர் அன்னையின் கல்விப் புரட்சியை வாழ்த்திப் பாராட்டினார்.

இந்த உலகத்தில், ஒரு புதியதோர் உலகத்தை உருவாக்கும் நோக்கம் ஒன்றுதான் அன்னையின் நோக்கம். அதற்கு அவர் தன்னால் உருவாக்கப்பட்ட ஆசிரமத்தையே நடுநிலையாக நிறுத்தினார்.

## அரோவில் நகரை அன்னை அமைத்ததேன்?

புதுச்சேரி நகரிலே இருந்து பத்து மைல் தூரத்தில் இன்று அரோவில் என்று ஒரு புதுநகரம் இருக்கின்றது. அந்த நகரத்தை அன்னைதான் முதன் முதலாக உருவாக்கினார்.

இந்த அழகுமிகு நகரத்தில்தான், இன்று இந்தியாவிலே உள்ள பிற மாநிலத்தவர்களும், வெளிநாட்டவர்களும் வந்து தங்கி இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அரவிந்தர் ஆசிரமத்திலே ஆன்ம ஞான சாதகர்களாக இருக்கிறார்கள்.

இந்த அரோவில் நகரத்திலே வாழ்கின்ற தெய்வீக வாழ்க்கை; உலக சாதகர்கள் இடையே, மதபேதமோ, நாடுகள் வித்தியாசமோ, சாதிகள் ஏற்றத் தாழ்வுகளோ இல்லாமல், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் சரிநிகர் சமத்துவத்தோடும், சகோதரத்துவப் பாசத்தோடும், சகலவித சுதந்திர உரிமைகளோடும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய ஓர் அற்புத நகரத்தை அன்னை அவர்கள் அமைத்ததால், உலக நாடுகளும், அங்கங்கே உள்ள ஆன்மீகர் களும், அன்னை பெருமாட்டியை பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

அரோவில் நகரை அமைத்த அன்னை, அங்கு வாழ்கின்ற ஆன்மீக ஞான வாழ்வுச் சாதகர்கள் இடையே ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அது இது.

## அரோவில் பிரகடனம்

- அரோவில் எந்த ஒரு சாதகருக்கும் சொந்தமானது அன்று. அது மனித இனம் அனைத்திற்கும் உரிமையானது.
- ஆனால், ஒருவன் அரோவில் நகரில் வசிக்க ஆசைப் பட்டால், அவன் இறைவனுக்குத் தொண்டனாக, தெய்வ உணர்வு வாழ்க்கைக் குப் பணி செய்பவனாக இருக்க வேண்டுமட.
- அரோவில் முடிவில்லாத கல்விப் பயிற்சி, இடை விடாத முன்னேற்றம், மங்காத இளமை இவை களுக்குரிய இடமாகும்.
- அரோவில் இறந்த காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் இடையே அமைக்கப்படும் பாலமாக இருக்க விரும்புகிறது.
- இதுவரை சாதிக்கப்பட்டுள்ள மனிதனின் அகம், புறம், கண்டுபிடிப்புகள் அனைத்தையும் பயன் படுத்திக் கொண்டு, அரோவில் துணிச்சலுடன் புதிய எதிர்கால சித்திகளை நோக்கிப் பாய்ந்து செல்லும்.
- மனித ஒருமைப்பாட்டின் உயிருள்ள வடிவமாக இருப்பதற்கு ஏற்ற இடமாக அரோவில் இருக்கும்.

## அரோவில் நோக்கம்

அரோவில் நோக்கம் என்ன என்பதை அன்னை அவர்கள், மற்றோர் இடத்தில் இவ்வாறு விளக்கியுள்ளார்.

- ஆண்களும், பெண்களும், எல்லா தேசத்தவர்களும், சாதி, மத, தேச, இன, அரசியல் வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து, அமைதியாக, ஒற்றுமையாக, அன்புடன் வாழ்வதற்கான ஓர் அனைத்துலக நகரமாக அரோவில் இருக்க விரும்புகிறது.
- மனித இன ஒற்றுமையே அரோவில் நகர நோக்கமாகும்.
- உலகத்தின் பரிணாமத்தில் மனிதன் கடைசி படி அல்ல. உலகத்தின் பரிணாமம் தொடர் கின்றது. மனிதனை விட உயரியதோர் இனம், தேவ இனம் - இங்கே தோன்றும்.
- இந்த புது இனத்தின் வருகையில் பங்கு கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கே தவிர இந்த அரோவில். பழைய உலகிலேயே திருப்தி உள்ளவர்களுக்கு அல்ல.
- சட்டத் திட்டங்கள், கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாய், சுய விருப்பமாய் தன் அந்தராத்தமாவைக் கண்டு பிடித்து, இறைவனால் வழி நடத்தப்பட்டு, உயரிய தெய்வீக வாழ்க்கை வாழ முயல்வதே அரோவில் நகரின் நோக்கம் ஆகும்.
- அந்த தெய்வீக இனம் எப்படியெல்லாம் இருக்கும், எப்படியெல்லாம் செயல்படும் என்பது நமக்கு இப்போது சரியாக விளங்காது.
- ஆனால், அதை அடைவதற்கு மிகச் சிறந்த முறை நம்மை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொள்வதே'' என்று அன்னை அவர்கள் அறிவித்தார்.
- உலகத்தின் நீண்ட நெடும் வரலாற்றில் நாம் இன்று ஒரு அசாதாரமான வேளையில் வாழ்கிறோம். இது இறைவனின் வேளை.

இத்தகைய வேளைகளில், பழைய அடிப்படைகள் ஆட்டம் கண்டு விடுகின்றன. எங்கும் குழப்பம் ஏற்படுகின்றது. ஆனால், எதிர்காலத்தை நோக்கி பாய்ந்து முன்னேற விரும்பு கிறவர்களுக்கு இப்போது அற்புதமான வாய்ப்பு உள்ளது.

நீ, விரும்பினால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள் பவர்களில் ஒருவனாக இருக்க முடியும்'' என்பது அன்னை அவர்களுடைய கருணைமிக்க, மனிதநேயச் செய்தியே ஆகும்.

## பூக்கள் பற்றி அன்னை கருத்து

ஆசிரம வாழ்வில், அரோவில் தங்கி தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்களிடம் பூக்களுக்கும் சிறப்பான இடம் உண்டு.

ஆசிரமத்தின் முக்கியமான கட்டிடத்தில் - இங்குதான் மகரிஷி அரவிந்தர் பெரும்பாலும், தெய்வீகப் பண்புள்ள அன்னை அவர்களும் வசித்து வந்தார்கள்.

இந்த இடத்தில் நூற்றுக் கணக்கான பூச்செடிகள் இருக்கின்றன. ஆசிரமத்தில் உள்ள எல்லா வீடுகளிலுமே மலர்ச் செடிகள் இருக்கின்றன.

மகான் அரவிந்தர், அருட்திரு அன்னை அவர்களது சமாதி நாள்தோறும் காலை நான்கு மணிக்கு; அன்றன்று பூத்த பூக்களால் அருமையான அழகோடு அலங்காரம் செய்யப் படுகின்றது.

இந்த அழகுமிகு அலங்காரப் பணிகளை ஆசிரம சாதகிகள் நாள்தோறும் பக்தியோடு செய்வதைக் காண்பவர் களின் மனத்தில் பக்தி ஊற்றுக் கண்கள் சுரக்கும்!

பூந்தோட்டங்களைப் பராமரிப்பதற்குகென்று ஒரு சாதகர் இருக்கிறார். அவருக்கு உதவியாக மேலும் சிலர் பணியாற்று கிறார்கள்.

ஆசிரமத்தில் வாழ்பவர்களுக்கு ஆசிரம மலர் வீட்டிலிருந்து பறித்துச் சென்று சமாதியில் வழிபாடு செய் வதற்கு என்றும், தங்கள் அறைகளில் வைத்துக் கொள்வதற்கு என்றும் பூக்கள் கொடுக்கப் படுகின்றன.

திருமதி அன்னை அவர்கள் தனது வாழ்த்துதலை, ஆசியை, ஆன்ம உதவியை தினந்தோறும் ஆசிரம சாதகர்களுக்கு மலர்கள் மூலமாக வழங்கி வந்தார். என்ன காரணம் இதற்கு?

ஆன்மீக வாழ்வில் சாதகனின் இயல்பில் மலர வேண்டிய தெய்வீகக் குணங்கள் பல ஆகும். நம்பிக்கை, ஆர்வம், அன்பு, சரணம், பக்தி, ஒளி, சக்தி, மகிழ்ச்சி முதலிய குணங்கள் ஆகும்.

இந்தக் குணங்கள் எல்லாம் தெய்வ சுபாவங்களின், குணங்கள். இங்கு மனிதர்களிடையே இப்பெயர் பெற்றுள்ள மனித குணங்கள் இந்தத் தெய்வக் குணங்களின் திரிபுகளும், மங்கலான நிழல்களுமே ஆகும்.

ஒவ்வொரு பூவும் தெய்வ குணங்களில் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதை அருளாளர் அன்னை அவர்கள் அறிவித்தார். மலர்களுக்கு எல்லாம் அக்குணப் பெயர்களையே சூட்டினார். அந்த மலர்களைச் சாதகர்களுக்கு கொடுத்து, சாதகர்களிடம் அந்தத் தெய்வீகக் குணங்களை அன்னை அவர்கள் வளர்த் தார்கள்.

இவ்வாறு, அவர்களைத் தெய்வ வாழ்விற்கு அன்னை அவர்கள் வழி நடத்தி அழைத்துச் சென்றார்கள்.

ஆசிரம சாதகர்களிடம் அன்னை அவர்கள், தம்முடைய பணிகளை ஆற்றுவதற்குப் பூக்கள் அவருக்கு நல்ல இணக்கமான கருவியாக, சாதனமாக அமைந்திருந்தன.

அதனால்தான் ஆசிரம வாழ்வாளர்களான சாதகர்கள் வாழ்வில், பூக்களுக்கென்று ஒரு சிறப்பான இடம் இருந்தது.

அன்னை அவர்களும், ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் வாழ்த்துவதையும், ஆசீர்வதிப்பதையும் மலர்கள் மூலமாகவே அதைச் செய்தார்.

அருளாளர் அன்னை அவர்களைப் போற்றும் ஆசிரமத்துக்கு வெளியே வாழும் மக்கள், வணங்கி வழிபாடு செய்யும் அன்னை அவர்களின் ஆன்மீக பக்தர்கள், பக்தைகள், குழந்தைகள் அனைவரும், நாள்தோறும் இன்றும் அதிகாலை நேரத்தில் புத்தம் புதுசாகப் பூத்த பூக்களையே கொண்டு வந்து அன்னை அவர்களையும், மகரிஷி அரவிந்தரையும் போற்றி வணங்கி சமாதிகள் வழிபாடு செய்து வருகின்றதை நாம் பார்த்து மகிழ்கின்றோம். வளர்க அன்னை அவர்களது தெய்வீக வாழ்க்கையின் ஆன்ம ஞானத் தொண்டுகள்!

# 7

# இந்திய மீராபாயும் - ஃபிரான்ஸ் மீராவும்!

*குறிப்பு :* இதுவரை ஃபிரான்ஸ் நாட்டின் மீராவைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கத்தைப் படித்தீர்கள். இந்திய நாட்டு மீராபாய் கதைச் சுருக்கம் இது.

இந்திய நாட்டு மீராபாய் சம்பவங்களையும், ஃபிரான்ஸ் நாட்டு மீராவின் நிகழ்ச்சிகளையும் ஊன்றி படித்துணர்ந்து, இரண்டுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த அத்தியாயம் தரப்பட்டிருக்கிறது)

ஆன்மீக ஞானம் என்ற குழந்தைக்கு முதன்முதலாக 'ஆராரோ' பாடிய ஞானத் தொட்டிலாக விளங்கிய பூமி இந்திய நாடு. இந்த நாட்டின் வட பாகத்தில் உதயப்பூர் என்ற ஒரு சிற்றரசு. பூ நாயகன் என்ற அரசன் அந்த நாட்டை ஆண்டு வந்தான். அவரது பட்டத்து ராணி சந்திரமுகி என்பவள்.

## இந்திய மீரா பிறந்தார்

உதயப்பூர் மன்னனும், மன்னியும் இறை பக்தியெனும் பாலிலே ஊறிய பழச் சுளைகளாக விளங்கி, அந்த நாட்டு

மக்களுக்கு நாள்தோறும் அமுதம் என்ற பிரசாதங்களை வழங்கிக் கொண்டு வாழ்ந்த இறையடி யார் இலக்கணம் உடையவர்கள் ஆவர்.

பல காலம் இவ்வாறு வாழ்ந்து வந்ததின் எதிரொலியாக அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. தெய்வீக மணமுடைய அந்தப் பெற்றோர் தங்களது பெண் குழந்தைக்கு மீராபாய் என்ற திருப்பெயரைச் சூட்டி; நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக; ஞானச் செல்வச் செழிப்போடு பலரும் போற்றும் வகையில் வளர்த்து வந்தார்கள்.

## மீராபாயின் கிருஷ்ண பக்தி

மீராபாய் தனது விளையாட்டுப் பொம்மையாக கிருஷ்ணன் சிலையை வைத்து விளையாடுவாள்! பெற்றோரும் மற்றோரும் அந்தக் குழந்தைக்குக் கிருஷ்ணனுடைய கதைகளையே பக்திச் சுவை சொட்டச் சொட்டக் கூறி மகிழ்விப்பார்கள்.

அரண்மனையிலும் அடிக்கடி பாகவதம் கதா காலட் சேபமும், ஆடல் பாடல்களும் நடக்கும். அவற்றில் மீராபாய் கண்ணன் திருவிளையாடல்களைக் கேட்டுப் பேரானந்தம் பெறுவார்.

மீராவும் வளர்ந்தாள்; அவள் பக்தியும் போட்டிப் போட்டு வளர்ந்தது - தெய்வ பாசமானது! திருமணப் பேச்சு எழுந்தது; அரச குமாரர்களின் ஓவியங்கள் அரசனிடம் குவிந்தன!

இதைக் கண்ட மீரா, 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என்ற எண்ணத்திலே வாழ்ந்த அவள், ஓவியங் களை எல்லாம் பொருட்படுத்தவில்லை! கண்ணனையே மணப்பேன் என்ற எண்ணமானாள்! இந்த எண்ணம் தோழிகளுக்குப் புரிந்து பெற்றோர்களுக்கும் தெரிந்தது.

## கண்ணன் வழிபாடுகள்

தனது கன்னிமாடத்திலேயே கண்ணனுடைய வழிபாடு களை, சாதி, மதம் பேத மேதும் பாராமல், பக்த கோடிகள் சூழ்ந்து,

வழிபாடுகள் ஆற்றிட தந்தை பூநாயகரிடம் உத்தரவு பெற்றாள் மீரா.

முன்பைவிட இப்போது மிகுந்த பக்தி வெள்ளப் பிரவாகம் அணை உடைந்து ஓடி வரும் நிலையில் கதா காலட்சேபம், ஆடல் - பாடல் வழிபாடுகளாக தினந்தோறும் ஆற்றி வந்தாள் பக்தை மீராபாய்.

மீரா பாயின் கண்ணன் வழிபாடுகள் உதயப்பூர் நாடு கடந்தும் பரவியது. அப்போது டில்லி சக்கரவர்த்தியாக இருந்த அக்பர் மாமன்னனுக்கும், அவரது அவையிலே பெரும் புகழ் பெற்றிருந்த இசை மேதை தான்சேனுக்கும் எட்டியது! வியந்தார்கள் அவர்கள் - மீராவின் தெய்வத் தொண்டுகளைக் கேட்டு - மகிழ்ந்து!

மீராவின் பக்திப் புகழ் வளர்ந்ததுபோல, கண்ணனையே, கணவனாக மணப்பேன் என்று கூறும் மீராவின் இறை வைராக்கிய மும் வளர்ந்தது.

அதைக் கேள்விப்பட்ட ஊரார், பொறாமை கொண்டு, மீராவைக் கண்டனம் செய்தார்கள். மீரா செயல் இறை களங்கம் கொண்டது, ஆன்ம ஒழுங்கினமானது என்று மன்னனிடம் புகார் கூறினார்கள்.

மன்னன் சினத்தோடு கொதித்தான்! ஒரு மகளைத் திரு மகள் போலப் பெற்று வளர்த்தும், ஊரார் அவச் சொல் நமக்கு எதற்கு? என்ற கோபத்தோடு மீராவின் தாயிடம் 'அவளுக்கு நஞ்சு கொடுத்துச் சாகடி' என்று கட்டளையிட்டான்.

## நஞ்சிட்டுக் கொல்ல ஆணை

தாய் பதறினாள்; கதறினாள்; திணறினாள்; அழுதாள்; புரண்டாள்; தனது ஒரே மகளுக்கு நஞ்சா? என்று மயக்கமாக விழுந்தாள்; எழுந்தாள்; விம்மினாள்; விரக்தியானாள்.

உடனே மீரா அம்மாவைக் கண்டு, தாயே - அழாதே! அஞ்சாதே! கண்ணன் இருக்கிறான்! 'எனக்கு நம்பிக்கையோடு

நஞ்சைக் கொடு' என்று தாயைக் கேட்டு நஞ்சுண்டாள். அமுத மாயிற்று ஆல காலம்! மீராவின் பக்தி நாட்டு மக்களைச் சரணடையச் செய்தது.

மேவார் என்ற நாட்டை ஆண்டு வரும் கும்பராணாவுக்கு மீராவை மணம் செய்ய ஏற்பாடு செய்தார் உதயப்பூர் மன்னர்! ராணா ஏற்கனவே திருமணம் ஆனவர்; மனைவிகள் உள்ளவர்! ஆனால், அவர் தன்னைப் போல் ஒரு தெய்வ பக்தி' மணம் கமழும் மனைவியை விரும்பினார்! மணந்தார்.

மனிதனை மணப்பது சரியன்று என்று எண்ணிய மீரா, அற்புதமான கனவு ஒன்றைக் கண்டாள். 'கும்பராணா தெய்வ பக்தியில் மேதை! அவரை ஏற்றுக் கொள்' என்று ஒரு பெரியவர் கனவிலே வந்து கூறுவதாகக் கனாக் கண்ட மீரா, ஏற்றுக் கொண்டாள் ராணாவை கணவனாக!

## மீரா மணந்த கணவன் யார்?

இராணா, சிறந்த பக்தர், ஜய தேவருடைய 'கீத கோவிந்தம்' என்ற பாடற் தொகுதிக்கு 'இரசிப்ரியா' என்ற பெயரில் உரையும், 'சங்கீத ராஜம்' என்ற லட்சணக் கிரந்தத்தையும் எழுதி உரை கண்டவர்.

அத்தகைய ஒரு மேதைக்கு பக்தை மீரா தெய்வ மணம் கமழும் மனைவியாக வருவதால், மேவார் நாட்டில் எங்கு பார்த்தாலும் கண்ணன் திருக் கோயில்கள் எழுந்தன. அன்ன தான சத்திரங்கள், ஆடல் பாடல், காலட்சேப மண்டபங்கள்; பஜனைக் குழுக்கள் தங்க அருமையான மற்ற வசதிகள் எல்லாம் ஊருக்கு ஊர் உருவாயின.

விழாக்கள், கதா காலட்சேபங்கள், ஆடல்பாடல்கள் எல்லாமே நாள்தோறும் நடந்து, நாடே கண்ணன் கதைகள் பக்திப் பூமியாக மாறியது.

இத்தகையக் கோலாகலங்கள் பட்டத்து ராணிக்கும், மன்னனின் தங்கை ஊதாவுக்கும், இரண்டாவது இராணிக்கும் - அவரது பழைய நண்பர்களுக்கும், பிடிக்கவில்லை.

பொறாமை தீ அரண்மனையைப் பற்றிக் கொண்டு பரவியது. தீயை அணைப்பவருக்குப் பதிலாக நெய் ஊற்றுவோரே அதிகமாகக் காணப்பட்டார்கள்.

இளையராணியின் சூட்சியை, வஞ்சத்தைப் புரியாத மீரா, அவளைத் தனது அந்தப் புரத்துக் கண்ணன் கோயில் வழிபாடுகளில் கலந்து கொள்ள அனுமதித்தாள் மீரா.

பக்தை மீரா வழிபாட்டில் மதம், சாதி, பேத வர்க்கப் பாகுபாடுகள் ஏதும் கிடையாதாகையால், எல்லாரும் சமத்துவமாக, சகோதரத்துவமாக, சுதந்திரமாக வந்து குவிந்து வழிபாடுகளிலே கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள்.

## சக்ரவர்த்தி அக்பர் சூட்டிய முத்துமாலைப் பரிசு

சக்கரவர்த்தி அக்பரும், இசை மேதை தான்சேனும் மன்னர் என்ற மதிப்பில் வாராமல், ஏதோ இரு ஏழைப் பக்கிரிகள் போல வேடமேற்று, மீரா பஜனையிலே கலந்து கொண்டு, விலை உயர்ந்த முத்து மாலை ஒன்றைக் கண்ணன் சிலைக்குச் சூட்டிவிட்டு இருவரும் சென்று விட்டார்கள்.

அரண்மனையே அரசியல் சிக்கல்களில் சிக்கிக் கொண்டிருந்த நேரம் அது. அத்தோடு அக்பர் முத்துமாலை பரிசளிப்பும் நெய்யாக ஊற்றப்பட்டது. என்ன ஆகும் அரண் மனையும் - நாடும்?

கும்ப ராணா மீராவைக் கண்டித்தார்! அத்துடன் பெரிய ராணி, இளைய ராணி, அவள் உறவினர்கள், ஊராரின் மதத் துவேஷிகள், சாதிப் பற்றாளர்கள் எல்லாரும் சேர்ந்து கும்ப ராணா மனதைக் குலைத்தார்கள்! என்ன செய்வார் ராணா? இருந்தாலும், மீரா பற்று அவரை முழுமையாக ஆட்கொண்டதால் கலகங்கள் எதையும் அவர் பொருட்படுத்த வில்லை.

## எரிமலை ஆனார் - மீரா பாய்!

இதை அறிந்த மீரா, வழக்கத்தையும் மீறிப் பக்திப் பிரவாக ஊழி போலானாள்! இறை வழிபாட்டில் இமயம் போல் நிமிர்ந்து

நின்றாள்! எதையும் மீரா பொருட்படுத்த வில்லை! பொங்கிய பக்தி உணர்ச்சியே எரிமலையானது.

அப்போது ராணா - மீராவிடம் 'அக்பர் பாதுஷா வந்ததும் இசைமேதை தான்சேன் பஜனைக் குழுவில் பாடியதும், முத்துமாலை பரிசளிப்பும் உனக்குத் தெரியாதா? என்று சுடு சொற்களால் கேட்டு விட்டார் ராணா! பதிலேதும் பேசாமல் மீரா, 'கண்ணனே பதில் கூறுவார்' என்று ஊமையாக இருந்து விட்டாள் மீரா!

பிருந்தாவனம் பக்தி யாத்திரையும், அங்கே நடந்த கிரிதாரி கிருஷ்ணனது விழாவிலே கலந்து கொள்ளவும் மீரா, புறப்பட்டு விட்டாள் - மேவார் நாட்டைவிட்டு. மீரா போகிறாள் என்ற செய்தி பரவியதும். மன்னன் ராணா ஓடி வந்தார்! 'அரண்மனைக்குத் திரும்பி வந்து விடு மிரா' என்று கெஞ்சினார்!

## அரண்மனை திரும்ப - மீரா மறுப்பு

'மன்னவா! அரண்மனை திரும்பும் எண்ணம் எனக்கில்லை. உங்களது கோபமும், எனது வைராக்கியமும் கண்ணனது திருவுள்ளமே' என்று மீரா திரும்பிப் பாராமல் நடந்தாள். கண்ணீர் ததும்பும் கண்களுடன் மீராவையே பார்த்துக் கற்சிலையாக நின்றார் ராணா.

மீரா பிருந்தாவனம் போய்விட்டதை அறிந்து ஊராரும், மற்றவர்களும் கல்நெஞ்சர் ராணாவைக் கண்டபடி விமரிசனம் செய்தார்கள். ரகுநாத பட்டர் அமைச்சர் என்ற தகுதியில் ராணாவைக் கண்டு மீராவை அழைத்து வருமாறு கூறினார்.

## அக்பர் கோபம்! படையெடுப்பேன்!

இந்த சமயத்தில் சக்கரவர்த்தி அக்பர், மீராவின் வழிபாடு களைக் காணவே தாம் வந்ததாகவும், அவரது பக்தியின் உருக்கத்தை உணர்ந்தே முத்து மாலையைக் கிரிதர கோபாலன் கண்ணன் சிலைக்குச் சூட்டியதாகவும், இதற்காக மீரா நாடு துறந்து பிருந்தாவனம் யாத்திரைப் போக வைத்தது பற்றி

வருத்தமும் - சினமும் கொள்வதாகவும், மீரா நாடு துறப்பது அரச நீதிக்கே விரோதம். ஆகையால், மீண்டும் மீரா மேவாருக்குத் திரும்பி வராவிட்டால், நாம் மேவார் மீது படையெடுப்போம் என்றும் ஓலை அனுப்பி வைத்தார் - அக்பர்!

இராணா மனம் உருகியது. ரகுநாத பட்டருடன் பக்கிரி கோலத்தோடு இருவரும் பிருந்தாவனம் புறப்பட்டுச் சென்று மீராவைச் சந்தித்தார்கள். ராணா, மீராவை மீண்டும் மேவார் திரும்புமாறு வேண்டினார்.

## கிருஷ்ணர் பக்தியே தொண்டு!

அதற்கு மீரா, எனக்கு இனி ஊர் ஏது? உறவேது? கண்ணன் இருப்பிடமே எனது ஊர், பக்தி வழிபாடுதான் எனது தொழில். அப்படிக் கோயிலிலேயே காலம் கழிப்பது என்றால், நான் மேவார் திரும்புவேன். அரசி என்ற தகுதியோடு உங்கள் பின்னால் வந்து என்னால் வாழ முடியாது என்று மீரா கூறிவிட்டார்.

கிருஷ்ண பக்தை மீரா கூறியதற்கு ராணா சம்மதம் தெரிவிக்கவே; மீண்டும் மேவார் திரும்பினாள் மீரா. இராணாவும் சிறந்த பக்தியிலே மேலும் ஈடுபட்டு, இருவருமே மேவார் மக்களுக்கு இறை ஞான உபதேசிகளாக மாறினார்கள்.

அன்று கண்ணன் பிறந்த நாள். கோயிலில் ஒரே கோலாகலம்; வலது கையிலே தம்பூராவும், இடது கையிலே கர தாளம் என்ற சிப்ளா கட்டையுமாக, தீபாலங்கார அரங்கிலே இசை ஒலிகள், கோஷங்கள் முழங்கிய பின்பு, மீரா மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தாள்.

இராணா மன்னர் அலங்காரத்துடன் ஒரு சந்நியாசி போல கண்கள் பளிசோர நின்றுக் கொண்டிருந்தார். மீராவை மணம் செய்ததற்கு முன்பும், பின்புமுள்ள அவருடைய நினைவுகள் அவரைச் சுற்றி எண்ணமிட்டன - மனவட்டத்தில்.

## அரண்மனையில் - கிருஷ்ண பஜனை!

மீரா நின்ற நிலையிலே கால் சதங்கைகளுடன், கைத் தாளமும் ஒலிக்க, அற்புதமான கானடா ராகத்திலே 'தரச மீராலாஸ்

கிரிதரா' என்ற பாடலை, தனது இதயத்தை மீறி எழுந்த கவிதையால் திருக்கோயில் மக்களையும் ஞானவான்களாக்கி, மண்டபம் உருகும் வகையிலே மீரா பக்தியோடு உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தாள்.

பக்தி உணர்வுகள் இவ்வாறு கழிந்த நேரம் யாருக்கும் தெரி யாமல் நகர்ந்து கொண்டே இருந்தது. மீரா திரும்பலாமா அரண் மனைக்கு? என்றார் ராணா. கனிந்த கனிச் சொற்களால் அவர் கேட்டார்!

## கிருஷ்ணா! முகுந்தா! மூராரே! கோஷம்!

ஆன்ம ஞானி மீரா கண்களிலே கண்ணீர்த் துளிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சிதறி விழுந்தன. கர தாளம் நின்றது. குயிலினும் இனிய கானம் பாடும் கனிமிகு குரலோடு, 'ராணா ஜீ! இந்த உடலுக்கு நாதன் நீங்கள்தான்! ஆனால், எனது இதய நாதன் கண்ணன். இன்று அவன் என்னை ஆட்கொள்ள முடிவு கொண்டான்.

தங்களைப் போன்ற பரம பக்தர் போற்றும் பக்தி வழிக்கே உரிய துணைவரை - நான் வணங்குகிறேன். நாம் இருவரும் சேர்ந்து எழுதிய கவிதைகளைச் சேர்ந்தே பாடுவோம் என்றார் மீரா.

உளம் உருகினார் ராணா - மீரா உரைத்த உணர்ச்சி மிகும் பேச்சைக் கண்டு! கம்பீரமான குரலில் ராணா இசை மழை பொழிந்தார்! இருவரும் மோனத்திலே மிதந்து, தியானத்திலே ஆழ்ந்து, கானத்தைக் கேட்டோர். உருகும் உள்ள நிலையில், வானத்துக் கானம் பாடியாக கிருஷ்ணர் சிலை முன்பு நெடுநேரம் மெய்மறந்து நின்றபடியே இருந்தார்கள். வழிபாடு நாமாவளியும் முடிந்தது! கண் விழித்தார் ராணா.

## கிரிதாரி கிருஷ்ணனிடமே மீரா அடைக்கலமானாள்!

மெய்மறந்து பாடிக் கொண்டிருந்த மீரா, கண்ணன் திருவடிகளுக்கு அருகே அவரது பாதத்தைப் பற்றியபடியே சுருண்டு விழுந்தாள்! அவள் வாய் 'கிரிதாரி என்னை

அழைக்கின்றாயா? இதோ வந்துவிட்டேன்' என்று முணு முணுத்த வாயோடு மெல்ல எழுந்து, கர்ப்பக் கிருகத்தை நோக்கி இரண்டடி வைத்த அவள் - இறைவனது விக்ரகத்தைத் தழுவிக் கொண்டாள்!

மின்னல் ஒரு கணம் தனது கோடுகளைப் பளபள வென்று கிறுக்கி அழித்தது! ஒளி வட்டம் ஒன்று நடுவே, கண்ணனைத் தழுவிய கோலத்தோடு நின்றாள் மீரா. மறு விநாடி கர்ப்பக் கிருகத்தின் கதவுகள் மூடிக் கொண்டன.

மீராவின் உடல் மறைந்தது. அவளது சேலை மட்டும் கண்ணனைச் சுற்றிக் கிடந்தது; அற்புதமான வேணு கானமும், அதனுடன் மீராவின் இனிய குரலும் கேட்டன! அடியற்ற மரம்போல தரையில் வீழ்ந்து பணிந்து வணங்கினார் ராணா!

அக்பர் பாதுஷா வந்து, மீரா பஜனையின் பக்திப் பிரபாவத்திலே மெய் மறந்து கண்ணன் சிலைக்குச் சூட்டிய முத்து மாலைச் சம்பவத்தைப் பற்றி; ராணா - மீராவிடம் கேட்டபோது, சில சுடுசொற்களோடு கேட்டார் என்று முன்பு கூறியிருந்தோம் அல்லவா?

அந்தச் சுடு சொல் என்ன தெரியுமா? 'நீ இறந்து போவதே மேல்' என்ற ராணாவின் சொல்லைக் கேட்டு ஆற்றிலே விழுந்து மீண்டு இறந்துவிட்டால் என்றும், அங்கிருந்து கரையில் ஒதுக்கப்பட்டு, பிருந்தாவனம் சேர்ந்தாள் என்றும் ஒரு பரம்பரைக் கதை இருக்கிறது.

மீரா மறைந்து போனார். அவளுடைய அமுதமயமான கவிதைகள், பாரத நாட்டை விட்டு மறைந்து போக முடியுமா? மீராபாயும் கும்பராணாவும் நம்முடைய நெஞ்சகத்தையே கோயிலாகக் கொண்டு விட்டார்கள். மீராவின் அருமையான கவிதைகள், இறை ஞானத்தைப் பெருமை படுத்தும் உபதேசங்கள் எனலாம்.

எந்தப் பொருள் மீதும் உண்மையான அன்பு இல்லா விடில், இறைவன் அருள் கிட்டாது என்பதே மீராவின் தத்துவமாகும்.

# 8

# அரவிந்தர் சிறை சென்றார்! ஆன்மீக அருளாளராக மீண்டார்!



மனிதனாக, புரட்சிவாதியாக, தீவிர தேச பக்தராக, அலிப்பூர் வெடிகுண்டு வழக்குக் குற்றவாளியாக, மகான் அரவிந்த கோஷ் 1908-ஆம் ஆண்டு, மே மாதம் ஐந்தாம் நாள் சிறை சென்றார்.

அந்தக் குற்றவாளி, கைதி, ஆன்மீகவாதியாக, மாண்புமிகு ஞானியாக, அரவிந்தரெனும் மகானாக 1909-ஆம் ஆண்டு, மே மாதம் ஐந்தாம் நாள் சிறையிலே இருந்து வெளியே வந்தார்.

வெடிகுண்டு வழக்கில் குற்றவாளியாக, ''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'' என்ற வெறி முழக்கத்தோடு சிறை சென்றார் அரவிந்தகோஷ். சரியாக ஓராண்டுக் காலமாகச் சிறையிலே தவங்கிடந்து, தன்னைத்தானே உருக்கிய ஞான வேள்வியின் அருளால், வேதாந்தியாக, மகானாக, அரவிந்தர் எனும் ஞானியாக சிறை மீண்டு புது மனிதராக வெளியே வந்தார்!

அரவிந்தர் சிறைக்குச் சென்றபோது சுதந்திர உணர்ச்சிகள் மக்களிடையே பொங்குமாங் கடலாக, பாரத தேசம் முழுவதும் ஆங்காங்கே பொங்கிக் கொந்தளித்துக் கிடந்தது.

பாரத நாட்டின் சில மாநிலங்களில் வெடித்த வெடிகுண்டு களின் தீவிரவாத தேச பக்திக் காரணமாக, பிரிட்டிஷ் கொடுங்கோலர்கள் ஆட்சி, தேச பக்தர்களைக் கைது செய்துக் கொண்டிருந்தது. வெள்ளையர்களது வெறியாட்சிக் கொடுமை களுக்குப் பயந்த சுதந்திரப் போர் வீரர்கள் ஓடி ஒளிந்தார்கள்.

அந்த சுயராச்சிய வீரர்களில் சிலர் நாடு கடத்தப்பட்டார்கள். இப்போது மியான்மர் என்று அழைக்கப்படும் அப்போதைய பர்மா நாட்டிலே உள்ள 'மாண்டலே' எனும் கொடுஞ் சிறையிலே அவர்கள் பூட்டப்பட்டார்கள். மற்றும் பல சுதந்திர வீரர்கள் அந்தமான் வெஞ்சிறையிலே வேகடிக்கப் பட்டார்கள் - அதாவது, சித்திரவதைச் செய்யப்பட்டார்கள்.

இந்திய பூபாகமே ஒரு பிணக்காடு போல, சூன்யப் பிரதேச மாகக் காணப்பட்டது. ஆனாலும், ஆங்காங்கே மக்களது சுதந்திர எழுச்சிக் கனல்கள், 'வந்தே மாதரம்' என்ற முழக்கங்களால் ஒலிபரப்பிக் கொண்டிருந்தன!

அரவிந்த கோஷ் சிறை சென்றபோது நாடு எவ்வாறு மேற்கண்டபடி காணப்பட்டதோ, அதே கொடுமைகள்தான் அரவிந்தர் எனும் ஞான மகனாக அவர் வெளியே சிறை மீண்டு திரும்பி வந்தபோதும் காணப்பட்டது. அதாவது நாட்டின் சுதந்திர உணர்ச்சி, போராட்டமெனும் மயான பூமியான சுடுகாட்டில் எரிந்துக் கொண்டிருந்தது.

பாரத நாட்டின் இந்த பரிதாப உணர்ச்சியைப் பார்த்த அரவிந்தர் மனம் வேதனைப்பட்டது; உள்ளம் துடித்தார்; துன்புற்றார்! தேசீய ஞானி அல்லவா அவர்?

கொல்கொத்தா நகரருகே உள்ள உத்தர்பாரா என்ற இடத்தில், சிறை மீண்ட ஞானியான அரவிந்தருக்கு ஒரு வரவேற்பு விழா நடைபெற்றது.

அந்த விழாவிலே மகான் அரவிந்தர், தான் சிறையிலே ஓராண்டு காலம் சிந்தித்தாற்றிய தேசிய ஞான வேள்விச் சம்பவ நிகழ்ச்சிகளை விளக்கமாக மக்களுக்கு உபதேசம் செய்தார்.

அரவிந்தர் சிறைத் தண்டனை பெற்றதும், ‘வந்தே மாதரம்’ என்ற அவரது பத்திரிக்கை நின்று விட்டது. அதற்குக் காரணம், அந்த இதழ் அச்சாகி வந்த அச்சகத்தைப் பிரிட்டிஷ் அரசு பறிமுதல் செய்ததுதான்.

சிறையிலே இருந்து வெளியே வந்த தேச ஞானி அரவிந்தர், ‘கர்மயோகின்’ என்ற ஆங்கில பத்திரிக்கையைத் துவக்கினார். இந்த ஏடு, வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களுக்கும், அயல் நாட்டினருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியின் போக்குக் களைத் தெரிவிப்பதற்காக நடத்தப்பட்ட ஆங்கில இதழாகும்.

வங்காள மக்களது சுதந்திர உணர்வுகளுக்கு எண்ணெய் ஊற்றுவதைப்போல, வங்க மொழியில் ‘தர்ம’ என்ற ஒரு விடுதலை விளக்கப் பத்திரிக்கையை நடத்தலானார்; அந்த ஏடுகள் இரண்டிலுமே மக்களது பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு அற வழிகளைப் போதித்தார் அரவிந்தர்!

இரண்டு பத்திரிக்கைகளும் தேச விடுதலைக்காகவே போராடும் பத்திரிக்கைகள். என்றாலும், சிறை புகுவதற்கு முன்பிருந்த தீவிரவாத அரவிந்தராக இல்லாமல், இப்போது முழுக்க முழுக்க தர்ம நெறி, அற வழிகளிலே போராடும் அரவிந்தராக நின்று அவற்றை நடத்திக் கொண்டு வந்தார்.

“நாட்டுக்காக உழைத்து உயிர் விடுவதை அரவிந்தர் கர்ம யோகம் என்று கூறினார். உயிர் வாழும்போதும் உயிர் துறக்கும் போதும் வணங்க வேண்டிய அன்னை “பாரத மாதா” என்றார்.

அரவிந்தர் தனது தீவிரவாதப் போக்கைக் கைவிட்டுத் திருந் தினாலும், பிரிட்டிஷ் ஆட்சி அவர்மீது கொண்டிருந்த பகை நின்ற பாடில்லை.

எப்படியாவது அரவிந்தரைக் கைது செய்து நாட்டை விட்டுக் கடத்திவிட வேண்டும் என்ற எண்ணமே தீவிரமாக

இருந்தது என்ற செய்திகள் அதிகார வர்க்கத்தினிடையே பரவலாகப் பரவி வந்தன.

அரவிந்தகோஷையோ, சுரேந்திரநாத் பானர்ஜி என்ற தேச பக்தரையோ நாடு கடத்தி விடுவதால் மட்டுமே இந்திய சுதந்திர விடுதலை உணர்ச்சியைத் தடுத்துவிட முடியாது என்ற எண்ணமும் அப்போது மக்களிடம் சுழன்று கொண்டிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சி, சுதந்திர உணர்ச்சியைத் தடுக்கக் கொடுமை யான நடவடிக்கைளை எடுத்துக் கொண்டு வந்ததற்கேற்பவே, அப்போது புரட்சி இயக்கவாதிகளின் செயல்களும் தொடர்ந்து வந்தன. அதனால், அதிகார வர்க்கம் அப்போது வெறி பிடித்தாற் போலவே காணப்பட்டது.

இவற்றை எல்லாம் உணர்ந்து கொண்ட அரவிந்தர், வெள்ளைக்காரர் ஆட்சியுடன் நேரடியாக மோதிக் கொண்டிருப் பதைவிட, நாடு முழுவதும் தேசிய இயக்க நிறுவனங்களின் கிளைகளைத் துவக்கி, மக்களுக்குள்ளே புதியதோர் எழுச்சி உணர்ச்சிகளை உருவாக்கவே அரும் பாடுபட்டு வந்தார்.

அந்த எழுச்சிக்கு ஏற்ப முதல் நடவடிக்கையாக, அயல் நாட்டிலே இருந்து வரும் பொருட்களை வாங்கக் கூடாது என்ற பிரச்சாரத்தைக் கடுமையாகச் செய்து வந்தார் அரவிந்தர்.

அரவிந்தரின் இந்த நடவடிக்கைகளை, இந்திய விடுதலைத் தந்தையான காந்தியடிகள் பிற்காலத்தில் ஆதரித்தார். இந்தக் கொள்கையைத்தான் காந்தியடிகள் விதேசி-சுதேசி போராட்டம் என்று மக்களிடையே அறிமுகம் செய்து வைத்துப் போராடினார்.

இந்த நிலையில் அரவிந்தர், தனது போராட்ட எண்ணங் களைக் காந்தியடிகள் ஏற்று செயல்படுவதைக் கண்டு, தனது பொதுமக்கள் சேவையை வேறு ஒரு பாதையில் மாற்றி அமைத்துக் கொண்டார். அதாவது, ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்ட அரவிந்தர், இந்த அரசியல் போராட்டப் பாதைகளைக் காந்தியடிகளிடமே விட்டுவிட்டார்.

தனது சிந்தனையின் ஞான வழியாக அரவிந்தர் வேத கால உணர்வுகளுக்குப் பாரதத்தை உயர்த்தும் ஆன்மீகப் பக்தியை வளர்ப்பது என்ற முடிவுக்கு அவர் திட்டங்களை வகுத்தார்.

அதனால், வங்காளத்தின் அரசியலைத் துறந்தார்! அந்த அரசியல் வழிகளை விட்டுவிட்டு, தனிமையில் நின்று சாதனை களைப் புரிந்திட அவர் முடிவு செய்தார்.

இந்தத் தனிமைப் பாதையைக் கடைபிடிக்க அரவிந்தர், தென்னிந்தியாவில் உள்ள, அப்போது பிரெஞ்சு ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருந்த பாண்டிச்சேரி என்ற புதுவை மாநிலத்தைச் சேர்ந்த நகருக்கு 1910-ஆம் ஆண்டு வருகை தந்தார்.

பாண்டிச்சேரிக்கு அவருடன் நான்கு ஆன்மீகவாதிகள் சீடர்களாக வந்தார்கள். பாண்டிச்சேரிக்கு வந்த அரவிந்தர் அன்று முதல் எந்த ஓர் அரசியல்வாதியையும் சந்திக்க மறுத்து விட்டார். ஒவ்வொரு நாளும் அவர் தனிமையில் அமர்ந்தே தியான சிந்தனையில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார்.

அரவிந்தர் தனிமையைத் தேடி பாண்டிச்சேரிக்கு வந்த பிறகு, பாரத நாட்டின் அரசியல் சூன்யம் பிடித்து விட்ட ஒரு தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதனால், இந்திய அரசியல் தலைவர்கள் எல்லாம் அவரை அரசியலுக்கு மீண்டும் திரும்பி வருமாறு வற்புறுத்தி அழைத்தார்கள்.

பஞ்சாப் மாநிலச் சிங்கம் என்று மக்களால் போற்றப்பட்ட லாலா லஜபதிராய், பாண்டிச்சேரி நகருக்கு வருகை தந்து அரவிந்தரை நேரில் சந்தித்தார். அரசியல் பாதைக்கு மீண்டும் திரும்பி வருமாறு அவர் வேண்டினார். அதனை அரவிந்தர் மறுத்தார்.

இந்திய விடுதலைக்காக அப்போது அரும்பாடுபட்டு வந்த மகாத்மா காந்தியடிகள், தமது மகன் தேவதாஸ் காந்தியை அரவிந்தரிடம் அனுப்பி வைத்து, மீண்டும் அவரை அரசியலுக்குத் திரும்பி வருமாறு கேட்டுக் கொள்ளச் செய்தார். அதற்கும் அரவிந்தர், தனது பாதையை தனியொரு வழியாகவே

அமைக்க விரும்புவதாகக் கூறி, அவரையும் திருப்பி அனுப்பி வைத்தார்.

அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் தன் சார்பாக மிகத் திறமையாக வாதாடிய தேசபந்து என்று மக்களால் அழைக்கப் பட்ட சித்தரஞ்சன்தாஸ் என்ற வங்காள தேச விடுதலைப் போராட்ட வீரர், அரவிந்தருக்கு ஓர் அஞ்சல் எழுதினார். அக் கடிதத்தில் அவர், அரவிந்தரை மீண்டும் அரசியலுக்கு வருமாறு வற்புறுத்தினார்.

தனக்காக, வழக்கில் ஓயாது உழைத்திட்ட சித்தரஞ்சன் தாசுக்கு மட்டும் அரவிந்தர் ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர்,

'அன்புள்ள சித்த,'

நான், வழக்குக்கு முன்பிருந்த உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும், நோக்கத்தோடும் அரசியல் ஆக்கப் பணிகளில் இறங்கி உழைக்க முடியாது. அந்த அரசியல் பணிகளுக்கும் மேலாக, உயர்வாக, ஒரு குறிக்கோளுக்காகவே உழைக்க விரும்புகிறேன். அந்த இலட்சியம் வெற்றி பெற்ற பின்பு, அதையே ஆதாரமாகக் கொண்டு செயற்படத் திட்டமிட்டு விட்டேன்'' என்று குறிப்பிட்டு அக் கடிதத்தைத் தாசுக்கு அனுப்பி வைத்தார்.

அந்த லட்சியம்தான் என்ன? என்பதை விவரிக்க நினைத்த அரவிந்தர், அப்போது 'ஆரிய' என்ற ஒரு பத்திரிக்கையை துவக்கினார். அந்த இதழில், வேதங்கள், உப நிடதங்கள், யோகம், காவிய விமரிசனம் ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக எழுதி வந்தார்.

அந்தப் பத்திரிகைக்குப் பாரதநாடு முழுவதுமிருந்து ஆதரவு பெருகியது. அறிஞர் பெருமக்கள் எல்லாம் அதை முழுமனதுடன் வரவேற்றுப் பாராட்டினார்கள். அதனால், அரவிந்தரின் பாதை என்ன என்ற நோக்கம் எல்லாரிடமும், நாடு முழுவதுமாகப் பரவியது.

இந்த 'ஆரியன்' என்ற பத்திரிக்கை அரவிந்தர் பாண்டிச் சேரிக்கு வந்த பிறகு, 1914-ஆம் ஆண்டில் அவரால் ஆரம்பிக்கப் பட்டது.

இந்த வேளையில், பிரெஞ்சு நாட்டு மாதரசி ஒருவர், இந்திய யோகிகளது அறிவாற்றல்களை அறிந்து உணர்ந்து கொள்ள பாண்டிச்சேரிக்குத் தனது கணவருடன் வந்தார்.

புதுச்சேரிக்கு வருகை தந்த அம்மையார், அரவிந்தரைச் சந்தித்தார். இருவரும் கலந்துரையாடினார்கள். அப்போது அந்த மாதரசி தனது நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினார்.

''நூற்றுக்கணக்கான மக்கள் இருளில் மூழ்கி இருந்தால் என்ன? நேற்று நாம் பார்த்தோமே, அவர் ஒருவர் இந்த மண்ணில் இருக்கிறாரே! இருள் ஒளியாக மாறும் என்பது, அவர் இருப்பதாலேயே தெரிகிறது. அப்போது பெருமானே உன் ராஜ்யம் மண்ணுலகில் உருவாகி நிலைத்து நிற்கும்'' என்று அந்த நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார்.

அரவிந்தரும், அந்த அம்மையாரும் சந்தித்த அந்த சந்திப்பு, ஒரு தெய்வ சித்தம்போலவே தெரிந்தது. அந்த அம்மையார் அப்போது அவரது கணவருடன் வந்திருந்தார்.

முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டு முதல் 1918ஆம் ஆண்டு வரை அப்போது நடந்து கொண்டிருந்த நேரம். அந்தப் போரில் அவ் வம்மையாரது கணவர் கலந்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இருந்ததால், அந்தத் தம்பதியர் பிரான்சு நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள்.

போர் முடிந்தது! அந்த அம்மையார் திரும்பவும் பாண்டிச்சேரிக்கு வந்தார். புதுச்சேரியிலே தங்கி யோக சாதனைகளில் அந்த அம்மையார் ஈடுபட்டார்.

அந்த அம்மையார் பெயர் என்ன தெரியுமா? 'அன்னை மீரா' என்பதாகும். ஆனால், அவரை யாரும் இன்று வரை மீரா என்ற பெயரில் அழைப்பதில்லை. அரவிந்தர் ஆசிரமவாசிகளால் அன்புடன் அன்னை என்றுதான் அழைக்கப்பட்டார்.

அன்னை அந்த ஆசிரமத்திற்கு வருகை தந்த பின்பு, அந்த அரவிந்த ஆசிரமம் அற்புத வளர்ச்சி பெற்றது. அம்மையார் ஆசிரமம் வந்தபோது முப்பதுபேர்கள்தான் ஆசிரமவாசிகளாக இருந்தார்கள். இப்போது ஏறக்குறைய எண்ணூறு பேர்களாக பெருகினார்கள். அவர்கள் அனைவரும் ஆசிரமவாசிகளாய், அதன் முன்னேற்றத்துக் காக உழைப்பவர்களாய் சாதனை களைச் செய்து, அரவிந்த ஆசிரமத்தை உலகளாவிய பெருமை யோடு வளர்ந்துச் சாதனைகள் செய்துள்ளார்கள்.

அந்த அரவிந்தர் ஆசிரமத்தில் பெண்களும், குழந்தை களும், வயோதிகர்களும் ஆன்மீகவாதிகளாய் விளங்கி இன்றும் சாதனைகள் பல செய்து வருகின்றார்கள்.

அந்த ஆசிரமவாசிகளில், இந்த நாடு - அந்த நாடு என்ற நாடுகள் பேதமோ, இந்துக்கள், முஸ்லீம்கள், பார்சிகள், கிறிஸ்துவர்கள் என்ற மத பேதமோ எதுவும் கிடையாது.

ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், சீனர்கள், ஜப்பானி யர்கள், இந்தியர்கள் என்ற எல்லா நாட்டினரும் சமத்துவமாகக் கூடி, ஆசிரம வளர்ச்சிக்காகத் தொண்டாற்றி வருகிறார்கள்

எல்லா நாட்டவர்களும், எல்லா இனத்தவர்களும், எல்லா மதத்தவர்களும் ஒரே அன்னையின் மக்களாக, ஒரே தந்தையின் வாரிசுகளாக வாழ்ந்து வருகிறார்கள்! உலக சகோதரத்துவத்தை, மனித நேய ஒருமைப்பாட்டை அங்கு போனால் இன்று காணலாம்.

அரவிந்தர் எந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்று வங்க விடுதலை வீரர் சித்தரஞ்சன்தாசுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாரோ, அந்த இலட்சியத்தை, குறிக்கோளை, அவர் 1926-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாளன்று அடைந்தார்.

மேற்குறிப்பிட்ட அன்று முதல் ஆசிரம வாழ்க்கையில் சில மாற்றங்கள் உருவாயின. அன்றுவரை அரவிந்தர் தமது ஆசிரம மாணவர்களைச் சந்தித்து வந்தார். ஆனால், அவர் தனிமை யாகவே வாழ்ந்து வந்தார்.

அரவிந்தர் ஆசிரமத்தின் ஆன்மீக ஞானம் நாளாகவாக உலகெங்கும் ஒளிவீசிப் பரவியபடியே வளர்ந்து வந்து கொண்டிருக் கின்றது. அன்னைதான் ஆசிரமவாசிகளின் ஞானத் தலைவியாகக் காட்சி தந்தார்.

அன்னையே ஆசிரம வளர்ச்சிக்குரிய உயிரோட்டமாக இருந்து வந்தார். ஆசிரமவாசிகள் அவருக்கே பதில் கூற கடமைப்பட்டவர் களாக விளங்கி வந்தார்கள். சாதகர்கள் சாதனைகளுக்கு அல்லல்கள் சூழ்ந்தால் அவற்றை அகற்றிடும் அன்னையாகவே அவர் திகழ்ந்தார்.

ஆசிரமவாசிகளது வசதிகள்,தேவைகள், நலன்கள், வளன்கள் ஆகியவற்றை அன்னையே உடனிருந்து ஏற்றுத் தக்க உதவிகளைச் செய்து தனது இறுதிக்காலம் வரை வாழ்ந்து வந்தார்.

இந்த சமத்துவ, சகோதரத்துவ, ஆன்மீக ஞான ஆசிரமத் திலேயே தனிமையாக வாழ்ந்து வந்த அரவிந்தர் என்ற மகான், 1950-ஆம் ஆண்டில், டிசம்பர் மாதம் ஐந்தாம் நாளில் காலத்தோடு கலந்தார்.

அந்த மகான் வாழ்க்கை வரலாறு எப்படிப்பட்ட அற்புதங் களோடு அமைந்தது என்பதை இனிவரும் அத்தியாயங்களிலே படித்துத் தெரிந்து கொள்ளலாமா?



# 9

# வங்கம் தந்த அரவிந்தரின் இளமையும் - கல்வியும்!

அரவிந்தர் என்றால் பிரமன் என்று பொருள்; அதாவது உலக உற்பத்தியை உருவாக்குபவன் என்றும், அரன், அயன், அரி, என்ற முக்கடவுளுள் ஒருவர் என்றும் கூறுகிறது ஆன்மீகக் குறிப்பு.

இந்த தத்துவத்திற்கு ஏற்றவாறு அரவிந்தர், அரசியல் துறை யிலும், ஆன்மீகம், இலக்கியத் துறையிலும் சில உற்பத்திக்களைப் புதுமையாகச் செய்துள்ளார். அவற்றை இனி வரும் அத்தியாயங் களிலே படிப்போம்!

அரவிந்தர், வங்க நாட்டிலுள்ள கொல்கொத்தா நகரில், 1872-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் பிறந்தார்! அவருடைய தகப்பனார் பெயர் கிருஷ்ணதன்கோஷ். அரசு டாக்டராக அவர் பணி புரிந்தார். தாயார் சொர்ணலதா தேவி! சொர்ணம் என்றால் தங்கம் என்று பொருள்! எனவே, பொன்னிற அழகுமேனியுடன் அவர் பளபளப்பாக வாழ்ந்தவர். அதே நேரத்தில் குடும்பத்தில் தங்கம் போன்ற மதிப்புடை யவராகவும், பலர் போற்றும் பண்புடையவராகவும் இருந்தார்.

கிருஷ்ணதன்கோஷ் டாக்டரல்லரா? அதனால், ஏராள மான வருமானம் உடையவராகவும் அவர் விளங்கினார். பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்கும் கஞ்ச புத்தியுடைய வரல்லர்! யாருக்கும் எந்தவித தர்ம காரியங்களுக் கும் தாராளமாகச் செலவு செய்யும் பண்பு கொண்டவராக இருந்தார்.

டாக்டரிடம் பணம் ஏராளமாகக் குவிந்திருந்தது. அதனால், அவர் பெற்ற மக்களை நீதிபதிகளாக, மாஜிஸ்டிரேட்டுகளாக, கலெக்டர்களாக, அரசாங்கத்தில் பணியாற்றப் பட வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். காரணம், தன் செல்வத்துக்கேற்ற மரியாதையும் - மதிப்பும் சமுதாயத்தில் நிலவ வேண்டும் என்று விரும்பினார்.

அந்த எண்ணத்தால்தான் குழந்தை அரவிந்தகோஷை, தார்ஜிலிங் நகரிலுள்ள செயிண்ட் பால்ஸ் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். அந்தப் பள்ளியில் பணக்காரர்கள் வீட்டுக் குழந்தைகள்கூட படிக்க முடியாது. ஏனென்றால், ஆங்கிலேயர் கள் குழந்தைகள் மட்டுமே படிப்பதற்காக நடைபெறும் பள்ளி அது. இருந்தாலும், டாக்டர் கிருஷ்ணதன்கோஷின் செல்வாக்கைக் கண்டு அந்தப் பள்ளி நிர்வாகிகள் ஐந்து வயதான அரவிந்தகோஷுக்கும் படிக்க இடமளித்தார்கள்.

ஆங்கிலேயர் குழந்தைகளுடன் அரவிந்தரும் சேர்ந்து படித்தார்; உணவுண்டார்; விளையாடினார்; அதனால், ஆங்கி லேயர்களது பழக்க வழக்கப் பண்பாடுகள் அரவிந்தருக் குள்ளும் ஊடுருவின.

தார்ஜிலிங், இயற்கை கோலாகலங்கள் நிரம்பிய இடம். அதனால், அரவிந்தர் அடிக்கடி தார்ஜிலிங்கின் இயற்கைக் காட்சிகளை ஆச்சர்யம் ததும்பக் கண்டு களிப்பார்.

அரவிந்தர் ஐந்து வயது சிறுவனாக இருந்தபோது தார்ஜிலிங் நகரத்துப் பள்ளியில் படிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், அவருக்குச் சிறுவயதிலேயே தனது பெற்றோர் களை விட்டுப் பிரிந்திருந்து கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை தோன்றியது.

அரவிந்தகோஷ் இரண்டாண்டுகள் தார்ஜிலிங் நகரில் தங்கிப் படித்தார். தந்தை கிருஷ்ணதன்கோஷ் தனது மனைவியுடனும் மகன் அரவிந்தனுடனும், மனைவி சொர்ணலதாவுடனும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுலா சென்றார். அந்தப் பயணத்தின்போதுதான் அரவிந்தகோஷின் கடைசி தம்பியான பாரீந்திர கோஷ் பிறந்தார்.

ஐரோப்பிய பயணம் மேற்கொண்ட டாக்டர் கிருஷ்ணதன் கோஷின், அருமை நண்பரொருவர் மாஞ்செஸ்டர் என்ற நகரிலே இருந்தார். அவர் பெயர் எக்ரோய்ட் என்பதாகும். கிறிஸ்துவ மதத் தொண்டிலே ஈடுபட்ட ஒரு பாதிரியார். அவரிடத்திலே அரவிந்தருடைய கல்வி கற்கும் பொறுப்பை ஒப்படைத்தார் - டாக்டர் கிருஷ்ணதன்!.

அரவிந்த கோஷும், தனது தந்தையின் அருமை நண்பரும், மத சார்பான பாதிரியாருமான எக்ரோய்ட்டுடனும் அவரது குடும்பத்தாருடனும் ஒன்று கலந்த அன்பராகி விட்டார். அதனால், அரவிந்தரை அழைத்தவர்களில் பலர் அரவிந்தரை அன்புடன் அழைத்தபோது, எக்ரோய்ட் அரவிந்தகோஷ் என்றே அழைத்தார்கள். அரவிந்தரும் அதைப் பெருமையாக ஏற்றுக் கொண்ட பின்பு, தனது பெயரை அவரும் ஏ.ஏ.கோஷ் என்றே எழுதுவார்.

அரவிந்தர் மாஞ்செஸ்டர் நகரில் வளர்ந்தார். டாக்டர் கிருஷ்ணதன் தனது பிள்ளைகள் மூன்று பேரையும் ஒரே இடத்தில் தங்கிப் படிக்க வைக்க விரும்பவில்லை. ஒவ்வொரு மகனையும் ஒவ்வோரிடத்தில் படிக்க வைத்தார்!

அரவிந்தருடைய தந்தையார் டாக்டர் கிருஷ்ணதன் கோஷ், ஆங்கிலேயர்களைப் போலவே, உணவு, உடைகள் ஆகியவற்றைப் பின்பற்றுவார். அவருக்கு மேனாட்டு மோகம் அதிகம் உண்டு. ஆனால், அரவிந்தருக்கு ஆங்கிலேயர்கள் இடையே அதிகம் பழக்க வழக்கம் இருந்ததென்னமோ உண்மைதான். ஆனால், என்றும் அவர் மேனாட்டு நாகரிக மோகத்துக்கு அடிமையானதில்லை.

சிறுவயது முதலே அரவிந்தகோஷுக்கு ஆடம்பரம், படாடோபம், தற்பெருமை, ஆகியவற்றில் நாட்டமேதும் கிடையாது. பள்ளிக் கல்வி உண்டு, அவருண்டு என்ற நோக்கத்திலேயே. அவர் நடந்து வந்தார்.

எக்ரோய்ட் என்ற பாதிரியார் வீட்டில் அரவிந்தகோஷ் தங்கி நான்கு ஆண்டுகள் கல்வி கற்றார். 1885-ஆம் ஆண்டில் இலண்டன் நகரிலே உள்ள செயிண்ட் பால் பள்ளியில், தனது பதின்மூன்றாம் வயதில் அரவிந்தர் கல்வி கற்கச் சேர்ந்தார்.

இந்த வயதுக்குள்ளேயே, பாதிரியார் வீட்டில் தங்கிப் படித்திருந்த நேரத்தில், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் அரவிந்தர் புலமையாளரானார். ஜெர்மன், இத்தாலி மொழிகளையும் புரிந்து கொள்ளுமளவுக்குக் கற்றார்.

எந்த மொழிகளது இலக்கியமாக இருந்தாலும், அவற்றை அவர் ஊக்கமுடன் படித்து உணர்வார். ஏனென்றால், மற்ற மொழிகளது இலக்கியத்தின் புதைப் பொருட்களைத் தோண்டி எடுத்து அவற்றின் அறிவுரைகளை உணர்ந்திட அவர் பெரிதும் விரும்பினதேயாகும்.

இவ்வாறெல்லாம் அவர் பிற இலக்கியங்களை விரும்பிக் கற்றதால்தான், அவருடைய இலக்கிய ஆற்றல் முதிர்வடைந் திருந்தது. இல்லையானால், தனது பதிநான்காம் வயதிலே அவர் எழுதிய 'குயில்' என்ற கவிதையை அறிஞருலகம் வியந்து போற்றிப் பாராட்டியிருக்குமா?

இலண்டன் மாநகர் பள்ளியில் இவ்வாறாகத் தொடர்ந்து கல்வி கற்று வந்த அரவிந்தர், தனது பதினெட்டாம் வயதில், உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வை எழுதி வெற்றி பெற்றார். மதிப்பெண்கள் அதிகம் வாங்கியதால் அதற்குரிய உபகாரச் சம்பளமும் பெற்றார்.

அதற்குப் பிறகு கிங்ஸ் கல்லூரியில் சேர்ந்து கவனத் தோடும் - அக்கறையோடும் தொடர்ந்து அவர் படித்து வந்ததால், இரண்டாண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்வில் அரவிந்தர் சிறப்புத் தகுதியுடன் தேறினார்.

சிவில் சர்விஸ் தேர்வை எழுதிட அவர் படித்துக் கொண்டிருந்தார். அந்தத் தேர்வை எழுதிய பின்பு, அதே ஆண்டில் அவர் ஐ.சி.எஸ். தேர்வும் எழுதினார். இந்தத் தேர்வில் அவர் நான்காவது மாணவராக வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்வில் கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிப் பரீட்சைகளும் இடம் பெற்றிருந்தன. அவற்றையும் எழுதினார் அரவிந்தர். முதல் மாணவராக வெற்றி பெற்றார்.

கிரேக்கம், இலத்தீன் மொழிகள் உலகப் பழைய மொழி களைச் சேர்ந்தவை. அவை மிகவும் கடினமானவை. அத்தகையக் கடினத்தையும் அவர் வெற்றி கொண்டார் என்பதற்காக, அறிஞர் களும் - பல்கலைப் பேராசிரியர்களும் அவரைப் பாராட்டினார்கள்.

தேர்வுகளில் வெற்றி பெற்று வந்த அரவிந்தர், சிவிலியலனாக ஆக முடியவில்லை. தேர்வு வெற்றிகள் வெளி வந்த இரண்டாண்டுகளுக்குப் பிறகு, அந்தத் தேர்வாளர்கள் குதிரை சவாரியிலும் கலந்து கொண்டு மதிப்பெண் பெற வேண்டும். ஏனென்றால், அதுவும் ஒரு தேர்வாகும்!

குதிரையேற்ற சவாரியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றால்தான், ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றி பெற்றதாகப் பொருள். அதனால், அவர் சிவிலியனாக ஆக முடியவில்லை.

இந்தச் செய்தியை அரவிந்தர் தனது தந்தைக்கு அறிவித்தார். ஐ.சி.எஸ். பட்டம் பெற்று மகன் மாவட்டக் கலெக்டராக, மாஜிஸ்திரேட்டாக பணியாற்ற வருவார் என்ற பேரார்வத்துடன் எதிர்பார்த்திருந்த டாக்டர் கிருஷ்ணதன் கோஷுக்கு, அரவிந்தரின் குதிரையேற்றம் செய்தி பெரும் அதிர்ச்சி தரும் ஏமாற்றமாகி விட்டதால், அவரால் பொறுக்க முடியவில்லை.

உடனே தந்தை மகனுக்குத் தந்திக் கொடுத்து ''நீ இலண்டனை விட்டுப் புறப்பட்டு இந்தியா வந்து விடு'' என்றார்! தந்தியைப் பெற்ற அரவிந்தரும், தான் இந்தியா வரும் நாளை தந்தைக்கு அறிவித்தார்.

அரவிந்தர் வரும் அன்றைய தேதி கப்பலில் அவர் ஏறவில்லை. காரணம், அந்தக் கப்பல் வழியிலேயே கடலில் மூழ்கி விட்டது.

மகன் வந்த கப்பல் மூழ்கி விட்டதை அறிந்த டாக்டர் கிருஷ்ணதன் கோஷ் மிகவும் பதறினார்! கப்பல் கம்பெனிக்குத் தந்தி கொடுத்து கப்பல் மூழ்கியது உண்மைதானா என்று அவர் கேட்டார்.

கப்பல் மூழ்கி விட்டது உண்மைதான் என்று அந்தக் கம்பெனி கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டு, மகன் கப்பலோடு நீரில் மூழ்கி விட்டார் என்று நம்பி அதிர்ச்சியடைந்து கீழே விழுந்து புரண்டுக் கதறினார்.

நான்கு நாட்கள் மயக்கநிலையிலே இருந்தார். பிறகு நினைவு திரும்பாமலேயே தந்தை - மகன் என்ற பாசத்தோடே அவர் இறந்து விட்டார்.

ஆனால், கடலில் மூழ்கிய கப்பலில் அரவிந்தர் இல்லை என்ற தகவல் பிறகுதான் எல்லாருக்கும் தெரிந்தது. இந்த உண்மை தெரி வதற்குள் டாக்டர் கிருஷ்ணதன்கோஷ் இறந்து விட்டாரே, பாவம்!

அரவிந்த கோஷின் தந்தை மேனாட்டு நாகரிக மோகியாகவே வாழ்ந்தார்! ஆனால், மக்களுக்கு உதவும் வள்ளலாகவும் இருந்தார், தனது மக்கள் மாவட்டக் கலெக்டராக, மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றும் பெருமையும் புகழும் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார்! அவர் ஆசை தோல்வி கண்டுவிட்ட ஏக்கத்தோடு, பரிதாபமாக மகன் பாசத்தோடேயே மாண்டார்.

எங்கெங்கு இடம் மாற்றம் பெற்ற டாக்டராக அவர் செல்கிறாரோ, அங்கங்கே உள்ள மக்களிடம் எல்லாம் ஆபத்துக்கு உதவும் ஆபத் சாகாயர் என்ற பெயரையே அவர் பெற்று வந்தார். ஒரு தர்மவானாகவே புகழ் பெற்றார்.

டாக்டர் கிருஷ்ணதன் கோஷ் கொடைக்கு வரம்பு கிடையாது. கையிலிருக்கும் பணம் காலியானாலும் பரவாயில்லை என்ற எண்ணத்திலே, தன்னிடம் இல்லையென்று வந்த வறுமையாளர்களுக்குத் தானம் செய்யும் தாராள சுபாவம் உடையவர்.

இந்த வரம்பிலா தான தர்மத்தால், அயல்நாட்டில் கல்வி கற்று வந்த அவரது மகன்கள், சிலநேரங்களில் உணவுக்கும்கூட கஷ்டப்பட்டதுண்டு. ஏன் தெரியுமா?

வந்தவர்கட்கும், கேட்டவர்கட்கும் கையிலுள்ள பணத்தைக் கொடுத்து விட்டு, அயல்நாட்டில் படிக்கும் தனது பிள்ளைகளுக்குக் குறிப்பிட்டக் காலத்தில் பணம் அனுப்ப முடியாமல் திண்டாடுவார்; திணறுவார்.

இதுபோன்ற காலங்களில், அயல்நாட்டில் படிக்கும் அவருடைய மக்கள், சாப்பாட்டுக்கும் அல்லல்பட்டுப் பட்டினி கிடப்பார்கள். இத்தகைய செயற்கைப் பட்டினிகளில் அரவிந்தர், பல நேரங்களில் தொல்லைகளை அனுபவித்தார். ஆனால், கல்வியில் மட்டும் அவர் கவனக்குறைவாக இல்லாமல், பசி பட்டினியும் பாராமல் படித்துக் கொண்டே வந்தார்.

# 10

# பரோடா மன்னருடன் தாய்நாடு திரும்பினார்!

பரோடா மன்னர் கெய்க்வார்! அவரும் இங்கிலாந்திலே இலண்டன் மாநகரிலுள்ள அவரது மாளிகையில் இருந்தார்!

அரவிந்த கோஷின் அறிவுக் கூர்மையினையும், பன்மொழிப் புலமையினையும் கேள்விப்பட்ட மன்னர், அவரைச் சந்திக்க அரவிந்தர் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார். மன்னர் ஒருவர் சாதாரண ஒரு மாணவனைத் தேடி வருவதா? என்ற எண்ணத்தின் வேரோடாத நெஞ்சம் படைத்த கல்விக் கோமான் அந்த மன்னர்! அதனால், அறிவாலயத்தைத் தேடி வரும் ஓர் அன்பரைப்போல, அரசர் கெய்க்வார் அறிவைத் தேடி வந்தார்! அறிவை நாடுபவருக்கு அரசனும்-ஆண்டியும் ஒன்றுதானே!

அரவிந்தரும் - மன்னரும் சந்தித்து உரையாடினார்கள். அரவிந்தருடைய அறிவாழப் புலமையைக் கண்டு மன்னர் அளவிலா மகிழ்வடைந்தார். இலண்டன் மாநகர் மாளிகை யிலிருந்தபடியே அரவிந்தகோஷை தமது சமஸ்தானத்திலுள்ள அரசுப் பணியிலே நியமித்தார். அவரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு பரோடா மன்னர் இந்தியாவுக்குத் திரும்பினார்.

அரவிந்தகோஷ் இந்தியா திரும்பும் நாளையும், கப்பல் கம்பெனி பெயரையும் அவர் இந்தியா புறப்படுவதற்கு முன்னரே, தனது தந்தை டாக்டர் கிருஷ்ணதன்கோஷுக்கு ஏற்கெனவே, முன்கூட்டியே தெரிவித்திருந்தார் அல்லவா?

அந்தக் கப்பலிலே அரவிந்தரால் வரமுடியாததற்கு, அவர் மன்னருடன் சேர்ந்து இந்தியா வர இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்தக் காரணத்தை அரவிந்தகோஷ் உடனே தனது தந்தைக்குத் தந்தி மூலம் தெரிவித்திருக்கலாம்.

அவ்வாறு அரவிந்தர் தெரிவிக்கத் தவறியதால்தான், மகன் குறிப்பிட்டிருந்த கப்பல் நடுவழியில் தண்ணீரில் மூழ்கிப் போனதால், மகனும் கப்பலோடு மூழ்கி மாண்டு போனானே என்ற மகன் பாசத்தால், தர்ம குணம் கொண்ட ஒரு பரோபகாரியான டாக்டர் கிருஷ்ணதன்கோஷும் மயக்கமாகத் தரையில் வீழ்ந்து, நினைவு திரும்பாமலேயே மாண்டு போனார் - பாவம்! இந்த சாவுக்குக் காரணம் யார்? விதியா? மதி வென்றிருக்கும் வாய்ப்பும் இருந்ததே! அந்தத் தவறு யாருடையது? எப்படியோ ஓர் ஆன்மா பிரிந்தது!

மன்னருடன் அரவிந்தர் இந்தியா திரும்பி வந்ததும், முதலில் தனது தமையன்மார்களையும் பெற்றோரையும் காண விரும்பினார்.

அரவிந்தரின் மூத்த அண்ணனான விநல்பூஷன்கோஷ், கூச்பிகார் சமஸ்தானத்தின் மன்னரிடம் பணி புரிந்து வந்தார். இளைய தமையனாரான மனோமோகன் கோஷ் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார்.

மனோமோகன்கோஷ் இங்லீஷ் மொழியில் பெரும் புலமையுடையவர். ஆங்கிலக் கவிதைகளை எழுதுவதில் வல்லுநராக விளங்கினார். அவரின் இங்லீஷ் கவிதைகளை ஆங்கிலப் புலமையுடைய கவிஞர்கள் அனைவரும் பாராட்டிப் பேசுமளவிற்கு ஆற்றல் வாய்ந்தவராக சிறந்திருந்தார்.

இந்தியா வந்த அரவிந்தர், தனது மூத்த தமையனாரான விநல்பூஷன் கோஷைச் சென்று சந்தித்தபோது, தகப்பனார் இறந்த சம்பவத்தை அவர் தனது தம்பியிடம் கதறி அழுதபடி தெரிவித்தார். அதைக் கேட்ட அரவிந்தர் இடியொலி கேட்ட நாகம்போல் மயங்கி வீழ்ந்தார்.

தமையனார் விநல்பூஷன், தம்பி அரவிந்தரைத் தேற்றி, தவறு உன்னுடையதுதானே 'அரு' என்று ஆறுதல் கூறினார். ஆம் அண்ணா, 'நான் குறிப்பிட்டக் கப்பலில் புறப்பட வில்லை, பயணத்தை ஒத்தி வைத்து விட்டேன்' என்று தந்திக் கொடுக்காமல் போனேனே என்று அழுதபடியே கூறித் தந்தை யின் மரணத் துயரத்திலே இருந்து மீள முடியாமல் தவித்தார்.

'அம்மா, எங்கே?' அண்ணா என்று கேட்டார் - அரவிந்தர் தனது மூத்த தமையனை! அதற்கு அவர் வருத்தம் தொனித்தக் குரலோடு, 'அரு, தந்தை இறந்தது முதல் அம்மாவுக்கு சித்தம் பேதலித்து விட்டது. சில நேரங்களில் நம்மை உணரும் சக்தி இருக்கிறது. பல நேரங்களில் நம்மையே யார் என்று கேட்டுகு மளவிற்கு, புத்தி தடுமாற்றம் இருக்கிறது.

தக்க மருத்துவரிடம் அம்மாவுக்கு சிகிச்சை செய்து வருகிறார் - நமது தாத்தா ரிஷி ராஜ நாராயண வசு. அவர்கள் இப்போது ரஹணி என்ற கிராமத்திலுள்ள நமது தாய் வழிப் பாட்டனார் வீட்டில் இருக்கிறார் என்றார்.

தந்தை மரணம் ஒருபுறம் அரவிந்தகோஷை வாட்டி வதைத்து தீராக் கவலையுறுத்தும்போது, தாயின் சித்தக் கோளாறு நிலை, அவரை மேலும் மனத்தை வேதனைப் படுத்தியது. கண் கலங்கினார் அரவிந்த்! தமையன் விநல்பூஷன் தம்பிக்குரிய மனோபலத்தை யூட்டி, தாயாரைப் பார்க்க அனுப்பி வைத்தார்.

அரவிந்த கோஷ் தனது தாயைப் பெற்ற தந்தை வீட்டுக்கு ஓடோடி வந்தார்! தாயாரைச் சந்தித்தார். அன்னையைப் பார்க்க வந்த மகனை, சொர்ணலதா தேவியால் பார்த்ததும் புரிந்து கொள்ள முடியவில்லை.

அரவிந்தர் சிறு குழந்தையாக இருந்தபோது, அவரது தாய், தந்தை, தமையனார்கள் உட்பட அனைவரும் அவரை, 'அரு' என்றே அன்பாக அழைப்பார்கள். அந்த பழக்கத்தால், 'அம்மா, 'அரு' வந்திருக்கிறேன் அம்மா' என்று அரவிந்தர் தன் தாயாரைப் பார்த்து கண்ணீர் விட்டவாறே கூறினார்.

உடனே சொர்ணலதா தேவி, 'யார்? என் அருவா!' அவன் சின்னப் பையன் ஆயிற்றே. அவனா இவ்வளவு பெரியவன் ஆகிவிட்டான்? ஊஹூம்; இவனல்ல, என் அரு', என்றாள்!.

''எப்போதுமே அரு, சின்னப் பையனாகவாக இருப்பான்? வயதானால் வளர மாட்டானா? இவன் அருதான் என்று அந்த அம்மையாரின் உறவினர்கள் அனைவரும் அவளிடம் கூறினார்கள்.

அப்படியா? என் அருவா இவன்? அப்படியானல் அவன் குழந்தையாக இருந்தபோது விரலைக் கண்ணாடித் துண்டால் அறுத்துக் கொண்டானே! அந்த வடு சிலுவைப் போல் தழும்பாக இருக்குமே! இப்போது அந்தக் காயத்தின் வடு இருக்கிறதா? ஏய், அரு, நான் பார்க்கலாமா அதை? எங்கே காட்டு விரலை? என்று விரலைத் தடவிப் பார்த்தாள் சொர்ணலதா தேவி.

அவள் குறிப்பிட்ட அந்த வடு, அரவிந்தகோஷின் கை விரலிலே இருந்ததைப் பார்த்த தாய், ஆமாம் - இவன் என் மகன் அருவேதான், அருவேதான் என்று அணைத்து அழுதாள் அம்மா! அரு, எவ்வளவு பெரியவனாக வளர்ந்து விட்டாயடா! நீ பெரிய புலவனாகி விட்டாயாமே! அரு, இலண்டனில் இருந்து எப்போதடா வந்தாய்? என்றெல்லாம் கேட்டபடியே மகனை ஆரத் தழுவிக் கொண்டாள்.

இந்த மன உணர்ச்சி வெள்ளத்தில் அரவிந்தகோஷ் சிக்கி, தனது தாய்க்கு வந்த நிலையும் தன்னால்தானே வந்தது என்று அவர் கண்ணீர் சிந்தினார்.

பெண்களைக் கண்டாலே கூச்சப்படும் நாண முடைய அரவிந்தகோஷ், தனது தாயின் அன்பு ஆவேசம் அவரை மேலும் நாணச் சிக்கிலிலே நடுங்க வைத்தது.

தாத்தா ரிஷிராஜ நாராயணார் அரவிந்தகோஷ் வந்திருப் பதைக் கேள்விப்பட்டு ஓடோடி வந்தார். தனது பெண்வழிப் பேரனைப் பார்த்து மகிழ்ந்து அவர் பரவசப்பட்டார். பேரனைத் தனது மடியில் அமர வைத்துக் கொண்டு பார்த்துப் பார்த்து ரசித்தார் தாத்தா!

அரவிந்தக் கோஷ் தனது அம்மாவுடன் சில நாட்கள் தங்கி யிருந்து விட்டு, பின்பு பரோடா மன்னரைப் பார்க்கப் புறப்பட்டார்.

# 11

# மனிதப் பிறவியோ! தெய்வப் பிறவியோ!

பரோடா சமஸ்தானத்து அரண்மனையில் அரவிந்த கோஷ் மன்னரைக் கண்டார். இலண்டனிலிருந்தபோதே மன்னரிட்ட உத்தரவிற்கேற்ப, அரவிந்தருக்கு சமஸ்தானத்து அரசு பணி வழங்கப்பட்டது. அந்த வேலையை மிகத் திறமையுடன் செய்து வந்ததால், மன்னர் அவரைத் தனது நேர்முக உதவியாளராக அமர்த்திக் கொண்டார்.

சிறிது காலம் கடந்த பின்பு, அரவிந்தரது கல்விக் கேற்றவாறு, பரோடா கல்லூரியின் பேராசிரியராக மன்னர் நியமித்தார். அவரது பன்முக ஆற்றலைக் கண்ட கல்லூரி நிர்வாகிகள், அவரை உதவி முதல்வராக நியமித்தார்கள்.

பரோடா மன்னர் முதல் - கல்லூரிப் பேராசிரியர்கள், நிர்வாகப் பிரிவு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாணவர்கள் ஆகிய அனைவரும் - அரவிந்தரின் அறிவுக்கூர்மை, மதிநுட்பம், ஒழுக்கம் ஓம்பல், தனித்தியங்கும் தன்மை, கல்வி ஆழத்தின் வளமை, பழகும் தன்மைகள், தினந்தோறும் நூல்களைப் படித்தல், ஆய்தல், பாடபோதனை விளக்கங்கள் ஆகிய

திறமைகளால் கவரப்பட்டார்கள். அரவிந்தகோஷை ஒவ்வொரு வரும் அவரது அறைக்கு வருகை தருவர். அவரைப் பாராமல் இருப்பவர் ஏதோ ஓரிருவராகத்தான் இருப்பார்கள். அந்த அளவுக்கு அரவிந்தரும் அவர்களால் ஈர்க்கப்பட்டார்.

பரோடா மன்னர் கெய்க்வார், வாரம் இருமுறை, மும் முறையாவது அவரை தன் இருப்பிடத்துக்கு வரவழைத்துப் பேசுவார். யாரிடமும் தாராளமாகப் பழகாத நாணுடையவர் அவர் என்பதை மன்னர் அறிவார். அதனால், அரசர் அழைத்ததும் அரவிந்தர் வரவில்லையென்றால், அதற்காக அவர்மீது மன்னர் கோபப்பட மாட்டார். ஏனென்றால், அவர் அரசர் மட்டுமல்லவே, கற்றார் அல்லவா? அதனால் அவர் காமுறுவார்.

அரவிந்தர் பாடம் நடத்தும்போது மாணவர்கள் அவர் குறிப்பிலே, முகபாவனைகளிலே, சொல்வள விளக்கங்களிலே ஒன்றி விடுவார்கள். ஒரு நாளைக்குப் பாடம் நடத்திடக் அவர் கல்லூரிக்கு வரத் தவறினால், வேறு ஆசிரியர்களிடம் அந்தப் பாடத்தைக் கேட்க மாணவர் விரும்ப மாட்டார்கள்! ஏன் வகுப்புக்கே மட்டம் அடித்து விடுவார்கள். அரவிந்தர் மீது அவ்வளவு குரு பக்தி; பாசம்; நேசம்; மரியாதை; மாண்பு.

எனவே, பரோடா கல்லூரி வாழ்க்கை அரவிந்த கோஷுக்கு ஓர் அறிவு மறுமலர்ச்சி வாழ்வாக அமைந்து விட்டது.

மாணவர்கள் மேலை நாட்டு நாகரிக உடைகளோடு கல்லூரிக்கு வருவார்கள். ஆனால், அரவிந்தர் இலண்டன் நாகரிக வாழ்க்கை யோடு வாழ்ந்து வந்தவர். அவர், இந்திய நாகரிகத்தையும், பண் பாட்டையும் மக்கள் வாழ்க்கை முறை களையும் அறியாதவராகவே இருந்தார். குறிப்பாகக் கூறு வதானால், அவரது தாய் மொழியான வங்காள மொழியையே மறந்து விட்டார்! மறந்து விட்டார் என்பது கூடத் தவறு. வங்கமொழியே அவருக்குச் சரிவரப் பேச வராது.

மேல் நாடுகளின் இலக்கியங்கள், கவிதைகள், தத்துவங்கள், வரலாறுகளில் அவர் புலமைப் பெற்றதைப் போலவே, இந்தியத் தத்துவங்கள், வரலாறுகள், மொழி வளங்கள்,

கவிதைகள், இலக்கியங்கள் அனைத்திலும் ஆழ்ந்த புலமை பெற வேண்டு மென்று விரும்பினார்! அதற்கான ஆசிரியர் களைத் தேடிப் பிடித்துப் பரோடாவிலேயே பயிற்சி பெற்றார்.

முதலில் தனது தாய் மொழியான வங்க மொழியை வளமாகக் கற்க விரும்பிய அரவிந்தர், வங்காள எழுத்தாளரான தீனேந்திர குமார் ராய் என்பவரிடம் வங்க மொழியைக் கற்றார்.

தீனேந்திர குமார் ராய், அரவிந்தரைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலில் அவர் எழுதியுள்ள அன்பு உரைகளைக் கீழே தருகின்றோம். இதோ அந்த ஆய்வுரை :

''அரவிந்த கோஷஉடன், நான் இருந்த வரையில் அவர் பிரம்மசர்ய ஒழுக்கத்தையே கடைப்பிடித்தார். மற்றவர்கள் துன்பப்படுவதைக் கண்டு அவரும் துன்புறுவார். ஒரு துறவியைப் போலவே அவர் வாழ்ந்தார்? அவரும் ஒரு நோன்பைக் கடைப்பிடித்தார்! என்ன நோன்பு தெரியுமா அது?

'அறிவை திரட்டுவதுதான் அவர் நோன்பு. இந்த நோன்பை நோற்க அவர் அலுவலும் அல்லலும் மிக்க உலகில் உள்ளவாறே, கடுந்தவம் இயற்றிக் கொண்டிருந்தவர் அரவிந்த கோஷ்!

இத்தகைய ஓர் அறிவும் அன்பும் செறிந்த மனிதரை, தீனேந்திர குமார், பரோடாவில் தான் முதன் முதலாகப் பார்த்தார். அரவிந்த கோஷ் அழைப்பை ஏற்று அவரைப் பார்க்க வந்தபோது அந்த ஆசிரியர் என்ன எண்ணினார் தெரியுமா?

'அரவிந்தர் இலண்டனிலேயே தனது கல்விக் காலத்தைக் கழித்தவரல்லரா? அதனால் அவர், சூட்டும் பூட்டும் கோட்டும் ஹாட்டுமாய்த்தான் காட்சி தருவார் என்று எண்ணினேன். இலண்டனிலே இருந்து இந்தியா வருபவர்களைப் போலப் பகட்டாக, படாடோபமாக, தடபுடலாகவே இருப்பார் என்று எதிர்பார்த்து வந்தேன். ஒரே ஏமாற்றம் அடைந்தேன். ஆனால் அரவிந்த கோஷைப் பார்த்து வியப்படைந்தேன்'.

''முதன் முதலில் அரவிந்தகோஷைச் சந்தித்தபோது, அவர் பட்டிக்காட்டுச் செருப்பும்; ஆமதாபாத் துணியாலையில் தயாரான

முரட்டு வேட்டியும், மார்பு தெரியும் பணியனும், நடுவகிடு எடுத்து, கழுத்து வரை தொங்கும் தலை மயிரும், முகத்தில் பருவத்தின் மெருகும், கண்களில் மென்மையான கனவுகள் நிறைந்த பாவமும், கருப்பு நிறமும், ஓமப்பொடி போன்ற ஒல்லியான உடலும் உள்ள ஓர் இளைஞராகவே எனக்கு அவர் தென்பட்டார்''.

'ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் ஆகிய மொழி களில் புலமைப் பெற்ற வல்லாளராகவே அரவிந்த கோஷ் காணப்பட்டார்.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், ஒருவனிடம் பரங்கி மலைக் குன்றைக்காட்டி, இதுதான் இமயமலை என்றால் நம்புவானா? எவ்வளவு வியப்பை அவன் அப்போது பெறுவானோ? அதைவிட வியப்பைத்தான் நான் அவரை முதலில் பார்த்தபோது பெற்றேன்' என்று எழுதுகிறார்.

(குறிப்பு : தீனேந்திரகுமார் தனது நூலில் குறிப்பிடும் போது, தேவகர் குன்றைக் காட்டி இது இமயமலை என்றால் எவ்வளவு வியப்பாக இருக்குமோ' என்று அவர் ஊரிலே உள்ள ஒரு சிறு குன்றை எடுத்துக் காட்டுகிறார். அந்தக் குன்றை அதன் பருமனை, உயரத்தை, தோற்றத்தை மற்றவர்களால் அறிந்து கொண்டிருக்க முடியாதல்லவா? அதனால்தான் நான் தீனேந்திரர் உவமையை நமது வாசகர்களுக்காக, பரங்கிமலை குன்றை எடுத்துக் காட்டினேன்.)

அரவிந்தர் மிகவும் எளிய வாழ்க்கையை நடத்தினார். எந்த விதப் பகட்டும் அவருக்குப் பிடிக்காது. வேலையில்லை என்றதும் புத்தகத்தை ஏந்திக் கொள்வார். அதனால், அவருக்கு அறிவுவேட்கை அதிகமானது. கற்கும் கல்வியே அவரை ஞானியாக மாற்றியது.

அரவிந்தர் பெற்ற சம்பளம் ஆயிரம் ரூபாய்தான். அதிகம் எதுவும் செலவு செய்ய மாட்டார். இந்தச் சிக்கனத்திலும் அவருக்கு மாதக் கடைசியில் கை செலவுக்குக்கூட காசு இருக்காது; அப்படியானால், அவரது பணம் எங்கே போகிறது?

சம்பளத்தில் பெரும் பகுதிப்பணம் இலண்டனிலே இருந்து புத்தகம் வரவழைத்துப் படிக்கவே செலவாகும். உறவினர் களுக்கும், நண்பர்களுக்கும் அனுப்ப வேண்டிய பணத்தை மறக்காமல் அனுப்பி விடுவார். என்ன காரணம் தெரியுமா?

இலண்டனிலே அரவிந்தர் படிக்கும்போது, அவரது தந்தையார் குறிப்பிட்டக் காலத்தோடு பணத்தை அனுப்ப மாட்டார். தர்மங்களைச் செய்து விட்டுப் பிறகு பணம் கிடைக்கும்போது அனுப்புபவரல்லரா? அப்போதெல்லாம் பணத்துக்காக அவர் பட்ட கஷ்டங்களை எண்ணிப் பார்த்து, பிறரும் அத்தகைய துன்பங்களைப் படக்கூடாது என்பதற் காகவே, மாதம் தவறாமல் தான் அனுப்ப வேண்டிய பணங்களை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அரவிந்தர் அனுப்பி விடுவார்.

அரவிந்தரை நம்பியவர்களை அவர் ஒருபோதும் கைவிடும் வழக்கமில்லை. எப்பாடுபட்டாவது அவரவர் கஷ்டங் களுக்குப் பயன்படும் வகையில் பணத்தை அனுப்பிடத் தவறார்.

அரவிந்தரின் வங்காள மொழி ஆசிரியர் மேலும் என்ன கூறுகிறார் - அவர் புத்தகத்தில்? படிப்போமே அதையும்?

'பரோடா அரசவைக்குச் செல்லும்போதுகூட, அரவிந்தர் எளிய ஆடையை மாற்றிக் கொள்ள மாட்டார். விலையுயர்ந்த செருப்பு, டை, காலர், பிளானெல், லினன், பல வகைக் கோட்டுகள், தலையணிகள் இவற்றைப் பற்றி அவர் எப்போதும் அக்கறை கொண்டதே இல்லை.

'ஒரு நாள்கூட அவர் தொப்பி அணிந்ததை நான் பார்த்த தில்லை. வங்காளத்தில் அல்லது பரோடா பகுதிகளில் சாதாரண மக்கள் சகஜமாக அணியும் தொப்பியையே அரவிந்தரும் அணிந்து செல்வார்'.

அரவிந்தர் படுக்கைகூட, மிகச் சாதாரணமானதுதான். முப்பது ரூபாய் சம்பளம் பெறுபவன்கூட, அவர் படுத்த இரும்புக் கட்டிலில் படுக்க மாட்டான், மென்மையான பெரிய மெத்தைகளில் படுத்துறங்கும் பழக்கம் அவரிடம் கிடையாது.

'பரோடாவில் வெப்பமும் அதிகம். குளிரும் அதிகம் தான். ஆனால். மாசி மாதக் குளிரில்கூட, அரவிந்தர் மெத்தை மேல் படுத்ததை யாரும் பார்த்ததில்லை. சாதாரணக் கம்பளி தான் அவரது படுக்கை'.

'ஐந்தாறு ரூபாய் மதிப்புள்ள ஒரு பைக் கடிகாரத்தை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பார். படிக்கும் மேசை மீது ஒரு சிறு டைம் பீஸ் கடிகாரம் இருக்கும்'.

இரவு நேரமானால் ஓர் எண்ணெய் விளக்கு முன்பு அமர்ந்து படிக்க ஆரம்பித்து விடுவார். கொசுக்கடி அவரது கல்விக் கவனத்தைச் சிதறடிக்காது. படித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருப்பார்.

'மணிக் கணக்கில் இவ்வாறாக அவர் இருக்கும்போது, யோகத்தில் ஆழ்ந்து விட்ட முனிவரோ, யோகியோ என்று பார்ப் பவர்கள் நினைத்துக் கொள்வார்கள். வெளியே என்ன நடக்கிறது என்பதை அறியாமலேயே அவர் அமைதியாக யோகப் படிப்பில் ஆழ்ந்து விடுவார்.

அரவிந்தர் பரோடாவில் சிறுகூரை வேய்ந்த வீட்டில் குடியிருந்தார். வீடு அறை முழுவதும் புத்தகங்கள் குவிந்த படியே இருக்கும். மாதந்தோறும் இலண்டன் நகரிலே இருந்து புத்தகப் பார்சல் பெட்டிகள் தவறாமல் வந்து கொண்டே இருக்கும். அதுபோலவே அவரது சம்பளப் பணமும் இலண்டன் வியாபாரி களுக்குப் போய்க் கொண்டே இருக்கும்.

அவரது வீடு சுத்தமாகவே இருக்காது. புத்தகக் குவியலோடு புழுதியும் தூசும் நிறைந்து காணப்படும். மழைக் காலம் வந்தால் தரை ஒரே சொதசொதப்பாக ஓதம் படிந்து கொண்டே இருக்கும்.

இந்த வீட்டுக்கு வாடகையோ அதிகம். அதனால் அவர் எதையும் பொருட்படுத்தாமல், வேலையுண்டு தானுண்டு சம்பள முண்டு புத்தகங்கள் வருவதுண்டு, எண்ணெய் விளக்குண்டு; அதன் எதிரே புத்தகத்தோடு உட்கார்ந்து படிப்பதுண்டு, கிடைத்த

வரை எதாவது உணவுண்டு; அதற்கேற்ற உறக்க நேரமுண்டு என்ற அளவிலயே அரவிந்தர் வாழ்க்கை சென்று கொண் டிருந்தது. பிரம்மசாரி எண்ணம் புகுந்தவருக்கோ வேறு எப்படி அமையும் வாழ்க்கை?

அரவிந்தர் ஒரு குதிரை வண்டி வைத்திருந்தார். குதிரை மிக உயரம்; ஆனால், நடையிலோ கழுதை வேகம்; சாட்டை முறியு மளவுக்கு குதிரையை அடித்தாலும் அதன் வேகம் எருமை மாடு வேகம்தான்!

இத்தகைய குதிரைக்குப் பழங்கால ஓட்டை உடைசலைப் போன்ற ஒரு வண்டி இருந்தது. வண்டி புறப்பட்டால் அதன் வேகம் எப்படி இருக்கும் தெரியுமா?

> ''முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்க
> பின்னே யிருந்து இரண்டுபேர் தள்ள - எந்நேரமும்
> வேதம்'' ஓதும் வாயான விகடராமன் குதிரை
> மாதம் போங்காத வழி''

என்ற வீரமாமுனிவர் நகைச்சுவையோடு கூறும் பரமார்த்த குரு குதிரையைப் போல, அரவிந்தர் குதிரை வண்டியும் அந்த வேகத் தோடு ஏறக்குறையச் செல்லும். எனவே, அரவிந்தர் அணியும் உடைகள்; உடையைப் போலவே வீடு, வீட்டைப் போலக் குதிரை; குதிரைக் கேற்ற வண்டி. இதுதான் அரவிந்தருடைய வாடிக்கையாக இருந்தது.

பரோடா மன்னர் அரவிந்தர்மீது அளவற்ற பற்றுடையவர். வாய் திறந்து அவர் ஒரு வார்த்தை மன்னரைக் கேட்டால், கேட்டதெல்லாம் உடனே கிடைக்கும். அத்தகையவருக்கு இத்தகைய ஓட்டை உடைசல் வாழ்வு தேவைதானா? காலத்துக்கும் - மரியாதைக்கும் ஏற்றவாறு எளிதாகவே - ஆனால், அழகாகவே வாழலாம் அல்லவா?

உண்மை என்னவெனில், இவைகளை எல்லாம் மன்னரிடம் பெற அவருக்கு நேரமில்லை. சித்தம் போக்கு சிவம் போக்கு என்று வாழ்க்கையை நடத்தி வந்தார். வாழ்க்கையை அவர் சுவைத்தால்தானே, அதன் அருமையை நாடுவார்; தேடுவார்?

அரவிந்தர் வீடே புத்தக அம்பாரக் குவியலாக இருக்கும் போது, பிரெஞ்சு, ஜெர்மன், இங்லீஷ், கிரீக், லத்தீன், ருஷ்ய மொழி நூல்கள் எல்லாம் அந்தந்த நாட்டின் புதுப்புது வெளியீடுகளோடு வந்து குவியும். அவை ஸ்டீல் ட்ரங்குப் பெட்டிகளில், அலமாரிகளில், வீட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் புத்தகங்கள் நிறைந்து கிடக்கும்.

இவ்வளவு புத்தகங்களையும் தவறாமல் தினந்தோறும் படிப்பார். வாரம்தோறும் ரயிலில் கப்பலில் வரும் புத்தகங்களை எல்லாம் பொருள் வாரியாகப் பிரித்து வைத்துக் கொண்டு, அந்தந்த வகை வாரியாக அவற்றை வாரந்தோறும் படிப்பதுடன், தேவையான குறிப்புகளையும் எழுதி வைத்துக் கொள்வார் அரவிந்தர்.

அரவிந்தரது குருவான தீனேந்திர குமார் தனது புத்தகத்தில், "அரவிந்தகோஷைப் போல ஒரு வாசகரை நான் பாத்ததில்லை" என்று எழுதுகிறார்.

புத்தகங்கள் படிப்பு, கல்லூரி பாட போதனை போன்ற செயல்களைச் செய்யவே அவருக்கு நேரம் சரியாக இருக்கும். எனவே, எந்தவித வகையான பொது மக்களிடமும் பழக, பேச அவருக்கு நேரமும் இல்லை.

எனவே, அவரது நண்பர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அவ்வளவுக் குறைவானவர்களே அவரது நண்பர்கள்.

மன்னரும் - அரவிந்தரும் வாரம் இரண்டு மூன்று முறைகளாவது கட்டாயம் சந்தித்தே தீருவார்கள். அரவிந்தரைப் போல ஓர் அறிவுக் கூர்மையான நண்பரது நட்பு, பழக்க வழக்கம் தேவை என்று நினைப்பவர் அரசர் கெய்க்வார்!

அரவிந்தரும் அரசர்மீது அளவிடமுடியாத அன்பை வைத்திருந்தார். மன்னருக்குள்ள அறிவு, ராஜதந்திரம், சிந்தனை வளம், செயல் சுறுசுறுப்பு அனைத்தும் ஒரு பெரிய சாம்ராச்சியத்தையே ஆட்சி செய்யும் தகுதியுடையவர் என்று அரவிந்தர் பாராட்டுவார் மன்னரை - நண்பர்களிடம்!

புத்தகத்தின்மீது அளவற்ற அக்கறையும், சிரத்தையும் கொண்டவர் அரவிந்தர். அதற்காக மற்றவர்கள் புத்தக இரவல் கேட்டால் மறுப்பவரல்லர் அவர்! கொடுக்கும் நூலைக் குறித்து வைத்துக் கொண்டு, புத்தகத்தைப் பெற்றவர்கள் படித்து முடித்ததும் அவரே சென்று நேரில் பார்த்து கொடுத்ததை வாங்கி வந்து விடுவார். அதுபோலவே பிறருக்கு உதவி செய்வதிலும், அரைகுறை மனத்தோடு செய்ய மாட்டார். எடுத்துக்காட்டாக :

ஒரு முறை அரவிந்தர் தனது தாயாருக்குப் பணம் அனுப்ப மணியாடர் பாரத்தை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில், அவரருகே அமர்ந்திருந்த ஆசான் தீனேந்திரகுமார் தானும் தனது வீட்டுக்குப் பணம் அனுப்ப வேண்டும் என்று அரவிந்தரிடம் பணம் கேட்டார்.

அதற்குப் பதிலேதும் கூறாமல், அரவிந்தர் தனது பையைத் திறந்து அதிலுள்ள பணத்தை அப்படியே எடுத்துக் கொடுத்தார். பணம் குறைவாகவே இருந்தது. இதை எப்படி இரண்டு ஊர் உறவினர்களுக்கு அனுப்புவது? யோசித்தார் ஆசிரியர்! அரவிந்தரைப் பார்த்து, 'கோஷ் சார், உங்களது தாயாருக்கு பணம் அனுப்புங்கள். ஃபாரமும் பூர்த்தி செய்து விட்டீர்கள்! அம்மாவுக்கே அனுப்புங்கள் கோஷ்' என்றார்.

உடனே அரவிந்தர் சிரித்தபடியே ஆசானைப் பார்த்து, 'இருப்பதை அனுப்புங்கள்' என்று பணத்தைக் கொடுத்தார். மறுபடியும் தீனேஷ்குமார் சங்கடத்தோடு மறுத்தபோது, என்னைவிட உங்களுக்குத்தான் தேவை அதிகம். நீங்கள் குடும்பத்துக்கு அனுப்பப் பணம் கேட்கிறீர்கள். நான் என் தாயாருக்குப் பிறகு கூட அனுப்புவேன்'' என்றார் அரவிந்தர்.

பதிலேதும் கூற முடியாத தீனேந்திர குமார், தனது வீட்டுக்குப் பணத்தை அனுப்பி வைத்தார். இந்த ஆசிரியர் - அரவிந்தருடன் இருந்தே நெருக்கமாகப் பழகியவர்! எப்படிப் பட்டவர் அரவிந்தர் என்பதை அவர் முழுமையாக உணர்ந்தவர்.

தினேந்திரகுமார் எழுதிய தனது நூலில், 'அரவிந்தர் மனிதப் பிறவியே அல்லர், சாபத்தால் பூலோகம் வந்துள்ள ஒரு தெய்வப் பிறவியாகவே எனக்குத் தோன்றினார்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அரவிந்தர் யாருக்கும் கடிதம் எழுதம் பழக்கம் உடையவரல்லர்! அப்படி யாருக்காவது எழுதினால், பத்து இருபது வரிகளிலேயே எழுதுவார். இத்தகைய ஒரு கடும் உழைப் பாளியாக அறிவைத் தேடிக் கொண்டே வாழ்ந்தார்.

# 12

# யோகமும் - ஆன்மீகமும் இல்லாமல் பாரத நாடு உயர்வு பெற முடியாது!

மேல்நாட்டுத் தத்துவங்களையும், இலக்கியங்களையும், மத ஆய்வுகளையும் ஆழ்ந்து கற்று மேதையானது போலவே, அரவிந்தா் இந்தியத் தத்துவங்களையும், இலக்கியங்களையும், காவியங்களையும், வேதம், வேதாந்த சித்தாந்தங்களையும் ஆழ்ந்து கற்று மேதையாகத் திகழ்ந்தார்.

அதே நேரத்தில் இந்திய அரசியல் போக்கையும், பிரிட்டிஷ் ஆட்சியின் கெடுபிடி அராஜக நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தார்.

இலண்டன் மாநகரில் அரவிந்தர் கல்வி கற்றபோதே இந்திய அரசியல் போக்குகளை உற்று நோக்கிக் கொண்டுதான் இருந்தார். அயர்லாந்து நாட்டின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை அரவிந்தர் வாழ்த்தினார்; போற்றினார்.

அயர்லாந்து விடுதலை பெற்றதும் அதே சுதந்திர வேட்கை அரவிந்தருக்கும் ஏற்பட்டது. அந்த நாடு பெற்ற சுதந்திரம் போல் இந்தியாவும் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இந்திய நாடு பிரிட்டிஷ் கொடுங்கோலாட்சிக்கு அடிமை யாக இருப்பது அரவிந்தருக்கு மனவேதனையாக இருந்தது.

இலண்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அரவிந்தர் படித்துக் கொண்டிருந்தார். அங்கே கேம்பிரிட்ஜ் மன்றம் என்ற பெயரில் மாணவர்கள் கூடிக் கலந்து விவாதம் நடத்தும் மன்றம் ஒன்றிருந்தது. அதில் அவர் உறுப்பினராகச் சேர்ந்தார்.

அந்த மன்றத்தில் அரசியல் விவாதங்கள் கனல் பறக்க நடக்கும். அந்தக் காரசாரமான விவாத அரங்கில் அரவிந்தர் இந்திய அரசியலின் அடிமைத்தனங்களைப் பற்றியும், பிரிட்டிஷ் ஆட்சி நடத்தும் கொடுமைகளைக் குறித்தும் தீவிரமாகப் பேசுவார்.

இந்த உணர்ச்சிகள் அரவிந்தருக்குள் கொந்தளித்துக் கொண்டிருந்ததால்தான், அவர் ஐ.சி.எஸ். தேர்வில் கலந்து வெற்றி பெற்று பிரிட்டிஷார் ஆட்சிக்கு அடிமையாக பணியாற்ற விரும்பவில்லை போலும்!

இந்தியா திரும்பிய அரவிந்தர், பரோடாவில் இருந்து கொண்டே, மும்பை நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'இந்து பிரகாஷ்' என்ற பத்திரிக்கையில் இந்தியா சுதந்திரம் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு பல கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

இவ்வாறு அவர் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளில், இந்திய தேசிய பேரியக்கத்திலிருந்த மிதவாதிகளைக் கடுமை யாகத் தாக்கி எழுதி வந்ததுமல்லாமல், அவர்கள் வெள்ளைக் காரர்களிடம் இரந்துண்ணும் கோழைகள் என்றும் எழுதினார்.

'இந்து பிரகாஷ்' பத்திரிகையில் அரவிந்தர் எழுதியக் கட்டுரைகளைப் படித்து வந்த புனே நகர் நீதிபதியான மகாதேவ கோவிந்த ரானடே என்பவர், அவரை நேரில் சந்தித்து, இந்தியத் தலைவர்களை இவ்வளவு கடுமையாகத் தாக்கி எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தியச் சிறைகளில் சீர்த்திருத்தம் தேவை என்பதைப் பற்றி எழுதி, ஏதாவது கிளர்ச்சி செய்தால் நல்லது என்றும் ரானடே

அரவிந்தரை வற்புறுத்தினார். ஆனால், அரவிந்தர் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்.

அரவிந்த கோஷூக்கு இந்திய நாட்டின் துறவிகள் செய்து வந்த யோகத் கலை மீது ஒரு பற்று ஏற்பட்டது. அதனால் அவர், தியானமும், யோகசனங்களும் செய்து வந்தார். ஆன்மீகத் துறையில் அவர் ஈடுபட்டார்.

பாரத நாடு யோகக் கலையில் பற்று வைக்க வேண்டும். ஆன்மீகச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். மக்கள் வாழ்க்கை யில் தியானம் செய்யும் சிந்தனைகள் மேலோங்க வேண்டும். இந்த மூன்று முறைகளும் இல்லாமல் இந்திய நாடு உயர்வு பெற முடியாது என்றும் அரவிந்தர் அந்தப் பத்திரிக்கையில் எழுதி வந்தார்.

இந்தியாவில் தனிமையிலிருந்து பல யோகிகள் சாதனை கள் புரிவதையும், அவர்களால் உலகத்துக்கு ஏற்படும் நன்மை களையும் அரவிந்தர் சிந்தித்தார். அதனால், யோகி களையும், ஆன்மீக நெறிகளை வளர்த்துவரும் மகான்களையும் நாடினார்.

நருமதை ஆற்றங்கரையில் ஒரு யோகி ஆசிரமம் அமைத்து யோகக் கலையைக் கற்றுக் கொடுப்பதாகக் கேள்விப் பட்ட அரவிந்தர், அவரைத் தேடிச் சென்று நேரில் பார்த்தார். அந்தச் சாதுவின் பெயர் பிரம்மானந்தர். அந்த மகானுக்கு அப்போது வயது இருநூற்றைம்பது என்று அங்குள்ள மக்கள் அவரிடம் கூறினார்கள். அவர் எப்போதும் தியானியாகவே இருப்பார். யாரிடமும் அவர் பேசமாட்டார் என்றார்கள்.

அந்தச் சாது எதிரிலே சென்று அரவிந்தர் அமர்ந்தார். கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்து கொண்டிருந்த அந்த ஞானி, கண் விழித்து அரவிந்தரையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவரும் சாதுவைப் போலவே நீண்ட நேரம் தியானத்திலே திளைத்திருந்தார்.

அந்தச் சம்பவத்தைக் கண்ட அப்பகுதி மக்கள், அரவிந்தரைக் கண்டதும் ஞானி கண் விழித்துப் பார்த்ததால்,

ஏதோ ஒரு சக்தி அவரிடம் இருப்பதாக நினைத்தார்கள். ஆனால், இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை.

உடனே அரவிந்தர், வேறு பல சாதுக்களை அப்பகுதி யில் சந்தித்தார். யாரிடமும் அவருக்கு எந்தவிதப் பற்றும், ஞானமும் உண்டாகவில்லை. ஆனால், அங்கே இருந்த விஷ்ணு பிரபாகர்லேலே என்ற மாராட்டிய யோகி ஒருவர் மட்டும், அரவிந்தரிடம் யோகக் கலையைப் பற்றிய அற்புதங்களை விளக்கியுரைத்தார்.

அந்த மராட்டிய சாது கூறிய ஞானவுரைகள் அரவிந்தருக்குப் புத்துணர்சியை அளிக்கவில்லை. எதை நாடி வந்தாரோ அரவிந்தரர், அதை அவரால் பெற முடியவில்லை. இருந்தாலும், அவருடைய ஆன்மீகச் சிந்தனையின் நாட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

அரவிந்தர் பரோடாவிலிருந்த போதே இந்தியப் பண் பாட்டையும், ஆன்மீகச் சிந்தனை ஞானத்தையும், யோகக் கலைகளின் அற்புதங்களையும் நன்றாகவே அறிந்துப் பயிற்சியும் பெற்றிருந்தார்.

பரோடாவில் அரவிந்தர் இருந்தபோதே அவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற பேச்சு, அவருடைய தமையனார்களால் துவங்கியது. ஆனால், அவருக்கு திருமணம் செய்து கொள்வதிலே நாட்டமில்லை.

கல்லூரி விடுமுறை நாட்களில் அரவிந்தர் கல்கத்தா நகர் வருவார். உறவினர்களுடன் தங்கி மகிழ்வார். அப்போதும் உறவினர்கள் அவருக்காக பெரிய பணக்காரர்கள் வீட்டுப் பெண்ணைப் பார்த்து திருமணம் முடிக்க முயன்றார்கள்.

அரவிந்தர் தொடர்ந்து திருமணப் பேச்சுக்கு மறுப்புக் கூறி வரவே முயற்சிகளில் இறங்கிய உறவினர்கள் அனைவரும், அவர் பிரம்மச்சாரியாகவே இருக்க நினைப்பதாக எண்ணி, அவருடைய திருமணப் பேச்சை பேசாமலே நிறுத்திக் கொண்டார்கள்.

அரவிந்தர் ஒருமுறை பரோடவிலே இருந்து கொல்கத்தா நகர் வந்தார். அவருடைய நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றார். இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, அரவிந்தர் அங்கே இருந்த தட்டச்சு இயந்திரத்தில், தனது ஒரு கட்டுரையைத் தட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு பெண் அறைக்குள்ளே வந்தாள்! அவளை அரவிந்தர் பார்த்தார்! இருவர் கண்களும் பேசின. உடனே அவர், அந்தப் பெண்தான் தனக்கு மனைவியாகக் கூடிய தகுதிப் பெற்றவள் என்ற முடிவுக்கு வந்தார். அந்தப் பெண் பழையபடி அறைக்குள்ளே சென்று தனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

தனது நண்பரிடம் அரவிந்தர் அந்தப் பெண் யாரென்றும் திருமணமாகி விட்டாதா என்றும் கேட்டார்.

அந்தப் பெண் தனக்கு உறவினர் என்றார் நண்பர். உடனே அரவிந்தர் 'நான்' அவளைத் திருமணம் செய்ய விரும்பு கிறேன்' என்றார். இதைக் கேட்ட நண்பர் அதிர்ச்சியடைந்தார்.

ஏதோ கேலியாக இவ்வாறு பேசுகிறார் என்று நண்பர் அரவிந்தரைப் பற்றி நினைத்து, அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. இதையறிந்த அவர் உண்மையாகத் தான் சொல்கிறேன். நான் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்றார்!

அப்போதும் அந்த நண்பர் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாரே தவிர, தக்க பதில் ஏதும் கூறாமலிருந்து விட்டார்.

உண்மையாகத்தான் உரைக்கின்றேன் நண்பரே! நான் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று, அரவிந்தர் பலமுறைக் கூறிய பின்புதான் அந்த நண்பர் நம்பினார்.

அந்தப் பெண் பெயர் மிருணாளினி. வயது பதின்மூன்று. அவ்வளவு உயரமும் - குள்ளமும் இல்லாத நடுத்தர உயரம் உடையவள். சற்று தடித்த உருவம்! வெண்ணிறமானவள்;

முகத்தில் குழந்தை தோற்றமுடைய சாதுத் தன்மை பொலிந் திருந்தது. அவள் எட்டாம் வகுப்பு படிக்கும் கல்லூரி மாணவி.

பெண்ணின் தந்தை பூபால சந்திர வசு என்பவர், அசாம் மாநிலத்தின் விவசாயத் துறை இயக்குநராகப் பணியாற்றி வந்தார். அப்போது அவர் கல்லூரி விடுமுறைக்காக கொல்கத்தா நகரில் தங்கியிருந்தார்.

அரவிந்தரின் நண்பருக்கு, பெண்ணின் தந்தையான பூபேந்திரரும் நண்பர். அதனால், திருமண பேச்சு முடிந்தது. 1901-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரவிந்தருக்கும் மிருணாளினிக்கும் திருமணம் செய்தார்கள்.

எத்தனையோ பணக்காரர்களது பெண்களைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள உறவினர்கள் அரவிந்தரை வற்புறுத்தியும், மறுத்து வந்த அரவிந்தர், ஏதோ டைப் அடிக்க நண்பர் வீட்டுக்கு வந்தபோது, அவரே பார்த்துவிட்ட அந்தப் பெண்ணை மணந்து கொண்ட சம்பவம், அவரது நண்பருக்கு வியப்பாக விளங்கியது.

இந்தத் திருமணம் நடந்தபோது, இந்திய விஞ்ஞானியான ஜகதீச சந்திரபோசும், மற்ற நண்பர்கள் பலரும் வருகை தந்து அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

திருமணத்தை முடித்துக் கொண்ட அரவிந்தர், நேராக பரோடா மன்னரைப் வந்து பார்த்தார். தம்பதிகளை மன்னர் வாழ்த்தினார். அவர்கள் வசதியாக குடியிருக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து தந்தார். வசதிகள் வந்த பிறகும் அரவிந்தர் தனது படிக்கும் வழங்கங்களையோ, படிப்பையோ, சிந்தனை களையோ கடுகளவும் மாற்றிக் கொள்ளாமலேயே மனைவியுடன் வாழ்ந்தார்.

மிருணாளினி மன்னர் அரண்மனை செல்வாள்; தனது பெற்றோர்கள் இருப்பிடம் போவாள்; கணவருடனும் வாழ்வாள்; அரவிந்தர் அந்தளவுக்குத் தனது மனைவிக்கு முழு சுதந்திரத்தைக்

கொடுத்து மதித்தார். இருவர் வாழ்க்கையும் இன்பவியலாகவே இருந்தது.

மனைவி கொல்கத்தாவிலுள்ள தந்தை வீட்டுக்குச் சென்றால், அங்கிருக்கும் மிருணாளினிக்கு அரவிந்தர் கடிதங்கள் எழுதும் பழக்கமில்லாதவரானாலும், சில வேளை களில் கடிதங்களை எழுதுவார். அந்தக் கடிதங்கள் புத்தகமாக வும் வெளிவந்துள்ளது.

அரவிந்தர் தனது மனைவிக்கு எழுதிய கடிதங்களை ஒவ்வொரு இந்து பெண்மணியும் படித்து அறிவுரை பெறும் கடிதங்களாகவே இருந்தன என்பதால், அவை புத்தகமாக வெளிவந்தது.

அந்தக் கடிதத்தில் வேறு என்ன சிறப்புகள் அமைந் திருந்தன என்றால், பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஆன்மீகச் சிந்தனை இருக்க வேண்டும்; என்பதற்கான விவரங்களை அதில் அவர் விளக்கியுள்ளார்.

பரோடாவிலே இருந்த அரவிந்தர் கொல்கத்தா வந்து இருவரும் சேர்ந்து இன்ப வாழ்வு வாழ்ந்தார்கள். என்றாலும், அரவிந்தரின் ஆன்மீக வாழ்வும், அறிவு பூர்வமான வாழ்க்கை யும் மிருணாளினிக்கு அவ்வளவாக ஒத்து வரவில்லை.

இதற்கிடையில், அரவிந்தரது அரசியல் உணர்ச்சிகளும் மிருணாளினிக்குப் பிடிக்கவில்லை. இறுதியாக அதையெல்லாம் மறந்துவிட்டு அரவிந்தர் பாண்டிச்சேரிக்கு வந்தாரல்லவா? அதுவும் மிருணாளினிக்கு மனநிறைவை தரவில்லை.

பாண்டிச்சேரியில் இருந்த சகோதரி நிவேதிதா தேவியோடு மிருணாளினி தொடர்பு கொண்டு, அரவிந்தர் நிலையை விசாரித்துணர்வாள். சிறிது காலத்துக்குப் பிறகு அந்த அம்மையார் கொல்கொத்தாவிலுள்ள தனது தந்தையார் இல்லத்திலேயே காலமானாள்.

# 13

## துப்பாக்கிச் சுடும் குறிப் பயிற்சி அரவிந்தர் பெற்ற யோக சித்தி!

'தாய்நாடு, தாய்நாடு என்று தடந்தோள் தட்டித் தேசீய வாதிகள் மேடையிலே கூறுகிறார்கள். அந்தத் தாய்நாடு என்பது எது?'

'சடப்பொருளா? அதாவது மலைகள், காடுகள், ஆறுகள், வயல்வெளிகளா - தாய்நாடு? அல்ல; அல்ல!'

'எனது தாய்நாடு எது என்றால், எனது நாட்டைப் பெற்றத் தாயாக அறிகின்றேன்-பக்தி செய்கின்றேன்; வழிபடுகிறேன்.'

'எனது தாயின் மார்புமீது ஓர் அரக்கன் ஏறி அமர்ந்து இரத்தம் குடிக்க முயன்றால் மகன் என்ன செய்கிறான்?'

'கவலையற்று உணவுண்ண உட்காருகிறான்; மனைவி மக்களுடன் சுக போகியாகி குலாவுகிறான்; அல்லது தாயைக் காக்க விரைகின்றான்'

அரவிந்தர் தனது மனைவிக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கூறினார். அவர், தனது தாய்நாட்டை மாதாவாக

மதித்தார்; வணங்கினார்; தாய்நாட்டை அடிமைப் படுத்திய அரக்கன் யார்? இங்லிஷ்காரன் அல்லவா?

எனவே, தனது தாய்நாட்டை அடிமைப்படுத்திய ஆங்கிலேயன் என்ற அரக்கனை இரத்தபானம், செய்ய விழையும், அரக்கனாகவே மதித்தார்! அதைத் தடுக்கும் வழி என்ன? சிந்தித்தார். இரவும் - பகலுமாக அரவிந்தர்.

அதற்கு அவர் என்ன யோசனை கூறினார். அது இது :

அத்யாத்ம சக்தியால்தான், அதாவது பரமான்மா சீவான்மா என்ற ஆன்மத் தத்துவங்களால்தான், பாரத நாட்டின் தூக்கம் கலையும் என்று அரவிந்தர் நம்பினார். அவருக்கு தனக்குள்ள சக்திமீது அதிக அளவு நம்பிக்கை இருந்தது என்று அவர் தமது மனைவிக்கு எழுதினார்.

வீழ்ச்சியுற்ற இந்தச் சமுதாயத்தை எழுப்பி விடும் வலிமை, பலம், எனக்குள் இருக்கிறது என்பதை நான் அறிவேன். இவ்வாறு நான் கூறுவது எனது உடல் வலிமையை அன்று.

கத்தியோ, துப்பாக்கியோ தூக்கி நான் போர் புரியச் சொல்லவில்லை. என் பலம் - ஞான பலம்.

சத்திரியத் தேசு மட்டும் தேசு அன்று, பிரம்ம தேசும் இருக்கிறது. இத் தேசு ஞானத்தின் மீதுள்ளது.

''மிருணாளினி, தேசு தேசு என்கிறேனே, அந்தத் தேசு என்றால் என்ன என்று உனக்குப் புரிகிறதா?''

''தேசு என்றால் அழகு, உறைப்பு, ஒளி காங்கை, கீர்த்தி, கூர், பலம், பொன், மகத்துவம், மனக்கதி, மூளை, விந்து, வீரம் என்று பொருளாகும்''.

''பாரத நாட்டை ஆங்கில அரக்கனிடமிருந்து விடுவிக்க சத்திரிய வீரமிருந்தால் மட்டும் போதாது. பிரம்ம தேசும் தேவை. அதாவது, ஆன்ம வழிபாடுகளியற்றும் தெய்வ வீரமும் தேவை'' என்கிறார் அரவிந்தர். அந்த தெய்வதேசு யோகமாகவும், ஆன்மீகமாகவும், தியானமாகவும் இருக்கலாம் அல்லவா?

இந்தக் கருத்து ஒன்றும் புதியதல்ல; இன்று தோன்றியதல்ல; இந்தக் கருத்தை ஏந்தியவாறே நான் பிறந்தேன். இக் கருத்து எனது நாடி நரம்புகளில் நிறைந்துள்ளது. இந்த மகா விரதத்தை நிறைவேற்றவே பகவான் என்னை இம் மண்ணுலகுக்கு அனுப்பியுள்ளார்'' என்று அரவிந்தர் தனது மனைவிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ''இந்தக் கருத்து எந்த ஒரு சாதாரண மனிதனுக்கும் எழக்கூடிய நம்பிக்கைக் கருத்தா?'' எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே போல அரவிந்தர், தனக்குப் பிடித்துள்ள பித்தம், அதாவது பைத்தியம் என்ன என்றும் தனது மனைவிக்கு விளக்கியுள்ளார். என்ன அது?

'கடவுளைத் தன் கண்களால் காண வேண்டும் என்பதே அந்தப் பித்தம்' என்கிறார். உண்மைதானே? சொத்து சுகம் தேடுவோரை உலகம் போற்றுகிறது; புகழ்கிறது; திறமை யானவர்கள் என்று பாராட்டுகின்றது.

ஆனால், கடவுளைத் தேடுவோரை மட்டும் பைத்தியம் என்று வசை பாடுகின்றது அல்லவா? கடவுளைத் தேடு கின்றேன் என்று கூறிக்கொண்டு காமா சூரக் களம் காணும் பிரேமா நந்தரா என்ன அரவிந்தர்? அவர் தேசத்தையே தெய்வத் தாயாகக் கருதி வழிபாடு செய்திட்ட மாபெரும் தியாக மூர்த்தியாயிற்றே! அவரைப் போய் போலிச் சாமியார்களோடு ஒப்பிடுவது தவறல்லவா?

அரவிந்தர் மேலும் தன் மனைவிக்கு என்ன எழுதுகிறார் படியுங்கள்.

''எப்படியாவது பகவானை நேராகத் தரிசனம் செய்துவிட வேண்டும் என்பதே எனது பைத்தியமாகும். வார்த்தைக்கு வார்த்தை கடவுளின் பெயரைச் சொல்வதும், ஊரறியப் பிரார்த்தனைச் செய்வதும், நான் தெய்வ நம்பிக்கை மிகுந்தவன்'' என்று பிறரிடம் காட்டிக் கொள்வதுமே இன்றைய மதமாகி விட்டது. நான் அதை விரும்பவில்லை.



இந்த இடத்தில், இன்று நாட்டில் அதிகமாகப் பெருகிவிட்ட போலிச் சாமியார்களுக்குச் சாட்டையடி தருவதுபோல, அரவிந்தர் தனது கருத்தை தெளிவாகக் கூறியிருப்பதை நாம் நெஞ்சத்தில் நிறுத்த வேண்டும்.

அரவிந்தர் மேலும் தமது மனைவிக்கு எழுதும்போது:

''ஈசுவரன் இருப்பது மெய்யானால், அவனை அறியவும், அடையவும் ஏதாவது ஒரு வழி இருக்கும். அந்த வழி எவ்வளவு அபாயகரமாக இருந்தாலும் சரி, அவ்வழியே செல்ல நான் உறுதி பூண்டு விட்டேன்'' என்று அரவிந்தர் குறிப்பிடுகிறார். இதற்கு என்ன பொருள்? தாய்நாடு எந்த வழியிலாவது விழிப்படைய வேண்டும் என்ற முனைப்போடு அவர், ஆன்மீக எழுச்சியை மக்களுக்குள் எழுப்புகிறார் என்பதுதானே பொருள்?

''பகவான் எனக்கு அளித்துள்ள குணங்கள் தேசு, உயர்ந்த கல்வி, வித்தைகள்; தனம் அனைத்தும் கடவுளுடை யனவே என்பது எனது உறுதியான நம்பிக்கை''என்கிறார்.

அவர் மேலும் இது பற்றி கூறும்போது :

''குடும்பத்தினரின் பராமரிப்புக்குத் தேவையான அளவுக்கே, இன்றியமையாத தேவைகளுக்கு மட்டுமே செலவு செய்ய நமக்கு உரிமை உண்டு.''

''எஞ்சியதை, அதாவது தனக்குப்போதுமானவை போக மிகுதியுள்ளதை, பகவானிடமே நாம் திருப்பித் தந்துவிட வேண்டியதுதான் முறை''.

''எல்லாவற்றையும் எனக்காகவும், சுகபோகத்துக் காகவும், பகட்டு, படாடோபத்துக்காக்வும் செலவிட்டால் நான் திருடன் ஆவேன்''.

''பகவானுக்குத் தருவதென்றால், என்ன பொருள்? அறச் செயல்களுக்காகச் செலவிட வேண்டும் என்பதே பொருள்''.

''நான் பிறருக்கு என்ன கொடுக்கிறேன் என்பதற்குக் கணக்குக் கிடையாது. பரோபகாரம் செய்ய வேண்டியது தர்மம்; அண்டியவரை ஆதரிப்பது மகா தர்மம்; ஆனால், சகோதர சகோதரிகளுக்குத் தருவதால் கணக்குத் தீராது.''

''இந்தக் கெட்டக் காலத்தில், நாடு முழுவதுமே உதவி கோரி என் வாயிலில் நிற்கிறது. இந்த நாட்டில் எனக்கு முப்பது கோடி சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் உணவின்றிச் சாகின்றார்கள். பலர், துன்பங்களிலும், இன்னல் களும் செக்குமாடுகளைப் போல சுற்றிச்சுற்றி உயிர் வாழ் கிறார்கள். அவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டாமா?''

''யாருடைய பாக்கியத்துடன் உனது பாக்கியம் பிணைக்கப் பட்டுள்ளதோ, அந்த மனிதன் விசித்திரமானவன். இந்த நாட்டில், இந்தக் காலத்தில், எந்த மனோபாவத்தோடும், நோக்கத்தோடும், வாழ விரும்புகிறார்களோ, அவற்றுக்கு நேர் மாறான மனோ பாவமும், நோக்கமும் உடையவன் நான், முற்றிலும் மாறு பட்டவன்; அசாதாரணமானவன்''.

''இந்தக் கருத்துக்களை எல்லாம் மக்கள் பைத்தியக்காரத் தனம் என்பார்கள். ஆனால், பைத்தியக்காரன் காரியத்தில் வெற்றி பெற்றால் அவனைத் தேஜஸ்வி; மகா புருஷன் என்று போற்று கிறார்கள். ஆனால், இவர்களில் எத்தனைபேர் முயற்சி வெற்றி பெறுகிறது?''

''ஆயிரக்கணக்கான மனிதர்களில் பத்து மனிதர்களே அசாதாரணமானவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பத்தில் ஒருவனே எடுத்த காரியத்தில் வெற்றி பெறுகிறான்.''

''எனது செயல்கள் வெற்றி பெறுவது இருக்கட்டும். நான் இன்னும் முழுமையாகக் காரியத்தில் இறங்கவே இல்லை; ஆகையால், என்னைப் பைத்தியக்காரன் என்றே எண்ணிக் கொள்.''

என்றெல்லாம், அரவிந்தர் தனது அன்பு மனைவிக்கு எழுதிய கடிதத்தில் மிக விளக்கமாக வரைந்துள்ளார்!

அரவிந்தர் மற்றவர்களைப் போல் சாதாரணமானவரல்லர்! ஓர் அசாதாரணமான செயல்வீரர் என்று அவரை மக்கள் எண்ணுவதற்கு அப்படியென்ன அற்புதமான ஆற்றல் அவரிடம் இருந்தது என்று சிலர் கேட்பார்கள்! அதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு :

மும்பை மாநிலத்தில் டானா என்ற ஒரு நகரம் உள்ளது. அங்கே சாரூபாபு என்ற நண்பர் ஒருவர் இல்லத்தில் அரவிந்தர் தங்கியிருந்தார்.

ஒரு நாள் பேய் மழை போன்ற ஒரு பெருமழை பெய்தது. அப்போது அந்த பாபு வீட்டில் சில நண்பர்கள், மழை காரணமாக எங்கேயும் செல்ல முடியாமல் தவித்தார்கள். ஆனால், உள்ளே இருந்து கொண்டு என்ன செய்வது? கூடியிருந்த அந்த நண்பர்கள் துப்பாக்கியால் குறி தவறாமல் சுடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள். குறி பொருள் என்ன தெரியுமா? ஒரு நெருப்புப் பெட்டி?

அரவிந்த கோஷ் இவர்களது துப்பாக்கிச் சுடும் பயிற்சியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏன் தெரியுமா? அவருக்குத் துப்பாக்கி சுடத் தெரியாது என்பது மட்டுமன்று; அன்று வரை அவர் துப்பாக்கியைத் தொட்டுக் கூடப் பார்த்தவரல்லர் என்பதால், அந்த வாலிபர்களுடைய சுடும் ஆட்டத்தை அவர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்த வாலிபர்கள், 'கோஷ் சார்' நீங்களும் கலந்து கொள்ளுங்களேன்' என்று அழைத்தார்கள்.

அதற்கு அரவிந்தர், நான் துப்பாக்கியைத் தொட்டதுகூட இல்லையே, எனக்கென்ன தெரியும்? என்றார்.

அந்த வாலிபர்கள் அரவிந்தரை விடவில்லை; துப்பாக்கியை அவரிடம் அவர்கள் கொடுத்தார்கள். குறி பார்த்துச் சுடுவது எப்படி என்பதை அவருக்கு விளக்கினார்கள்.

துப்பாக்கியை அரவிந்தர் கையில் ஏந்தினார். முதல் முறையே, குறி தவறாமல் குண்டு பாய்ந்தது. எல்லாரும் அரவிந்தர் சுட்டதைக் கண்டு பிரமித்தார்கள்.

தொடர்ந்து அவர் துப்பாக்கி வேட்டையாடுபவனைப் போல, சுட்டுக் கொண்டே இருந்தார்! வியப்பு மேல் வியப்பு அனைவரிடமும் உண்டானது.

இதைக் கண்ட அந்த அரவிந்தரின் வீட்டுக்கார நண்பரான சாரூபாபு, ''யோக சித்தி அரவிந்தரைப் போன்றவர்களுக்கு அல்லாமல் நமக்கா கிடைக்கும்?'' என்றார்!.

எல்லா நண்பர்களும், உண்மைதான், அதுதான் அரவிந்தர் ஆற்றல்! அவர் சரியாகக் குறி பார்த்தார்! குறி தவறவில்லை. இது தெய்வசக்தியின் ஒரு துளி என்றார்கள்.

# 14

# மாணவர் விழிப்புணர்வு பெற அரசு கல்வி முறை பயன் தரா!

பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த கிழக்கு இந்தியக் கம்பெனி வியாபாரிகளான இங்லிஷ் வெள்ளையர்கள், மொகலாயர் பேரரசரான ஔரங்கசீப் இடமும், மராட்டிய மாமன்னனான மாவீரன் சிவாஜி யிடமும், மதுரை தஞ்சைப் பகுதிகளை ஆட்சி செய்து கொண்டிருந்த நாயக்கர் மன்னர்களிடமும், சென்னையில் கர்நாடக நவாபு வாரிசுகளிடமும், குறிப்பாக சென்னப்ப நாயக்கரிடமும் ஆட்டுத் தோலளவுக்கு இடம் கேட்டு வாணிகம் செய்ய வந்தவர்கள் என்று ஒவ்வொரு மாநில அக் கால அரசு வரலாறுகள் அறிவிக்கின்றன.

இவ்வாறு வந்த கம்பெனி வியாபாரிகள் அங்கங்கே உள்ள அரசுகளைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளால், இரண்டு பூனைகளுக்கு அப்பம் பங்கிட்டுக் கொடுத்த குரங்கு நியாயம் நடத்திக் கொண்டு, சிறிது சிறிதாகப் பராத பூமியைக் கவர்ந்து விழுங்கி ஆட்சி புரியத் தொடங்கினார்கள்.

அந்த வெள்ளைக்காரர்கள், இந்தியாவிலே இறக்குமதி செய்த அவர்களது நாகரிகத்தின்மீது இந்திய மக்கள் மோகம் கொண்டு, தங்களது சொந்த பாரம்பரியமான நாகரிகத்தை,

பண்பாட்டை, பாவனைகளை இழந்தவர்கள் - கடற்கரையோர மக்களான வங்காளிகளும், தமிழர்களுமாவார்கள்.

பாரத நாட்டின் பண்டைய பண்பாடுகளையும், ஆன்மீகச் சிந்தனைகளையும், தெய்வ நெறிகளையும் மறந்து, கண்டதே காட்சி கொண்டதே கோலமெனும் லோகாயுத சடவாதத்தில் அமிழ்ந்து போனார்கள்.

ஆனால், அடிமை வாழ்க்கையின் அவலங்களை அறிந்து, அனுபவித்து, உணர்ந்து சுதந்திரமே எனது பிறப்புரிமை, அதைப் பெற்றே தீருவேன் என்ற மறுமலர்ச்சியையும், எழுச்சியையும் உணர்ச்சிகளாக மாற்றி, அதற்குப் புரட்சி வடிவம் கொடுத்தவர்கள் வங்காளிகளும் - தமிழர்களும்தான்!.

வெள்ளையரை எதிர்த்து சிப்பாய் கலம் முதன்முதலில் தோன்றுவதற்கு முன்பே, வேலூர் புரட்சி தோன்றியதும், வெள்ளை வியாபாரிகளை எதிர்த்து இந்தியாவில் கப்பலோட்டி வ.உ.சிதம்பரம் பிள்ளை புரட்சி செய்ததும், வீரபாண்டியக் கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள் போன்ற வீரப் பெருமக்கள் வெள்ளை ஆட்சியை எதிர்த்ததால் தங்களது தலைகளை பறிகொடுத்த வரலாறுகளும் தமிழகத்திலேதான்!

அதுபோலவே, தலைகொடுத்தார்களது சுதந்திர புரட்சிகள் வங்காளத்திலே இல்லையென்றாலும், வங்காள மண்ணில் பன் மொழிப் புலவர்களும், நோபல் பரிசுக் கவிஞர் களும், பரோபகாரி களும், நாவலர்களும், புரட்சி அரசியல்வாதிகளும், இந்தியத் தேசீயப் போராட்டத்தின் அற்புதத் தலைவர்களும், ஆன்மீக வேந்தர்களும், ஒருவர்பின் ஒருவராகத் தோன்றி மக்களிடையே மறுமலர்ச்சி யையும், எழுச்சியையும் தோற்றுவித்துக் கொண்டே இருந்தார்கள்.

சீர்த்திருத்த தேசியச் சிங்கமான இராஜாராம் மோகன்ராய், மகரிஷி தேவேந்திரநாத் தாகூர், இரவீந்திரநாத் தாகூர், பிரமானந்த கேசவேந்திரர், அரவிந்தரின் தாயைப் பெற்ற ரிஷி ராஜ நாராயணர் முதலியோர் மக்களுக்கு விழிப்பை உண்டாக்கினார்கள்.

அரசியல் புரட்சியிலே சித்தரஞ்சன்தாஸ், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் அரும்பாடுபட்டவர்கள் ஆவர்.

ஆன்மீக எழுச்சி அரசியலிலே கலப்பதற்கு இராம கிருஷ்ண பரமஹம்சரும், விவேகானந்தரும் உதித்தார்கள் - வங்க மண்ணின் பெருமையை உருவாக்க! இவர்களுள் குறிப்பாகக் கூறுவதானால் சுவாமி விவேகானந்தரடிகள், வங்க மண் மட்டுமல்லாமல், பாரத நாடு மட்டுமின்றி, ஏன் உலகத்திலேயே ஓர் ஆன்மீக அரசியல் எழுச்சியை உருவாக்கினார் எனலாம்.

வங்காளத்திலே மட்டுமன்று, தமிழகத்து மண்ணிலேயும் வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், கப்பலோட்டிய வீரத் தமிழன் வ.உ.சி. தேசியத் தியாகச் சிங்கம் சுப்பிரமணிய சிவா, தமிழ்த் தென்றல் திரு.வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, தினமணி டி.எஸ். சொக்கலிங்கம் போன்ற நாவலர்களும், பாவலர்களும், இலக்கிய ஆய்வாளர் களும் அரசியல் புரட்சிக்கு வித்தாக விளங்கி வந்தார்கள்.

ஆன்மீகத்தில் அரசியலைக் கலந்த மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, மறைமலையடிகளார், சதாவதானி பாவலர் செய்குத்தம்பி, கலைஞர் எஸ்.எஸ். விசுவநாதாஸ் போன்ற பலர் இந்திய தேசியம் சுதந்திர மாக நடமாட வழி வகுத்த கொள்கைக் கோமான்களாகத் திகழ்ந்தார்கள்.

ஆனால், 1905-ஆம் ஆண்டில்தான், இந்திய நாட்டில் உண்மையான விழிப்புணர்ச்சி உருவானது. சுவாமி விவேகானந் தருடைய வீரமுழக்கங்கள் அவரது மரணத்திற்குப் பிறகுதான் மகத்தான பயனைத் தந்தது. மக்கள் ஒன்றுபட்டுத் திரண்டு சுதந்திரப் போரிலே நேரடியாக ஈடுபட்டார்கள்.

1905-ஆம் ஆண்டில் என்ன நடந்தது மக்கள் விழித்தெழு மளவிற்கு? வங்காளத்தில் புரட்சி வீரர்களும், ஆன்மீகச் சிந்தனை யாளர்களும், சுதந்திரப் பேரியக்கப் பழி வாங்கல்களும்,

வெடிகுண்டு கலாச்சார விடுதலை இயக்கங்களும், புரட்சி உள்ளம் பூண்ட வாலிபர் களும் ஆங்காங்கே தோன்றி, கிரேட் பிரிட்டனுடைய அராஜக ஆட்சியின் ஆணி வேர்களை அறுத்தெறிய ஆரம்பித்தார்கள்.

அந்த புரட்சிவாதிகளின் பழிவாங்கல் தொல்லைகள் ஒரு புறம். இந்திய தேசிய இயக்கத்தின் சுதந்திரப் பணிகளின் போராட்டம் மறுபுறமென்று மக்கள் விழித்தெழ ஆரம்பித்து விட்டதைக் கண்ட அப்போதைய பிரிட்டிஷ் கவர்னரான கர்சான் பிரபு, வங்காளத்தை இரண்டாக உடைத்தார்!

வங்கத்தை உடைத்தால், சுதந்திரத் தீ அணைந்து விடும்! அதற்காக உழைப்பவர்களது பலம் குன்றும்; குறையும் என்று எண்ணினான் கர்சான் பிரபு!

என்ன நினைத்தானோ அந்த அரசியல் வஞ்சகன். அதற்கு நேர் விரோதமாக, எதிராக சுதந்திரத் தீ காட்டுத் தீயாக மாறிவிட்டது. அதனால், நாட்டில் பெரும் கலகங்களும், குழப்பங்களும் அதிகரித்தன.

வங்கம், பீகார், ஒரிசா மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியை சித்திரை மாதத்துக் கத்திரிக் கோடையை விடக் கடுமையாக எதிர்த்தார்கள்.

இந்திய மக்கள் சுதேசி இயக்கம், பகிஷ்கார இயக்கம் என்ற இயக்கங்களைத் துவக்கிப் போராடிச் சிறை சென்றார்கள். இந்த இயக்கத்திற்குப் போராட்டப் பாடலாக இயற்றப்பட்டதுதான் ‘வந்தே மாதரம்’ பாடலும், முழக்கங்களுமாகும். இப் பாடலை எழுதியவர் பங்கிம் சந்திரர் சாட்டர்ஜி ஆவார்.

தமிழ்நாட்டுத் தேசியக் கவிஞரான சுப்பிரமணிய பாரதியார், இந்தப் பாடலைத் தமிழில் ‘வந்தே மாதரம் என்போம், நமது மாநிலத் தாயை வணங்குது என்போம்’ என்று மொழி பெயர்த்தார். பிறகு இந்திய தேசிய இயக்கத்தின் போராட்டப் பாடலாகவே இப் பாடல் மக்களால் பாடப்பட்டது.

அரசியல் பெயரால், பிரிட்டிஷ் ஆட்சியால் நடத்தப்படும் கொடூரங்களைக் கண்ட அரவிந்தர், பரோடாவில் அவரால் அமைதியாக அமர்ந்திருக்க முடியவில்லை. அவர் மக்களுக்கு நேரிடையாக அறிமுகமாகாதவராக இருந்தார். ஏனென்றால், அவர் யாரிடமும் அவ்வளவாக நெருங்கிப் பழகும் சுபாவ முடையவரல்லர். ஆனால், அவரை யாரும் நேரில் பார்த்தது இல்லை. அவர் பெயரைக் கேட்டால் போதும், அவர் ஏதோ ஒரு மேன்மையுடைய சக்தி பெற்றவர் என்று தெரிந்து கொள்வார்கள்.

இந்திய சுதந்திரத்திற்காகப் போராடவும், வங்காளப் பிரிவினையை எதிர்க்கவும் அப்போது முன்னணி வங்கத் தலைவர்களாக இருந்தவர்கள் யார் தெரியுமா? சுரேந்திரநாத் பானர்ஜி, விபின் சந்திரர் பாலர் போன்றவர்களாவர். அவர்களுடன் அரவிந்தரும் இணைந்தார் - பிரிட்டிஷ் அராஜக ஆட்சியை எதிர்த்துப் போராட!.

வங்கத்து இந்த மூன்று வேங்கைகளது இடி முழக்கம் போன்ற கர்ஜனைப் பேச்சுக்கள், பூனைகளைப் புலிகளாக்கிற்று; ஓணான் களை ஓநாய்களாக்கிற்று; மக்களை வீறுபெறும் வெறி மிருகங்களாக, மாற்றின. இவர்களுள் அரவிந்தர்தான் மக்களுக் குரிய அடையாள வழிகாட்டியாக விளங்கினார். அவருடைய பேச்சின் கருத்து கோடை இடிபோல கனலைக் கக்கியது.

அரவிந்தர் நோக்கம் அரசியலில் அக்கினித் தன்மையான கிளர்ச்சிகளை உருவாக்க வேண்டும் என்பது மட்டுமன்று; மக்களுக்கு விழிப்புணர்வுகளை உண்டாக்கும் கல்வியையும் பரப்ப வேண்டும் என்பதே ஆகும்.

பிரிட்டிஷ் ஆட்சியால் நடத்தப்படும் கல்லூரிகளும், பள்ளிகளும் இந்தக் கல்வியைப் போதிக்கவில்லை; கற்பிக்கவும் முடியாது. அதனால், இந்தியத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து, தேசியக் கல்லூரிஎன்ற ஒன்றை உருவாக்கினார்கள். அதன் முதல்வர் பொறுப்பை அரவிந்தர் ஏற்றார்.

பரோடா கல்லூரி அரவிந்தருக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாயைச் சம்பளமாகக் கொடுத்தது. தேசியக் கல்லூரியில் அவர் பெற்ற ஊதியம் வெறும் நூற்றைம்பது ரூபாய்தான் என்றால், அவருடை நாட்டுணர்ச்சியின் பற்றை எவ்வாறு போற்றுவதோ! எவ்வளவு பெரிய தியாகம் பார்த்தீர்களா? இந்தச் சம்பளத்தில் அவரும், குடும்பமும் வாழ வேண்டும்.

இந்த நிலையைக் கேள்விப்பட்ட பரோடா மன்னரின் மனம் பொறுக்கவில்லை. எத்தகைய ஓர் அறிவாளிக்கு நூற்றைம்பதா ஊதியம்? என்பதைப் பொறுக்க முடியாமல், அரவிந்தருக்கு ஒருவரைத் தூது அனுப்பி உடனே அழைத்து வருமாறு உத்தரவிட்டார்.

வாலிப தேசிய வெறியால், வெள்ளையர் ஆட்சி எதிர்ப்பால், அரவிந்தருக்கு பரோடா மன்னருடைய அருமையான பாசம் புரியா மல் போய் விட்டது. அதில் மன்னரின் பாசத்தை தேச பக்தி வென்று விட்டது. பரோடவுக்குப் போகமலே இருந்து விட்டார் அவர்.

தேசியக் கல்லூரியிலாவது அவரால் இறுதிவரைப் பணியாற்ற முடிந்ததா? தேசிய கல்லூரி மாணவர்கள் சுதேசிக் கிளர்ச்சிகளில் கலந்து கொண்டு போராட்டம் நடத்தினார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள், கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

அரவிந்தர் அந்த மாணவர்களைத் தேசியக் கல்லூரியில் சேர்த்து கொள்வோம் என்றார். அவருடையக் கொள்கையைக் கல்லூரி நிர்வாகம் ஏற்க மறுத்து விட்டது. அத்துடனில்லாமல் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் நடைபெறும் கல்வி முறைகளையே தேசியக் கல்லூரியிலும் நடத்த வேண்டுமென அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள்.

அரவிந்தருடைய கொள்கைக்கு நேர் விரோதமல்லவா இந்த நடவடிக்கை? அதனால் அவர் ஏற்க மறுத்தார். இவை போன்ற கருத்து மோதல்கள் பலமாக மோதவே, அரவிந்தரால்

அந்தக் கல்லூரியில் பணியாற்ற முடியாத இருதலைக்கொள்ளி எறும்பு நிலை ஏற்பட்டது. அதனால், அவர் தனது கல்லூரி முதல்வர் பணியைத் தூக்கி எறிந்து விட்டு வெளியே வந்து விட்டார்.

தேசியக் கல்லூரி மாணவர்கள் அரவிந்தருக்கு பிரிவு உபசாரம் நடத்தினார்கள். அவர்களுக்கு அவர் மீதிருந்த அன்பு காரணமாக அந்த பிரிவு வருத்தத்தை விழாவாகக் கொண்டாடி னார்கள். அந்த விழாவிலே அரவிந்தர் ஆற்றிய அறிவுரை இதோ:

''மாணவ மணிகளே! உங்களிலே சிலர் மகான்களாக வேண்டும் என்பதே எனது ஆசை. உங்களுக்காக அன்று; உங்களுடைய அகங்காரத்தைத் திருப்தி செய்து கொள்வதற்காக அல்ல; பாரத தாய்க்காக, தேச அன்னைக்காக நீங்கள் மகான்களாக ஆக வேண்டும்.

பாரதம், மகா பாரதமாக, உலக மக்கள் முன்னால் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நிற்பதற்காக, பண்டைக் காலத்தில் உலகமே அதன் தலைவாயிலில் நின்று அறிவுதானம் கேட்டதை மெய்ப்பிப்பதற்கான கல்வியை - நீங்கள் பெற்றால் தான் மாணவர்கள் மகான்களாக முடியும்'' என்றார்.

# 15

# 'வந்தே மாதரம்' பத்திரிக்கை நடத்தி முதன் முதல் சுதந்திரம் கேட்டவர்!

தேசியக் கல்லூரியின் முதல்வர் பணியைத் தூக்கியெறிந்து விட்டு வெளியே வந்த அரவிந்தர், 'வந்தே மாதரம்' என்ற பத்திரிக்கையைத் துவக் கினார். அந்த நேரத்தில் வங்காள மாநிலத்தில் தேசிய கொள்கை ளைத் துணிந்து எடுத்துக் கூறும் பத்திரிக்கைகள் எதுவுமில்லை.

இராஜா சுபோத் சந்திர மல்லிக் என்பவர் கொடுத்த நன் கொடைப் பணத்தை ஏற்று, விபின் சந்திர பாலர் 'வந்தே மாதரம்' என்ற பத்திரிக்கையை நடத்தி வந்தார். அந்த பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பு அரவிந்தரிடம் வந்ததால், அவர் அதை ஏற்று ஆசிரியராக இருந்தார்.

'வந்தே மாதரம்' என்ற ஏடு நுழையாத வீடே வங்கத்தில் இல்லையெனலாம். அந்த அளவுக்கு அது மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அந்த இதழில் வெளியான காரசாரமான கட்டுரைகள், விமரிசனங்கள், இலக்கிய விளக்கங்கள், பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்ப்பு உணர்ச்சிகள் ஆகியன மக்களிடையே பெரும் பரபரப்பை உருவாக்கி, பத்திரிக்கை விற்பனையும் பெருகியதால், வந்தே மாதரம் புகாத

வீடுகளே இல்லையென்று கூறும் நிலை ஏற்பட்டது. அதனால், நாட்டின் சுதந்திர லட்சியங்கள் மக்களிடையே பரவி அவர்கள் மனத்தில் இடம் பெற்றுவிட்டன.

அரவிந்தர், 'வந்தே மாதரம்' பத்திரிக்கையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றதும், அரசியலில் அவர் தீவிரவாதம் காட்டினார்.

'வந்தே மாதரம்' பத்திரிக்கையிலே முதன் முதலாக, பாரத நாட்டுக்கு முழுமையான சுதந்திரம், பூரண விடுதலை தேவை என்ற கோரிக்கை ஒலியை எழுப்பியவர் யார் தெரியுமா? அரவிந்த கோஷ்தான். எத்தனை பேர் இதனை அறிவார்கள்?

முழு சுதந்திரம் தேவை என்ற கொள்கை முழக்கத்தை அரவிந்தர் மக்களிடையே எடுத்துக்கூறிய பின்புதான், லோகமான்ய பாலகங்காதரத் திலகர், அரவிந்தர் கருத்தைப் பின்பற்றி, 'சுதந்திரம் எமது பிறப்புரிமை, அதைப் பெற்றே தீருவோம்' என்று முழக்க இடியை எழுப்பினார்.

திலகர் சுதந்திரக் கருத்தைத் தீவிரமாக வெளியிட்டதைக் கண்ட பஞ்சாப் சிங்கம் லாலா லஜபத்ராய்; அவரை பாராட்டி அதே தேசிய விடுதலை முழக்கத்தை அவரும் எழுப்பினார்.

விபின் சந்திர பாலர், அரவிந்தரின் பூரண சுதந்திரக் கொள்கையை ஏற்றுக்கொண்டார். அரவிந்தரின் இந்த தேசிய லட்சியத் தத்துவத்தை, பால், லால், திலக் என்ற மும்மூர்த்திகளும் ஆதரித்தார்கள். அவர்கள் பேசும் இடங்களில் எல்லாம் அரவிந்தர் கிளப்பிய சுதந்திரக் கொள்கையையே பேசி வந்தார்கள். பத்திரிக்கைகளிலே அதையே விளக்கி எழுதினார்கள்.

அரவிந்தர் திலகரைப் போன்றதோர் கோடையிடி பேச்சாளரல்லர். என்றாலும், அவர் மெதுவாக எதையும் பேசுவார். பேசும் கருத்துக்களும் சொல்லாழம் மிக்கவை, கூர்மையானவை; கட்டி வா என்றால் வெட்டி வரும் உணர்ச்சியை ஊட்ட வல்லவையாக இருக்கின்றன என்பதற்காக, அவரைப் பல சங்கங்கள் பேச அழைத்தன!

அழகான அவரது பேச்சுக்கள், தீப்பொறி பறக்கும் எழுத்துக்கள்; தீவிர வாதம் கனல் கக்கும் சிந்தனைத் திட்டங்கள், ஆன்மீகச் சிந்தனைகளை எழுப்பும் வேத, இலக்கிய, இதிகாச எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றைப் படிக்கும் மக்கள், கேட்கும் கூட்டத்தினர் அவர்மீது தனியொரு மரியாதையைக் காட்ட ஆரம்பித்தார்கள். அதனால், அவரது புகழ் மற்ற தலைவர்களைப் பின்னுக்குத் தள்ளி வந்தது! மக்கள் செல்வாக்கும் அதிகமாகப் பெருகியபடிய இருந்தது.

'வந்தே மாதரம்' பத்திரிக்கையில் தேசிய தீவரவாதம் நெருப்புக் குவியலாகப் பொறிப் பறந்து கொண்டே, ஏறக்குறைய இரண்டே கால் ஆண்டுகளாக, அதாவது 26,27 மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருந்தன.

அரவிந்தர் எழுதிய ஒரு கட்டுரையை, காரசாரத் தாக்குதல்களைக் கண்ட பிரிட்டிஷ் அரசு அவர்மீது, ராஜத் துரோகம் குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்து நடத்தியது. ஆனால், இதில் என்ன சிறப்பு என்றால், பத்திரிக்கை ஆசிரியர் அரவிந்தர்தான் என்பதை ஆட்சி வர்க்கத்தினரால் நிரூபிக்க முடியவில்லை. ஏன் தெரியுமா?

இன்றைக்கு ஒரு துண்டு நோட்டீஸ் அச்சடித்தாலும் அச்சகம் பெயரை வெளியிடுகிறோம். பத்திரிக்கை என்றால் அதன் ஆசிரியர் பெயர், அவர் முகவரி, பத்திரிக்கை வெளியிடு பவர் பெயர், அவரது முகவரி, யார் அந்த ஏட்டை அச்சடித்தாரோ அவரது பெயர், முகவரி அனைத்தையும் வெளியிடுகிறோம். வெளியிட வேண்டும் என்பது பத்திரிக்கைச் சட்டமாகும்.

இந்தச் சட்டம் அரவிந்தர் காலத்திலே கிடையாது. அதனால், இதழில் ஆசிரியருடைய பெயரை அச்சிடும் பழக்கமில்லை. எனவே, 'வந்தே மாதரம்' பத்திரிக்கை ஆசிரியர் அரவிந்தர்தான் என்பதை ஆட்சி தொடுத்த வழக்கில் நிரூப்பிக்க முடியவில்லை.

அரசு அதிகாரிகள், விபின் சந்திர பாலரை அவர்களது வழக்குக்கு சாட்சிகளாக்கினார்கள். பாலரோ, 'சாட்சி கூற முடியாது' என்று மறுத்து விட்டார். இந்தக் காரணங்களால் அரவிந்தர் மீது போடப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படவில்லை; விடுதலையானார் அரவிந்தர். ஆனால், அச்சகர் மட்டும் ஆறுமாதம் தண்டனை பெற்றார்!

அரவிந்த கோஷ்மீது தொடரப்பட்ட இந்த வழக்கால், அச்சகர் பெற்ற தண்டனையால், வங்காளம் உணர்ச்சிப் புயலானது. கவிஞர் இரவீந்திரர் அரவிந்தர் மீது ஒரு வாழ்த்துப் 'பா' எழுதினார். அந்தக் கவிதைக்கு 'அரவிந்தருக்கு ரவீந்தரரின் வணக்கம்' என்பதே தலைப்பாகக் கொண்டு வெளியிடப் பட்டது.

விபின் சந்திர பாலர்தான் 'வந்தே மாதரம்' பத்திரிக்கை யின் முதல் ஆசிரியர் - அவரால் அந்த இதழை இரண்டரை மாதம் தான் நடத்த முடிந்தது. பிறகு 1906-ஆம் ஆண்டு முதல் 1908 அக்டோபர் மாதம் வரை இரண்டே காலாண்டுகள், ஆசிரியர் அரவிந்தர் என்ற பொறுப்பில் அந்த ஏடு வெளிவந்து கொண்டிருந்த போது, மக்கள் இடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, சுதந்திரம் என்ற லட்சியத்துக்குப் புரட்சிகரமான செல்வாக்கை அது உருவாக்கியது.

பிரிட்டிஷ் ஆட்சி தொடுத்த ராஜத் துரோகக் குற்ற வழக்கிலே இருந்து விடுதலைப் பெற்ற அரவிந்தர், பந்து தட்டத் தட்ட உயரமாக எழும் என்பதைப் போல, அரசியலில் மேலும் மேலும் அவர் தீவிரவாதியாகி விட்டார்.

தேசியக் காங்கிரசிலே இருந்த மிதவாதக் காங்கிரஸ் தலைவர்களுக்கு; அரவிந்தருடைய தீவிரவாதம் பெரும் தலைவலியாகிக் கொண்டே இருந்தது.

இங்லீஷ்காரர்களுடன் கை குலுக்கிக் கொண்டு, அவர்கள் போடும் பதவி அல்லது சில சலுகைகள் என்ற பிச்சைகளை இருகையால் ஏந்திக் கொண்டு, மேலும் என்ன தேவைகளோ,

அதற்கான மனுக்களைக் கொடுத்துக் கொண்டு, கடைசியில் பிரிட்டன் ராஜா - ராணிக்கு 'காட் சேவ் தி கிங்' என்ற வாழ்க கோஷம் போட்டுக் கொண்டிருப்பதே அன்றையக் காங்கிரஸ் மிதவாதிகள் கொள்கை.

இந்த மிதவாத இரந்துண்ணும் அரசியல் - அரவிந் தருக்கோ, திலகருக்கோ ஒத்து வரவில்லை. அதனால், அரவிந்தருடைய பூரண சுய ராஜ்ஜியக் கோரிக்கையைக் காங்கிரஸ் ஏற்றாக வேண்டும் என்று அரவிந்தரால் வற்புறுத்தப் பட்டது. அதனால், தீவிரவாத அணியினர்க்கும், மிதவாத அணியினர்க்கும் இடையே கருத்து வேற்றுமை என்ற பூகம்பம் பிளந்தது.

இதற்கிடையே சூரத் நகரில் இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்க அவை கூடியது. காங்கிரஸ் தலைவர் யார் என்ற போட்டி எழுந்தது. தமிழ் நாட்டிலே இருந்து பல காங்கிரஸ் தலைவர்கள் சேலம் விஜயராகவாச்சாரியாரைப் போன்றவர்கள் அங்கே சென்று கூடினார்கள்.

தலைவர் தேர்தலில், கோபால கிருஷ்ண கோகலே என்ற மிதவாதத் தலைவரைத் தேர்வு செய்ய மிதவாதிகள் தந்திரம் செய்தார்கள். அந்தப் பேரியக்க அவைக்கு ராஷ்பிகாரி கோஷ் தலைமை ஏற்றார்.

சூரத் மாநாட்டில், லோகமான்ய பாலகங்காதர திலகர் என்ற தீவிரவாதக்காரர் கொள்கை விளக்கம் பேச மேடை வந்தார். அவரைப் பேச விடாமல் மிதவாதக் காங்கிரஸ்காரர்கள் கூச்சலிட்டார்கள்.

ஆனால், மராட்டிய சிங்கமான திலகர், கம்பீரமாகவும், பிடிவாதமாகவும் மேடையில் நின்று கொண்டிருந்தார். அப்போது செருப்பு ஒன்று பறந்து வந்தது. ராஷ்பிகாரிகோஷ் தலையை அது தாக்கியது. பிறகு நாற்காலி பறந்து வந்து சுரேந்திரநாத்

பானர்ஜியை அடித்துத் தள்ளியது. குழப்பத்தில் முடிந்தது கூட்டம்.

சூரத் காங்கிஸ் மாநாட்டு மேடையிலே கலவரங்களும், குழப்பங்களும் நீடித்தன. அரவிந்தர் அமைதியாக அமர்ந்த இடத்திலேயே அசையாமல் அமர்ந்து கொண்டிருந்தார்.

மாநாட்டுக்காரர்கள் அரவிந்தரை அகன்று சென்று அமருமாறு கேட்டுக்கொண்டும், அவர் அசையாமலேயே அமர்ந்திருந்தார். பின்பு, மாநாடு கலையும்போதே அவர் தனது நண்பர்களுடன் வெளியே வந்தார்.

சூரத் மாநாட்டிலே இருந்து திரும்பிய அரவிந்தர், மும்பை, மத்திய பிரதேசம் போன்ற இடங்களிலே சுற்றுப் பயணம் செய்து, நாட்டின் முழு சுயராஜ்யத் தேவையை விளக்கினார். ஆயிரக் கணக்கான மக்கள் அரவிந்தர் சொற்பொழிவுகளைக் கேட்டு சுதந்திரத் தீவிரவாதிகளானார்கள்.



# 16

## வெடித்தது புரட்சி! அரவிந்தர் கைது!

வீழ்ச்சியுற்ற பாரதம் எழுச்சி பெற வேண்டுமென்று ஒவ்வொரு மாநில வாலிபர்களும் சுதந்திர வேட்கையோடு வீறுகொண்டு பணியாற்றினார்கள். இந்திய இளைஞர்கள் அரவிந்தரைத் தலைவராக ஏற்று அவருடன் தொடர்பு கொண்டு, அடுத்து என்ன செய்யலாம் என்ற திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

'வந்தே மாதரம்' என்ற பத்திரிக்கை ஒரு நாளேடு என்ற தகுதியில் மட்டுமல்லாமல், பாரத நாட்டின் சுதந்திரத்துக்கு மக்களைத் திரட்டும் பணிகளையும் செய்தது.

வங்காளத்தை இரு கூறாகப் பிளந்துவிட்ட ஆங்கிலேயர்களை, நாட்டை விட்டுத் துரத்துவதற்குரிய மார்க்கம் என்னவென்ற எண்ணமுடைய வாலிபர்கள், நாட்டின் முக்கிய இடங்களில் ரகசிய சங்கங்களை அமைத்துக் கொண்டு வெடிகுண்டுகளையும், ஆயுதங்களையும் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

இத்தகைய புரட்சி எண்ணமுடைய வீர இளைஞர்கள், தங்களது கொள்கைகள்; திட்டங்கள் என்னவென்பதை பிறரறியும் பொருட்டு, 'யுகாந்தா' என்ற ஒரு பத்திரிக்கையைத் துவக்கினார்கள்.

அந்தப் பத்திரிக்கை, பிரிட்டிஷ் ஆட்சியைப் பகிரங்கமாக எதிர்த்து, மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்திக் கொண்டும் தூண்டி விட்டுக் கொண்டும் இருந்தது.

இந்தப் புரட்சியாளர்களுக்குத் தலைமை வகித்தவர்கள் யார் தெரியுமா? அரவிந்த கோஷின் கடைசி தம்பியான பாரீந்திர குமார் கோஷும், தேவவிரத் என்பவர்களுமாவர்.

இந்த இருவர்களில் பின்னவர் 'யுகாந்தா' பத்திரிகைக்கு முதல் ஆசிரியராகவும், முன்னவர் இரண்டாவது ஆசிரியராகவும் இருந்தார்கள். அதனால், அந்த யுகாந்தா இதழ் ஒரு தீவிரவாதிகளின் ஒளிவிளக்காக அமைந்தது.

'யுகாந்தா' தீவிரவாத ஏடு என்றாலும், அதன் தலையங்கப் பகுதியின் மேற்புறத்தில் பகவத் கீதையின் சுலோகம் அச்சிடப்பட்டிருக்கும். ஏனென்றால், இந்து அற நூல்களிலும், உணர்ச்சியை ஊக்குவிக்கும் அறிவுரைகள் உள்ளன என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக அந்தக் கீதை சுலோகத்தை அச்சிட்டிருப்பார்கள்.

'யுகாந்தா' பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் காளிமாதா தனது கையில் வாளேந்திக் காட்சி தரும் படம் போடப் பட்டிருக்கும். அந்த ஏடு, தீவிரவாதிகளிடம் மட்டும் பரவாமல், உணர்ச்சிவசப்பட்ட பொது மக்கள் கைகளிலும் இருக்கும். பொதுவாகத் தீவிரவாதிகளின் கொள்கை ஏடு அது என்றால் தகும்.

பொது மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் இதழ் யுகாந்தா என்பதால், அது நாளுக்கு நாள் மக்களிடம் செல்வாக்குப் பெற்று 20 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனையாகிக் கொண்டிருந்தது.

இருபதாயிரம் பிரதிகள் மக்களிடையே விற்பனையாகின்றது என்றால்; அந்த அளவுக்கு அது செல்வாக்கும், சொல்வாக்கும் உடையதாகத்தானே இருக்கும்?.

புரட்சிவாதிகளான வாலிபர்கள் கல்லூரி பட்டம் பெற்ற கல்வியாளர்களாக இருந்தார்கள். அதுவும் சாதாரண பட்டம் பெற்றவர்களல்லர். மருத்துவ டாக்டர், இலக்கிய டாக்டர்,

ஐ.சி.எஸ். தேறியவர்கள், தேறும் வாய்ப்பிழந்தவர்கள், பேராசிரியர்கள் போன்ற பல துறையாளர்களும் அந்தப் புரட்சியாளர்கள் குழுவில் இருந்தார்கள்.

புரட்சியாளர்கள், பிரெஞ்சு, ஜெர்மன், ஹீப்ரு, லத்தீன், வளமான இங்லிஷ் போன்ற மொழிகளைக் கற்று வல்லுநர் களாகவும் இருந்தார்கள்.

இத்தனைக் கல்வி அருமைகள் பெற்ற அனைவரும், அரவிந்தரே அந்தப் புரட்சியாளர்கள் குழுக்களுக்குத் தலைவராக இருக்க வேண்டும் என்று அரவிந்தரை அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அரவிந்தர் அதை ஏற்க மறுத்து, அவர் வழி தனி வழி என்ற எண்ணத்தோடு செயல்பட்டார்.

பிரிட்டிஷ் அரசு, அரவிந்தர்தான் இந்த புரட்சிக்காரர் களுக்கு எல்லாம் தலைவராக இருக்க வேண்டும் என்று யூகித்தது. அதனால், அரவிந்தர் பணிகளை எல்லாம் கண்காணித்தபடியே இருந்தது.

குதீராம்போஸ், பிரபுல்லா சாகி என்ற இரண்டு புரட்சி இயக்க வாலிபர்கள், 1908-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாளன்று பீகாரிலுள்ள முசுப்பர்பூர் மாவட்ட நீதிபதி கிங்ஸ் போர்டு தனது காரிலே வருகிறார் என்று எண்ணி வெடி குண்டுகளை வீசினார்கள்.

அந்த நீதிபதி, பத்திரிக்கை ஆசிரியர்களுக்கு கடும் தண்டனை கொடுத்தவர். ஒரு சிறுவனுக்குத் தண்டணையாகச் சவுக்கடிகளை வழங்கியவர் என்பதால், அவரைப் பழிக்குப் பழிவாங்க அவரைக் கொல்வதற்காக கார்மீது வெடிகுண்டை புரட்சிவாதிகள் வீசினார்கள்.

ஆனால், நீதிபதி அந்தக் காருள் வரவில்லை. எதிர்பாரா விதமாக இந்திய மக்களது அன்புக்குரியவரான பிரிங்கல் கென்னடி என்பவருடைய மனைவியும், மகளும் அந்தக் காரில் வந்ததால், அவர்கள் அந்த குண்டு வீச்சுக்குக் கோர பலியானார்கள் ! பாவம்!

இந்த குண்டு வீச்சு நடைபெற்றதால் பிரிட்டிஷ் அரசு பரபரத்தது. புரட்சி இயக்க வாலிபர்களைக் கைது செய்தது. குண்டு வீசிய வாலிபர்கள் இருவரையும் போலீசார் கைது செய்தார்கள்.

கொல்கத்தாவிலுள்ள மாணிக்தல்லாவில் வெடிகுண்டு தயார் செய்யும் தொழிலகம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த தொழிற்சாலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்று, அரவிந்தகோஷ் தம்பியான பாரீந்திரகுமார் கோஷையும், மற்றும் சில வாலிபர்களையும் போலீசார் கைது செய்தார்கள்.

முசப்பர்பூர் வெடிகுண்டு வழக்கு, வெடிகுண்டு உற்பத்திச் சாலை சம்பந்தமான வழக்குகள் சார்பாக, முப்பத்தாறு பேர்களை அரசு கைது செய்து சிறை வைத்தது.

இப்படியெல்லாம் புரட்சிக்காரர்கள் இயங்க, அவர்களை இயக்குவது அரவிந்தர்தான் என்று அரசு திட்டவட்டமாக நம்பியது. எனவே, பிரிட்டிஷ் அரசு, அரவிந்தர் இல்லத்தை திடீர் சோதனை செய்தது. சோதனையில் எந்தவிதமான அபாயகரமான பொருளும் கிடைக்கவில்லை.

மிருணாளினி தேவியின் பெட்டியில் இருந்த சில கடிதங்களைப் போலீசார் கைப்பற்றினார்கள். அந்தக் கடிதங்கள் எல்லாம் தனது மனைவிக்கு அரவிந்தர் எழுதிய கடிதங்கள்தான் என்று தெரிந்து கொண்ட பிறகும், அக்கடிதங்களை ஒன்றுகூட விடாமல் எடுத்துக் கொண்டு சென்றார்கள். கடிதங்களை எடுத்துக் கொண்டதோடு நில்லாமல், அரவிந்தரையும் கைது செய்தார்கள் போலீஸ் அதிகாரிகள்.

மிருணாளினி பெட்டியில் ஒரு சிறு அட்டைப் பெட்டி இருந்தது. அதனுள் காவி மண், கொஞ்சம் இருந்ததை கிளார்க் என்ற போலீஸ் அதிகாரி பார்த்தார். பயங்கரமான ஒரு வெடி மருந்து பொருளாக அந்தக் காவி மண் இருக்கலாம் என்று எண்ணி அந்த மண்ணைச் சோதனை செய்தார். அவர் நினைத்தபடி இல்லாமல் அந்த மண் சாதாரண மண்தான் என்பதை அந்த அதிகாரி அறிந்தார்.

# 17

# அரவிந்தர் மீது ஓராண்டு நடந்த அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு!

அரவிந்தர் மீது அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு எனுமோர் வழக்கு பிரிட்டிஷ் ஆட்சியால் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு ஓராண்டுக் காலம் நடந்தது. மற்ற புரட்சிக்காரர்களோடு அரவிந்தரும் அலிப்பூர் சிறையிலே பூட்டப்பட்டிருந்தார்.

இந்த வெடிகுண்டை அரவிந்தர் செய்தாரா? அந்தச் சதிகளிலாவது அவர் ஈடுபட்டவரா என்றால் இல்லை. புரட்சிக் கருத்துக்களை எழுதினார், பேசினார் என்பதற்காக, மற்ற புரட்சிவாதிகள் செய்த குண்டு வீச்சு சம்பவங்களில், அரவிந்தர் பெயரையும் பிரிட்டிஷ் அரசு வலிய வற்புறுத்தி சேர்த்து, அவரைப் பழிவாங்கவே இந்த வழக்கை அவர்மீது ஜோடித்தது.

இது வெடிகுண்டு வழக்கு என்பதால், சிறையிலே உள்ள கைதிகள் அனைவரும் வரம்பு மீறித் துன்புறுத்தப்பட்டார்கள். எல்லாரும் ஒரே விதமாக வேலை வாங்கப்பட்டுக் கொடுமைக்கு ஆளானர்கள். எல்லாக் குற்றக் கைதிகளும் ஒரே சிறையில் பூட்டப்பட்டார்கள். காரணம், அந்தக் காலத்திலே சிறையில், ஏ வகுப்பு, பி.வகுப்பு, சி. வகுப்பு என்ற பிரிவுகள் கிடையாது.

அதனால், எல்லாக் கைதிகளுக்கும் ஒரே சிறை, ஒரே வேலை, ஒரே கொடூரங்கள் நடத்தப்பட்டன.

குற்றம் செய்தவர்கள் அனைவரும் ஒரே அறையில் இருந்தார்கள். ஒரு சில வாலிபர்கள் போலீசாரின் துன்புறுத்தல் களுக்கும், அடி உதைகளுக்கும் பயந்து வெடிகுண்டு உற்பத்திச் செய்யும் தொழிற்சாலையைப் பற்றிய உண்மை களைக் கூறிவிட்டார்கள்.

வேறு சிலர் அப்ரூவர்களாக மாறிவிட்டார்கள். அவ்வாறு மாறியவர்களின் தலைவனான நரேன் கோசாயி என்பவனை அடித்துக் கொன்று விட்டார்கள். அதனால் அரவிந்தரை ஒரு தனியறையிலே வைத்துப் பூட்டினார்கள்.

அரவிந்தரைப் பூட்டிய அறை ஒன்பது அடி நீளமும், ஐந்தடி அகலமும் கொண்ட ஒரு கூடு போல இருந்தது. காற்று உள்ளே வர முடியாது; சன்னல்கள் ஏதுமில்லாத ஓர் இருட்டறை அது. இரும்புக் கதவு போடப்பட்ட அறை. வெளியே கொஞ்சம் கல் தரை. உயரமான மதிற்சுவர்களான அறை. அந்த அறையில் ஒரு மரக்கதவு. அந்தக் கதவில் சிறு துவாரங்கள் இரண்டிருந்தன. அந்தத் துவாரங்கள் மூலமாக அறையுள்ளே கைதிகள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். காவலாளிகள் அடிக்கடி தன் மூலம் அறையில் நடப்பதைப் பார்ப்பார்கள்.

அந்த அறையில் வெய்யில் தகதகவென்று கொதிக்கும். மழைக் காலமானால் தண்ணீர் அந்த அறையுள்ளே புகுந்து விடும். அந்த அறை எப்படி இருந்தது என்பதை அரவிந்தரே கூறுகிறார் கேளுங்கள் :

''படுக்கை அறைக்குப் பக்கத்திலே கக்கூசை அமைப்பது சீமை நாகரிகத்தின் சிறப்பு; ஆனால், ஒரு சிறு இடத்தை படுக்கை அறை, சாப்பாட்டு அறை, கக்கூசாகப் பயன் படுத்துவதை மிகச்சிறப்பாக கூறவேண்டும். நாம்தாம் கெட்ட பழக்கங்களுள்ள இந்தியர்கள் ஆயிற்றே! நாகரிகத்தின் இவ்வளவு உயர்ந்த படியை எட்டுவது நமக்குச் சிரமம்தான்.

இந்தச் சிறைச்சாலையே நாளாகவாக அரவிந்தரின் தவச் சாலையாக ஆயிற்று! முதலில் அவர் மனம் சோர்ந்தது. அச்சம் கொண்டது; அதைரியமுற்றது. பகவானே! என்னை காப்பாற்ற மாட்டாயா? என்று கடவுளிடம் அவர் முறையிட்டுக் கொண்டிருந்தார்.

சில நாட்கள் ஆனதும் அவருக்கு அதெல்லாம் சாதாரணமாகி விட்டதால் மன உறுதி செய்து கொண்டார். அவர் கூறுகிறார் கேளுங்கள் :

தியானத்தில் அமர்ந்தேன்; தியானம் செய்ய முடிய வில்லை. பயனற்ற முயற்சியால் மனம் சோர்ந்தது; செயலற்ற எனக்கே எரிச்சல் மூண்டது; நான்கு புறங்களிலும் திரும்பிப் பார்த்தேன். கடைசியில், தரையில் சில பெரிய கறுப்பு எறும்புகள் துவாரம் நோக்கி ஓடுவதைக் கண்டேன்.

கறுப்பு எறும்புகள் சிவப்பு எறும்புகளைக் கொட்டிக் கொட்டிக் கொலை செய்வதைக் கண்டேன். கொடுமை இழைக்கப்பட்ட சிவப்பு எறும்புகளிடம் எனக்கு இரக்கமும் அனுதாபமும் உண்டாயின. கறுப்பை வெருட்டிச் சிவப்பைக் காப்பாற்றினேன்' என்று தம் உள்ள வேதனைகளை அரவிந்தர் எழுதுகிறார்.

இப்படிப்பட்ட துன்பக் காட்சிகளைப் பார்த்து, அவர் முயற்சி செய்து மாற்றி கொண்டார் தனது மனத்தை. அவர் எழுந்து உலாவும்போது, உபநிடத மந்திரங்களை மனனம் செய்யலானார்; எல்லாவற்றிலும் நாராயணன் நிறைந்துள்ளான் என்ற சத்தியத்தை அனுபவமாக்கிக் கொள்ள முனைந்தார்.

மரங்களிலும், சிறையிலும், மனிதர்களிலும், விலங்கு களிலும், பறவைகளிலும், விண்ணிலும், மண்ணிலும் எங்கெங்கும் பிரம்மம் நிரம்பியுள்ளதென்னும் மந்திரத்தைக் கூறிக்கொண்டே, எல்லாப் பொருள்களையும் அந்தப் பாவனை களோடு பார்த்தார்; சிந்திக்கலானார்.

இவ்வாறு செய்யச் செய்ய அவருக்கு சிறைக்கூடம் சிறைக்கூடமாகவே தோன்றவில்லை. மதிலும், இரும்புக் கதவும், கதிரொளியால் ஒளிரும் மரங்களும், மற்ற பொருள் களும் உயிரற்ற சாதாரணப் பொருள்களாகத் தோன்றாமல், அவை அவரிடம் அன்பு கொண்டு, அவரை அரவணைத்துக் கொள்ள முயல்வதாக அவருக்குத் தோன்றத் தொடங்கின.

பிறகு ஒரு நாள், கடவுள் அவருக்குக் தரிசனம் அளித்ததாகக் கூறுகிறார். தரிசனத்தின் பலனை அவருடைய சொற்களால் அறியலாம். இதோ அரவிந்தரே பேசுகிறார் :

''மற்ற மனிதர்களிடமிருந்து என்னைப் பிரித்து வைத்துள்ள சிறையைப் பார்த்தேன். அதனுடைய மதிற் சுவர்களுக்கு இடையில் நான் மூடுண்டு கிடக்கவில்லை. ஆனால், வாசுதேவனால் சூழப்பட்டிருப்பதைக் கண்டேன்.''

''எனது சிறைக்கு வெளியில் ஒரு மரம் இருந்தது. அதன் நிழலில் உலாவிக் கொண்டிருந்தேன்; ஆனால், இப்போது அங்கு மரமில்லை; அங்கு வாசுதேவன் நின்றதைக் கண்டேன். அங்கு கண்ணனே நின்று எனக்கு நிழல் விரிப்பதைக் கண்டேன்''.

''நாராயணனே காவற்காரனாய்க் காவல் புரிந்து கொண்டிருந்தான்; படுக்கைக்காக எனக்குத் தரப்பட்டிருந்த முரட்டுக் கம்பளத்தின்மீது சாய்ந்தேன்; என் தோழன், என் அன்பன் கண்ணன், என்னை அரவணைத்துக் கொண்டிருப்பதாய் உணர்ந்தேன்''.

சிறையில் மட்டுமா அரவிந்தர் வாசுதேவனைச் சந்தித்தார்? வழக்கு நாள்களில், அவர் கூண்டில் நிறுத்தி வைக்கப்படுவார்; சாட்சிகளின் விசாரணை நடந்து கொண்டிருக்கும்; அப்போது :

''பகவான் சொன்னார் : நீ சிறைக்கு அனுப்பப் பட்டபோது, நீ மனம் சோர்ந்து, எங்கே, உன் பாதுகாப்பு, உன் பாதுகாப்பு எங்கே?'' என்று நீ அலறி என்னை அழைக்க வில்லையா? சரி, மாஜிஸ்டிரேட்டைப் பார்; வக்கிலைப் பார்.''

"நான் தலை நிமிர்ந்தேன்; வழக்கு மன்ற பீடத்தில் மாஜிஸ்டிரேட்டுக்குப் பதிலாக வாசுதேவன் வீற்றிருந்ததைக் கண்டேன். சர்க்கார் வக்கீலைப் பார்த்தேன்; அங்கு சர்க்கார் வக்கீலே இல்லை; அங்குக் கண்ணப்பிரானே அமர்ந்திருந்தார்; என் தோழர், என் அன்பர் அங்கு உட்கார்ந்து புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

"பகவான் கேட்டார் : ஏன் இன்னுமா அஞ்சுகிறாய்? நான் எல்லா மனிதர்களுக்குள்ளும் நிறைந்திருக்கிறேன்; அவர் களுடைய செயல்களையும் சொற்களையும் இயக்குவிப்பவன் நானே. நான் உடனிருந்து காப்பாற்றுகிறேன்; நீ அஞ்சக் கூடாது....."

"அந்த மரத்தடியில், பகவான் ஆனந்தமாய் குழலூதிக் கொண்டே நிற்பது போலவும், அந்த இனிமையில் என் மனத்தைப் பிய்த்து வெளியில் இழுப்பது போலவும் சில சமயம் எனக்குத் தோன்றுகிறது. என்னை அணைத்துக் கொண்டிருக் கிறவன்; என்னை மடியில் ஏந்திக் கொண்டிருக்கிறவன் யார் என்பதைத் தெளிவாக உணரலானேன்!..."

இதனால் சிறை அவருக்கு விடுதலை அளித்தது என்று அரவிந்தர் நினைக்கிறார்! அந்தக் காட்சியை அடுத்துப் பார்ப்போம்!

# 18

# அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு; அரவிந்தர் விடுதலையானார்!

அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு வரலாற்று புகழ் பெற்றுவிட்ட வழக்கு மட்டுமன்று; இந்திய மக்கள் மனத்தை ஈர்க்கப்பட்ட ஒரு தேசபக்தரான அரவிந்தகோஷை வெடிகுண்டு வீச்சுக் குற்றத்தில் சதி செய்தார் என்னும், தீவிரவாதிகளுக்குரிய தலைவர் என்றும், 'வந்தே மாதரம்' 'யுகாந்தா' போன்ற பத்திரிக்கைகள் மூலமாக, வாலிபர்களைப் பிரிட்டிஷ் அரசுக்கு விரோதமாகத் தூண்டி விட்டார் என்னும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அரவிந்தரைக் கைது செய்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் வழக்கு அலிப்பூர் வெடிகுண்டு வழக்காகும்.

இந்த வழக்கு விசாரணையைப் பார்க்க, வழக்கு மன்றத்திலும், அதற்கு முன்பாகவும் ஆயிரக்கணக்கான தேச பக்தர்களும், பொதுமக்களும் பெருங் கூட்டமாகத் திரண்டு அலைமோதிக் கிடக்கின்றார்கள்.

ஆரவாரம் ஏதாவது வழக்கு மன்றத்திலோ, மக்கட் திரளிலோ உண்டா என்றால் இல்லை. ஆனால், ஆர்வம் அலை மோதும் அமைதியே அந்தக் கூட்டத்தில் எதிரொலித்தது.

இந்த வழக்கில் "முப்பத்தாறு இளைஞர்கள் பிரிட்டிஷ் மாமன்னரை எதிர்த்துப் போர் தொடங்கினார்கள்" என்பது குற்றச்சாட்டு.

குற்றச்சாட்டுகள் ஜோடிக்கப்பட்ட பொய்கள் என்றாலும், அந்த இளைஞர்கள் கதி என்னவாகுமோ என்ற கவலை கொண்ட மக்கள் அக்கூட்டத்திலே அதிகமாக இருந்தார்கள். இந்த வழக்குக்கு மொத்தம் இருநூற்றாறு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

நாலாயிரம் பொருட்கள், கோர்ப்புகளாகப்பட்டிருக் கின்றன. வெடிகுண்டுகள், கைத் துப்பாக்கிகள் போன்ற ஐநூறு பொருள்கள் 'எக்சிபிட்'; அதாவது, எல்லாரும் பார்ப்பதற்கான காட்சிப் பொருள்களாக நீதிமன்றத்தில் போலீசாரால் வைக்கப்பட்டிருந்தன.

வழக்கோ மிகச் சிக்கலானது; மிகப் பெரியது; சிக்கல்கள் நிறைந்தது; அரசுக்கு எதிரான ராஜ துரோக வழக்கு என்று பிரிட்டிஷ் ஆட்சியால், புரட்சி இயக்க வாலிபர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு.

இந்த வழக்கை எதிர்த்து வாதாட வந்திருப்பவர் எதிர்கால இந்திய தேசிய இயக்கத்தில் தேசபந்து என்ற பெரும் புகழை பெற்றவரும், தேசியத் தலைவர்களிலே அதிக சக்தி வாய்ந்த வரும், காந்தியடிகளை எதிர்த்தே காங்கிரசினை உடைத்து தேர்தலில் நின்று ஏழெட்டு மாநில ஆட்சிகளை அமைத்திட்ட சக்தி பெற்றவருமான சித்தரஞ்சன் தாஸ் என்ற வழக்கறிஞ இளைஞராவார்.

அரவிந்தரது வழக்குக்காக சித்தரஞ்சன்தாஸ் வாதாட வந்தபோது, அவர் மக்களிடையே அவ்வளவாக பிரபலமாகா தவராக இருந்தார்.

அவர் அரவிந்தர் அனுமதியைச் சிறையிலே சென்று பெற்று, அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் ஒரு பத்து பைசா காசு கூடப் பெறாமல் அரவிந்தருக்காக வாதாட வந்தார்.

சித்தரஞ்சன், வெடிகுண்டு வழக்கின் ஆவணங்களை எல்லாம் ஒன்று விடாமல் ஆராய்ந்தார்! சிந்தனை செய்தார!

அரவிந்தரும் வழக்கு ஆரம்பத்தில் வழக்கறிஞருக்குக்கான எல்லா யோசனைகளையும் கூறினார். தெய்வமே கதி என்ற ஆன்மீக சிறைச் சரணாகதிக்குப் பிறகு அரவிந்தர், சித்தரஞ்சன தாசுக்கு உதவும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார்! வழக்கைப் பற்றி அரவிந்தர் கவலைப்படவில்லை.

சித்தரஞ்சன் தாஸை எதிர்த்தும் - வெடிகுண்டு வழக்கை ஆதரித்தும், அரசு சார்பாக வாதாட வந்திருப்பவர் யார் தெரியுமா?

பிரிட்டிஷ் ஆட்சியினர் வழக்குகளுக்காக வாதாடி வெற்றி பெறும் வல்லமை பெற்ற வழக்கறிஞரான ஈ.நார்ட்டன் துரை ஆவார்.

குற்றவாளியெனக் கூறப்பட்ட அரவிந்தரின் சார்பாக வாதாட வந்த வழக்கறிஞர் சி.ஆர்.தாஸ், மிகவும் கம்பீரமான குரலில், உள்ளுருக்கும் சொற்களைப் பயன்படுத்திப் பேசிக் கொண்டிருந்தார்.

வழக்கு மன்றத்தில், வழக்கறிஞர் சித்தரஞ்சனரின் வாத வார்த்தைகளின் கூர்மை உணர்ச்சிகளை உன்னிப்பாக, பரபரப்புடன் நிதானமாக நீதிபதி கேட்டுக் கொண்டிருந்தார். அவரை நோக்கி, குற்றவாளியின் வழக்கறிஞர் பேசுகிறார்.

''குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த மனிதர் வழக்கு மன்றத்தின் முன்னிலையில் மட்டும் நிற்கவில்லை. வரலாற்றின் உயர்நீதி மன்றத்தின் முன்னிலையிலும் நிற்கிறார்.

இந்த விவாதச் சபையின் வாத ஒலிகள்; அமைதியில் அடங்கி மறைந்து போகும். இந்தக் குழப்பமும் - கிளர்ச்சியும் ஓய்ந்துவிடும். அவர் இறந்ததும் மறைந்தும் போவார். ஆனாலும், நீண்ட காலத்துக்குப் பிறகும்கூட, அவருடைய தேசபக்தியைப் பாடிய கவிஞராக அவர் போற்றப்படுவார். நாட்டுப் பக்தியின் தீர்க்கதரிசி யாகப் பாராட்டப்படுவார். மனித சாதியைப் போற்றியவர் என்று வணங்கப்படுவார்.

இந்த மனிதர் இறந்து மறைந்து நீண்ட காலமான பின்னரும்கூட, அவருடைய சொற்கள், பாரத நாட்டில் மட்டுமன்று, கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளில் எல்லாம் எதிரொலிக்கும்.

எனவேதான், இந்த மனிதர் வழக்கு மன்றத்தின் முன்னால் மட்டுமன்று, வரலாற்றின் உயர்நீதி மன்றத்தின் முன்னாலும் நிற்கிறார் என்று நான் மீண்டும் சொல்லுகிறேன்'

'இங்கிலாந்து நாட்டின் பெருமை மிக்க வரலாற்றின் பெயரால் நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்றொரு நாள் ஓர் ஆங்கிலேயே நீதிபதி, நியாயம் வழங்கத் தவறி விட்டார் என்ற அவப்பெயர், எதிர்காலத்தின் தலைமுறையினர் கூறாதபடி நடந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன் என்றார் சித்தரஞ்சன் தாஸ்!.

குற்றம் சுமத்தப்பட்ட அரவிந்தரின் சார்பாக தாஸ் கூறிய ஆரம்பவாத முகவுரையைக் கேட்ட நீதிமன்றம் - மிகவும் பரபரப்புடன் காட்சியளித்தது.

நீதிபதிக்கு உதவியாக இரண்டு அஸ்ஸெஸர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களுடைய கருத்துக்களை ஆதாரமாய்க் கொண்டுதான் நீதிபதி தீர்ப்பளிப்பார். அந்த இரண்டு பேரும் இந்தியர்கள்.

குற்றவாளியின் சார்பாக சித்தரஞ்சன்தாஸ் வாதாடுவதை அந்த அஸ்ஸெஸர்கள் மிக உன்னிப்பாய் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி சித்தரஞ்சன் தாஸ் பேசுகிறார் :

''மாண்புமிகு அஸ்ஸெஸர்களே! குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இவர் போதித்த உயர்ந்த கருத்துக்களின் பெயராலும், நமது நாட்டின் பழம் பெரும் மரபுகளின் பெயராலும், நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்''.

''இவருடைய நாட்டைச் சேர்ந்த நீங்கள், உணர்ச்சி வசப்பட்டோ, நிர்பந்தத்தாலோ, நீதி வழங்கத் தவறியதாக,

எதிர்காலம் உங்களைக் குறை கூறும் வண்ணம் நடந்து கொள்ளாதீர்கள்'' என்று சித்தரஞ்சன்தாஸ் கேட்டுக் கொண்டார்.

அரவிந்தருக்கு விரோதமாக, பிரிட்டிஷ் அரசு போலீசாரால் வழக்கு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியங்கள் ஒவ்வொன்றின் உள்நோக்கங்களை விரிவாக விளக்கிப் பேசினார். அப்போது சித்தரஞ்சன்தாஸ் குறிப்பிடுகையில் :

''அரவிந்தர் குற்றவாளியே என்று முன்னதாக நீங்கள் முடிவு கட்டிக் கொண்டு அவருடைய சாட்சியக் கடிதங்களைப் படித்தால், அந்தக் கடிதங்களில் அதற்கு ஆதரவாகச் சில வாக்கியங்களை நிச்சயமாகக காண்பீர்கள்.

அவ்வாறு முடிவுக் கட்டிக் கொள்ளாமல் கடிதங்களைப் படித்துப் பாருங்கள். நீங்கள் நினைத்துக் கொண்டதற்கு நேர் பொருளைக் காண்பீர்கள்.

அரவிந்தருக்கு விரோதமாக, அவருடைய தம்பி பாரீந்திர குமார் கோஷ் எழுதியதாக வழக்கு மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டக் கடிதம் ஒன்று, முக்கியமான சாட்சியமாக இருக்கின்றது.

இதுதான் அந்தக் கடிதம் :

Dear Brother,

Now is the time, Please try and make them meeet for our conference. We must have sweets all over India ready made for imergencies. I wait here for your answer.

Yours affectionate,<br>
Barindra Kumar Ghose.

(மேற்கண்ட இங்லிஷ் கடிதத்தின் தமிழ் ஆக்கம் இது)

அன்புள்ள அண்ணா,

இதுவே தருணம்; அவர்கள் எல்லோரும் நமது மாநாட்டில் வந்து கொள்வதற்குத் தயவு செய்து முயற்சி செய்யுங்கள். அவசர

காலத்துக்காக இந்தியா முழுவதும் நாம் மிட்டாய்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும். தங்கள் பதிலுக்காக இங்கு காத்திருக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
பாரீந்திர குமார் கோஷ்

இந்தக் கடிதத்தை அரசாங்க வழக்கறிஞர் நார்டன் துரை விளக்கிப் பேசியபோது 'கடிதத்தில் வரும் மிட்டாய்கள் என்ற சொல்லை, வெடிகுண்டுகளைக் குறிப்பதாகும்' என்று வேறு சில ஆதாரங்களோடு விளக்கினார்.

அதற்கு பதிலுரைத்தார் சித்தரஞ்சன்தாஸ். அது இது :

''இந்தக் கடிதம் ஒரு பொய்க் கடிதம் என்பதே எனது முடிவு. வங்காளத்திலுள்ள மக்கள், தங்கள் தமையன்களுக்கு எழுதும் கடிதத்தில்; தம்பி என்பவர், தனது முழுப் பெயரையும் கையெழுத்திடும் வழக்கமில்லை. இங்லிஷ்காரர்கள் முறைப்படி 'டியர் பிரதர்' என்று எழுதுவதும் எங்கள் சாதிப் பழக்கமில்லை.

''பாரீந்திர குமார் கோஷ், ஆங்கிலத்தில் உயர்ந்த புலமை யுடையவர். அவர் Emergencies என்ற சொல்லை Imergencies என்று தவறுதலாக ஒரு போதும் எழுத மாட்டார்.

'கடிதம் பொய் என்பதற்கு இந்த உட்பிரமாணங்களைத் தவிர, போலீஸ் சோதனை செய்தபோது, இந்தக் கடிதம் கிடைத்தது அல்ல என்பதையும், பிறகு, போலீஸ்காரர்களால் இடைச் செருகல் செய்யப் பட்டக் கடிதம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்' என்றார் சித்தரஞ்சனதாஸ்.

இதற்கு ஆதாரமாக, பல வழக்குகளில் போலீஸ்காரர்கள் இவ்வாறு இடைச்செருகல் கடிதங்களைச் செருகியிருப் பதையும், அதற்கு நீதிபதிகள் செய்திருந்த கண்டனத்தையும் சித்தரஞ்சன் ஆதாரமாய் குறிப்பிட்டார்.

அவை மட்டுமல்ல, இவ்வாறான, பொய் ஆவணங் களைத் தயாரிப்பதில் போலீஸ்காரர்கள் வல்லவர்கள் என்றும் கூறினார்.

சித்தரஞ்சன்தாஸ் அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் அரவிந்தர் சார்பாக வாதாடிய தனது வாதத்தை முடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார்.

குற்றவாளித் தரப்பில் தாஸ் வாதமிட்ட வாதங்களை நீதிபதி பீச் கிராஃப்ட்டும் அஸ்ஸெஸர்களும் கேட்டுவிட்டு சிறிது நேரம் மௌனமாகவே சிந்தித்தார்கள்.

அரசாங்க வழக்கறிஞராக வாதம் செய்த நார்டன் துரையும் பதிலேதும் கூறாமல் மௌனமாகவே அமர்ந்திருந்தார்.

பீச்கிராஃபட் என்ற இந்த நீதிபதியும் குற்றவாளி அரவிந்தரும், லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஒன்றாக ஐ.சி.எஸ். தேர்வு எழுதியவர்கள்.

பண்டை மொழியான லத்தீன் மொழி தேர்வில் அரவிந்தர் முதல் மதிப்பெண் பெற்று முதல் வகுப்பில் தேறியவர்.

இந்த வழக்கில் நீதிபதியாக அமர்ந்துள்ள பீச்கிராஃப்ட் என்ற ஆங்கிலேயர், அந்த தேர்வில் இரண்டாவதாக மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தில் தேறியவர். அந்த நீதிபதி அரவிந்தரின் மாணவப் பருவக் காலத்தின் திறமைகைள நன்றாக உணர்ந்தவர்.

இந்த அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில், முதல் இடம் பெற்றுத் தேர்வான இந்தக் குற்றவாளி, குற்றவாளியா? இல்லையா? என்று தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பில் ஐ.சி.எஸ் தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றவர் நீதிபதியாக அமர்ந்துள்ளார்.

நீதிபதி பீச் கிராஃப்ட் ஆங்கிலேயர். பிரிட்டிஷ் ஆட்சி அதிகார வர்க்கத்தின் நேர் பிரதிநிதி. இந்த ராஜத் துரோக வழக்கில்

அவர் நீதியை நிலை நாட்டுவாரா? அல்லது, அரசாங்கத்தை திருப்தி செய்யும் வகையில் தீர்ப்புக் கூறுவாரா? என்று நீதிமன்றம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

குற்றவாளி எனக் கூறப்பட்ட அரவிந்தரோ எந்தவிதமான மன அதிர்ச்சியும் இல்லாமல், சிறையறையிலே அவர் எப்படி நம்பிக்கையோடு நாராயணனையும், கண்ணபிரானையும் நினைத்து, ஆன்மீக உணர்வோடு ''இறைவனிடம் கையேந்துங்கள், அவர் கைவிட மாட்டார்'' என்று எண்ணிப் பிரார்த்தனையும் - தியானமும் செய்து கொண்டு நீதிமன்றக் கூண்டில் வந்து நின்றரோ, அதே சிந்தனையோடு எந்தவிதச் சலனமும் இல்லாமல் இப்போதும் நின்றுகொண்டே இருந்தார்.

சித்தரஞ்சன்தாஸ் இந்த வழக்குக்காக எந்தவித வழக்கறிஞர் தொகையும் பெறாமல், தேசபக்தி என்ற ஒன்றையே கட்டணமாகக் கருதி, அரவிந்தரின் வழக்கை மேற்கொண்டார்.

அரவிந்தருடைய தெய்வீகச் சிந்தனையும், ஆன்மீகப் பற்றையும், அவருக்கு பாரத தேசத்தின் மேலிருந்த தேச பக்தியையும் மனமார உணர்ந்து, தெளிந்த பின்பே, அரவிந்தர் உண்மையான ஒரு தேச பக்தர், ஆன்மீகவாதி. அவரைக் காப்பாற்ற வேண்டும்; தேசபக்தியின் உண்மை வெற்றி பெற வேண்டும்; அதை உலகம் உணர்ந்து போற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் மோதல்களாலேதான், இந்த வழக்கில் அவர் தானாகவே முன் வந்து அரவிந்தர் ஒப்புதலைப் பெற்று; இந்த வழக்கிற்கு சி.ஆர். தாஸ் வந்து வாதாடினார்.

வழக்கின் விசாரணைகள் முடிந்தன. இரு தரப்பு வழக்கறிஞர்களும் அவரவர் கட்சியைத் தொகுத்துக் கூறுவது வழக்கம். அதுவும் மேலே கண்டவாறு முடிந்தது.

இறுதியாக, அந்த ஆங்கிலேய நீதிபதி பீச் கிராஃப்ட், ''அரவிந்தர் குற்றவாளி அல்லர்'' என்று தீர்ப்புக் கூறினார்.

அரவிந்தரும், மற்றும் சில வாலிபர்களும் விடுதலை பெற்றார்கள். மற்றும் சிலர் நாடு கடத்தப்பட்டார்கள்.

வழக்கு மன்றத்திலும், நீதிமன்றம் முன்பும் வெள்ளம் போலத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் ‘வந்தே மாதரம்!’, பாரத் மாதாகிஜே’ என்று உற்சாக முழக்கங்களை எழுப்பியபடியே கலைந்து சென்றார்கள்.

‘எதிர்காலமும்; கடல் கடந்த நாடுகளும் அரவிந்தரைப் பற்றிப் பேசும் என்று தேசபந்து சித்தரஞ்சன தாஸ் நீதி மன்றத்தில் குறிப்பிட்டதற்கேற்றவாறு, அரவிந்தர் 1909-ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் சிறையிலே இருந்து விடுதறைறல பெற்று வெளியே வந்தார்.

அரவிந்தர் சிறை மீண்டு வெளியே வந்ததற்குப் பிறகு, அவரது வாழ்க்கையின் ஞானச் சுழற்சி எவ்வாறு சுழன்றது என்பதை, இந்த நூலின் ஆரம்பத்திலே அவரது மனமாறுதலும் - முடிவும் படித்தீர்கள்! நினைவுக்காக, மறுமுறையும் படிக்க விரும்பினால், அவரது ஆன்மீக ஞான வரலாற்றுச் சம்பவங்களை படித்துப் பாருங்கள். வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் தெய்வமாகலாம் என்பதை உணர்வீர்கள்.

# 19

# பெண்ணின் பெருமையைப் போற்றி அரவிந்தர் எழுதிய கடிதங்கள்!

அரவிந்தருக்கு இருபத்தொன்பதாம் வயதில் திருமணம் நடந்தது. மனைவி மிருணாளினி தேவிக்கு அவர் சில கடிதங்களை எழுதினார். அவை அனைத்தும் புத்தகமாக வெளிவந்துள்ளது.

அக் கடிதத்துள் ஒன்று. அவர் பாரத பெண்மையைப் பற்றிச் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதாகும். அதை ஒவ்வொரு இந்து பெண்மணியும் படிக்க வேண்டும் என்பதற்காகவே இங்கே வெளியிட்டுள்ளோம். அது இது :

அன்புள்ள மிருணாளினி.

நீ எழுதிய கடிதம் எனக்கு ஆகஸ்ட் 15-ஆம் நாள் கிடைத்தது. உனது பெற்றோர் மறுபடியும் துயரப்படுவதை அறிய நான் வருந்துகிறேன்.

எந்தப் பையன் காலமானான் என்பதை நீ எழுதவில்லை. துயரப்படுவதால் என்ன பயன்? உலகத்தில் இன்பத்தைத் தேடும்போது, அதற்கிடையில் துன்பமே காட்சி தருகின்றது.

துன்பம் எப்போதும் இன்பத்தைச் சூழ்ந்து கொண்டிருக் றகிறது. புத்திரப் பாசத்துக்கு மட்டும் இந்த விதி பொருந்துவது அல்ல; உலகத்துப் பொருள்கள் அனைத்தின் மீதும் ஏற்படும் விருப்பத்துக்கும் இந்த விதி பொருத்தமானதே.

மனத்தில் தீரமும் உறுதியும் பூண்டு, இன்ப-துன்பங்கள் அனைத்தையும் இறைவன் திருவடிகளில் காணிக்கை செய்வதொன்றே மனிதனுக்கு வழி.

சரி, இப்போது அந்த விஷயத்துக்கு வருவோம். எந்த மனிதனுடைய விதியோடு உன்னுடைய விதி பிணைக்கப் பட்டுள்ளதோ, அந்த மனிதன் விசித்திரமானவன் என்பதை இதற்குள் நீ பெரும்பாலும் புரிந்து கொண்டிருக்கலாம்.

இந்த நாட்டில், இன்றைய மக்களுக்குள்ள மனோபாவமும், வாழ்க்கைக் குறிக்கோளும், செயல் வகையும் எனக்கு மாறானவை. முற்றிலும் மாறுபட்டவை. அசாதாரணமானவை.

சாதாரண மக்கள், அசாதாரணமான கருத்துக்களைப் பற்றியும், அசாதாரணமான முயற்சிகளைப் பற்றியும், அசாதாரணமான உயர்ந்த நம்பிக்கைகளைப் பற்றியும் என்ன சொல்வார்கள் என்பதை நீ அறிந்திருக்கலாம்.

இக் கருத்துக்களை எல்லாம் அவர்கள் பைத்தியக்காரத் தனமானவை என்கிறார்கள். அந்தப் பைத்தியம் வெற்றி கண்டு விட்டாலோ, ஒளி கண்ட மகா புருஷர்கள் என்று போற்று கிறார்கள்.

ஆனால், எத்தனை பேர்களுடைய முயற்சி வெற்றி பெறுகிறது. ஆயிரக் கணக்கானவர்களில் பத்து பேர் அசாதாரண மானவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பத்து பேரிலும் ஒருவரே தம் குறிக்கோளை அடைகிறார்.

என்னுடைய முயற்சிகளில் வெற்றி பெறுவேனா என்பது இப்போது கேள்வியல்ல; நான் எனது முயற்சிகளைத் தொடங்கவே இல்லையென்பது தான் விஷயம். ஆகவே, என்னைப் பித்தனாகவே எண்ணிக் கொள்.

பைத்தியத்தின் கையில் சிக்கிய பெண் பரிதாபத்துக் குரியவள். ஏனென்றால், பெண்ணின் நம்பிக்கைகள் யாவும் உலகத்து இன்ப துன்பங்களைச் சார்ந்தவை. பைத்தியம் தன் மனைவிக்கு இன்பம் அளிப்பதில்லை; துன்பமே தருவான்.

இந்து சமயத்தை நிறுவியர்களுக்கு இந்த உண்மை நன்றாகத் தெரியும். அசாதாரணமான ஒழுக்கத்தையும், முயற்சியையும், நம்பிக்கைகளையும் அவர்கள் மிகவும் போற்றினார்கள். பைத்தியக்காரனோ; மகா புருஷனோ - இருவரையும் அவர்கள் பெரியவர்களாகவே மதித்தார்கள். ஆனால், இவற்றால் பெண்களின் நிலைமை மிகவும் பயங்கரமானதாக மாறுகிறது. அவளுக்கு என்னதான் வழி?

முனிவர்கள் இந்த வழியைக் கூறினார்கள். அவர்கள் பெண்ணினத்திடம் மற்ற மந்திரங்கள் எல்லாவற்றையும் கைவிட்டுக் ‘கணவனே கண்கண்ட தெய்வம்’ என்ற ஓரே மந்திரத்தைக் கைக் கொள்ளுங்கள். கணவனுடைய அறப் பங்காளி மனைவி; கணவன் எந்தச் செயலைத் தன் அறமாக ஏற்கிறானோ, அதற்கு உதவியாக இருங்கள். ஆலோசனை கூறுங்கள். அவனைக் கடவுளாய்க் கொண்டாடுங்கள்.

அவனுடைய இன்பத்தை உங்கள் இன்பமாகவும், அவனுடைய துன்பத்தை உங்கள் துன்பமாகவும் கருதுங்கள். எந்தக் காரியத்தை மேற்கொள்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு கணவனைச் சேர்ந்தது. உதவுவதும் ஊக்குவிப்பதும் மனைவியின் பொறுப்பு என்று முனிவர்கள் கூறினார்கள்.

நீ, இந்து சமய நெறியைப் பின்பற்றுகிறாயா? அல்லது, நவநாகரிக நெறியைப் பின்பற்றுகிறாயா? என்பதே இப்போது பிரச்சினை. ஒரு பைத்தியக்காரனை மணந்து கொண்டாய். முன் பிறவியில் நீ செய்த வினைகளின் பயன் அது. நம் விதியை நாமே நிர்ணயித்துக் கொள்வது நல்லது. எப்படி அதை நிர்ணயித்துக் கொள்வது?

நான்குபேர் சொல்வதைக் கேட்டு நீயும் உன் கணவனைப் பித்தன் என்று புறக்கணிக்கப் போகிறாயா? பித்தன் பைத்தியக் காரத்தனமாகவே ஓடச் செய்வான். அவனை இழுத்துப் பிடித்து நிறுத்த உன்னால் முடியாது. உன்னைவிட அவனுடைய சுபாவம் வலிமையுடையது.

அப்படியானால், நீ ஒரு மூலையில் உட்காந்து கொண்டு அழுது கொண்டிருக்கத்தான் போகிறாயா? அல்லது அவனோடு, நீயும் ஓடுவாயா? பித்தனுக்கு ஏற்ற பித்தி ஆவாயா? குருட்டு மன்னனின் மனைவி தன் கண்களையும் துணியால் கட்டிக் கொண்டு குருடியானதுபோல நீயும் செய்வாயா?

வெளியே நீ ஆயிரம் பள்ளிகளில் படித்திருக்கலாம். ஆயினும், நீ ஓர் இந்து வீட்டுப் பெண்தானே! இந்து மூதாதையரின் இரத்தமே உன் உடலிலும் ஓடுகிறது. நீ இந்த வழியைத் தேர்வாய் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை.

எனக்கு மூன்று பைத்தியங்கள்

முதல் பைத்தியம் என்ன தெரியுமா? கடவுள் நமக்கு அளித்துள்ள அறிவும் - ஆற்றலும், கல்வியும் - வித்தையும், செல்வமும் - ஆண்டவனுக்கே சொந்தமானவை.

குடும்பத்தை நிர்வகிக்கத் தேவையான குறைந்த பட்சச் செலவுகள் செய்யவே நமக்கு உரிமை உண்டு. பிறகு

எஞ்சியிருப்பதை ஆண்டவனிடமே திரும்ப ஒப்படைத்து விடவேண்டும்.

எல்லாவற்றையும், நான் எனக்காகவும், எனது இன்ப நுகர்ச்சிக்காகவும், ஆடம்பரத்துக்காகவும் செலவழித்தால் என்னைத் திருடன் என்றுதான் கூறவேண்டும்.

கடவுளிடமிருந்து செல்வத்தைப் பெற்றுக் கொண்டு, கடவுளுக்காகச் செலவு செய்யாதவன் திருடன் என்று இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இதுவரை நான் ஆண்டவனுக்கு இருப்பத்தைந்து பைசா கொடுத்துவிட்டு, என் சொந்த இன்பத்துக்காக எழுபத்தைந்து காசுகளைச் செலவழித்து' விட்டு உலக இன்பத்தில் மூழ்கிக் கிடந்தேன்.

ஆயுளில் பாதி வீணாகச் சென்று விட்டது. மிருகங்கூடத் தன் வயிற்றையும், தன் குடும்பத்தின் வயிற்றையும் நிரப்பும் வேலையை வெற்றிகரமாகச் செய்து வருகின்றதே!

இவ்வளவு காலமும் நான் மிருகங்களையும், புழுக்களையும் போல் வாழ்ந்திருக்கின்றேன் என்பதைப் புரிந்து கொண்டு விட்டேன். இதை அறிந்ததால் எனக்கு மிகத் துன்பம் உண்டாகின்றது. எனக்கு என்மீதே வெறுப்பு ஏற்படுகின்றது.

இனி அப்படி இருக்கமாட்டேன்; இந்தப் பாவத்தை என் ஆயுளில் செய்ய மாட்டேன். ஆண்டவனுக்குத் தருவது என்றால் என்ன பொருள்? அறப் பணிக்காகச் செலவழித்தல் என்று பொருள்!

சரோஜினிக்கும், உஷாவுக்கும் பணம் கொடுத்ததைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. பரோபகாரம் ஓர் அறம்தான்.

அண்டியவரை ஆதரிப்பது பேரறம்! ஆனால், சகோதர, சகோதரிகளுக்குச் செய்வதால் மட்டும் கணக்கு தீர்ந்து விடாது.

இந்தக் கொடி காலத்தில் நாடு முழுவதுமே என் வீட்டு வாயிலில் புகல் தேடியுள்ளது. இந்த நாட்டில் எனக்கு முப்பது கோடி சகோதர, சகோதரியர் உள்ளனர்.

அவர்களில் பலர் உணவில்லாமல் சாகின்றார்கள். பெரும்பான்மையோர் துன்பத்தாலும், துயரத்தாலும் துவண்டு எப்படியோ உயிரைக் காத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும்.

இந்த விஷயத்தில் என் அறத் துணைவியாக நீ இருப்பாயா? என்ன சொல்கிறாய்? சாதாரண மனிதர்களைப் போல் உண்பதும், உடுப்பதும் மிகத் தேவையான பொருள்களை மட்டும் வாங்குவதும், எஞ்சியவற்றை ஆண்டவனுக்கே ஒப்புவித்தல் செய்து விடுவதுதான் என் விருப்பம். நீயும் என்னுடைய இந்த ஏற்பாட்டுக்கு இசைந்தால், தியாகம் செய்ய முற்பட்டால் என் விருப்பம் நிறைவேறும்.

நான் எவ்வித முன்னேற்றமும் அடையவில்லையே என்று நீ சொல்லுகிறாய். இதோ, முன்னேற்றத்துக்கான ஒரு வழியைக் காட்டியிருக்கிறேன். இந்த வழியில் நீ நடப்பாயா?

இரண்டாவது பைத்தியம்

இரண்டாவது பித்தம் சமீபத்தில்தான் எனக்குப் பிடித்தது. என்னவானாலும் சரி, ஆண்டவனை நேருக்கு நேர் பார்த்துவிட வேண்டும் என்பதுதான் அது.

அடிக்கடி ஆண்டவன் பெயரைச் சொல்வதும், எல்லோரும் அறியப் பிரார்த்தனைச் செய்வதும், நான் எவ்வளவு தர்மவானாக

இருக்கிறேன் பார் என்று ஊரறியக் காட்டிக் கொள்வதும்தான் இன்றைய தர்மமாக இருக்கின்றது. இதை நான் விரும்பவில்லை.

கடவுள் என்று ஒருவர் இருந்தால், அதை அனுபவ வாயிலாக அறியவும், அவரை நேரில் தரிசனம் செய்யவும், ஏதாவது ஒரு வழி இருக்க வேண்டும். அது எளிதில் கடக்க முடியாத கொடிய வழியாக இருக்கலாம்.

ஆனாலும், அந்த வழியே செல்ல நான் உறுதி பூண்டு விட்டேன். நம் உடலுக்குள் நமக்குள்ளேயே அந்த வழி இருப்பதாய் இந்து தர்மம் சொல்கிறது. அந்த வழியே போவது எப்படி? என்றும் - வழிகாட்டி விதிகளை இயற்றியுள்ளார்கள்.

அந்த விதிகளை நான் கடைப்பிடிக்கத் துவங்கி விட்டேன். இந்து தர்மத்தின் கூற்று பொய்யல்ல என்பதை ஒரு மாதத்துக்குள்ளேயே தெரிந்து கொண்டேன். அந்த வழியில் உன்னையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்பது எனது விருப்பம்.

எனக்கு முற்றிலும் நிகராக நீ வர முடியாது. ஏனென்றால், உனக்கு அவ்வளவு தெளிவு கிடையாது. ஆனால், எனக்குப் பின்னால் நீ வருவதற்கு யாதொரு தடையுமில்லை. அவ் வழியே போவோர் அனைவருக்கும் வெற்றி கிடைப்பது உறுதி.

ஆனால், அந்த வழியே நீ வர உனக்கு விருப்பம் உன்னாலேதான் வரவேண்டும். யாரும் உன்னை இழுத்துக் கொண்டு வரமுடியாது. நீ விரும்பினால் இதைப் பற்றி நான் மேலும் எழுதுவேன்.

மூன்றாவது பைத்தியம்

என்னுடைய மூன்றாவது பைத்தியம் என்ன என்பதைச் சொல்கிறேன். மற்றவர்கள் தாய்நாட்டை ஒரு ஜடப்

பொருளாகவும், மைதானமாகவும், வயலாகவும், காடாகவும், மலையாகவும், ஆறாகவும் நினைக்கிறார்கள்.

ஆனால், நான் எனது நாட்டைத் தாயாக மதிக்கிறேன். அவளிடம் பக்தி செலுத்துகிறேன்; வணங்குகிறேன்; மதிக்கிறேன். தாயின் மார்புமீது உட்கார்ந்து கொண்டு அரக்கன் ஒருவன் ரத்தம் குடிக்க முயல்வதைப் பார்க்கின்ற மகன் என்ன செய்கிறான்.

கவலை இல்லாமல் உண்டு, மனைவி மக்களோடு மகிழ்ச்சியாக இருப்பானா? அல்லது தாயைக் காப்பாற்ற விரைவானா? இழிந்துவிட்ட இந்த இனத்தை மேலுயர்த்தும் வலிமை எனக்கு இருப்பதை நான் அறிவேன்.

இங்கே உடல் வலிமையை நான் குறிப்பிடவில்லை. வாள் அல்லது துப்பாக்கி ஏந்திப் போராடுவதற்கு நான் புறப்பட வில்லை. அறிவு வலிமையையே நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

சத்திரிய பலம் மட்டுமே போதிய பலம் அன்று. பிரம்ம பலமும் பலமே. அந்தப் பலம் அறிவைத் துணைக் கொண்டது. இது ஒன்றும் புதிய கருத்தன்று. இன்றையக் கருத்துமல்ல; இந்தக் கருத்துடனேயே நான் பிறந்தேன். இக் கருத்து எனது நாடி நரம்புகளில் எல்லாம் நிறைந்துள்ளது. இந்த மாபெரும் விரதத்தை நிறைவேற்ற ஆண்டவன் என்னை இந்தப் பூமிக்கு அனுப்பி யுள்ளார்.

பதினான்காம் வயதில் இதன் வித்து முளைவிடத் தொடங்கியது; பதினெட்டாம் வயதில் இது நன்றாக வேரூன்றியது. உன்னுடைய நான்காவது அத்தை கூறிய வற்றை எல்லாம் கேட்டு, 'யாரோ ஜாதி கெட்டவன் என் அப்பாவிக் கணவரைத் தீய வழியில் அழைத்துச் சென்று விட்டான்' என்று நீ நினைத்தாய்.

ஆனால், அதல்ல உண்மை. உன் அப்பாவிக் கணவன்தான் அவனையும், நூற்றுக் கணக்கான மற்றவர்களை யும் அந்த வழியே, அது நல்ல வழியோ? கெட்ட வழியோ - இழுத்து வந்திருக்கிறான். இன்னும் ஆயிரக் கணக்கானவர்களை இழுக்கப் போகிறான். நான் இருக்கும் போதே என் வேலை பூர்த்தி ஆகும் என்று நான் கூறவில்லை. அது கட்டாயம் ஆகும்.

உன்னை இப்போது கேட்கிறேன். இந்த விஷயத்தில் நீ என்ன செய்ய விரும்புகிறாய்? மனைவி கணவனின் சக்தி ஆவாள். நீ உஷாவின் மாணவியாகி, துரைமார்களின் பூஜை மந்திரத்தை ஜபிக்கப் போகிறாயா? கணவனின் சக்தியை உனது துயரத்தால் குறைக்கப் போகிறாயா? அல்லது பரிவாலும் உற்சாகத்தாலும் கணவனின் சக்தியைப் பெருக்கப் போகிறாயா?

என்னைப் போன்ற சாதாரணப் பெண் இவ்வளவு பெரிய காரியங்களில் என்ன செய்ய முடியும்? எனக்கு மனோபலம் இல்லை. புத்தி இல்லை. அந்தக் கருத்துக்களை பற்றி எல்லாம் சிந்திக்கவே எனக்கு அச்சமாக இருக்கிறது? என்று நீ சொல்லலாம். அதற்கு ஒரு வழி இருக்கிறது.

பகவானிடம் சரண் அடை. கடவுள் கருணை, பலம் என்ற அருள் நெறியில் நீ ஒரு முறை புகுந்தால் போதும். உன்னிடமுள்ள குறைகளை எல்லாம் அவர் நீக்கி விடுவார். ஆண்டவனைச் சரணடைந்தவர்களிடமிருந்து அச்சம் அகலும்.

என்மீது உனக்கு நம்பிக்கை இருந்தால், பத்து பேர் சொல்வதைக் கேளாமல், நான் கூறுவதையே கேட்டால், நான் என் பலத்தையே உனக்கு வழங்குகிறேன். அதனால் என் பலம் குன்றாது; குறையாது; மேலும் கூடும்.

மனைவி கணவனின் சக்தி என்கிறோமே, அதன் பொருள் என்ன? கணவன் தன் மனைவியிடம் தன் பிரதி உருவத்தைக்

கண்டும், தன் மகத்தான விருப்பங்களின் எதிரொலியை அவளிடம் கேட்டும் அவன் இரட்டிப்பு வலிமை பெறுகிறான்.

மிருணா, எப்போதுமே இப்படித்தான் இருப்பாயா? 'நான் நல்ல ஆடைகளை அணிவேன்; சுவையான உணவு உண்பேன்; சிரிப்பேன்; ஆடி மகிழ்வேன்; எல்லாவித இன்பங்களையும் நுகருவேன்' என்பன போன்ற மனநிலையை உயர்ந்த மனநிலை என்று கொள்ள முடியாது.

இந்தக் காலத்தில் இந்த நாட்டுப் பெண்களின் வாழ்க்கை இவ்வாறு குறுகி இழிந்துள்ளது. நீ அதைக் கைவிடு. என்னோடு வா; கடவுட் பணி செய்ய நாம் இந்த உலகத்துக்கு வந்தவர்கள்; வா, அந்தப் பணியை நாம் தொடர்வோம்.

உன்னுடைய குணத்தில் குறை ஒன்றுள்ளது. நீ ஒரு வெகுளி. யார் எதைக் கூறினாலும் நம்பி விடுகிறாய். இதனால், உன் மனம் எப்போதும் நிலையற்று இருக்கிறது. புத்தி வளர்ச்சி பெறுவதில்லை; எந்த வேலையிலும் ஈடுபாடு ஏற்படு வதில்லை. இதைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

ஒரே ஒருவனின் சொல்லைக் கேட்டு ஞானம் சேகரித்துக் கொள்ள வேண்டும்; ஒரு குறிக்கோளை ஏற்று நிலை குலையாத நெஞ்சுடன் செயல்பட வேண்டும். மக்களின் வசைகளையும், கிண்டல் - கேலிகளையும் பொருட்படுத்தாமல் உறுதியான பக்தி கொள்ள வேண்டும்.

உன்னிடம் மற்றொரு குறை; உன் குறை அல்ல; அது காலத்தின் குறை. வங்காளத்தில் இப்படி ஒரு காலம் வந்துள்ளது. கம்பீரமான விஷயங்களை மக்கள் கம்பீரமாய்க் கேட்பதில்லை.

அறம், பரோபகாரம், அதிக ஆர்வம், பெரும் முயற்சி, நாட்டுயர்வு போன்ற உயர்ந்த, பெரிய விஷயங்களைக் கேலியாகவும், கிண்டலாகவும் பேசுகிறார்கள்.

வெளிப் பள்ளிகளில் படித்ததால் உன்னிடமும் இந்தக் குறை கொஞ்சம் வந்துவிட்டது. நம் எல்லோரிடமும் இந்தக் குறைகள் ஓரளவு இருக்கவே செய்கின்றன. மனத்தில் பதிந்து விட்ட இந்தக் குற்றத்தை மனதாலேயே வெருட்ட வேண்டும்.

மிகச் சுலபமாக நீ இதைச் செய்ய முடியும். ஒரு முறை சிந்தித்துப் பார். பிறகு அந்தப் பழக்கம் உன்னிடம் வேரூன்றினால் உனது உண்மைச் சுபாவம் வெளியாகி விடும்.

பரோபகாரம் புரியவும், சுயநலத்தைத் துறக்கவும, உனக்குள் தீவிர முனைப்பு இருக்கிறது. சிறிது மன உறுதிதான் உனக்குத் தேவை. நீ தெய்வ வழிபாடுகளால் அந்த மன உறுதியைப் பெற முடியும்.

எனது ரகசியம் இதுதான். யாரிடமும் சொல்லாமல் உனது மனத்துக்குள் உறுதியான சித்தத்துடன், இவற்றைப் பற்றி யெல்லாம் யோசித்துப்பார்! சிந்தனை செய்.

அஞ்சுவதற்கு இதில் ஒன்றுமில்லை. சிந்திப்பதற்குத்தான் பல விஷயங்கள் இருக்கின்றன. முதலில் வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். நாள்தோறும் ஓர் அரைமணி நேரம் தெய்வத் தியானம் செய்ய வேண்டும். வழிபாடுகள் வடிவில் உனது வலிய விருப்பத்தை வெளியிட வேண்டும். இதனால் உனது மனம் சிறிது சிறிதாகத் தயாராகி விடும்.

நான் கணவரின் வாழ்க்கைக்கும் - நோக்கத்துக்கும், தெய்வ அருள் பெறும் நெறிக்கும் இடையூறாக இல்லாமல், அவருக்கு எந்த நேரமும் துணையாகவே இருப்பேன்! சாதனையில் ஈடுபட்டு இருப்பேன்! என்று, நீ எந்த நேரமும் எல்லாம் வல்ல கடவுளிடம் கையேந்தி வழிபாடுகள் செய்து கொண்டிருந்தாலே போதும். செய்வாயா?

பாரத நாட்டுப் பாவையர்களது இலட்சியம், குறிக்கோள், கற்பு நோக்கங்கள் என்ன என்பதை அரவிந்தரின் இந்தக் கடிதம் ஒரு ஞான போதனை என்றே தெளிவாகத் தெரிகின்றது.

பல்லாயிரம் ஆண்டுகளாக, இந்துக்கள் போற்றி வரும், குறிப்பாக இந்து மங்கையர் குல மாதரசிகள் வழிப்பட்டு நடந்து வரும், பெண்ணிற்குப் பெருமை தரும் மாண்புமிகு பண்பாட்டு இலட்சியம் மேற்கண்டவை.

இந்த இலட்சியம், நோக்கம், குணங்கள், சுபாவங்கள், பண்பாடுகள் எந்த வகையிலாவது ஊனம் உற்றால், பாரத நாட்டுப் பெண்களின் பெருமையிலும் பெண்மையிலும் ஊனம் உண்டாகும்!



# 20

# அரவிந்த ஆசிரமம் - உலகம் காணா அற்புதமான ஆன்ம சோதனைச் சாலை!

அரவிந்தர் பெருமானின் மாபெரும், ஆன்மீகச் சோதனைச் சாலையையும், புதுவை மாநிலத்திலே உள்ள பாண்டிச்சேரி ஆசிரமத்தின் அற்புத யோக வாழ்க்கை நிலையம் ஆகும்.

இந்த ஆன்ம சோதனைக் கூடத்தில், அரவிந்தர் ஏறக் குறைய நாற்பதாண்டுக் காலமாகத் தனது ஆன்மீகச் சோதனை களைச் செய்து வந்தார்.

அந்தச் சோதனைகளை திருமதி மீரா அன்னையார் அரவிந்தருக்குப் பின்பு தொடர்ந்து செய்து வந்தார். இந்த ஆசிரமத்தில் நடைபெறும் யோகங்கள், சோதனைகள் யாவை? எவ்வாறு இயங்குகிறது இந்தச் சோதனைக் கூடம் என்பதைப் பார்ப்போம்.

ஆசிரமம் என்றால் பண்டைக் கால முனிவர்கள் எங்கோ ஓரிடத்தில், அது காட்டிலோ, நாட்டின் ஓரத்திலோ ஓலைக் கீற்றுகள் வேய்ந்த பன்னகச் சாலையாகவோ இருக்கும்.

சில சந்நியாசிகள் ஓலைகளால் கட்டப்பட்ட குடிசையை அமைத்துக் கொண்டு, இடுப்பில் லங்கோடு ஒன்றைக் கோவணம் போலக் கட்டிக் கொண்டு, நீண்ட அழுக்குத் தோய்ந்த ஜடையும், நகமும் வளர்த்துக் கொண்டு, மெலிந்த உடலோடு தண்டத்தைக் கக்கக் கவட்டில் தாங்கி, தனக்கு முன்னே கமண்டலங்களையும் திருவோட்டையும் சான்றாக வைத்து உட்கார்ந்து கொண்டு இருப்பார்கள்.

இந்த கோவணாண்டிகளுக்கு முன்னே சில சீட கோடிகள் பயபக்தி உணர்வுகளோடு ஞான வைராக்கியம் குறித்துக் கேள்விகளை எழுப்பி, பதிலையும் பெறும் காட்சிகளை நாம் கண்டிருக்கின்றோம்.

நமது திரையுலக பிரம்மாக்களும் அதைப் படமாகக் காட்டுவார்கள்; மக்களும் அதைப் பார்ப்பார்கள்! பிரேமா நந்தர்களைப் போன்றவர்களையும், அவர்களுக்கேற்ற சீட கோடிகள் அவர்களைச் சந்நியாசி மகானாகப் போற்றுவதை இன்றும் நாம் காண்கிறோம்.

இன்றைய இந்த சாமியார்கள் நாட்டின் மூலைக்கொருவ ராகத் தோன்றுகிறவர்கள். அவர்களால் தூய்மையான, புனித மான, தெய்வத் தன்மையான ஆன்மீக ஆசிரம வாழ்க்கைக்குக் களங்கம் ஏற்பட்டு விடுகின்றது.

அதனால், யோகக் கலையும், தியான ஞானமும் போலித் தன்மை பெற்றுக் காமக் கோட்டமாகி விடுமோ என்று அஞ்சியோ என்னவோ அரவிந்தர் பெருமான், தமது யோகத்தில் சந்நியாசத்தை ஒப்பு கொள்ளவே இல்லை என்பதையும் நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

அரவிந்தர் ஆசிரமத்தில் பண்டாரங்கள் இல்லை; காவி கட்டிய துறவிகளுமில்லை; இந்த ஆசிரமத்தில் பண்டைக் கால பன்னக சாலைகளில் இருந்த பழக்க வழக்கங்களும் இல்லை என்பதை நாம் முதலில் முக்கியமாக உணர வேண்டும்.

இந்தப் பாண்டிச்சேரி ஆசிரமத்தில் இருப்பவர்கள் எல்லாரும் சாதகர்களே! துறவிகளோ, சாமியார்களோ! சந்நியாசிகளோ அல்லர்!

சாதகர்கள் என்றால் யார்? என்று கேட்பீர்கள்; புரிகிறது நமக்கும்! சாதகர்கள் என்றால், அவர்களுடைய வாழ்க்கை ஆன்மீக அநுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

இந்த உலகத்தில், நாம் ஜடம்! உயிரற்றது என்று சொல்லும் இந்த மண்ணிலே தெய்வீக ஒளியைத் தோற்றுவிக்க ஒவ்வொரு சாதகனும் முயற்சிக்க வேண்டும் என்பதே சாதகர்கள் எனப்படு வோருடைய இலட்சிய நோக்கமாகும்.

பாண்டிச்சேரி ஆசிரமம், ஏதோ ஓராயிரம் சாதகர்கள் திரண்டு வந்து, இந்த இடத்திலேதான் ஆன்மீக தெய்விக ஒளியைத் தோற்றுவித்தாக வேண்டும் என்ற திட்டங்களால் நிறுவப்பட்ட ஆசிரமம் அல்ல.

அரவிந்தர் முதன் முதலில் பாண்டிச்சேரி நோக்கி வந்தார். இங்லீஷ்காரர் தொடர்பே இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் ஓரிடத்தைத் தேடினார். பிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்தில் அப்போது பாண்டிச்சேரி இருந்தது. எனவே ஆங்கிலேயனுடைய தொல்லைகள் எதுவும் ஏற்படாத ஊராக இருந்தது - அரவிந்தருக்குப் பாண்டிச்சேரி!

அரவிந்தருடன், நான்கைந்து சாதகர்களும் பாண்டிச் சேரிக்கு வந்து, ஒரே குடும்பத்தவரைப் போல ஒரு சிறிய வீட்டில் வாடகைக்குத் தங்கினார்கள்.

நாட்கள் நகர்ந்தன! போகப் போக வேறு சில சாதகர்களும் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு அதிகம் பேர், சாதகர்களாக வேண்டுமென்று வந்தவர்கள் குழு, பெருகி வந்ததால், திட்டவட்டமான ஒரு நிர்வாகத்துக்கு ஏற்பாடுகள் செய்தாக வேண்டும் என்கிற காலக் கட்டாயம் உருவானது.

மக்கள் ஒவ்வொருவராகச் சேர்ந்து கூடி; பல்கிப் பல்கிச் சேர்ந்து வாழ்வதுதானே சேரி என்ற சொல்லுக்குரிய பொருள்? அதற்கேற்ப பாண்டிச்சேரி வந்த சாதகர்கள், மேலும் சில வீடுகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

1926-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாள், அன்னை மீராவிடம் அரவிந்தர் ஆசிரம நிர்வாகப் பொறுப்புக்கள் முழுவதையும் ஒப்படைத்துவிட்டு, அவர் தனிமையில் யோக நிலையை நாடும் தியான ஞான மோனத்திலே மூழ்கி விட்டார்.

அரவிந்தரும் - அன்னையும் சில சாதகர்களைத் தம்மோடு இருக்க அனுமதியளித்தார்கள். ஆண்-பெண் இருபாலாருமுள்ள அவர்கள், அன்னை-அரவிந்தர் ஆகிய இருவரின் நேரடிக் கண்காணிப்பிலே சாதனைகளைச் செய்தார்கள்.

அன்னையின் பாதுகாப்பை ஏற்பவர்கள் எவரோ, எவரெவர்களுக்கு ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கான ஆர்வப் பெருக்குள்ளதோ, அவர்கள் மட்டுமே பாண்டிச்சேரிக்கு வருகை தந்து சாதகர்களாகிச் சாதனைகளைச் செய்கிறார்கள்.

ஆனால், ஒரு நிபந்தனை உண்டு. யார் யார் இந்த ஆசிரமத் தில் சாதனை வாழ்க்கையை நடத்திட முன் வருகின்றார் களோ, அவர்கள் தங்களிடமுள்ள எல்லாச் சொத்துக்களையும் அன்னையின் திருவடிகளிலே காணிக்கையாக்கி விட வேண்டும் என்பதே அந்த விதி!

அவ்வாறு தங்களது உடைமைகளை அன்னையின் மலரடி களிலே ஒப்படைத்து விட்டவர்களுக்குரிய எல்லாப் பாதுகாப்பு வசதிகளையும், அன்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னென்ன தேவைகளோ, அவற்றை அவர்களுக்கு அன்னையே செய்கின்றார்.

சில நாட்கள் ஆசிரமத்தில் தங்கிவிட்டுப் போக வேண்டும் என்று எண்ணி வருபவர்கள், அவர்களது செலவினங்களை அவர்களே செய்து கொள்கிறார்கள்.

ஆசிரமத்திலே இப்போதுள்ள சாதகர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய ஆயிரத்து ஐநூறுக்கு மேலாக இருக்கிறார்கள். இவர்களுள் குழந்தைகள் முதல் வயோதிகர் வரை அடங்குவர்.

அரவிந்தரின் ஆன்மீக லட்சியத்தை முன்கூட்டியே உணர்ந்து, அதை ஏற்றுக் கொண்டவர்களே இங்கு சாதகர்களாக வருகிறார்கள். அதுபோலவே, இவர்கள் அனைவருக்கும் அன்னைதான் வழிகாட்டியாவார்.

ஆசிரமத்திற்குள் வருகை தந்துள்ள ஒவ்வொரு சாதகரும், முழுமையாக முன்னேறுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் தேவையான சூழ்நிலையை ஆசிரமம் ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொருவருடைய சுபாவங்களுக்கும், தனித் தன்மை களுக்கும் பொருத்தமான வழி காட்டப்படுகின்றது. ஒவ்வொரு சாதகரும் தமது உண்மை நிலையையும், அகநிலையையும் அறிந்து கொள்ள வேண்டும். அவரவர் ஆன்மாவோடு இசைய வேண்டும். ஆசிரம வாழ்க்கை முழுவதுமே இந்த உண்மையை மையப் புள்ளியாகக் கொண்டுதான் நடந்து வருகிறது.

ஆசிரம வாழ்க்கையின் அடிப்படை ஆத்யாத்மிகம் என்ற மிகவும் சாதாரணக் கட்டுப்பாட்டினால்தான் ஆசிரமவாசிகள் பிணைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுடைய தனித்

தன்மை தானாகவே வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான வாய்ப்பும், சாதனங்களும், வசதிகளும் இங்கே கிடைக்கின்றன.

எனவே, ஒரு சாதகர் குருவின் பக்தியிலும், ஆண்டவனுடைய ஆன்மீகச் சிந்தனைகளிலும் முன்னேறும் தகுதியை, தரத்தை, வளர்ச்சியை அவரவராகவே உணருவார்.

சாதகர்களுக்குரிய வழிகாட்டி அன்னை. அவர் தனது சக்தியால் சாதகர்களை அருள்நெறியில் முன்னேற வழிகாட்டியாக இருக்கின்றார். ஒவ்வொரு சாதகருக்கும் அன்பாலும், அறிவாலும், சக்தியாலும், சைதன்யத்தாலும் அன்னை உறுதுணையாக உள்ளார்.

ஆசிரமத்துக்கு என்று ஓர் இலட்சியம் உண்டல்லவா? அது என்ன? உலகத்தை யோகம் வெறுக்கவோ, புறக் கணிக்கவோ, காடேகவோ, கமண்டலமேந்தவோ அரவிந்தர் கூறவில்லை.

ஆன்மாவின் முக்தி வேண்டியதே; ஆனால், மற்ற உயிரினங்கள் எல்லாம், அறியாமையிலிருந்தும், நோய் களிலிருந்தும், இருளிலேயிருந்தும் விடுதலை பெற வேண்டும் என்பதே ஆன்மாவின் இலட்சியமாகும். இது ஆசிரமத்தின் தலையாய இலட்சிய வேட்கை.

ஆசிரமத்திலுள்ள ஒவ்வொரு சாதகரிடமும் ஒவ்வொரு பொறுப்பு உள்ளது. ஆண்டவனுக்காகப் பணிபுரிவதென்றால், உடலினால் வழிபாடுகள் செய்வது என்று பொருள். To work for the Divine is to Pray with the Body. ஆசிரமத்தில் என்ன பணி செய்யப்படுகின்றது என்பதைவிட, அந்தப் பணி எப்படிச் செய்யபடுகின்றது என்பதையே கவனிக்கிறார்கள்.

ஏன் தெரியுமா? பாவனையால்தான் பணி உபாசனை ஆகிறது. அறிவை மென்மேலும் வளர்த்து, அதை இச்சையிட

மிருந்தும், வேட்கையிடமிருந்தும், பாசத்திட மிருந்தும் விடுதலை பெறச் செய்கிறார்கள்.

சித்திரம் வரைதல், சிற்பங்கள் செதுக்கல், இசை பயிற்சி பெறல், நடனம் பயிலல், பக்க வாத்திய இசை போன்ற எல்லாக் கலைகளும் ஆத்மிகத் தகுதி, தரம் பெற்று விளங்குகின்றன.

உள்ளத்தின் வளர்ச்சிக்கான வசதிகள் மட்டுமல்ல; உடல் வளர்ச்சிக்கான வசதிகளும் ஆசிரமத்தில் இருக்கின்றன. ஏன் தெரியுமா?

இந்த யோகத்தில் உடல் வெறுப்புக்குரியதாக எண்ணப் படுவதில்லை அல்லவா? அதனால், உடல் மென்மையும் கட்டுக் கோப்பும் பெறுவதோடு, ஆத்மா தன்னை நன்கு வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்றதாக அமைகின்றது.

ஆண்-பெண் இருபாலர்க்கும் ஏற்ற வளர்ச்சிக்கான சம வாய்ப்புகள் ஆசிரமத்தில் இருக்கின்றன. இங்கே பெண்கள் 'அபலைகள்' என்று எவரையும் இழிவாக எண்ணுவதில்லை.

ஆசிரமத்தில் சாதாரணமான உலக வாழ்க்கைக்கு இடமில்லை. ஆணுக்கும் - பெண்ணுக்கும் இடையில் இங்கே பேதமேதும் இல்லை. இருபாலரும் அருட்டிரு அன்னையின் மேற்பார்வையில் உள்ள சாதகர்களே.

இதுவரை ஆசிரமத்தின் உள் அமைப்பு எவ்வாறு இயங்குகின்றது என்பதைப் பார்த்தோம். இப்போது, ஆசிரமத் தின் புற அமைப்பு எவ்வாறுள்ளது என்பதை அறிவோம்.

'உலகப் பொருள்களை வெறுப்பது அஞ்ஞானத்துக்கும் ஜடத் தன்மைக்கும் அடையாளம்', என்று அன்னை உபதேசிக்கின்றார்.

உலகப் பொருட்களை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், அவற்றை வைத்துக் கொள்ள நமக்கு உரிமை இல்லை. பற்றுதல் இருக்கிறதே என்பதற்காக நாம் அவற்றை வைத்துக் கொள்ளக் கூடாது.

அவை ஆன்மீகச் சுடரை வெளியிடுகின்றன; தெய்விக ஒளியைக் காட்சிகளாக்குகின்றன என்பதற்காக நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரமத்தில் சாதகர்கள் தங்குவதற்காக நூற்றுக் கணக்கான வீடுகள் உள்ளன. இந்த வீடுகளைப் பழுது பார்த்துத் திருத்திக் கட்டும் வேலை நடந்தபடியே உள்ளது ஆசிரமத்தில்.

சாதகர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கின்றார்களோ, அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்றவாறு புது இல்லங்கள் கட்டப்படுகின்றன.

இந்தக் கட்டடம் கட்டும் பணியைப் பல சாதகர்கள் கவனித்து வருகிறார்கள். அவர்களுடைய கண்காணிப்பில் நூற்றுக் கணக்கான பணியாட்கள் வேலை செய்து வருகிறார்கள்.

நலவாழ்வுத் துறை, தண்ணீர் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றைத் தனித் தனி துறைகள் கவனித்துக் கொண்டு வரு கின்றன. பல சாதகர்கள் தங்களது உடைகளைத் தாங்களே துவைத்துக் கொள்கிறார்கள். சலவைத் துறையையும் சிலர் நாடுவார்கள்.

சாதகர்கள் தங்கியிருக்கும் அறை எப்படி இருக்கும் என்கிறீர்களா? இதோ விவரம் :

சாதகர் அறையில் ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு நாற்காலி, ஒரு துணி மாட்டும் ஸ்டாண்டு, ஓர் அலமாரி இருக்கும்.

சாதகர்களின் தையல் பணியை ஒரு பிரிவு கவனிக்கின்றது; அவர்களது செருப்புக்களைப் பழுது பார்க்க, புது காலணிகளைச் செய்து கொடுக்க ஒரு துறை பணி புரிகிறது.

ஆயிரம் பேர்கள் அமர்ந்து ஒரே நேரத்தில் உணவு விடுதியில் உண்ணலாம். சாத்விகமான உணவு வகைதான்; காரசார சுவைகள் எதையும் உணவில் சேர்ப்பதில்லை. இதோ ஆசிரமிகள் உணவுத் திட்டம் :

காலைச் சிற்றுண்டி : ஒரு கோப்பைப் பால் அல்லது கோக்கோ; ஒரு பன் அல்லது மூன்று ரொட்டித் துண்டுகள்.

மதிய உணவு : சோறு ஒரு கிண்ணம்; காய்கறி வகை ஒரு கிண்ணம்; ஒரு கோப்பை தயிர்; வாழைப் பழங்கள் இரண்டு; எலுமிச்சைப் பழம்.

இரவு உணவு : ஒரு கோப்பை பால், நான்கு ரொட்டித் துண்டுகள்; காய்கறி ஒரு கிண்ணம்.

சாதகர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய தேவைக்கு ஏற்றவாறு உணவு வழங்குவார்கள். உணவு சமைப்பதும், பரிமாறுவதும், சாதகர்களே செய்வார்கள்.

உணவு விடுதிக்கே பெரும்பான்மையர் வந்து உண்பார்கள். உணவு வகைகளைத் தங்கள் இருப்பிடத்துக்கே சிலர் வரவழைத்துக் கொள்வதுண்டு.

சாதகர்கள் பாத்திரங்களை மருந்து தெளிந்த நீரில் சுத்தம் செய்து கொள்வார்கள். சுத்தமான வடிகட்டிய குடிநீரை அவர்களுக்கு வழங்குவதுண்டு.

ஆயுர்வேத முறை, ஆங்கில முறை மருந்துகள் அவர்களுக்கு மருத்துவ மனையில் வழங்கப்படும். இயற்கைச் சிகிச்சை செய்து கொள்ள அவர்களுக்கு தனியிடம் உண்டு.

விஞ்ஞான முறையில் மாலிஷ் செய்து கொள்வதற்குரிய புதிய முறைக் கருவிகளும் அங்கே உள்ளன.

ரொட்டித் தயாரிக்கும் பேக்ரி ஆசிரமத்தில் இருக்கிறது. தேவைக்கேற்ப ரொட்டிகளை அவர்களே தயார் செய்து கொள்வார்கள். மாவரைக்கும் ஆலையும் இருக்கிறது.

விறகு, கரி போன்ற எரிபொருள்கள் தயாரிக்கும் பிரிவு ஆசிரமத்தில் உண்டு. சொந்தப் பண்ணை, பூந்தோட்டம், தென்னந்தோப்பு ஆகியவைகளும் அங்கே இருக்கின்றன. சாதகர்களே அந்த வேலைகளைச் செய்கிறார்கள்.

மாட்டுப் பண்ணை அங்கே இருக்கிறது. உயர் ஜாதி பசுக்கள் உள்ளன. தோட்டத்திலிருந்தும், தோப்பிலிருந்தும் ஆசிரமத்துக்குத் தேவையான காய் கனிவகைகள் கிடைக்கின்றன.

தோட்டத்தில் காலையில் பூ பறிக்கிறார்கள். பறித்தப் பூக்களை அன்னையின் திருவடிகளில் சூட்டி மகிழ்கிறார்கள். சாதகர்கள் தேவைக்கும் பூக்கள் வழங்குகிறார்கள். ஆசிரமத்துப் பணிகளில் பூக்களுக்குத்தான் முதலிடம் தருகிறார்கள்.

தொழிற் கூடங்கள் பல ஆசிரமத்தில் இருக்கின்றன. அங்கு சாதகர்கள் அவற்றில் பயிற்சி பெறுகிறார்கள். இரும்புப் பட்டறை, உருக்குப் பட்டறை, எஞ்சினீயரிங் பணிகள் முதலியன அங்கே நடக்கின்றன.

பழைய கடிதங்கள், துணிகள் பலவற்றிலிருந்து காகிதங்கள், அட்டைகள் செய்யும் பிரிவுகளும் இருக்கின்றன. எந்தப் பொருளையும் ஆசிரமத்தார்கள் வீணடிப்பதில்லை.

அங்கு வரும் அஞ்சலுறைகளைக் கிழித்து குறிப்புக்கள் எழுதும் சீட்டுகளாய் உபயோகம் செய்கிறார்கள். பயன்

படுத்தப்பட்ட தேயிலைத் தூளைக் கூட தோட்டத்திற்கு எருவாக்கிக் கொள்கிறார்கள்.

நூல் நூற்புத் துறையில் பெண் சாதகர்கள்தான் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள். கைத்தொழில் பிரிவினர் பலவகைப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். ஆசிரம ஊதுவத்திகள் புகழ் பெற்றவை ஆகும்.

சொந்த அச்சகம் ஆசிரமத்துக்காக உள்ளது. பல பெரிய நவீன அச்சு இயந்திரங்கள் அங்கே இருக்கின்றன.

ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், தமிழ், இந்தி, குஜராத்தி, மராட்டி, வங்காளி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அச்சிடும் வசதிகள் அங்கே இருக்கின்றன. சீன மொழியில்கூட அச்சிட இங்கே வசதியிருக்கின்றது.

வர்ண பிளாக்குகளும், சாதாரணமான பிளாக்குகளும் இங்கே தயாரிக்கப்படுகின்றன. மேற்கண்ட இந்த அச்சகத்து எல்லா வேலைகளையும் சாதகர்களே செய்கிறார்கள்.

ஆசிரமத்தில் இருக்கும் சாதகர்கள், தங்களுக்கு என்ன பொருள்கள் தேவையோ, அவற்றை அன்னைக்கு எழுதி அனுப்புவார்கள்.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று; அந்தப் பொருள்கள் அன்னையின் வாழ்த்துதலோடு சாதகர்களுக்கு வந்து சேரும்.

தனியான, பெரிய நூலகம் ஆசிரமத்தில் இருக்கின்றது. ஏறக்குறைய இருபதாயிரம் நூல்கள் அந்த நூலகத்தில் உள்ளன.

பலமொழிப் பத்திரிக்கைகளும் ஆசிரமத்துக்கு வருகின்றன. பல சாதகர்கள் புகைப்படம் எடுப்பதில் ஆர்வமாக உள்ளார்கள்.

அந்த படம் எடுப்பவர்கள், அரவிந்தர், அன்னையின் உருவப் படங்களைத் தயாரிக்கிறார்கள். அவை மிகுந்த உயர்தரமாக இருக்கின்றன.

சித்திரக் கலைக்கென்று ஒரு தனிப்பிரிவு இருக்கிறது. இங்கு வரையப்பட்ட பல ஓவியங்களுக்கு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் மதிப்புண்டு; நல்ல விலைக்கும் அவை விற்கின்றன.

ஆசிரமத்தில் வாய்ப்பாட்டு, வாத்திய இசை கற்கும் சாதகர்களும் உள்ளார்கள். கதக், கதகளி, மணிபுரி, பரத நாட்டியம் போன்ற நாட்டிய வகைக் கலைகளையும் பல சாதகர்கள் மகிழ்ச்சிப் பொங்கக் கற்று வருகிறார்கள்.

ஆசிரமத்துக்கென பாண்டு ஆர்க்கெஸ்ட்ரா எனப்படும் வாத்தியம் இசைப்போர் குழுக்கள் உள்ளன.

நூல்கள் வெளியிடும் பிரிவுகளும், ஆசிரமத்தில் இருக்கின்றன. இதுதான் ஆசிரமத்திலே மிகப் பெரிய பிரிவு.

அரவிந்தர், அன்னை எழுதிய நூல்கள் பல மொழிகளில் இங்கே வெளியிடப்படுகின்றன. பல மொழிகளில் இருக்கும் அருமை யான நூல்களை இங்கே மொழி பெயர்த்து வெளியிடு கிறார்கள்.

அரவிந்த யோகம், சாதனை, தரிசனம், இலக்கியம் பற்றி ஆங்கிலம், வங்காளம், இந்தி, குஜராத்தி, கன்னடம், ஒரியா, தெலுங்கு போன்ற முக்கிய மொழிகளில் பத்திரிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

பள்ளி மாணவர்கள் பல மொழிகளில் அழகான கையெழுத்துப் பத்திரிக்கைகளை ஆசிரம வாசகர்களுக்காக நடத்துகிறார்கள்.

ஆசிரமத்தைப் பார்க்க ஆண்டு முழுவதும் சுற்றுலா பார்வையாளர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். இந்தப்

பார்வையாளர்கள் தங்குவதற்கெனப் பல விருந்தகங்கள் இருக்கின்றன.

வாகனப் பகுதியில் ஜீப்களும், மோட்டார் கார்களும், டிரக்குகளும் இருக்கின்றன். ஆட்களையும், பொருட்களையும் ஏற்றிச் செல்ல அவை பயன்படுகின்றன.

வருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர் களைத் தங்க வைத்து, வசதி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு, செண்டிரல் பியூரோவைச் சேர்ந்தது. ஆசிரமத்துக்காகத் தனியான ஓர் அஞ்சலகம் உள்ளது.

ஆசிரமத்துள் மிக முக்கியமானது அகில உலகக் கல்வி நிலையம் என்ற பிரிவாகும். இந்தக் கல்வி நிலையம் என்ன செய் கின்றது என்பது எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டிய விவரமாகும்.

சாதகர்கள் மூன்று விவரங்களில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உடல் அல்லது மனநிலை, அறிவுநிலை, ஆத்மாவினது நிலை என்பதே அந்த மூன்று விவரங்கள்.

ஆசிரமத்தில் ஆத்யாத்மிகப் பலத்துக்குத்தான் அதிக மதிப்பு தரப்படுகின்றது. சாதகர்களுக்கு அக அமைப்பு உருவாக, அன்னையின் அருள் உதவுகின்றது. அன்னையின் அருளாலேயே சாதகர்கள் தெய்வீக நாட்டம் உடையவர்களாக ஆகின்றார்கள்.

ஆசிரமம் எங்கும் அரவிந்தரின் சக்தி பரவியுள்ளது. ஆசிரமத்தின் அறிவு வளர்ச்சியும், பண்பாட்டு மேம்பாட்டுப் போக்கும், அழகுணர்ச்சியை வளர்க்கும் ஆர்வ விரைவும், இந்த அகில உலகக் கல்வி நிலையத்தில் எதிரொலிக்கின்றன.

பாரதத்தின் பழங்காலப் பண்பாடுகள் பற்றிய ஆராய்ச்சியும், ஆசிரமத்தில் நடக்கின்றது. குறிப்பாகச் சொல்

வதானால், வேதம், உபநிடதங்கள் ஆகியனவற்றில் மிக ஆழ்ந்த ஆய்வு நடைபெறுகின்றது.

ஆசிரமத்தில் உடலோம்பல் பற்றி மிகுந்த கவனம் காட்டப் படுகின்றது. ஆத்மாவின் திவ்ய ஜோதியைத் தாங்குவதற்கான கட்டுக்கோப்பு அமைந்திட பெருமுயற்சி செய்கிறார்கள். உடல் உறுதியும்; அதே நேரத்தில் மென்மையும் வாய்ந்ததாக உருவாக்கப்படுகின்றது.

உலகத்தின் பல நாடுகளிலிருந்து பல மொழிகள் பேசும் மக்கள்; பாண்டிச்சேரி உலகக் கல்வி நிலையத்திற்கு வருகை தந்து தங்கிப் பயன் பெறுகிறார்கள்.

நாற்பது ஆண்டுகள் தனிமையில் இருந்தே அரவிந்தர் செய்த சாதனைகளின் பயனை, மிக உயர்ந்த முறையில் உருவாக்கிட இந்த ஆசிரமத்தில் முயற்சி மேற்கொள்ளப் படுவதைக் காணலாம்.

மக்கள் குலத்தின் ஒற்றுமை, ஆத்மாவை அடிப்படை யாகக் கொண்டதுதான் என்பது அரவிந்தரின் வாக்கு.

இந்த உலகக் கல்வி நிலையம் ஒரு தொழிலாக இங்கே நடத்தப்படவில்லை. ஏனென்றால், "நான் கல்வியை வாணிகப் பொருளாக ஆக்கமாட்டேன்" என்பது அன்னையின் வாக்கு.

உலக விவகாரங்களை அரவிந்தர் வெறுப்பவரல்லர். அவருடைய பூரணயோகம் உலகம் உயர்வதற்கான நாட்டம் கொண்டதாகும்.

அதனால்தான், உலகத்துக்கு எது நன்மை, எது தீமை என்பதை அவர் அடிக்கடி அறிவுறுத்திக் கொண்டே இருந்தார்.

இரண்டாவது உலகப் போர் நடைபெற்றபோது, ஆரம்பத்தில் நேச நாடுகள் என்பவை தோல்விகளையே சந்தித்து

கொண்டே வந்தன. இட்லர் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்துக் கொண்டே வந்தான்.

சூரியன் மறையாத ஒரு சாம்ராச்சிய நாடான இங்கிலாந்து நாடு முழுவதுமே அழிந்து கடலில் கரைந்து விடுமோ என்று அஞ்சுமாறு இட்லர் அந்த நாட்டைத் தாக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அரவிந்தர், 'பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே' என்ற அருளுரைக்கேற்ப, இங்கிலாந்து நாட்டின் மேல் தமக்குள்ள ஆதரவைப் பகிரங்கமாக வெளியிட்டார். இந்திய மக்கள் போர் படையில் சேர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதே நேரத்தில் நேச நாடுகளுக்குத் தம்மால் முடிந்த பொருளுதவியையும் செய்தார். தம்முடைய ஆத்யாத்மிக சக்தி முழுவதையும் இங்கிலாந்து நாட்டின் வெற்றிக்காகவே ஈடு படுத்தினார்.

ஜெர்மன் படை தோல்வி முகத்திலே இறங்கி வந்தது. பிறகு இட்லர் என்ன ஆனான் என்பதை உலகமே கண்டு கொண்டது.

இட்லரின் நாஜி படை வலிமையை அரவிந்தர், அசுரர்கள் பலமாக எண்ணினார். உலக நன்மைக்காக அந்த அசுரன் அழிய வேண்டும், அழிக்கப்பட வேண்டும் என்பது அரவிந்தரது ஆத்மார்த்த முடிவு.

இரண்டாவது, உலகப் போர் நடந்துகொண்டிந்த நேரத்தில், சர் ஸ்டாப்ஃஃபோர்டு கிரிப்ஸ் என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் அமைச்சகப் பிரதிநிதிகள் இந்தியாவிற்கு வருகை தந்தார்கள்.

அந்தக் குழு இந்திய மக்களுடன் ஒரு போர்க் கால சமரச உடன்பாடு செய்துகொள்ள முயன்றபோது, கிரிப்ஸ் திட்டத்தை

ஏற்றுக் கொள்வதால் பாரத நாட்டுக்கு பெரும் நன்மை உண்டாகும் என்று அரவிந்தர் எண்ணினார்.

அதற்காக, அரவிந்தர் தனது சார்பாக ஒரு சிறப்புத் தூதுவரை, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களிடம் அனுப்பி, கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அவருடைய திட்டத்தைக் காங்கிரஸ் தேசீயத் தலைவர்கள் ஏற்க மறுத்து விட்டார்கள்.

அன்று கிரிப்ஸ் திட்டத்தை காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால், பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டிருக்காது. லட்சக்கணக்கான படை வீரர்கள் போரில் செத்திருக்க மாட்டார்கள். கோடிக்கணக்கில் பணம் வீணாகி இருக்காது.

பாரத நாட்டின் அரசியலில் அரவிந்தர் வலிய வந்து பங்கெடுத்து கொண்டதற்குக் காரணம், அவருக்கிருந்த பழைய தேசாபிமானம்தான்; பாரத நாட்டு விடுதலைதான்!

அரவிந்தர் நாற்பது ஆண்டுகள், பாண்டிச்சேரியிலிருந்து என்ன செய்தார் என்பதை கூறுவது கடினமான ஒன்று.

அரவிந்தரின் ஆசிரமம் ஓர் ஆன்மீகச் சோதனைச் சாலை. அங்கு நடந்து வரும் சாதனைகளை உள்ளுணர்வு படைத்தவர் களால்தான் இன்றும் அறிய முடியும்.

பாண்டிச்சேரி ஆசிரமத்திலே தங்கும் ஆன்ம பேறு பெற்றவர்களும், அங்கே வருகை தரும் சுற்றுலா மக்களும், இந்த அற்புதமான ஆன்ம சோதனைக் கூடத்தை ஒருமுறை கண்டு உணர்ந்த பின்பு, உலகத்திலேயே இத்தகையதொரு ஆன்மீக தனி உலகத்தை, தெய்வச் சிந்தனைகளை ஒளி பரப்பும் பூமியை, மனித நேய சமத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் மண்ணை, வேறு எங்குமே காண முடியாது என்ற மன நிறைவைப் பெற்றுச் செல்வதைப் பார்க்கின்றோம்.

ஆசிரமத்தில் ஆண்கள் பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர், சிறுமிகள், சின்னஞ் சிறு சிசுக்கள் எல்லாருமே பூத்த பூக்களின் அழகுக் காட்சியைப் போல, மனித நேயத்தோடு சேர்ந்து வாழ்ந்து கொண்டு, ஆன்மீகச் சாதகர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆசிரம ஆன்ம நேயர்களுக்கு கவலை என்றால் என்ன வென்றே தெரியாது; வறுமை வாட்டாது; ஒழுக்கம் ஓம்பலுண்டு; மனவேதனை அறியார்; மகிழ்ச்சியே அவர்களது மன வானின் வளர் நிலவாகும்! ஆசிரம சாதகர்கள் சுதந்திரப் பறவைகளாக ஆன்மீக வானில் பறந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது மிகையல்ல.

அரவிந்த ஆசிரமம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வரும் ஆன்மீக சாதகர்களின் தனியொரு தெய்வீகப் புனித பூமியாக நிலவி வருகின்றது. வாழ்க, அரவிந்தரின் மனித நேயம் மாண்புகளின் வளமை!



